உ

பரமபதி துணை.

நன்னூற் சுருக்கம்

(மூலமும் காண்டிகையுரையும்)

இஃது
விழுப்புரம்
முனிஸிபல் ஹை ஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
குத்தாலம்

ரா. நடேசையரால்

தொகுக்கப்பெற்று

விழுப்புரம்
ஹநுமான் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

பதிவு செய்தது] 1928 [விலை அணா 12.

பொருளடக்கம்.

			பக்கம்.
முகவுரை			
நூல்வகை முதலியன		...	1
சிறப்புப்பாயிரம்		...	2
எழுத்ததிகாரம்			
1.	எழுத்தியல்	....	5
2.	பதவியல்	....	30
3.	உயிரீற்றுப்புணரியல்	....	59
4.	மெய்யீற்றுப்புணரியல்	....	94
5.	உருபுபுணரியல்	....	107
சொல்லதிகாரம்			
1.	பெயரியல்	....	115
2.	வினையியல்	....	153
3.	பொதுவியல்	....	172
4.	இடையியல்	....	199
5.	உரியியல்	....	206
சில இலக்கண விஷயங்கள்		...	208
சூத்திர முதற்குறிப்பகராதி		...	210
பிழையும் திருத்தமும்		...	213

உ

பரமபதி துணை.

முகவுரை

தமிழ் இலக்கணங்களுள் நன்னூலே மிகச் சிறந்தது என்பதை யெல்லோரும் அறிவர். மயிலைநாதர் சங்கரநமச்சிவாயப்புலவர்* இராமாநுசகவிராயர் விசாகப்பெருமாளையர் என்ற நான்கு பெரியோரும், அதற்கு உரைசெய்து பிரசித்திபெற்றனர். அதன்பின்னரும் பலர் உரையெழுதி யச்சிடுவித்தனர். அவையாவும் பொன்னேபோற் போற்றத்தக்கனவே; ஆயினும், அவை மிகவும் விரிவாயிருக்கின்றமையால் அந்நூலிலுள்ள 462† சூத்திரங்களில், ஆங்கில பள்ளிக்கூடங்களில், நான்காவது ஐந்தாவது ஆறாவது பாரங்களில் (Forms) படிக்கும் மாணவர்களுக்கேற்றவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அவற்றிற்கு உரை உதாரணங்களை நன்கு விளக்கி எளிய நடையில், ஓர் சிறிய புத்தகத்தை வெளியிடின், மிக்க உபயோகத்தைத் தருமெனக்கருதி இந்த நன்னூற் சுருக்கம் என்னும் நூலை வெளியிடத்துணிந்தேன். இடையிடையே அவசியமாக வேண்டிய இடங்களில் சூத்திரத்தைத் தழுவி உரை நடை யெழுதியதுடன், சூத்திரங்களையும் அவற்றின் பொருள்களையும் எளிதின் மாணவர் உணரச் சாதகமாகவிருக்க ஒவ்வொரு இயலின் ஈற்றிலும் பரீக்ஷைவினாக்கள் சேர்த்தும் வேறுசில இலக்கணவிஷயங்கள் சேர்த்தும் அமைத்துக்காட்டியுள்ளேன்.

எஸ். எஸ். எல். ஸி. வகுப்பிற் கற்போர்க்கேயன்றி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வருடந்தோறும் நடத்தும் மெற்றிகுலேஷன் ஆங்கில தமிழ்ப் பரீக்ஷைக்கும் இப்புத்தகம் நிரம்ப உபயோகமாகும்.

அன்றியும், ஆரம்பப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், [Elementary School Teachers] உபாத்திமைத் தொழிலுக்கென்றே போதனாமுறைப் பாடசாலை (Training Schools) யிற் பயில்வோரும், இப்புத்தகத்தைப் படிப்பின், அத்தொழிலில் மேன்மையடைவதோடு, அன்னவர் மாணாக்கர்களும் கீழ் வகுப்புக்களிலிருந்தே தமிழிற் றேர்ச்சியடைவார்களென்று நம்புகின்றேன்.

விழுப்புரம்,
15—8—28.

இங்ஙனம்,
ரா. நடேசையன்.

---

* சங்கரநமச்சிவாயப்புலவராற் செய்யப்பெற்ற விருத்தியுரை, சிவஞானமுனிவராற்றிருத்தப்பெற்றது.

† மயிலைநாதர் உரையால் 461-சூத்திரங்களேயென்று தெரிகிறது.

பரமபதி துணை.

நன்னூற் சுருக்கம்.

மூலமும் *காண்டிகையுரையும்.

இலக்கணம்.

இலக்கண நூலாவது, உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி யெழுதுதற்கும் பேசுதற்குங் கருவியாகிய நூலாம்.

நூல்வகை முதலியன.

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்பனவாம். இந்நூலில் எழுத்தும் சொல்லும் கூறப்பெறும். † பொருள், யாப்பு, அணி அதிகாரங்களும் இவ்வாசிரியராலே செய்யப்பெற்று, முற்காலத்திலிருந்து, பிற்காலத்திற் கிடைத்தில என்று சொல்வர்.

முதல்நூல், வழிநூல், சார்புநூல் என, நூல் மூன்று வகைப்படும்:—முதல்நூல்-அகத்தியம் முதலியன; வழிநூல்-தொல்காப்பியம் முதலியன; சார்புநூல்-நன்னூல் முதலியன‡.

---

* காண்டிகையுரையாவது—சூத்திரத்தின் பொருளைக் கருத்துரை, பதவுரை உதாரணம் ஆகிய மூன்றினாலும் விளக்கி உரைப்பது; வினாவிடைகளையுங் கூட்டியுரைப்பதுமுண்டு.

‡ இந்நன்னூல் தொல்காப்பியத்தை நோக்க வழிநூலும், அகத்தியத்தை நோக்கச் சார்புநூலுமாம். இதற்கு முதல்நூல், தொல்காப்பியம் முதலிய முன்னோர் நூல்களென்றறிக.

† 'அரும்பொருளைந்து' எனக்கூறினமையின் 'இந்நூலுட் கூறிய பொருள், யாப்பு அணிகளென்னும் மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளனபோலும்' என்பது நன்னூல் விருத்தியுரை. அன்றியும்,

ஒரு நூலுக்குப்பெயர் வருமாறு:—

1. முதல் நூலாற் பெயர்பெற்றன - தமிழிலுள்ள இராமாயணம், பாரதம், காந்தம் முதலியன.

2. கருத்தனாற் பெயர் பெற்றன - அகத்தியம், தொல்காப்பியம், திருவள்ளுவர் முதலியன.

3. அளவாற் பெயர் பெற்றன - பன்னிருபடலம், நாலடி நானூறு முதலியன.

4. மிகுதியாற் பெயர் பெற்றன - களவியல் முதலியன.

5. பொருளாற் பெயர் பெற்றன - அகப்பொருள், புறப்பொருள் முதலியன.

6. செய்வித்தோனாற் பெயர்பெற்றன - சாதவாகனம் முதலியன.

7. தன்மையாற் பெயர் பெற்றன - சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலியன.

8. இடுகுறியாற் பெயர் பெற்றன - நிகண்டு முதலியன.

சிறப்புப்பாயிரம்.

1. நூல் செய்தவர் - பவணந்தி முனிவர்.
பிதாவின் பெயர் - சன்மதி முனிவர்.
ஜாதி - பிராமணர்.
மதம் - ஜைநம் (ஆருகதம், சமணமதம்)*

"நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதந் தமிழநன் னூற்றுறைக
ளஞ்சுக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபரா காலன் பனுவல்களே." என்ற பெரிய திருமொழிச் சிறப்புப்பாயிரத்தில் 'தமிழநன்னூற்றுறைக ளஞ்சுக்கு' என்பதன்பொருளை விளக்குமிடத்து * * * * 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லட்சணத்தையும் அறுதியிடுவதான நன்னூலென்று ஒரு சாஸ்திரமுண்டு' என்று பிள்ளை லோகாசார்யஜீயர் தமது வியாக்கியானத்தில் கூறியிருக்கிறார். ஆனால் தர்க்க சங்கிரக உரையில் 'நன்னூல் முதலியவற்றில் இடையூற்றின் மிகுதிப்பாட்டால் முடிவுபேறு இன்று' என்று கூறியிருக்கிறது.

* எழுத்ததிகாரத்தும் சொல்லதிகாரத்தும் கூறியுள்ள கடவுள் வணக்கத்தாலும், 'மொழிக்கு முதற்காரணமா மணுத்திரளொலி' என்றதனாலும், 'பவணந்தி'யென்னும் பெயரினாலும், இவர் ஜைன மதத்தினர் என்பது தெளிவாகும்.

ஊர் - தொண்டைமண்டலத்திலுள்ள சனகாபுரம். †

2. நூல் வந்த வழி - முன்னோர் நூலின் வழி.

3. நூல் வழங்கும் எல்லை - வடக்கே திருவேங்கட மலை.
கிழக்கே கீழ்கடல்.
தெற்கே கன்னியாகுமரி.
மேற்கே குடக நாடு.

4. நூலின் பெயர் - நன்னூல்.

5. நூல் யாப்பு - தொகுத்தும், வகுத்தும், விரித்தும் செய்யப்படும் யாப்பு.

6. நூலிற் சொல்லப்பட்ட பொருள் — [எழுத்து, சொல், பொருள், யாப்பு. அணி என்னும்] ஐந்து பொருள்.

7. கேட்போர் - இலக்கியப்பயிற்சி செய்தோர்.

8. பயன் - சொற்களின் முட்டுப்பாட்டை [வருத்தத்தை], ஒழித்தல்.

9. நூலியற்றப்பெற்ற காலம் - சீயகங்கன் என்னும் அரசன் காலம். [ஏறக்குறைய 700 வருடங்களுக்குமுன்.]

10. நூல் அரங்கேறிய இடம் - சீயகங்கன் சபை*

11. நூல் இயற்றியதற்குக் காரணம் - சீயகங்கன் வேண்டிக்கொண்டதும், யாவரிடத்துமுண்டாகிய இரக்கமும்.

---

†சனகாபுரம் தொண்டைமண்டலத்தில் வட ஆற்காடு ஜில்லா அரக்கோணம் தாலூகாவில் சோளசிங்கபுரம் (Sholinghur) என்னும் ஊரைச் சார்ந்து இருக்கிறது.

*பவணந்தி முனிவரைக்கொண்டு நன்னூல் செய்வித்தவன் ஸ்ரீமத் குவளாலபுர பரமேசுவரன் கங்க குலோத்பவன் சீயகங்கன் அமராபரணனை திருவேகம்பமுடையான். [குவளாலபுரம்-இப்போது கோலார் என்று சொல்லப்படும். இது மைசூர் ராஜ்யத்தில் ஜோலார்ப்பேட்டையிலிருந்து பங்களூருக்குப்போகும் வழியிலுள்ளது.] சீயகங்கன் சைவன்; இவன் மூன்றாங் குலோத்துங்கச் சோழன்கீழ்ச் சிற்றரசு புரிந்தவன். மூன்றாங் குலோத்துங்கன் காலம் கி. பி. 1178-1216. ஆகவே, பவணந்தி முனிவர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் கடைசியாதல், பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாதல் வேண்டும்.

இந்நூலின் சிறப்பு.

†"முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்
நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்
இணையோ வென்னுந் துணிவே மன்னுக" என, ஈசான தேசிக ரென்னும் சுவாமிநாத தேசிகரும் தமது இலக்கணக்கொத்தில் இந்நூலைப்பற்றிக் கூறியிருக்கின்றார். அன்றியும், இந்நூல் தோன்றியபின்னர், இதன் முதனூலாகிய தொல்காப்பியம் முதலிய பழைய நூல்கள் பயிலாதொழிதலாலும், இந்நூற்குப் பிற்காலத்து வேறு பல நூல்கள் தோன்றியும், அவற்றையெல்லாம் மேற்கொண்டு, இதுவே எங்கும் பலரால் விசேஷமாகப் பயிலப்பட்டும், பயிற்றப்பட்டும் வருதலாலும், இந்நூல்போலத் தெளிவான இலக்கணநூல் வேறு எதுவும் தமிழில் இல்லையென்பது இனிது விளங்கும். இந்நூலாசிரியரும் 'பல்கலைக்குரிசில் பவணந்தி யென்னும் புலவர் பெருமான்'‡ எனப் பாராட்டப்பெற்றனர்.

பரீக்ஷை வினாக்கள்:—(1) இலக்கண நூலாவது யாது? (2) தமிழ் மொழியின் இலக்கணம் எத்தனை? ஒவ்வொன்றும் எவைகளைப் பற்றிக் கூறும்? (3) நன்னூலில் அமைந்தவை யென்னென்ன? இவ்வினாவிற்குரிய விடையைப் பிறநூலாதாரத்தால் விளக்கக்கூடுமாயின் விளக்குக. (4) நூல் எத்தனை வகைப்படும்? (5) அவற்றுள் நன்னூல் எந்நூல்? (6) இதன் முதனூல் எது? (7) 'நன்னூல்' எதனால் வந்த பெயர்? (8) நன்னூலாரது பெயர் இடம் காலம் மதம் ஜாதி என்ன? (9) நன்னூலை இயற்றியவரும் இயற்றுவித்தவரும் யாவர்? (10) நன்னூலைப்பற்றிப் பிறநூல்களில் யார் யார் என்னென்ன சொல்லியிருக்கின்றார்கள்? *நன்னூலிலுள்ள மொத்த சூத்திரங்களெத்தனை? *நன்னூற்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த விருத்தியுரை யாராற்றிருத்தப்பட்டது?

---

†"முன்னோ ரொழியப் பின்னோர் பலரினுள்" என்றும் பாடம்.

‡நன்னூல் விருத்தியுரை (சூத்திரம் 137.)

*இந்த இரண்டு வினாக்களுக்கும், முகவுரையிலிருந்து விடையறிக.

உ

முதலாவது.

எழுத்ததிகாரம்.

எழுத்தின் அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இருவகை யிலக்கணங்களையும் உணர்த்தும் அதிகாரம்.
(அதிகாரம் - இங்கே, பெரும் பிரிவு.)

---

1. எழுத்தியல்.

எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயல்.
(இயல் - இங்கே; சிறு பிரிவு.)

[கடவுள் வணக்கமும் அதிகாரமும்.

பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவ னெழுத்தே.

உரை:—பூமலி - பூக்கள் நிறைந்துள்ள, அசோகின் - அசோக மரத்தினது, புனைநிழல் - அழகிய நிழலில், அமர்ந்த-எழுந்தருளிய, நான்முகன் - நான்கு திருமுகங்களையுடைய (அருகக்) கடவுளை, தொழுது - வணங்கி,—எழுத்து - எழுத்திலக்கணத்தை, நன்கு - நன்றாக, இயம்புவன் - (யான்) சொல்லுவேன்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்குதலால, எடுத்த காரியம் இனிது முடியுமென்று கருதி 'நன்கியம்புவன்' என்றார். எழுத்திலக்கணத்தை 'எழுத்து' என்றது ஆகுபெயர்.

[எழுத்திலக்கணத்தின் பகுப்பு—12.]

1. எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

உரை:—அது - அவ்வெழுத்திலக்கணம், எண் - (எழுத்தின்) கணக்கும், பெயர்-பெயரும், முறை-(நிற்கும்) வரிசையும், பிறப்பு-

பிறத்தலும், உருவம்-வடிவமும், மாத்திரை-(உச்சரிக்கப்படும்) அளவும், முதல்(நிலை)-(மொழிக்கு) முதலில் நிற்றலும், ஈறு (நிலை)-(மொழிக்கு) இறுதியில் நிற்றலும், இடைநிலை-(மொழிக்கு) நடுவில் நிற்றலும், போலி-போலியும், என்ரு-என்றும்,—பதம்-பதமும், புணர்பு-புணர்ச்சியும், என-என்றும்,—பன்னிருபாற்று-பன்னிரண்டு வகையினையுடையதாகும்.

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம்; பதம், புணர்பு என்னும் இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம்; இவை தோன்ற, 'என்ரு' என்றும் 'என' என்றும் வெவ்வேறு சொற்களைக் கொடுத்துப் பிரித்தார்.

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் எழுத்தியல் என ஓர் இயலாக்கி முதலில் வைத்தார்; புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தாலாகிய பதத்தின் இலக்கணத்தைப் பதவியல் என ஓர் இயலாக்கி அதன்பின் வைத்தார்; அப்பதம் புணரும் புணர்ச்சியிலக்கணத்தை உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல் என மூன்று இயலாக்கி, உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களின் முறைமைபற்றி, உயிரீற்றுப்புணரியலைப் பதவியலின் பின்னும், மெய்யீற்றுப்புணரியலை அதன் பின்னும், உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குதலால் உருபுபுணரியலை அவ்விரண்டின் பின்னும் முறைப்படி வைத்தார்.

1. எண்.

[எழுத்து இன்னதென்பதும் அதன் வகையும்.]

2. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே

உரை:—மொழிமுதல் காரணம் ஆம் அணு திரள் ஒலி-சொல்லுக்கு *முதற் காரணமும், அணுத்திரளின் †காரியமுமாகிய

†காரியமாவது-ஆக்கப்பட்டது; (உ-ம்.) குடம்.

*காரணம்-முதற்காரணம், துணைக்காரணம் என இருவகைப்படும். முதற்காரணமாவது-காரியமாக மாறி அதினின்றும் வேறுபடாதது; (உ-ம்.) மண். துணைக்காரணமாவது-முதற்காரணம் காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் நின்று பின்பு பிரிவது; (உ-ம்.) தண்டம், சக்கரம் முதலியன. (சூ. 140). அணுத்திரள்-அணுக்கூட்டம்; இங்கே, 'அணு' என்றது செவிப்புலனும் அணுவை;

ஓசை, எழுத்து-எழுத்தாகும்; அது-அவ்வெழுத்து,—முதல் சார்பு என-முதலெழுத்தும், சார்பெழுத்தும் என்று, இருவகைத்து-இரண்டுவகையினையுடையது.

[முதலெழுத்தின் வகையும், விரியும்.]

3. உயிரு முடம்புமா முப்பது முதலே.

உரை:—உயிரும்-உயிரெழுத்தும் (பன்னிரண்டு), உடம்பும்-மெய்யெழுத்தும் (பதினெட்டு), ஆம்-ஆகிய, முப்பதும்-முப்பது எழுத்துக்களும், முதல்-முதலெழுத்தாம்.

உயிர்மெய் முதலிய மற்றையெழுத்துக்களுக்குக் காரணமாதலால், உயிரையும் மெய்யையும் முதலெழுத்தென்றார்.

[சார்பெழுத்தின் வகை—10.]

4. உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இஉ ஐஔ மஃகான
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

உரை:—உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்தும், ஆய்தம் - ஆய்த எழுத்தும் (முற்றாய்தம்), உயிரளபு-உயிரளபெடையும், ஒற்றளபு-ஒற்றளபெடையும், அஃகிய இ-குறுகிய இகரமும் (குற்றியலிகரமும்), (அஃகிய)உ-குறுகிய உகரமும் (குற்றியலுகரமும்), (அஃகிய) ஐ-ஐகாரக்குறுக்கமும், (அஃகிய)ஔ-ஔகாரக்குறுக்கமும், (அஃகிய) மஃகான்-மகரக்குறுக்கமும், (அஃகிய) தனிநிலை,- ஆய்தக் குறுக்கமும், பத்தும்-(ஆகிய) பத்தும்,—சார்பு எழுத்து ஆகும்-சார்பெழுத்தின் வகையாகும்.

II. பெயர்.

[பெயரின் பொதுவிலக்கணம்.]

5. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

உரை:—இடுகுறி, (பெயர்) காரணம் பெயர்-இடுகுறிப் பெயரும் காரணப்பெயருமாகிய இரண்டும், பொது-பல பொருளுக்குப் பொதுப்பெயராகியும், சிறப்பின-ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வருவனவாம்.

அது ஒலிநுட்பம். மொழிக்கு முதற்காரணம் எழுத்து; எழுத்துக்கு முதற்காரணம் அணுத்திரள். அணுத்திரளின் காரியம் எழுத்து; எழுத்தின் காரியம் மொழியாம்.

எனவே, இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச்சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர் எனப் பெயர் நால்வகைப்படும்.

கடவுளாலும், அறிவுடையோராலும் ஒரு காரணமும் இல்லாமல் ஒரு பொருளுக்கு இட்ட குறியாகிய பெயர்,—இடுகுறிப்பெயர்; காரணத்தால் வரும் பெயர்,—காரணப்பெயர்.

(உதாரணம்.) { மரம்-இடுகுறிப் பொதுப்பெயர். பனை, பலா-இடுகுறிச் சிறப்புப்பெயர்.

{ அணி-காரணப் பொதுப்பெயர். வளை, சிலம்பு-காரணச் சிறப்புப்பெயர்.

(அணி-அணியப்படுவன; ஆபரணங்கள். வளை-வளைவாக வுள்ளது; ஒருவகை யணி. சிலம்பு-ஒலிப்பது; ஒருவகைக் காலணி.)

இச்சூத்திரத்துக்கு 'இரட்டுறமொழிதல்'* என்னும் †உத்தியால் வேறொரு பொருளும் உரைக்கப்படும். அது வருமாறு:— பெயர்-பெயர்கள்,—இடுகுறி காரணம் – இடுகுறி காரணம் என்னும் இரண்டு இலக்கணங்களுக்கும், பொது-பொதுவாகியும், சிறப்பின- இடுகுறிக்கே சிறப்பாகியும், காரணத்திற்கே சிறப்பாகியும் வருவன வாம்.

எனவே, இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரணவிடுகுறிப் பெயர் எனப் பெயர் மூவகைப்படுமென்றதாயிற்று. காரணஇடுகுறிப்பெயராவது-காரணத்தைக் கருதியபொழுது அக்காரணத்தை யுடைய பலவற்றிற்கும் பெயராக வழங்கக்கூடியதாயும், காரணத்தைக் கருதாதபொழுது அக்காரணத்தையுடைய ஒன்றற்கே உரிய தாயும் உள்ளபெயராம்.

(உ-ம்.) பரம், பொன்-இடுகுறிப்பெயர்.

பரமன், பொன்னன்-காரணப்பெயர்.

முக்கண்ணன், அந்தணர், முள்ளி - காரணவிடுகுறிப்பெயர்.

(பரம் - மேன்மை. பரமன் - மேலானவன். பொன்னன் - பொன்னையுடையவன்.) முக்கண்ணன் என்பது-காரணங்கருதிய பொழுது மூன்று கண்களையுடைய விநாயகக்கடவுள் முதலிய பலர்க்குஞ்

---

*இரட்டுறமொழிதல்-இரண்டு உறமொழிதல் (ஒரு வாக்கியத்தில்) இரண்டு (பல) பொருள் ஒருங்கேயமையும்படி சொல்லுதல். இது 73, 106, 109, 148-ஆஞ் சூத்திரங்களிலும் வரும்.

† உத்தி-யுக்தி.

செல்லுதலாலும், காரணத்தைக் கருதாதபொழுது அக்காரணத்தையுடைய சிவபிரானுக்கே செல்லுதலாலும், அந்தணர் என்பது-காரணம் கருதியபொழுது அழகிய தண்மையை (குளிர்ந்த அருளை) யுடைய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது அக்காரணத்தையுடைய பிராமணர்க்கே செல்லுதலாலும், முள்ளி யென்பது - காரணங்கருதியபொழுது முள்ளுடையன பலவற்றிற் குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது அக்காரணத்தை யுடைய ஒருவகைச் செடிக்கே செல்லுதலாலும், காரணவிடுகுறிப் பெயராயின. (பங்கயம், கறங்கு முதலியனவும் இதற்குதாரண மாம்.)

மேல், எழுத்துக்களின் பெயர் *இடுகுறியாகவும், காரணமாக வும், காரணவிடுகுறியாகவும் வருதலால், அவ்வெழுத்துக்களின் பெயர்கூறத் தொடங்கினவர், பெயரின் இலக்கணத்தை முன்னே கூறினார்.

எழுத்தின் பெயர்.

(உயிரும், மெய்யும்.)

6. அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

உரை:—அ முதல் ஈர் ஆறு -அகரம் முதலிய பன்னிரண்டை யும், ஆவி (என) -உயிரெழுத்தென்றும், க முதல் மூ ஆறு-ககரம் முத லிய பதினெட்டையும், மெய் என-மெய்யெழுத்தென்றும்,—விளம் பினர் புலவர்-சொன்னார் அறிவுடையோர்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.—உயிர் 12.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.—மெய் 18.

உயிரை ஆவி என்றும், மெய்யை உடல், உடம்பு, உறுப்பு ஒற்று, புள்ளி என்றும் கூறுவர்.

---

*அ ஆ முதலியன இடுகுறிச் சிறப்புப்பெயர். குறில், நெடில்; வல்லினம், மெல்லினம், இடையினம் முதலியன காரணப்பொதுப் பெயர். குற்றிகரம், குற்றுகரம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக் கம் முதலியன காரணச்சிறப்புப்பெயர். பிறவும் இவ்வாறே ஆராய்ந்தறிக.

[குறில்—5.]

7. அவற்றுள்,
அ இ உ எ ஒக்குறி லைந்தே.

உரை:—அவற்றுள் - (உயிரும், மெய்யும் என்ற) அவற்றுள், அ இ உ எ ஒ ஐந்து - அ இ உ எ ஒ என்னும் ஐந்தும், குறில் - குற்றெழுத்தாம். [குறில் - குறுகிய அளவுள்ளது.]

[நெடில்—7.]

8. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

உரை:—ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழும், நெடில் - நெட்டெழுத்தாம். [நெடில் - நீண்ட அளவுள்ளது.]

[சுட்டு—3.]

9. அ இ உம் முதல் தனிவரிற் சுட்டே.

உரை:—அ இ உ - அ இ உ என்னும் மூன்றும், முதல் (மொழிக்கு) முதலிலே, தனி வரின் - தனித்து (ச் சுட்டுப்பொருளைக் காட்டி) வந்தால், சுட்டு - சுட்டெழுத்தாம்.

முதல் எனப் பொதுப்படச் சொன்னதினாலே, அகத்தும், புறத்தும் வரும் எனக்கொள்க. அவற்றை, அகச்சுட்டு, புறச்சுட்டு என்பர். அகச்சுட்டாவது - சொல்லினுள்ளாகவே சுட்டெழுத்து நிற்பது; புறச்சுட்டாவது - சொல்லுக்கு வெளியாகச் சுட்டெழுத்து நிற்பது.

(உ-ம்.) அவன், இவன், உவன் } அகத்து வந்தன. அகச்சுட்டு.

அக்கடவுள், இக்கடவுள், உக்கடவுள் } புறத்து வந்தன. புறச்சுட்டு.

அகரம் தூரத்திலுள்ள பொருளைக் குறிக்கும்; (உ-ம்.) அவன்.

இகரம் சமீபத்திலுள்ள பொருளைக் குறிக்கும்; (உ-ம்.) இவன்.

உகரம் { நடுவிலுள்ள பொருளையும் (உ-ம்.) உவன். பின் நிற்கும் பொருளையும் (உ-ம்.) உப்பக்கம். மேல்நிற்கும் பொருளையும் (உ-ம்.) உம்பர். } குறிக்கும்.

(உப்பக்கம் - பின்பக்கம். உம்பர் - மேலிடம்).

[வினா—5.]

10. எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்,
ஏயிரு வழியும் வினாவா கும்மே.

உரை:—எ யா முதலும்-எகரமும் யாவும் (மொழிக்கு) முதலிலும், ஆ ஓ ஈற்றும்-ஆகாரமும் ஓகாரமும் (மொழிக்கு) இறுதியிலும், ஏ இருவழியும்-ஏகாரம் இவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) வினா ஆகும்-(தனித்து வினாப்பொருளைக் காட்டிவந்தால்) வினாவெழுத்தாம். (வினா-கேள்வி.)

மேல் சூத்திரத்திலுள்ள 'தனிவரின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது. *'ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல்' என்னும் உத்தியால் (உயிர்மெய்யாகிய) 'யா' வினாவையும் உடன் கூறினார். (இவ்வினாவெழுத்துக்கள் அகத்தும் புறத்தும் வரும்.)

(உ-ம்.) எவன் } எ, யா-முதலிலே அகத்து வந்தன.
யாவன் } (அகவினா)
எக்கடவுள் } எ, யா-முதலிலே புறத்து வந்தன.
யாங்ஙனம் } (புறவினா)
மனிதனா } ஆ, ஓ-ஈற்றிலே புறத்து வந்தன.
மனிதனோ } (ஈற்றுவினா, புறத்து மாத்திரம் வரும்.)
ஏவன்-ஏ-முதலில் அகத்து வந்தது.
மனிதனே-ஏ-ஈற்றில் புறத்து வந்தது.

[வல்லினம்:—6.]

11. வல்லினங் க ச ட த ப ற வென வாறே.

உரை:—க ச ட த ப ற என ஆறு - க ச ட த ப ற என்ற ஆறும், வல்லினம்-வல்லெழுத்தாம்.

இவை-வலி, வன்மை, வன்கணம், வல்லெழுத்து எனவும் பெயர் பெறும்.

[மெல்லினம்—6.]

12. மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே.

உரை:—ங ஞ ண ந ம ன என ஆறு ங ஞ ண ந ம ன என்ற ஆறும், மெல்லினம்-மெல்லெழுத்தாம்.

---

*ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல்—ஒன்றைச்சொல்லுமிடத்து, அதற்கினமான மற்றொன்றையும் (விரியாதிருக்கவேண்டி அதனோடு) முடித்தல். 163-ஆஞ் சூத்திரத்திலுங் காண்க.

இவை-மெலி,. மென்மை, மென்கணம், மெல்லெழுத்து எனவும் பெயர் பெறும்.

[இடையினம்—6.]

13. இடையினம் ய ர ல வ ழ ள-வென வாறே.

உரை:—ய ர ல வ ழ ள என ஆறு-ய ர ல வ ழ ள என்ற ஆறும், இடையினம்-இடையெழுத்தாம்.

இவை-இடை, இடைமை, இடைக்கணம், இடையெழுத்து எனவும் பெயர்பெறும்.

[இனவெழுத்து.]

14. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்து
இவ்விரண் டோரின மாய்வரல் முறையே.

உரை:—ஐ ஔ - (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், இ உ செறிய - (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்களையே (தமக்கும் இனமாகப்) பொருந்த,—முதலெழுத்து-முதலெழுத்துக்கள், இவ்விரண்டு - இரண்டுஇரண்டு, ஓர் இனம் ஆய் வரல்-ஓரினமாகி வருதல், முறை - முறையாகும்.

(உ-ம்.) அ-ஆ; இ ஈ; உ-ஊ; எ-ஏ; ஐ-இ; ஒ-ஓ; ஔ-உ; எனவும், க-ங; ச-ஞ; ட-ண; த-ந; ப-ம; ற-ன; எனவும் வரும். இவை இனவெழுத்தெனப் பெயர்பெறும்.

*'சுருங்கச்சொல்லல்' என்னும் அழகுபற்றி 'முதலெழுத்து' எனப் பொதுப்படக் கூறினரேனும், †'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்தியால், 'இவ்விரண்டு ஓரினமாய்வருதல்' இடையினம் ஒழிந்த மற்றவைகளுக்கே கொள்க. இடையெழுத்து ஆறும் ஓரினமாம்.

எழுத்திலக்கணத்தின் பகுதியாகிய III முறையும், IV பிறப்பும் [சிறிதுபாகம்] இங்கு விடப்பட்டது.

[உயிர்மெய்—216.]

15. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்

---

*சுருங்கச்சொல்லல்-சொற்கள் விரியாதபடி சொல்லுதல். 20-ஆஞ் சூத்திரத்திலுங்காண்க.

†ஏற்புழிக்கோடல்-கூறிய இலக்கணத்தை ஏற்ற இடத்துக்கு மாத்திரமே கொள்ளுதல். இது -83, 98, 169-ஆஞ் சூத்திரங்களிலும் வரும்.

உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னுய்வரு முயிர்மெய்.

உரை:—புள்ளிவிட்டு-(மெய்) புள்ளியைவிட்டு, அவ்வொடு-அகரத்தோடு (கூடியபொழுது), முன் உரு ஆகியும்-அவ்விட்ட வுருவே உருவாகியும், ஏனை உயிரோடு-(ஆ முதலிய) மற்ற உயிர்களோடு (கூடியபொழுது), உருவு திரிந்தும்-உருவம் வேறுபட்டும், உயிர் அளவு ஆய்-[தன் மாத்திரை (மெய்க்குரியமாத்திரை) தோன்றாமல்] உயிர் மாத்திரையே மாத்திரையாய், அதன்வடிவு ஒழித்து-உயிர்வடிவை ஒழித்து (தன் வரிவடிவின் விகாரவடிவே வடிவாய்), இரு வயின் பெயரொடும்-(உயிரும் மெய்யுமாகிய) இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே,—ஒற்று முன் ஆய்-ஒற்றின் ஒலி முன்னும் உயிரொலி பின்னுமாகி,—உயிர்மெய் வரும்-உயிர்மெய்யெழுத்துக்கள் வரும்.

பன்னிரண்டு உயிரும், பதினெட்டு மெய்யின்மேலும் தனித்தனி ஏறிவருதலால் உயிர்மெய் [18 × 12=216] இருநூற்றுப் பதினாறு. க்+அ=க-முதலியன.

குறிப்பு:—உயிர்மெய்க்குற்றெழுத்து 18 × 5=90. உயிர்மெய்நெட்டெழுத்து 18×7=126. உயிர்மெய்வல்லெழுத்து 6×12=72, உயிர்மெய்மெல்லெழுத்து 6×12=72, உயிர்மெய்யிடையெழுத்து 6×12=72.

[முற்றாய்தம்—8.]

16. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

உரை:—ஆய்தப்புள்ளி-(மூன்று) புள்ளி வடிவினதாகிய ஆய்தம்,—குறியதன் முன்னர்-குற்றெழுத்தின் முன்னதாய், உயிரொடு புணர்ந்த-உயிரோடு கூடிய; வல் ஆறன் மிசைத்து-வல்லெழுத்து ஆறனுள் ஒன்றன் மேலதாய் வரும். ('முன்' இங்கே, இடமுன்).*

* 'முன்' காலமுன் இடமுன் என இருவகைப்படும். (உ-ம்.) க ங என்பதில் ககரம் முன்னெழுதப்படுதலால் காலம்பற்றி முன்னும்; அதுவே தனக்கு எதிர்முகமாக ஙகரம் முன் இருத்தலால் இடம்பற்றிப் பின்னுமாம்; இச்சூத்திரத்திற் கூறப்படுவதும் 22, 66-ஆம் சூத்திரங்களிற் கூறப்படுவனவும் இடமுன்; 34, 53-ஆம் சூத்திரங்களிற் கூறப்படுவன காலமுன். மேல் கீழ் என்பவற்றிற்கும் இவ்வாறே கண்டுகொள்க.

(உ-ம்.) எஃகு, கஃசு, இருபஃது, பஃறி.

[எஃகு-வேல். கஃசு-காற்பலம். பஃறி-ஓடம்.] 'வல் ஆறன் மிசைத்து' என்றதனால், வல்லினவகையால் வரும் ஆய்தம் ஆறு; *அவ்+கடிய=அஃகடிய எனத் திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; அ+கான்=அஃகான், செய்வஃது என விரித்தல் என்னுஞ் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; ஆக முற்றாய்தம் எட்டு.

அடுப்புக்கூட்டுப்போல் ஒருவகை ஆயுதவடிவாக மூன்று புள்ளிவைத்து எழுதப்படுதலால் ஆய்தம் எனப்பட்டது. இது சொல்லின் இடையில் மாத்திரம் வரும். ஆய்தம்-ஆயுதம்; இங்கே, போர்க்கருவியாகிய கேடகம் என்னும் படை; அல்லது சமைத்தற்கருவியாகிய அடுப்புமாம்.

இச்சூத்திரமும், 111, 149, 204-ஆஞ் சூத்திரங்களும் தொல்காப்பியத்தினின்றும் எடுத்துக்கொண்ட மேற்கோள்களாதலால் "†தானெடுத்துமொழிதல்" என்னும் உத்தி.

குறிப்பு:—உயிரெழுத்து 12; மெய்யெழுத்து 18; உயிர்மெய்யெழுத்து 216; ஆய்தவெழுத்து 1; ஆக இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களே தமிழ் நெடுங்கணக்கிலுள்ளவை.

(அளபெடை.)

குறிப்பு:—செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து, உயிரெழுத்துக்களுள்ளும், ஒற்றெழுத்துக்களுள்ளும், சிலசில தம்மாத்திரைகளின் அதிகமாக ஒலிக்கும்; அவ்வுயிரெழுத்துக்கு உயிரளபெடையென்றும், அவ்வொற்றெழுத்துக்கு, ஒற்றளபெடையென்றும் பெயராம்.

[உயிரளபெடை—21.]

17. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

உரை:—இசை கெடின்-(பாட்டில்) ஓசை குறையின், மொழி-சொல்லுக்கு, முதல் இடை கடை-முதலிலும் நடுவிலும் இறுதியி

---

*101-ஆஞ் சூத்திரம் பார்க்க.

†தானெடுத்துமொழிதல்-பழைய சூத்திரத்தைத் தான் ஒவ்வோரிடத்து எடுத்துச் சொல்லுதல்.

னும், நிலை நெடில்-நின்ற நெட்டெழுத்துக்கள் (எழும்), அளபு எழும்-(அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின்) மிக்கு ஒலிக்கும்; (அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு)—அவற்று அவற்று இனம் குறில்-அவற்றின்பின் அததற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், குறி-(வரிவடிவில்) அடையாளமாய் வரும். (நெட்டெழுத்தை நீட்டிச் சொல்ல அளபெழும் என்க.)

(உ-ம்.) 'ஓஒதல்வேண்டும்' ஓ என்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலில் அளபெடுத்தது.
'உறாஅர்க்குறுநோய்' ஆ என்னும் நெட்டெழுத்து மொழிக்கு இடையில் அளபெடுத்தது.
'நல்லபடாஅபறை' ஆ என்னும் நெட்டெழுத்து மொழிக்குக் கடையில் அளபெடுத்தது.

செய்யுளோசை குன்றுமிடத்தும் (1) இன்னிசை நிறைக்கவும் (2) சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு.

இன்னிசையளபெடையாவது—குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இனிய ஓசையைத் தருதற்பொருட்டு, அளபெடுப்பது;

(உ-ம்.) 'கெடுப்பதூஉம்*** எடுப்பதூஉம்'. இதில் 'கெடுப்பதும்,' 'எடுப்பதும்', என நிற்பினும் செய்யுளோசை குன்றுதாயினும் இனிய ஓசையைத் தருதற்பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்தது.

சொல்லிசையளபெடையாவது—பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது;

(உ-ம்.) 'உரனசைஇ*** 'வானசைஇ' இதில், 'உரனசை,' 'வானசை' என நிற்பினும் செய்யுளோசை குன்றுதாயினும், 'விருப்பம்' எனப் பொருள்படும் 'நசை' யென்னும் பெயர்ச்சொல் 'விரும்பி' யென வினையெச்சப்பொருள்படும்பொருட்டு வினைச்சொல் ஆதற்கு 'நசைஇ' என அளபெடுத்தது. சொல்விகாரப்பட்டு அளபெடுக்கின்ற குரீஇ (குருவி), தழீஇ (தழுவி) மரீஇ (மருவி) ஆடூஉ (ஆண்மகன்) வளைஇ (வளைந்து) முதலியனவும் இதில் அடக்கப்படும்.

நெட்டெழுத்து எழும் மொழிக்கு முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே, உயிரளபெடை இருபத்தொன்று; ஔகாரம் மொழிக்கு நடுவிலும் கடையிலும் வாராமையால், அவ்விரண்டையும் நீக்க, நின்ற உயிரளபெடை பத்தொன்பது; அப்பத்தொன்பதோடு இன்னிசையளபெடை, சொல்

விசையளபெடை என்னும் இரண்டையும் சேர்க்க, உயிரளபெடை இருபத்தொன்று. [7 × 3—2 + 2 = 21.]

[ஒற்றளபெடை—42.]

18. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

உரை:—(இசைகெடின்)-பாட்டில் ஓசை குறையின்,-குறிலிணை (கீழ்)-இரண்டு குற்றெழுத்தின்பின்னும், குறில் கீழ்-ஒரு குற்றெழுத்தின் பின்னும், இடை கடை-(மொழிக்கு) நடுவிலும் கடையிலும் (நின்ற),ங ஞ ண ந ம ன வ ய ல ள-ங முதலிய பத்தும்,ஆய்தம்-ஆய்தமொன்றும் (ஆகிய பதினொரெழுத்தும்), அளபு ஆம்-(அவ்வோசையை நிறைக்கத்தம் மாத்திரையின்) மிகுந்து ஒலிக்கும்; (அப்படி அளபெடுத்தமையையறிதற்கு),—அவற்றின் குறி-அவற்றின் அடையாளம், வேறு மிகல் ஆம்-(வரிவடிவில்) வேறாக மிகுந்து வருதலாம். (ஒற்றுக்களை ஊன்றிச் சொல்ல அளபெழும் என்க.)

முன் சூத்திரத்திலுள்ள 'இசைகெடின்' என்றது, இதற்குங் கூட்டப்பட்டது.

(உ-ம்.) 'இலங்ங்கு வெண்பிறை'—என்பதிற், குறிலிணைக்கீழிடையில் 'ஙகரம்' அளபெடுத்தது.

'எங்ங்கிறைவன்'—என்பதிற், குறிற்கீழிடையில் 'ஙகரம்' அளபெடுத்தது.

'மடங்ங்கலந்த'—என்பதிற், குறிலிணைக்கீழ்க்கடையில் 'ஙகரம்' அளபெடுத்தது.

'அங்ங்கனிந்த'—என்பதிற், குறிற்கீழ்க்கடையில் 'ஙகரம்' அளபெடுத்தது.

மற்றைய மெய்களும் இவ்வாறே யளபெடுக்கும்.

'விலஃஃகி,'—என்பதிற், குறிலிணைக்கீழிடையிலும், 'எஃஃகிலங்கிய' என்பதிற், குறிற்கீழிடையிலும், ஆய்தம் அளபெடுத்தது.

பதினொராற்றும் நான்கிடத்தும் அளபெடுக்குமெனவே ஒற்றளபெடை நாற்பத்துநான்கு; ஆய்தம் மொழிக்கு ஈறாக வாராமையால் அதற்குக் குறிலிணைக்கீழ்க்கடை, குறிற்கீழ்க்கடை, யென்னும் இரண்டிடத்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டு.

ஆய்தம் மெய்யோடு மாத்திரை முதலியவற்றில் ஒத்திருத்தலால், அதனையும் இங்குக் கூட்டிக் கூறினார் என்க.

[குற்றியலிகரம்—37.]

19. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொல் மியாவி னிகரமுங் குறிய.

உரை:—யகரம்வர-யகரத்தை முதலிலேயுடைய சொல் (வருமொழியாய்) வர, குறள் உ திரி இகரமும்-குற்றியலுகரந் திரிந்த இகரமும்,—அசைச்சொல்-அசைச்சொல்லாகிய, மியாவின் இகரமும்-"மியா" வென்பதன் (மகரத்தின் மேலிருக்கிற) இகரமும்,—குறிய-குற்றியலிகரங்களாம். [ஒரு மாத்திரையுள்ள இகரம், அரை மாத்திரையாய்க் குறுகி நிற்கும்.]

(உ-ம்.) காடு+யாது=காடியாது; கேண்மியா.

இனிக் கூறும் குற்றியலுகரம் முப்பத்தாறு [சூ. 20]; அசைச்சொல் 'மியா' ஒன்று;-ஆகக் குற்றியலிகரம் முப்பத்தேழு.

குற்றியலுகரம் அறிந்தபின்பே, குற்றியலிகரம் அறியவேண்டுமாயினும், எழுத்துமுறைபற்றி இது முன்னர் வைக்கப்பட்டது.

கதவு+யாது=கதவியாது என முற்றியலுகரமும் இகரமாகுமிடத்து மாத்திரை குறைதலால், குற்றியலிகரத்துள் அடக்கப்படும். 'யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்' என்பதோடு, 'யவ்வரி னியாம்' (சூ. 68) என்பதைக் கவனிக்க.

[குற்றியலுகரம்*—36.]

20. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

உரை:—நெடில்-தனிநெடில் எழுடனே, ஆய்தம்-ஆய்தம் ஒன்றும், உயிர்-(சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர் பதினொன்றும், வலி-வல்லெழுத்து ஆறும், மெலி-மெல்லெழுத்து ஆறும், இடை-(வல்லெழுத்துக்களோடு தொடர்ந்து வாராத வகரம் நீங்கிய) இடையெழுத்து ஐந்தும், (ஆகிய முப்பத்

* ஒரு குறிலினாலும், இணைந்துவரும் இரண்டு குறில்களினாலும், ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

தாறனுள் ஒன்றால்) தொடர்-(ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாகத்) தொடரப்பட்ட, மொழி இறுதி-சொல்லின் கடைசியில், வன்மை ஊர் உகரம்-வல்லெழுத்துக்களுள் (யாதாயினும் ஒன்றன்மேல்) ஏறி வருகின்ற உகரமானது [கு, சு, டு, து, பு, று], அஃகும்-தன் மாத்திரையிற் குறுகும்; பிற-பிற எழுத்துக்களுள் ஒன்றும் பலவும், மேல் தொடரவும்-(அவ்வீற்று அயலெழுத்தின்) மேலே தொடர்ந்து நிற்கவும், பெறும்-(தனிநெடிலொழிந்த ஐந்து தொடரும்) பெறும். (ஒரு மாத்திரையுள்ள உகரம் அரை மாத்திரையாய்க் குறுகி நிற்கும்.)

குறிப்பு:—கு, சு, டு, து, பு, று என்ற ஆறெழுத்துக்களுள் ஏதாவது ஒன்று ஈற்றில் இருக்கவேண்டும்; ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து தனி நெடில் (உயிர் அல்லது உயிர்மெய்) ஆக இருப்பின் நெடிற்றொடர்க்குற்றியலுகரம்; (உ-ம்.) காடு, ஈது, சூடு, வீடு, ஐது, ஓடு, வௌபு—7. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து ஆய்தமாயிருந்தால் ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்; (உ-ம்.) இஃது,—1. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து உயிர்மெய்யாயிருப்பதோடு, வேறெழுத்தும் மேல்தொடர்ந்து இருப்பின் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்; (உ-ம்.) விறகு, பலாசு, கயிறு, இடையீடு, குருடு, இறும்பூது,—இலேசு, இளைது,—புரோசு—11. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து வல்லொற்றாயிருப்பின் வன்றொடர்க்குற்றியலுகரம்; (உ-ம்.) கொக்கு, கச்சு, பட்டு, மத்து, உப்பு, புற்று,—6. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து மெல்லொற்றாயிருப்பின் மென்றொடர்க் குற்றியலுகரம்; (உ-ம்.) தெங்கு, பஞ்சு, வண்டு, பந்து, செம்பு, கன்று,—6. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து இடையொற்றாயிருப்பின் இடைத்தொடர்க்குற்றியலுகரம்; (உ-ம்.) கொய்து, மார்பு, இயல்பு, வீழ்து, தெள்கு,—5. (எகர ஒகர உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுக்கு உதாரணம் வந்த இடத்துக் காண்க) ஈற்றுக்கு அயலெழுத்தை நோக்கிக் குற்றியலுகரம் **முப்பத்தாறு**.*

பிறமேற்றொடர்தல் நெடிற்றொடர்க்கு இல்லையென்பது தோன்றுதற்கு, 'நெடிலோடு' என 'ஒடு' என்னும் உருபு கொடுத்துப் பிரித்தார்; பிறமேற்றொடரின், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். 'உயிர்' என்றது, குறில் நெடில் இரண்டையுங் குறிக்கும். பின்னே, புணரியலில் எடுத்தாளுதற்பொருட்டுக் குற்றியலுகரத்தை ஈற்றுக்கு அயலெழுத்தைக்கொண்டு ஆறுவகையாகக் கூறினர்

---

*சில வாராதிருக்கவும் முப்பத்தா றென்றல் சுருங்கச்சொல்லலாகக் கூறியதென்க.

'நுந்தை' யென்னும் முறைப்பெயரின் முன்னின்ற நகர மெய்யின்மேல் ஏறி நிற்கும் உகரமும் குறுகும் என்பர்; இது பழைய வழக்கு.

தனித்தும் தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின் மேலும், மெல்லின இடையின மெய்களின்மேலும் சொல்லிறுதியில் வரும் உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்.) கு, து; வடு, பசு; தாணு, தும்மு; கதவு, எழு.

[ஐகாரக்குறுக்கம்—3; ஔகாரக்குறுக்கம்—1.]

21. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்.

உரை:—ஐ-ஐகாரம்,—தன் சுட்டு-தன்னை (எழுத்தை)க் குறிக்கும் இடமும், அளபு-அளபெடுக்குமிடமும், ஒழி-ஒழிந்த, மூ வழியும்-(சொல்லுக்கு முதல் இடை கடையென்ற) மூன்றிடங்களிலும் (எங்கே நின்றாலும்), நையும்-(தன்மாத்திரையில்) குறுகும்; ஔவும்-ஔகாரமும்,—(தன்னைக் குறிக்கும் இடத்தும், அளபெடுக்கும் இடத்தும் குறுகாமல்), முதல்-சொல்லுக்கு முதலில், அற்று ஆகும்-அத்தன்மையதாகும். (தன்மாத்திரையிற் குறுகும்.) (இரண்டு மாத்திரையுள்ள 'ஐ' 'ஔ' குறுகி ஒரு மாத்திரையாய் நிற்கும்.)

(உ-ம்.) ஐப்பசி, இடையன், குவளை-மூவழியும் 'ஐ' குறுகிற்று.
ஔவை—முதலில் 'ஔ' குறுகிற்று.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக்குறுக்கம் ஒன்றும் காண்க. 'ஔகாரம்' மொழி இடை கடைகளில் வாராது.

[மகரக்குறுக்கம்—3.]

22. ணன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும.

உரை:—ண ன முன்னும்-(ளகர லகரம் திரிந்த) ணகர னகர மெய்களில் ஒன்றன் முன்னும்,—வஃகான் மிசையும் - (வருமொழி முதலில் நிற்கும்) வகர வுயிர்மெய்யின் பின்னும்,—ம குறுகும்-மகர மெய் (தன் மாத்திரையிற்) குறையும். ('முன்' இங்கே, இடமுன்.)

(அரை மாத்திரையுள்ள 'ம்' குறுகிக் கால்மாத்திரையாய் நிற்கும்.) ஆய்தக் குறுக்கமும் இவ்வாறேயாம்.

(உ-ம்.) மருண்ம்; போன்ம்—ணகர னகரங்களின் முன்னே குறுகியது; தரும் வளவன்—வகரத்தின் பின்னே குறுகியது.

மகரக்குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

172,-(குறிப்பு) 98-ஆஞ் சூத்திரங்களைக் கவனிக்க.

[ஆய்தக்குறுக்கம்—2.]

23. லளவீற் றியைபினா மாய்த மஃகும்.

உரை:—லள ஈற்று இயைபின்-(தனிக்குறிலடுத்த) லகர ளகர வீற்றுப் புணர்ச்சியில், ஆம்-(வருமொழி முதலில் தகரம் வரும் பொழுது)-ஆகின்ற, ஆய்தம்-ஆய்தமானது,—அஃகும்-(தன்மாத்திரையிற்) குறையும்.

(உ-ம்.) கல்+தீது=கஃறீது; முள்+தீது=முஃடீது.

"குறில்வழி லளத்தவ் வணையி னாய்த மாகவும் பெறூஉ மல்வழி யானே" என்பது (சூ. 99) கவனிக்கத்தக்கது.

ஆய்தக்குறுக்கம் திரிபுவகையால் இரண்டாதல் காண்க.

குறிப்பு:—உயிர்மெய்-216; முற்றாய்தம்-8; உயிரளபெடை 21; ஒற்றளபெடை-42; குற்றியலிகரம்-37; குற்றியலுகரம்-36; ஐகாரக்குறுக்கம்-3; ஔகாரக்குறுக்கம்-1; மகரக்குறுக்கம்-3; ஆய்தக்குறுக்கம்-2; ஆகச் சார்பெழுத்தின் விரி-369 என்க.

(எழுத்திலக்கணத்தின் பகுதியாகிய V உருவம் இங்கே விடப்பட்டது.)

VI. மாத்திரை.

[எழுத்துக்களின் மாத்திரை.]

24. மூன்று உயிரளபு இரண்டாம் நெடில் ஒன்றே
குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.

உரை:—மாத்திரை-ஒலிக்கும் அளவு, உயிரளபு மூன்று-உயிரளபெடைக்கு மூன்றாகும்; நெடில் இரண்டாம்-நெட்டெழுத்துக்கு இரண்டாகும்;

ஒன்றே குறிலோடு ஐ ஔ குறுக்கம் ஒற்றளபு	குற்றெழுத்து, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஒற்றளபு இவைகளுக்கு (த் தனித் தனி) மாத்திரை ஒன்றாகும்;

அரை ஒற்று இ உ குறுக்கம் ஆய்தம்	மெய்யெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், முற்றாய்தம் இவைகளுக்கு (த் தனித் தனி) அரையாகும்;
கால், குறள் மஃகான் ,, ஆய்தம்	மகரக்குறுக்கத்திற்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும் (தனித்தனி) கால் ஆகும்.

மேல் 'புள்ளிவிட்டவ்வொடு' என்னுஞ் சூத்திரத்தில் (சூ. 15) 'உயிரளவாய்' என்று சொல்லியதனால், இங்கு உயிர்மெய்க்கு மாத்திரை சொல்லவில்லை. [உயிர்மெய்க்குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; உயிர்மெய்நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு.]

'செறாஅ அய் வாழிய நெஞ்சு' என உயிரளபெடை நான்கு மாத்திரையினதாய் வருதலும் உண்டு.

[மாத்திரை இன்னதென்பது.]

25. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

உரை:—மாந்தர்-மனிதருடைய, இயல்பு எழும்-இயற்கையாக உண்டாகின்ற, இமை-கண்ணிமைப்பொழுதும், நொடி-கைந்நொடிப்பொழுதும், மாத்திரை-(ஒரு) மாத்திரை யென்னும் காலவரையறைப் பொழுதாம்.

நெஞ்சால் நினைத்து நிகழாமையின் கைந்நொடியினும் கண்ணிமை சிறப்புடையது; ஆனதுபற்றி அது முற்கூறப்பட்டது.

[மாத்திரைக்குப் புறனடை*.]

26. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.

உரை:—இசை-இராகமும், விளி-அழைத்தலும், பண்டமாற்று-பண்டமாற்றலும், ஆதியின்-முதலானவைகளிடத்து,—ஆவியும் ஒற்றும்-(முதலும் சார்புமாகிய) உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும்,—அளவு இறந்து-(முன்சொன்ன) அளவைக்கடந்து, இசைத்தலும்-(அதிகமாக) ஒலித்தலையும், மேவும்-பொருந்தும்.

(பண்டமாற்று-விற்றற்பொருட்டுப் பொருள்களின் பெயர் கூறிக்கூவுதல்.) 'ஆதி'யென்றதனால், நாவல், குறிப்பிசை, முறையிடு

---

*புறன்+அடை=புறத்து அடையாய் வருவது; அல்லது, புறன்+நடை=வேறுவிதமாகிய நடக்கை. 45, 103, 219-ஆஞ் சூத்திரங்களிலுங் காண்க.

தல், புலம்புதல் முதலியனவுங் கொள்க. இராகத்தில் அளவிறந்து ஒலிக்கும்போது, உயிர் பன்னிரண்டு மாத்திரை வரையிலும், மெய் பதினொரு மாத்திரை வரையிலும் ஒலிக்கும் என்றூர் இசைநூலார்.

['நாவல்' நெற்போர் அடிப்போர் எருமைக்கடாக்களை அதட்டு வதோர் சொல்.]

VII. முதல் நிலை.

[மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.]

27. பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய
ஞ ஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

உரை:—பன்னீருயிரும்-பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க ச த ந ப ம வ ய ஞ ங-ககரம் முதல் ஙகரம் ஈறுச் சொல்லப்பட்ட, ஈரைந்து உயிர்மெய்யும்-பத்து உயிர்மெய்யெழுத்துக்களும், மொழி முதல்-சொல்லுக்கு முதலாகும்.

(உ-ம்.) அடை, ஆடை, இடை, ஈகை, உடை, ஊற்று, எவன், ஏடு, ஐயம், ஒதி, ஓரம், ஔவியம்—எனவும்; கனி, சற்று, தளிர், நலம், படை, மலை,. வளம், யவனர், ஞமலி, அங்ஙனம், எனவும் வரும்.

[வகரத்துக்குச் சிறப்புவிதி.]

28. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

உரை:—உ ஊ ஒ ஓ அலவொடு-உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிரல்லாத மற்ற எட்டுயிரோடும், வ முதல்-வகரமெய் (சொல் லுக்கு) முதலாகும். [மற்ற எட்டுயிராவன:—அ ஆ இ ஈ எ ஏ ஐ ஔ.]

(உ-ம்.) வண்டு, வாழை, விளி, வீடு, வெளி, வேளை, வை கல், வெளவால்.

[யகரத்துக்குச் சிறப்புவிதி.]

29. அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

உரை:—அ ஆ உ ஊ ஓ ஔ (ஒடு)-அ ஆ உ ஊ ஓ ஔ என் கிற ஆறு உயிரோடும் (கூடி), ய முதல்-யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகம், யோகி, யெளவனம். (யவனர்-ஒரு தேசத்தார், யௌவனம்-இளமை.)

[ஞகரத்துக்குச் சிறப்புவிதி.]

30. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

உரை:—அ ஆ எ ஒவ்வோடு - அ ஆ எ ஒ என்கிற நான்குயிரோடும் (கூடி), ஞ முதல் ஆகும்-ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று. (ஞமலி-நாய், ஞாலம்-பூமி, ஞெகிழி-கொள்ளிக்கட்டை, ஞொள்கிற்று-இளைத்தது.)

[ஙகரத்துக்குச் சிறப்புவிதி.]

31. சுட்டியா வெகர வினாவழி யவ்வை
யொட்டி ஙவ்வு முதலா கும்மே.

உரை:—சுட்டு-மூன்று சுட்டும், யா (வினா) எகாவினா-யாவினாவும் எகர வினாவும், (ஆகிய ஐந்தனுடைய) வழி-பின்னே, அவ்வை ஒட்டி - அகரத்தைச்சேர்ந்து, ஙவ்வும் முதல் ஆகும் - ஙகாமெய்யும் (சொல்லுக்கு) முதலாகும்.

(உ-ம்.) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம். (ஙனம்-இடத்தையும் தன்மையையும் உணர்த்தும் ஓர் சொல்) ஒருவிதத்தினாலே முதலாகாமையால், 'ஙவ்வும்' என்றார்.

மொழிக்கு முதலாகும் என்ற பத்து உயிர்மெய்யுள், வகரம் முதலிய நான்கையும் எடுத்துச் சிறப்புவிதி கூறவே, மற்றைய க ச த ந ப ம என்னும் ஆறு மெய்களும், பன்னிரண்டு உயிரோடுங் கூடிச் சொல்லுக்கு முதலாமென்பது 'அருந்தாபத்தி'*யாற் கொள்ளக்கிடந்தமை காண்க.

உதாரணம்:—கனி, காய், கிளி, கீரை, குடம், கூடு, கெண்டை, கேடு, கைத்தை, கொடை, கோடை, கௌவை; சட்டி, சாந்து, சினம், சீப்பு, சுரை, சூது, செம்பு, சேவல், சையம், சொல், சோறு, சௌரியம்; தந்தை, தாய், திணை, தீமை, துணி, தூது, தெற்கு, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை; நஞ்சு, நாடு, நிலம், நீர், நுரை, நூல், நெல், நேர், நைதல், நொச்சி, நோய், நௌவி; பந்து, பால், பிட்டு, பீடு புகழ், பூண், பெடை, பேதை, பையல், பொன், போர், பௌவம்; மலை, மாடு, மின்னல், மீன், முயல், மூங்

* அருத்தாபத்தியாவது—ஒரு பொருளைக் கூறிய மாத்திரத்தில், அதன் குறிப்பைக்கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளையும் அறிவது. இது 73-ஆஞ் சூத்திரத்திலும் வரும்.

கில், மெழுகு, மேனி, மையல், மொழி, மோடு, மௌவல்; [கௌவை-துன்பம்; சையம்-மலை; தெள்வை-தாய்; நௌவி-தோணி; பௌவம்-கடல்; மௌவல்-முல்லை.]

க ச த ந ப ம பன்னிரண்டுயிரோடும், வகரம் எட்டுயிரோடும், யகரம் ஆறுயிரோடும், ஞகரம் நான்குயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடிச் சொல்லுக்கு முதலாதல்பற்றியே மேல் 'பன்னீருயிரும்' என்ற சூத்திரத்தில் 'க ச த ந ம வ ய ஞ ங' என்று முறைப் படுத்தினர்.

உயிர் 12; க ச த ந ப மக்கள் பன்னிரண்டு உயிரோடும் வருதலால் அவை 72; வகரம் எட்டு உயிரோடும் வருதலால் 8; யகரம் ஆறு உயிரோடும் வருதலால் 6; ஞகரம் நான்கு உயிரோடும் வருதலால் 4; ஙகரம் ஒருயிரோடு வருதலால் 1; ஆக-103 எழுத்துக்களே மொழிக்கு முதலாம்.*

VIII. இறுதி நிலை.

[மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்.]

32. ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகர நாலா றீறே.

உரை:—ஆவி-(தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு) உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்-ஞகாம் முதலிய இப் பதினொரு மெய்களும், சாயும் உகரம்-குற்றியலுகரமும் (ஆகிய), நாலாறும்-இருபத்துநான்கெழுத்துக்களும், ஈறு ஆகும்-(சொல்லுக்கு) இறுதியில் வரும்.

(உ-ம்.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—எனவும்; விள, பலா, கரி, தீ, மடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, வௌ,—எனவும்; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், வாள்—எனவும்; இஃது—எனவும்; வரும்.

வல்லினமெய் ஆறும், ஙகரமெய்யும் மொழிக்கு ஈறாகா.

---

*மொழிக்கு முதலாகா எழுத்துக்கள் 144. அவை வருமாறு:- ஆய்தம்-1; தனி மெய்யெழுத்துக்கள்-18; ட ண ர ல ழ ள ற ன க்கள் பன்னிரண்டு உயிரோடும் முதலாகாதாகையால் அவை-96; வகரம் நான்குயிரோடு வாராது-4; யகரம் ஆறுயிரோடு வாராது-6; ஞகரம் எட்டுயிரோடு வாராது-8; ஙகரம் பதினொருஉயிரோடு வாராது-11.

குற்றியலுகரமும் உயிரீற்றில் அடங்குமாயினும், புணர்ச்சி வேறுபாடு தோன்ற, வேறு எடுத்துக் கூறினர். இங்கு, 'ஆவி' யென்றதில் அடங்கிய உகரம் முற்றியலுகரம்.

முதலிலும் கடையிலும் வரும் எழுத்துக்கள் இவையென்று கூறவே, அவ்விரண்டிடத்தும் வாராதன ட் ற் என்பனவாம்.

எழுத்திலக்கணத்தின் பகுதியாகிய IX இடைநிலை
இங்கு விடப்பட்டது.

X. போலி.

[ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்குமிடத்தில், அதற்கு ஈடாக மற்றோரெழுத்து வந்து நின்றாலும், பொருள் வேறுபடாமல் ஒத்திருத்தல்; போல நிற்பது - போலி.]

[இறுதிப்போலி.]

33. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

உரை:—அஃறிணைப் பெயரின்-பால்பகா அஃறிணைப் பெயர்களிடத்து, இறுதி மகரம்-ஈற்றிலே நின்ற மகரமெய்யானது, னகரமோடு உறழா-னகரமெய்யோடு ஒத்து, நடப்பன உள-நடப்பவை உண்டு.

* உரையிற்கோடல் என்னும் உத்தியால், இம்மகரம் குறிலிணைக்கீழ் மகரமென்று கொள்க.

(உ-ம்.) மரம்-மரன், நிலம்-நிலன், கலம்-கலன், அகம்-அகன்.

முதற்போலி, இடைப்போலி, இறுதிப்போலி என்னும் மூன்று போலிகளுள், இறுதியிற் சொல்லவேண்டிய இவ்விறுதிப்போலியை முன்னே சொன்னதனால்,—(1) சுரும்பு-சுரும்பர், வண்டு-வண்டர், சிறகு-சிறகர், இடக்கு-இடக்கர், வெற்பு-வெற்பர், எனச் சில குற்றியலுகரப் பெயரின் இறுதி உகரம், 'அர்' என்பதனோடு ஒத்து வருதலும், (2) பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர், குடல்-குடர் எனச் சில பெயரின் இறுதி லகரமெய், ரகரமெய்யோடு ஒத்து வருதலும், (3) திறம்-திறல், மறம்-மறல், பக்கம்-பக்கல், கூவம்-கூவல், எனச்

* உரையிற்கோடலாவது-சூத்திரத்திற் சொல்லப்படாத பொருளை அதன் உரையினால் அமைத்துக்கொள்ளுதல். இது-35, 44, 60, 138, 149-ஆஞ் சூத்திரங்களிலும் வரும்.

சில பெயரின் இறுதி மகரமெய், லகரமெய்யோடு ஒத்துவருதலும், (4) மதில்-மதிள், எனச் சிறுபான்மை லகரமெய், ளகரமெய்யோடு ஒத்து வருதலுங் கொள்க.

[முதற்போலியும், இடைப்போலியும்.]

34. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்.

உரை:—முதல்இடை-(சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும், அ ஐ-அகாரமும் ஐகாரமும், ச ஞ ய முன்-சகர ஞகர யகரங்களுக்கு முன், ஒக்கும்-(தம்முள் வேறுபாடின்றி) ஒத்து நடக்கும். ('முன்' இங்கே, காலமுன்.)

(உ-ம்.) முதற்போலி.	இடைப்போலி.
பசல்=பைசல்	அமச்சு=அமைச்சு.
மஞ்சு=மைஞ்சு	இலஞ்சி=இலைஞ்சி.
மயல்=மையல்	அரயர்=அரையர்.

இவற்றுள் அகரம் இயற்கை; ஐகாரம் போலி. 'அ ஐ' எனப் பொதுப்படக் கூறியதனால், வைச்ச-வச்ச, ஐஞ்சு-அஞ்சு, பைய-பய எனச் சகர ஞகர யகரங்களின்முன் ஐகாரத்துக்கு அகரம் போலியாக வரும் என்க. பிறவெழுத்தின் முன்னும், பழைமை-பழமை, இளைமை-இளமை எனச் சிறுபான்மை இவ்வாறு வரும்.

[இடைப்போலி.]

35. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

உரை:—சில்வழி-(சொல்லுக்கு நடுவே) சிலவிடத்து, ஐகான் (வழி) ய வழி-ஐகாரத்தின் பின்னும் யகரமெய்யின் பின்னும், நவ்வொடு-(இயல்பாக வரும்) நகர மெய்யோடு, ஞஃகான் உறழும்-ஞகரமெய் ஒத்து நடக்கும், என்மரும் உளர்-என்று சொல்வாரும் (சிலர்) உண்டு. [இது பெரும்பாலும் தொடர்மொழியிலே வரும்.]

(உ-ம்.) மைந்நின்ற-மைஞ்ஞின்ற செய்ந்நின்ற-செய்ஞ்ஞின்ற } செய்
கைந்நின்ற-கைஞ்ஞின்ற நெய்ந்நின்ற-நெய்ஞ்ஞின்ற } யுள்.

ஐந்நூறு-ஐஞ்ஞூறு, சேய்நலூர்-சேய்ஞலூர்—வழக்கு.

இன்னும், உரையிற்கோடல் என்னும் உத்தியால், நேயம் ஞேயம், நாஞ்சில்-ஞாஞ்சில், நயம்-ஞயம், என நகரத்துக்கு ஞகரமும், யாண்டு-ஏண்டு, என மொழிமுதல் அகரத்துக்கு எகரமும் போலியாக வரும்.

இனி, ஐந்து-அஞ்சு
உய்ந்தனன்-உய்ஞ்சனன் } என நகர தகரங்களுக்கு ஞகர சகரங்களும்,

பித்து-பிச்சு
வைத்த-வைச்ச } எனத் தகரத்துக்குச் சகரமும்,

கயம்-கசம்
நேயம்-நேசம் } என யகரத்துக்குச் சகரமும்,

போலியாக வருதலுங் கொள்க.

சந்தியக்கரம.

36. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன.

உரை:—அ முன்-அகரத்தின்முன், இகரம்-இகரமும், யகரம்-யகரமெய்யும், என்ற இவை-என்று சொல்லப்பட்ட இவை, ஒத்து எய்தின்-(தம்முள்) ஒத்துப் பொருந்தினால், ஐ இசைக்கும்-ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; அ ஒடு-அகரத்தோடு, உவ்வும்-உகரமும், வவ்வும்-வகரமெய்யும், (ஒத்து) ஓர் அன்ன (எய்தின்)-ஒரு தன்மையனவாகப் பொருந்தினால், ஔ (இசைக்கும்)-ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். [யகர வகர மெய்கள் நடுவிலே கலக்கு மெனக்கொள்க.]

(உ-ம்.) அய்இ-ஐ; அவ்உ-ஔ.

குறிப்பு:—அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத்து எகரம் ஒலிக்கும்; அகரக்கூறும் உகரக்கூறும் தம்முள் ஒத்து ஒகரம் ஒலிக்கும் எனவும் கொள்க. இனி, இச்சூத்திரத்துக்கு 'அகரத்தின்முன் இகரமும், யகரமெய்யும் ஆகிய இவை வருமாயின் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமெய்யுமாகிய இவை வருமாயின், ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும்' என்றும் பொருள் கூறுவர்.

யகர வகரங்கள் தனித்தும் வரும்.

(உ-ம்) வைத்தியன் - வயித்தியன்; கைடபன் - கயிடபன்; வையம்-வய்யம்; ஐவனம்-அய்வனம்; பௌத்தர்-பவுத்தர்; கௌரி-கவுரி; ஔவை-அவ்வை; வௌவுதல்-வவ்வுதல்.

பரீக்ஷை வினாக்கள்:—எழுத்ததிகாரத்துக்கும் எழுத்தியலுக்கும் வேறுபாடென்ன? 1. எழுத்திலக்கணம் எத்தனை வகைப்படும்? அகத்திலக்கணம் எவை? புறத்திலக்கணம் எவை? எழுத்திலக்கணம்

எத்தனை பகுதியுடையது? எழுத்ததிகாரத்திலுள்ள இயல்களெத்தனை? அவைகளை முறைப்படுத்தியவாறெங்ஙனம்? 2. எழுத்தாவது யாது? காரியமாவதுயாது? முதற்காரணமாவது யாது? துணைக்காரணமாவது யாது? இங்கே, 'அணுத்திரள்' என்றது எது? மொழிக்கு முதற்காரணம் எது? எழுத்துக்கு முதற்காரணம் எது? அணுத்திரளின் காரியம் எது? எழுத்தின் காரியம் எது? எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? 3. முதலெழுத்து எத்தனை வகைப்படும்? 4. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? 5. பெயர் எத்தனை வகைப்படும்? இடுகுறிப்பெயராவது யாது? காரணப்பெயராவது யாது? வேறொரு உரைப்படி பெயர் எத்தனை வகைப்படும்? காரணவிடுகுறிப்பெயராவதுயாது? எழுத்தியலிற் பெயரினிலக்கணத்தைக் கூறியது என்? இரட்டுறமொழிதலென்றாலென்ன? 6. உயிரெழுத்தெவை? மெய்யெழுத்தெவை? உயிரெழுத்துக்கு வேறு பெயர் என்ன? மெய்யெழுத்துக்கு வேறு பெயர்கள் எவை? 7. உயிரெழுத்து எத்தனை வகைப்படும்? குற்றெழுத்தெவை? குற்றெழுத்தெனப் பெயர் வந்தது எதனால்? 8. நெட்டெழுத்தெவை? நெட்டெழுத்தெனப் பெயர் வந்தது எதனால்? 9. சுட்டெழுத்தெவை? அகச்சுட்டாவது யாது? புறச்சுட்டாவது யாது? சுட்டெழுத்துக்கள் மூன்றும் எவ்வெப்பொருளைச் சுட்ட வரும்? 10. வினாவெழுத்தெவை? மொழிக்கு முதலில் வரும் வினாவெழுத்தெவை? மொழிக்கு ஈற்றில் வரும் வினாவெழுத்தெவை? மொழிக்கு இரண்டிடத்தும் (முதலிலும் ஈற்றிலும்) வரும் வினாவெழுத்தெது? ஒன்றின முடித்தல் தன்னினமுடித்தல் என்றாலென்ன? 11. மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்? வல்லெழுத்து எவை? வல்லெழுத்துக்கு வேறு பெயர்கள் எவை? 12 மெல்லெழுத்தெவை? மெல்லெழுத்துக்கு வேறு பெயர்கள் எவை? 13. இடையெழுத்தெவை? இடையெழுத்துக்கு வேறு பெயர்கள் எவை? 14. முதலெழுத்துக்களுள் ஒன்றற்கொன்று இனமாகும் எழுத்துக்களெவை? இரண்டிரண்டோரினமாகாவெழுத்துக்களெவை? ஐ ஔ இவற்றிற்கு முறையே இனவெழுத்துக்கள் யாவை? சுருங்கச்சொல்லல் என்றால் என்ன? எற்புழிக்கோடல் என்றால் என்ன? 15. உயிர்மெய்யாவன யாவை? உயிர்மெய்யெழுத்துக்கள் எவ்வளவு? எதனால்? உயிர்மெய்க்குற்றெழுத்தெத்தனை? உயிர்மெய்நெட்டெழுத்தெத்தனை? உயிர்மெய்வல்லெழுத்தெத்தனை? உயிர்மெய்மெல்லெழுத்தெத்தனை? உயிர்மெய்யிடையெழுத்தெத்தனை? 16. ஆய்தத்தின் வடிவம் எது? ஆய்தம் என்பது இங்கே யெதைக் குறிக்கும்? முற்றாய்தமெட்டாவதெப்படி? இடமுன், காலமுன் என்பன எவை? தமிழ்

நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் எத்தனை? அளபெடையாவது யாது? 17. உயிரளபெடையாவன யாவை? உயிரளபெடை யெவ்வளவு? எதனால்? இன்னிசையளபெடையாவது யாது? சொல்லிசையளபெடையாவது யாது? 18. ஒற்றளபெடையாவனயாவை? ஒற்றளபெடை யெவ்வளவு? எதனால்? 19. குற்றியலிகரமாவது யாது? குற்றியலிகரம் எவ்வளவு? எதனால்? யகரம் வாக்குற ஞத்திரியாத குற்றியலிகரம் யாது? 'யகரம் வரக் குற்ளுத்திரியிகரம்' என்ற விடத்து அறியவேண்டிய புணரியற் சூத்திரம் யாது? 20. குற்றியலுகரமாவது யாது? குற்றியலுகரம் எத்தனைவகைப்படும்? குற்றியலுகரம் எவ்வளவு? எதனால்? 'தொடர்மொழியிறுதி வன்மையூருகரம்' இல்லாத குற்றியலுகரம் எது? 'நெடிலோடு' இங்கு 'ஓடு' எதன் பொருட்டு வேண்டிற்று? முற்றியலுகரம் என்றுலென்ன? 21. ஐகாரம் எந்தெந்த இடங்களிற் குறுகும்? எந்தெந்த இடங்களிற் குறுகாது? ஐகாரக்குறுக்கம் எவ்வளவு? எதனால்? ஔகாரம் எந்தெந்த இடங்களிற் குறுகும்? எந்தெந்த இடங்களிற் குறுகாது? ஔகாரக்குறுக்கம் எவ்வளவு? எதனால்? 22. மகரக்குறுக்கம் என்றுலென்ன? மகரக்குறுக்கம் எவ்வளவு? எதனால்? மகரக்குறுக்கம் படிக்கும்போது வேறெந்தச் சூத்திரங்களைக் கவனிக்கவேண்டும்? 23. ஆய்தக்குறுக்கம் என்றுலென்ன? ஆய்தக்குறுக்கம் எத்தனை? எதனால்? லகர ளகர ஈறு ஆய்தமாகத் திரிதற்கு விதி யாது? 24. எந்தெந்த எழுத்து எவ்வளவு மாத்திரை பெறும்? உயிர்மெய்க்கு மாத்திரையெவ்வளவு? அது எதனால் தெரிகிறது? 25. மாத்திரை யென்றுலென்ன? இந்தச் சூத்திரத்தில் எந்தச் சொற்கள் இல்லாவிடிற் குற்றமுளதாம்? அக்குற்றம் இன்னதென்க. 26. எழுத்துக்கள் மேற்கூறிய அளவு கடந்து ஒலிக்கும் இடங்களெவை? இராகத்தில் உயிரெழுத்து எத்தனை மாத்திரை ஈருக ஒலிக்கும்? ஒற்றெழுத்து [இராகத்தில்] எத்தனை மாத்திரை ஈருக ஒலிக்கும்? புறனடைவிதியாவது யாது? 27. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை? பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலாகும் மெய்கள் எவை? மொழிக்கு முதலில் வாராத மெய்யெழுத்துக்களெவை? 28. வகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்? எவ்வுயிர்களோடு வாராது? 29. யகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்? எவ்வுயிர்களோடு வாராது? 30. ஞகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்? எவ்வுயிர்களோடு வாராது? 31. ஙகரம் எங்கெங்கே எவ்வெவ்வுயிரோடு மொழிக்கு முதலில் வரும்? அருத்தாபத்தியென்றுலென்ன? 27-31. 'க ச த ந ப ம வ ய ஞ ங' என முறைப்படுத்தக் காரணம் யாது? வல்லின மெய்

களுள் எவ்வெவை எவ்வெவ்வுயிருடன் மொழிக்கு முதலாகும்? மெல்லின மெய்களுள் எவ்வெவை எவ்வெவ்வுயிருடன் மொழிக்கு முதலாகும்? இடையின மெய்களுள் எவ்வெவை எவ்வெவ்வுயிருடன் மொழிக்கு முதலாகும்? தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் 247-ல் எவ்வளவு எழுத்துக்கள் மொழிக்கு முதலாகும்? எவ்வளவு எழுத்துக்கள் முதலாகா? 32. மொழிக்கிறுதியில் நிற்கும் எழுத்துக்கள் எவை? மொழிக்கிறுதியில் வாரா எழுத்துக்கள் எவை? மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வாரா எழுத்துக்கள் எவை? 33. போலி யென்றாலென்ன? மகரமெய் எங்கே நின்ற விடத்து எம்மெய் வந்து ஒத்து ஒலிக்கும்? இறுதிப்போலியை முற்கூறியதனாற் போந்த பயன் யாது? உரையிற்கோடலென்றாலென்ன? 34. அகாவுயிர் எங்கே நின்றவிடத்து எவ்வுயிர் வந்து ஒத்து ஒலிக்கும்? அ ஐ எனப் பொதுப்படக் கூறியதனாற் போந்த பயன் யாது? 35. ஞகரமெய் எங்கே நின்றவிடத்து எம்மெய் வந்து ஒத்து ஒலிக்கும்? 36. சந்தியக்கரங்கள் எவை? எதனால் அப் பெயர் வந்தது? எவ்வெழுத்துக்கள் கூடி ஐகாரம் ஒலிக்கும்? எவ்வெழுத்துக்கள் கூடி ஔகாரம் ஒலிக்கும்?

எழுத்தியல் முற்றிற்று.

IX. பதம்.

2. பதவியல்.

எழுத்தின் புறத்திலக்கணமாகிய பதம் புணர்பு என்னும் இரண்டினுள், எழுத்தாலாகிய பதத்தின் இலக்கணத்தைக்கூறும் இயல். இவ்வியலுக்குப் பெரும்பாலும் வடமொழியிலக்கணத்தை ஆதாரமாகக் கொண்டாராதலின், அது தோன்ற, 'மொழியியல்' என்று பெயர் குறியாமல், 'பதவியல்' என்றார். [பதம்-வடசொல், மொழி-தமிழ்ச்சொல்.]

[பதம் இன்னதென்பதும், அதன் வகையும்.]

37 எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

உரை:—எழுத்தே - எழுத்துக்கள் தாமே, தனித்தும் - (ஒவ்வொன்றாகத்) தனித்தாகிலும், தொடர்ந்தும்-(இரண்டு முதலாகத்) தொடர்ந்தாகிலும், பொருள் தரின்-பிற பொருளைத் தருமாயின், பதம்-பதமாகும்; அது-அப்பதமானது, பகாப்பதம் (என)-பகாப்பதமென்றும், பகுபதம் என-பகுபதமென்றும், இரு பால் ஆகி-இரண்டு வகையினை யுடையதாகி, இயலும் என்ப-நடக்கும் என்று சொல்வர் (அறிவுடையோர்).

பகாப்பதம்-பிரிக்கக்கூடாதபதம்; பகுபதம்-பிரிக்கக்கூடிய பதம்.

குறிப்பு:—ஒரெழுத்துத் தன்னை மாத்திரம் உணர்த்தும்போது எழுத்தாம்; அதுவே, பிறபொருளை உணர்த்தும்போது பதமாம்.

[பகாப்பதம்.]

38. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

உரை:—பகுப்பால் - பிரிக்கப்படுதலினாலே, பயன் அற்று-(பகுதி விகுதி முதலிய) பிரயோசனமில்லாமல், இடுகுறி ஆகி-(காரணமில்லாமல்) இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்று ஆய்-படைப்புக்காலந் தொடங்கி ஒரே தன்மையனவாகி, முடிந்து இயல்கின்ற-முடிந்து நடக்கின்ற, பெயர்வினை இடை உரி-பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஆகிய நான்கும், பகாப்பதம்-பகாப்பதங்களாம். [பகுபதத்திற்கு முற்படத் தலைப் பட்டது என்க.]

(உ-ம்.) கலம், நீர், சோறு, காற்று—பெயர்ப்பகாப்பதம்.
நட, போ, உண், தின்—வினைப்பகாப்பதம்.
மன், போல், மற்று, கொல்—இடைப்பகாப்பதம்.
உறு, தவ, நனி, கழி—உரிப்பகாப்பதம்.

பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழு எழுத்து ஈறாகத் தொடரும். (உ-ம்.) அணி, உயிர், உடம்பு, இறும்பூது, உத்திராடம், உத்திரட்டாதி.

[பகுபதம்]

39. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

உரை:—பொருள் இடம் காலம் சினை குணம் :தொழிலின்-பொருளும், இடமும், காலமும், உறுப்பும், குணமும், தொழிலும் ஆகிய இந்த ஆறு பெயர்களையும் அடியாகக்கொண்டு, வரு பெயர்-வருகின்ற பெயர்ச்சொற்களும், பொழுது கொள் வினை-(தெரிநிலை யாகவும் குறிப்பாகவும்) காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும், பகுபதம்-பகுபதங்களாகும்,

குறிப்பு:—பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் எனப் பகுபதம் இரண்டாகும். இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபத மில்லை. 'பொழுதுகொள்வினைபகுபதம்' எனவே, தெரிநிலை குறிப்பு என்னும் இருவகைவினையாலணையும்பெயர்களும் பகுபதமாமென்க.

(உ-ம்) பொன்னன் —பொருட்
ஊரன் —இடப்
திருவோணத்தான் —காலப்
கண்ணன் —சினைப்
கரியன் —குணப்
நடையன் —தொழிற் } பெயர்ப்பகு பதம்.

நடந்தான், நடந்த, நடந்து, நடவான்-தெரிநிலை
பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன்-குறிப்பு } வினைப் பகுபதம்.

நடந்தான், நடந்தவன், நடவாதவன்-தெரிநிலை
பொன்னன், பொன்னவன், இல்லாதவன்-குறிப்பு } வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

1. பெயர்ப்பகுபதம் - காலத்தைக் காட்டாமல் வேற்றுமை யுருபைப் பெற்று வரும்; (உ-ம்.) பொன்னனால். [பொன்னை யுடையவனால்.]

2. குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்-காலத்தைக் குறிப்பாகக் காட்டி, வேற்றுமை உருபைப் பெறாது வரும்; (உ-ம்) இராமன் இப்போது பொன்னன். [பொன்னையுடையவனாயிருக்கிறான்.]

3. குறிப்புவினையாலணையும்பெயர்ப்பகுபதம் - காலத்தைக் குறிப்பாகக் காட்டி, வேற்றுமை உருபைப் பெற்று வரும்; (உ-ம்.) முன்பு பொன்னனைக் கொணர்ந்தேன். [பொன்னை யுடையவனா யிருந்தவனை.]

[இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம்.]

1. தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம்-காலத்தை வெளிப்படை யாகக் காட்டி, வேற்றுமை உருபைப் பெறாது வரும்; (உ-ம்.) இராமன் நடந்தான்.

2. தெரிநிலைவினையாலணையும்பெயர்ப்பகுபதம் - காலத்தை வெளிப்படையாகக் காட்டி, வேற்றுமை உருபைப் பெற்று வரும்; (உ-ம்.) நடந்தானைக் கண்டேன்; நடந்தவனைத் தடுத்தேன்.

[இவையே இவ்விரண்டிற்கும் வேறுபாடாம்.]

இங்குக் கூறப்பெறாத பகுபதங்களுஞ் சிலவுள; அவையாவன:—

1. சுட்டடிப்பெயர் (உ-ம்.) அவன், இவன், உவன்.
2. வினாவடிப்பெயர் ,, எவன், எது, யார்.
3. வேறு இடைச்சொற்பெயர் ,, பிறன், மற்றையான்.
4. கிளைப்பெயர் ,, தமர், நுமர், எந்தை, நமர்.

[இவை பொருள் முதலிய ஆறனுள் ஒன்றில் அடங்கும்.]

5. தொழிற்பெயர் (உ-ம்.) நடத்தல்.
6. பண்புப்பெயர் ,, கருமை.
7. பிறபெயர் ,, உடுக்கை.

} சொல்நிலையாற் பகுபதமாயினும் பொருள்நிலையாற் பகாப்பதம் என்க.

குறிப்பு:—பகுபதம் இரண்டு எழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறாகத் தொடரும் என்பர்; (உ-ம்.) கூனி; கூனன், அறிஞன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான்.

இனி, 'நடத்துவிப்பிக்கப்படுகின்றவர்கள்' எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறையில்லை என்றறிக.

[பகுபத உறுப்புக்கள்.]

40. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

உரை:—பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும்-பகுதி முதலாகிய இந்த ஆறு உறுப்பினுள்ளும், ஏற்பவை-(பொருளமைதிக்குப்) பொருந்துவனவற்றை, முன்னி-நினைத்து, புணர்ப்ப-(அறிவுடையோர்) கூட்டி முடிக்க, எப் பதங்களும் முடியும்-எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவுபெறும்.

(உதாரணம்.)

பதம்	பகுதி	சந்தி	இடைநிலை	சாரியை	விகுதி.
கூனி	-கூன் +	—	—	—	இ; இரண்டுறுப்பு.
உண்டான்	-உண் +	—	ட் +	—	ஆன்; மூன்றுறுப்பு.
உண்டனன்	-உண் +	—	ட் +	அன் +	அன்; நான்குறுப்பு.
பிடித்தனன்	-பிடி +	த் +	த் +	அன் +	அன்; ஐந்துறுப்பு.
நடந்தனன்	- நட +	த்(ந்) +	த் +	அன் +	அன்; ஆறுறுப்பு.

['நடந்தனன்' என்னும் பகுபதத்தில் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற்றுதலாகிய விகாரம் பெற்றது.]

குறிப்பு:—பகுபதத்திற்குப் பகுதி விகுதி யென்ற இரண்டு உறுப்புக்களும் அவசியம் வேண்டும்; மற்றைய உறுப்புக்கள் ஒன்றும் பலவும் வருதலும் வாராமையும் உண்டு. பகுதியை முதல்நிலை யென்றும், விகுதியை இறுதிநிலையென்றும் கூறுவர்; இவைகளுக்கும், **எழுத்தியலிற் கூறிய முதல்நிலை இடைநிலை இறுதிநிலைகளுக்கும் வேறுபாடுண்டு.** எழுத்தியலிற் கூறிய முதல்நிலை இடைநிலை இறுதிநிலைகள் சொற்களின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் எழுத்துக்கள் நிற்கும் நிலை. இங்குக் கூறிய முதல்நிலை இடைநிலை இறுதிநிலைகள்—பகுபதத்தின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் பகுபத உறுப்புக்கள் என்று அறிக.

I. பகுதி.

[பொதுவிதி.]

41. தத்தம்,—

பகாப்பு தங்களே பகுதி யாகும்.

உரை:—தத்தம் பகாப்பதங்களே - (பெயர்ப்பகுபதங்களுள்ளும், வினைப்பகுபதங்களுள்ளும்) அவ்வவற்றின் (முதல் நிற்கின்ற) பகாப்பதங்களே, பகுதி ஆகும்-பகுதிகளாகும்.

பெயர்ப்பகுபதங்கட்கும், குறிப்புவினைப்பகுபதங்கட்கும் பெரும்பான்மை பெயர்ச்சொற்களும், சிறுபான்மை இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

(உ-ம்.) பெயர்ப்பகுபதம். பகுதி.

பொன்னன்	—பொன்	—பொருள்.	பொருள் முதலாறும் பகுதியாயின..
ஊரன்	—ஊர்	—இடம்.	
வேனிலான்	—வேனில்	—காலம்.	
கையன்	—கை	—சினை.	
நல்லன்	—நன்மை	—குணம்.	
நடையன்	—நடை	—தொழில்.	
அவன்	—அ	இடைச்சொற்கள் பகுதியாயின.	
பிறன்	—பிற		
கடியன்	—கடி-உரிச்சொல் பகுதியாயிற்று.		

[குறிப்பு வினைப்பகுபதங்கட்கும் இவையே உதாரணமாம்.]

பெயர்ப்பகுபதத்துக்கு வினையும் பகுதியாம்; (உ-ம்.) அறிஞன்.

[பண்புப்பகுதியின் விகாரங்கள்.]

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை, திண்மை, உண்மை, நுண்மை, வெண்மை, கருமை, பசுமை, பொன்மை, பெருமை, அன்மை, நன்மை, தண்மை, பழமை, வன்மை, கீழ்மை, நொய்ம்மை, இன்மை, பருமை, இளமை, முதுமை, எளிமை, அருமை, குறுமை, நெடுமை, மடமை, புலமை, வெறுமை, நடுமை முதலிய பண்புப் பகுதிகள் விகாரப்படும் வகை.

42. ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

உரை:—ஈறுபோதல்-இறுதியிலுள்ள மை போதலும், இடை உகரம் இ ஆதல்-நடுவில் நின்ற உகரம் இகரமாதலும், ஆதி நீடல்-முதலில் நின்ற குறில் நெடிலாதலும், அடி அகரம் ஐ ஆதல்-முதலில் நின்ற அகரம் ஐகாரமாதலும், தன் ஒற்று இரட்டல் - தன் [பண்புப் பகுதியின்] மெய் நடுவே மிகுதலும், முன் நின்ற மெய் திரிதல்-(மை விகுதிக்கு) முன்னே நின்ற மெய் வேறொரு மெய் யாக மாறுபடுதலும், இனம் மிகல்-(வருகின்ற வல்லெழுத்துக்கு) இனமான மெல்லெழுத்து மிகுதலும், இனையவும்-இவைபோல்வன பிறவும்,—பண்பிற்கு இயல்பு - அப்பண்புச் சொற்களுக்கு இயற்கையாம்.

(உ-ம்.) நல்லன், மென்சொல், சிறு பொருள். } நன்மை, மென்மை, சிறுமைகளின் 'மை' போயிற்று.

கரியன், சிறியன். } கருமை, சிறுமைகளின் மை போய் நடுவில் நின்ற உகரம்-இகரமாயிற்று.

பாசி, மூதூர். } பசுமை முதுமைகளின் மை போய் ஆதி நீண்டது.

பைந்தார். } பசுமையின் மை போய் (நடுநின்ற உயிர்மெய்யாகிய சு என்பதும் கெட்டு) வருமெழுத்துக்கு இனவெழுத்து மிகுந்து, ஆதி அகரம்-ஐகாரம் ஆயிற்று.

வெற்றிலை, புத்தமுது, நட்டாறு. } வெறுமை, புதுமை, நடுமைகளின் மை போய்த் தன்னொற்றிரட்டியது.

வெம்பயன், சேதாம்பல் } வெம்மை, செம்மைகளின் மை போய் ஆதி நீண்டு, முன்னின்ற மகரமெய் முறையே 'யகர தகர'மெய்களாகத் திரிந்தது.

இவ்விகாரங்களைப் பதப்புணர்ச்சிக்குங்கொள்க. இவ்விகாரங்கள் அன்பு அழகு முதலிய வாய்பாடுகளுக்குப் பொருந்தா; முன்னெடுத்துக்காட்டிய செம்மை முதலிய மையீற்றுப் பண்புகளுக்கே பொருந்த வைத்தலால், இது, *எடுத்த மொழியி னெய்தவைத்தல் என்னும் உத்தி.

'இனையவும்,' என்றதனால்:—(1) பைந்தார் - முதலியவற்றில் பசுமையின் நடுநின்ற சு கெடுதலும், (2) கார் பார் முதலியவற்றில் கருமை பருமைகளின் நடுநின்ற உகரம் கெடுதலும், (3) அரும்பொருள் பெரும்வெளம்-முதலியவற்றில் அருமை பெருமைகளின் ஐகாரம் மாத்திரம் கெடுதலும், (4) இன்சொல் - என்பதில் இனிமையின் இடைநின்ற இகரம் கெடுதலும், (5) பழைய-என்பதில் பழமையின் இடை அகரம் ஐகாரமாதலும், (6) தூமலர்-என்றதில் தூய்மையின் இடையொற்றுக் கெடுதலும், (7) துய்ய-என்பதில் தூய்மையின் முதல் குறுகுதலும், முதலானவைகளுங் கொள்க.

இனிப், பெருமையான், சிறுமையான் என இயல்பாய் முடிதலையுங் கொள்க.

---

*எடுத்தமொழியி னெய்தவைத்தல்—தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தில் தான் சொல்லும் இலக்கணத்தைப் பொருந்தியிருக்கவைத்தல்.

[தெரிநிலைப்பகுதிக்குச் சிறப்புவிதி.]

43. நட வா மடி சீ விடு கூ வே வை
நொ(ப்)போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்று மீற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே.

உரை:—நட * * * அஃகு என்று-நட முதல் அஃகு ஈறாக, எய்திய-(முதல் நிலையாகப்) பொருந்திய, இருபான் மூன்றும்-இருபத்துமூன்றாகும், ஈற்றவும்-(உயிரும் மெய்யும் குற்றியலுகரமுமாகிய) இறுதியையுடைய (இந்த நட முதலிய வாய்பாடுகளெல்லாம்), செய் என் ஏவல் (பகாப்பதம்)-செய் என்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், வினைப்பகாப்பதம்-மற்றைத் தெரிநிலை வினைகளின் பகாப்பதமாகிய பகுதியும் ஆம்.

[நட, வா முதலியன 'செய்' என்னும் பொது வாய்பாட்டில் அடங்கும்.] 'செய்யென்வினைப்பகாப்பதம்' என்றதனால், செய்யென் ஏவல் பகாப்பதமும் அடங்குமாயினும், நட, வா முதலிய பகுதிகளே ஏவற்பொருள் உணர்த்தாமல், ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்தும் என்பது தோன்ற வேறு கூறினார்; (உ-ம்.) நடவாய், வாராய், உண்ணாய்; இவை 'ஆய்' விகுதி குன்றி, நட, வா, உண், என நிற்பினும், விகுதியோடு புணர்ந்தவையேயாம்; (சூ. 46.)

மற்றை வினைப்பகுதிக்கு உதாரணம்:—நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான் (சீவினான்), விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான் (உராய்ந்தான்), உண்டான், பொருநினான் (பொருந்தினான்); திருமினான் (திரும்பினான்), தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான்.

நட என்பதில், கிட பற முதலிய அகரவீற்றுப் பகுதிகளெல்லாம் அடங்கும்; அங்ஙனமே மற்றவை அவ்வவ்வீற்றுப்பகுதிகளில் அடங்குதல் காண்க.

'எகரம்' தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லுமிடத்திலும், வினா இடைச்சொல்லிலும், அளபெடையிலும் மாத்திரமே ஈறாகும்; மற்றைய இடங்களில் ஈறாகாது; ஆதலால், 'நாலாறுமீறே' (சூ. 32) என்றவர், இங்கு 'இருபான் மூன்று' என்றார்

இப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது, தொழு-தொழு தான், உண்-உண்டான் எனச்சில இயல்பாகும். சில, செல்-சேறல், கொள்-கோடல், என முதல் நீண்டும்; சா-செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும்; வே-வெந்தான், தா-தந்தான் எனத் தனிநெடில் குறுகியும்; வா-வருகின்றான், தா-தருகின்றான் எனத் தனிநெடில் குறுகி ஓர் உயிர்மெய் விரிந்தும்; கொணு-கொணர்ந்தான் என முதலெழுத்துக்கு அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும்; விரவு-விராவினான் என நடுவிலுள்ள குறில் நீண்டும்; அலமா-அலமருகின்றான் என நெடில் குறுகி ஓர் உயிர்மெய் விரிந்தும்; கல்-கற்றான், கேள்-கேட்டான் என ஈற்று மெய் வருமெய்யாகத் திரிந்தும்; செல்-சென்றான், கொள்-கொண் டான் என ஈற்றுமெய் வரும் எழுத்துக்கு இனமாகத் திரிந்தும்;

முழுகு-முழுகினான், மூழ்கினான் } என இயல்பும் விகாரமுமாக
விழு-விழுந்தான், வீழ்ந்தான் } உறழ்ந்தும்;

இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா-காத்தான், சா-செத்தான், தா-தந்தான் எனவும், கல்-கற்றான், நில்-நின்றான், புல்-புல்லினான், சொல்-சொன்னான் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால், அவை யெல்லாம் தனித்தனி சொல்லப் புகுந்தால் விரியும்; ஆதலால், செய்யுள் வழக்கத்தையும், உலக வழக்கத்தையும் பார்த்துச் செய் யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங்கொண்டு ஏற்றபடி அமைத் துக்கொள்க.

இங்கு எடுத்துக்காட்டிய நட, வா முதலியன எல்லாம் தன் வினைப்பகுதிகள்; பிறவினைப்பகுதிகள் மேற் சூத்திரத்திற் காட் டப்படும். தன்வினையாவது-தானே நேராகத் தொழிலைச் செய்வது; பிறவினையாவது-மற்றொருவனைக்கொண்டு தான் செய்விப்பது.

தெரிநிலைவினைப்பகுபதங்கட்கு நட, வா முதலிய வினைச் சொற்களே யன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதியாய் வரும்.

(உதாரணம்.)

தெரிநிலைவினைப்பகுபதம்.	பகுதி.	
சித்திரித்தான்	—சித்திரம்	} பெயர்ச்சொற்கள் பகுதியாயின.
கடைக்கணித்தான்	—கடைக்கண்.	
போன்றான்	—போல்	} இடைச்சொற்கள் பகுதியாயின.
நிகர்த்தான்	—நிகர்	
சான்றான்	—சால்	} உரிச்சொற்கள் பகுதியாயின.
மாண்டான்	—மாண்	

[ஏவற்பகுதிக்குச் சிறப்புவிதி—பிறவினை.]

44. *செய்யென் வினைவழி விப்பி தனிவரின்*
செய்வியென் ஏவல் இணையினீ ரேவல்.

உரை:—செய் என் வினை வழி-செய் என்னும் வாயபாட்டுப் பகுதிகளின்பின், வி பி தனிவரின்-'வி' விகுதியாவது 'பி' விகுதியாவது தனித்து வருமாயின், செய்வி என் ஏவல்-(செய் என்னும் ஏவலின்மேல் ஓர் ஏவலாய்ச்) செய்வி என்னும் வாய்பாட்டு ஏவல்பகுதியாம்; இணையின்-('செய்' என்னும் வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், ஈரேவல்-('செய்' என்னும் ஏவலின்மேல்) ஈரேவலாய்ச் 'செய்விப்பி' என்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாம். [இவை பிறவினை யெனப்படும்.]

(உ-ம்.) செய்வி, நடப்பி—வி, பி தனித்து வந்தன; ஓரேவல்.

நடப்பிப்பி	—பி, தன்னோடு இணைந்து வந்தது.	ஈரேவல்
நடப்பிவி	—பி பிறிதொடு இணைந்து வந்தது.	
வருவிப்பி	—வி பிறிதொடு இணைந்து வந்தது.	

'வி' விகுதி தன்னோடு இணைந்து வாராது.

இனி, உரையிற்கோடல் என்னும் உத்தியால் (1) கு சு டு து பு று என்கிற ஆறு விகுதிகளுள் ஒன்றைப்பெற்றும்;

[(உ-ம்.) போ-போக்கு, பாய்-பாய்ச்சு, உருள்-உருட்டு, நட-நடத்து, எழு-எழுப்பு, பயில்-பயிற்று.]

2. சில பகுதிகளின் நடுவிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகியும்; [(உ-ம்.) இயங்கு-இயக்கு, திருந்து-திருத்து, திரும்பு-திருப்பு, தோன்று-தோற்று.]

3. நடுவில் தன் ஒற்று இரட்டித்தும்; [(உ-ம்.) உருகு-உருக்கு, ஆடு-ஆட்டு, ஏறு-ஏற்று] பிறவினையாகும்.

இவ்வாறன்றித் தன்வினை பிறவினைகட்குப் பொதுவாகச் சில பகுதிகளும் உண்டு; அவை-கரை, தேய், உடை, மறை, சேர், அலை, மடி, அழி, இடி, மாய் முதலியன. அவை வருமாறு:—

தன்வினை.		பிறவினை.	
கரைந்தான்.	இறந்தகாலத்தில் சந்தித்தகரம் நகரமாகும்.	கரைத்தான்.	இறந்தகால நிகழ்காலங்களில் இடைநிலை மெய் மிகும்.
கரைகிறான்.	நிகழ்காலத்தில் இடைநிலைமெய் இயல்பாகும்	கரைக்கிறான்.	

கரைவான்.	எதிர்காலத்தில் வகர இடைநிலைபெறும்.	கரைப்பான்.	எதிர்காலத்தில் பகர இடைநிலை பெற்று மிகும்.

குறிப்பு:—மேற்கூறிய 'கரை' முதலியன எதிர்மறையில் வரும் போது 'கு' என்ற சாரியை பெற்று வரும்.

[வினைப்பகுதிக்குப் புறனடை.]

45. விளம்பிய பகுதிவே றாதலும் விதியே. ....

உரை:—விளம்பிய பகுதி-(எவற்பகுதி வேறாதல்போல அதன் பின்னே) சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள், வேறு ஆதலும் விதியே-வேறுபடுதலும் விதியேயாகும்

(உ-ம்.) நடந்தான், நடப்பித்தான், நடப்பிப்பித்தான், நடத்துவிப்பித்தான். [இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளானமை காண்க.]

II. விகுதி.

46. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப(ம்) மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓம்(ஒடு) உம் ஊர்
க ட த ற ஐ ஆய் இ(ம்) மின் இர் ஈர்
ஈயர் க ய உம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

உரை:—அன் * * * ஓம் ஒடு,-அன் முதல் ஓம் இறுதியாக வுள்ள இருபத்துமூன்றோடு, உம் ஊர் க ட த ற-'உம்' என்பது ஏறிய க் ட் த் ற் என்னும் மெய்கள் (கும் டும் தும் றும்) நான்கும், ஐ * * * உம்-ஐ முதல் உம் ஈறாகச் சொல்லப்பெற்ற பத்தும், ஆக (23+4+10=37) முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும்,—பிறவும்-(இவைபோல்வன) பிறவும்,—வினையின்விகுதி-(தெரிநிலை) வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும்; பெயரினுஞ் சில-பெயர்ப்பகுபதங்களிலும் (இவற்றுட்) சில விகுதிகளாகும்.

முதல் வரியில் கூறிய 'அன்'படர்க்கையிடம்; இரண்டாவது வரியில்கூறிய 'அன்' தன்மையிடம்; இவ்விகுதி தன்மைக்கு *'எதிரது

*எதிரதுபோற்றல்-முன்பு இல்லாததாய்ப் பின்பு வழங்கி வருமாயின், அதனைத் தழுவிக்கொள்ளுதல்.

போற்றல்' என்னும் உத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின், வலி யுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

(உ-ம்.) நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடப்ப (நடந்தார், நடப்பார்), உண்மார் (உண்பார்), நடந்தன, நடவா, உண்கு (உண்பேன்), உண்டு (உண்டேன்), நடந்து (நடந்தேன்), சேறு (செல்வேன்), நடந்தனென், நடந்தேன், நடப்பல் (நடப்பேன்), நடப்பன், நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும் (உண்போம்), உண்டும் (உண்டோம்), வருதும் (வருவோம்), சேறும் (செல்வோம்), நடந்தனை, நடந்தாய், சேறி (செல்வாய்), நடமின், நடந்தனிர், நடந்தீர், நிலீயர், நடக்க, வாழிய, நடக்கும். (இவற்றை வினையியலிற் காண்க.)

1. குறிப்பு வினைமுற்று விகுதிகள்:—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர்;

(உ-ம்.) குழையன், குழையான், குழையள், குழையாள், குழையர், குழையார், குழையன, குறுந்தாட்டு (குறுகிய தாளை யுடையது), குழையது, குழையிற்று, குழையினென், குழையினேன், குழையம், குழையாம், குழையினெம், குழையினேம், குழையினோம், குழையினை, குழையாய், வில்லி, குழையினிர், குழையீர்.

2. பெயர் விகுதிகள்:—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ, ஐ, மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ்;

(உ-ம்.) குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி, கண்ணனை, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, நம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ்.

3. தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்:—அ, உம்;

(உ-ம்.) செய்த, செய்கின்ற, செய்யும்.

குறிப்புப் பெயரெச்ச விகுதி:—அ; (உ-ம்.) சிறிய.

['உம்' விகுதி இடைநிலை பெறுமல் தானே காலங் காட்டுமாதலால், அது குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.]

4. தெரிநிலை வினையெச்ச விகுதிகள்:—உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால் ஏல், எனின், ஆயின், ஏனும், கு,

இய, இயர், வான், பான் பாக்கு, கடை, கண், வழி, இடத்து, உம், மல், மை, மே, து; (சூ. 470.)

(உ-ம்.) நடந்து, ஓடி, போய், உண்குபு, உணா, உண்ணூ, உண்டென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு (உண்ணுதற்பொருட்டு), செய்தக்கடை, செய்தக்கண், செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே, உண்ணாது.

[இங்கு, இறுதியில் கூறிய, மல், மை, மே, து என்ற நான்கும் எதிர்மறை விகுதிகள்.]

குறிப்பு வினைபெச்ச விகுதிகள்:—அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து;

(உ-ம்.) மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

5. தொழிற்பெயர் விகுதிகள்:—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல்;

(உ-ம்.) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள் (விக்குதல்), சாக்காடு (சாதல்), கோட்பாடு (கொள்கை), தேற்றரவு (தேற்றுதல்), வாரானை (வருதல்), நடவாமை, பாய்த்து (பாய்தல்), தழால் (தழுவல்), எழில் (எழுதல்). ['மை' விகுதி இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு கூடி வரும். (உ-ம்.) நடந்தமை, நடக்கின்றமை. 'து' விகுதி மூன்றுகால இடைநிலைகளோடு கூடியும் வரும். (உ-ம்.) நடந்தது, நடக்கின்றது, நடப்பது.]

குறிப்பு:—இத்தொழிற்பெயர் விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டுப் பகுதி மாத்திரமாய் நிற்கும் தொழிற்பெயருக்கு—முதனிலைத் தொழிற்பெயரென்றும், விகுதி புணர்ந்து கெடும்போது பகுதி விகாரப்பட்டு நிற்கும் தொழிற்பெயருக்கு—முதனிலைதிரிந்த தொழிற்பெயரென்றும் பெயர்.

(உ-ம்.) அடி, அறி, உரை, கெடு-முதனிலைத்தொழிற்பெயர்.

கோள், கேடு, இடையீடு—முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.

6. பண்புப்பெயர் விகுதிகள்:—மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், பம், நர்;

(உ-ம்.) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், திட்பம், நன்னர்.

7. துணிவுப் பொருளை யுணர்த்தும் விகுதிகள்:—விடு, ஒழி; (உ-ம்.) செய்துவிட்டான், செய்தொழிந்தான்.

8. தற்செயலை (தற்பொருட்டுப் பொருளை) யுணர்த்தும் விகுதி:—கொள்; (உ-ம்.) அடித்துக்கொண்டான்.

9. செயப்பாட்டுவினைப்பொருளை யுணர்த்தும் விகுதிகள்:- படு, உண்; (உ-ம்.) கட்டப்பட்டான், கட்டுண்டான்.

10. தன்மைப்பொருளை யுணர்த்தும் விகுதி:—மை;

(உ-ம்.) பொன்மை, ஆண்மை.

11. பகுதிப்பொருள் விகுதிகள்:—இரு, இடு, உறு; [இவற்றிற்குத் தமக்கென வேறு பொருளில்லை.]

(உ-ம்.) எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான், சொல்லுறுகின்றான். [இவற்றைத் துணைவினை யென்பர்.]

12. பிறவினை விகுதிகள்:—வி, பி, கு, சு, டு, து, பு, று; (உ-ம்.) (சூ. 44-பார்க்க).

13. வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப் பொருள் உணர்த்தும் விகுதிகள்:—இ, ஐ, அம்;

(உ-ம்.)	வினைமுதற்பொருள்.	செயப்படும்பொருள்.	கருவிப்பொருள்.
இ—	அலரி	ஊருணி	மண்வெட்டி.
ஐ—	பறவை	தொடை	பார்வை.
அம்—	எச்சம்	தொல்காப்பியம்	நோக்கம்.

14. பகுதியோடு புணர்ந்து பின் கெடும் விகுதிகள்:—(1) முன்னிலையேவலொருமை 'ஆய்' விகுதி; (2) பெயரெச்ச விகுதி; (3) தொழிற்பெயர் விகுதி; (4) வினைமுதற்பொருளையுணர்த்தும் 'இ' விகுதி; (5) செயப்படுபொருளை யுணர்த்தும் 'ஐ' விகுதி.

(உ-ம்.) (1) நட - நடப்பி - இவைகளிலே 'ஆய்' விகுதி புணர்ந்து கெட்டது. (2) கொல்களிறு, ஓடாக்குதிரை - இவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன. (3) அடி, கேடு, இடையீடு-இவைகளிலே-'தல்' என்னும் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது. (4) காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை-இவைகளிலே வினை முதற்பொருளையுணர்த்தும் 'இ'

விகுதி புணர்ந்து கெட்டது. (5) ஊண், தீன், கோள்-இவை களிலே செயப்படுபொருளை யுணர்த்தும் 'ஐ' விகுதி புணர்ந்து கெட்டது:

சிறுபான்மை 'வரிப்புனைபந்து' என்பதில், வரிந்து என்பதன் வினையெச்ச விகுதியும் 'கொள்வாருங் கள்வரும் நேர்' என்பதில் 'நேர்வர்' என்பதன் வினைமுற்று விகுதியும் கெட்டுவந்தன. இவ் வாறே பிற விகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவுங் கொள்க.

இவ்விகுதிகளுள் ஒன்றே பல பொருளைக் குறிக்கும்; (உ-ம்.)

அன். 1. ஆண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : அறிஞன்.
2 ,, ,, வினை விகுதி : வந்தனன்.
3 தன்மை ஒருமை விகுதி : செய்வன் [-செய்வேன்.]
4 ஒன்றன்பாற்படர்க்கைப்பெயர் விகுதி: வலியன், கடுவன்.

ஆன். 1 ஆண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : பெரியான்.
2 ,, ,, வினை விகுதி : நடந்தான்.
3 ஒன்றன்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : கோட்டான்.

மார். 1 பலர்பாற்படர்க்கைப்பெயர் விகுதி : கன்னிமார்.
2 ,, ,, வினைமுற்று விகுதி : கொண்மார் [-கொள்வார்.]

அ. 1 வினையெச்ச விகுதி : செய்ய, மெல்ல.
2 பெயரெச்ச விகுதி : செய்த, சிறிய.
3 பலவின்பாற்படர்க்கை விகுதி : வந்தன, கொடியன.
4 வியங்கோள் விகுதி : எழுந்தருள (-எழுந்தருள்க.)

ஆ. 1 எதிர்மறைப்பலவின்பாற்படர்க்கை விகுதி : நடவா.
2 வினையெச்ச விகுதி : செய்யா (-செய்து).

கு. 1 பண்புப்பெயர் விகுதி : நன்கு.
2 பிறவினை விகுதி : போக்கு [-போகச்செய்.]
3 தொழிற்பெயர் விகுதி : போக்கு [-போதல்.]
4 தன்மை ஒருமை விகுதி : உண்கு [-உண்பேன்.]

து. 1 ஒன்றன்பாற்படர்க்கை வினை விகுதி : நடந்தது.
2 ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர் விகுதி : கைத்து.
3 பிறவினை விகுதி : நடத்து.
4 தன்மை யொருமை விகுதி : வந்து [-வந்தேன்.]
5 தொழிற்பெயர் விகுதி : பாய்த்து [-பாய்தல்.]
6 எதிர்மறை வினையெச்ச விகுதி : அல்லது.

று. 1 ஒன்றன்பாற்படர்க்கைவினைமுற்று விகுதி : ஆயிற்று.

2 பண்புப்பெயர் விகுதி : நன்று.
3 தன்மை ஒருமை விகுதி : சென்று (-சென்றேன்.)
: சேறு (-செல்வேன்.)
4 பிறவினை விகுதி : பயிற்று.

அல். 1 தொழிற்பெயர் விகுதி : செயல்.
2 தன்மை ஒருமை விகுதி : நடப்பல் (-நடப்பேன்.)
3 உடன்பாட்டு வியங்கோள் விகுதி : எனல் (-என்க.)
4 எதிர்மறை வியங்கோள் விகுதி : கொள்ளல் (-கொள்ளற்க.)
5 எதிர்மறையேவல் விகுதி : படியல் (-படியாதே.)
6 வினைமுதற்பொருள் விகுதி : தோன்றல் (-மகன்.)

அம். 1 தன்மைப்பன்மை விகுதி : நடந்தனம், பெரியம்.
2 தொழிற்பெயர் விகுதி : ஆட்டம்.
3 பண்புப்பெயர் விகுதி : நலம்.
4 வினைமுதற்பொருள் விகுதி : எச்சம்.
5 செயப்படுபொருள் விகுதி : நீத்தம்.
6 கருவிப்பொருள் விகுதி : நோக்கம்.

ஐ. 1 முன்னிலை ஒருமை விகுதி : செய்தனை (-செய்தாய்.)
2 தொழிற்பெயர் விகுதி : கொலை.
3 பண்புப்பெயர் விகுதி : தொல்லை.
4 வினைமுதற்பொருள் விகுதி : பறவை.
5 செயப்படுபொருள் விகுதி : தொடை.
6 கருவிப்பொருள் விகுதி : படை.

இ. 1 ஆண்பாற்படர்க்கைப்பெயர் விகுதி : வில்லி.
2 பெண்பாற்படர்க்கைப்பெயர் விகுதி : பொன்னி.
3 ஒன்றன்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : நாற்காலி.
4 முன்னிலைஒருமை விகுதி : வருதி (-வருவாய்)
5 வினையெச்ச விகுதி : ஓடி.
6 வினைமுதற்பொருள் விகுதி : அலரி.
7 செயப்படுபொருள் விகுதி : ஊருணி.
8 கருவிப்பொருள் விகுதி : மண்வெட்டி.
9 ஏவல்ஒருமை விகுதி : காட்டுதி (-காட்டு.)
10 வியங்கோள் விகுதி : காட்டி (-காட்டுக.)

இர். 1 பலர்பாற்படர்க்கைப்பெயர் விகுதி : கேளிர், மகளிர்.
2 முன்னிலைப்பன்மை விகுதி : நடந்தனிர்.
3 ஏவற்பன்மை விகுதி : வருதிர்.

ஆல். 1 தொழிற்பெயர் விகுதி : ஓரால் (-ஒருவுதல்:)
2 தெரிநிலைவினையெச்ச:விகுதி : உண்டால்.
3 குறிப்புவினையெச்ச விகுதி : அல்லால்.
4 எதிர்மறைஏவல் ஒருமை விகுதி:மரூல் [-மறுக்காதே.]

உ. 1 வினையெச்ச விகுதி : நடந்து.
2 தொழிற்பெயர் விகுதி : வரவு

உம். 1 ஏவற்பன்மை விகுதி : வாரும்.
2 படர்க்கைவினைமுற்று விகுதி : செய்யும்.
3 பெயரெச்ச விகுதி : நடக்கும்.
4 வினையெச்ச விகுதி : வருதலும்.

ஏல். 1 எதிர்மறைஏவல் விகுதி : திரியேல் (-திரியாதே.)
2 தெரிநிலைவினையெச்ச விகுதி : உண்டானேல்.

கை. 1 தொழிற்பெயர் விகுதி : வருகை.
2 முறைப்பெயர் விகுதி : தங்கை

சி. 1 பண்புப்பெயர் விகுதி : மாட்சி.
2 தொழிற்பெயர் விகுதி : உணர்ச்சி.

பு. 1 பண்புப்பெயர் விகுதி : நண்பு.
2 தொழிற்பெயர் விகுதி : படிப்பு.
3 வினையெச்ச விகுதி : செய்பு (-செய்து)

மை. 1 பண்புப்பெயர் விகுதி : நன்மை.
2 தொழிற்பெயர் விகுதி : செய்தமை.
3 வினையெச்ச விகுதி : செய்யாமை (-செய்யாமல்.)
4 தன்மைப்பொருள் உணர்த்தும் விகுதி : பொன்மை, பெண்மை.

வி. 1 தொழிற்பெயர் விகுதி : கேள்வி.
2 பிறவினை விகுதி : செய்வி.

இன்னுஞ்சில விகுதிகள் உயர்வுப்பொருள் தர வருதலும் உண்டு; (உ-ம்.) தனியன்; கோவையார்.

III. இடைநிலை.

[1. பெயரிடைநிலை.]

47. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

உரை:—இலக்கியங்கண்டு - (அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப்பார்த்து, அதற்கு- அவ்விலக்கியத்துக்கு, இலக்கணம்-(அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, இயம்பலின்—சொல்லுதலால்,—பகுதி விகுதி பகுத்து-பகுதியையும் விகுதியையும் பிரித்து, இடை நின்றதை-நடுவிலே நின்றதை, வினைப்பெயர் அல் பெயர்க்கு-வினையாலணையும் பெயர் அல்லாத மற்றைப் பெயர்களுக்கு, இடைநிலை-இடைநிலை, எனல்-என்று சொல்லுக. [இலக்கியம்-லக்ஷ்யம்; இலக்கணம்-லக்ஷணம்.]

(உ-ம்.) அறிஞன், கவிஞன், வினைஞன், இளைஞன், பகைஞன்.	'ஞ்' பெயர் இடைநிலை.
ஓதுவான், பாடுவான்.	'வ்' பெயர் இடைநிலை.
இடைச்சி, புலைச்சி, வலைச்சி.	'ச்' பெயர் இடைநிலை.
வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி, மனையாட்டி.	'த்' பெயர் இடைநிலை.
செட்டிச்சி, தச்சிச்சி.	'இச்' பெயர் இடைநிலை.
பொருநன், செய்குநன்.	'ந்' பெயர் இடைநிலை.

இங்குக் கூறிய பெயரிடைநிலைகள் காலங்காட்டா; இனிக் கூறப்படும் வினையிடைநிலைகள் காலங்காட்டும். மேல் வினைக்குக் கூறும் இடைநிலைகளே வினையாலணையும்பெயர்க்கும் அமையும்.

[2. வினையிடைநிலை.]

[இறந்தகால இடைநிலை—4.]

48. தடற வொற் றின்னே யைம்பால் மூவிடத்து
இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

உரை:—த ட ற ஒற்று-த், ட், ற் (என்னும் மூன்று மெய்களும்) இன்-'இன்' என்பதும், ஐம்பால்-ஐந்து பால்களிலும், மூவிடத்து-மூன்று இடங்களிலும், இறந்த காலம்-இறந்த காலத்தை, தரும்-காட்டுகின்ற, தொழில் இடைநிலை—வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.

(உதாரணம்.)

தன்மை.	நடந்தேன்.	நடந்தேம்.
முன்னிலை.	நடந்தாய்.	நடந்தீர்.

படர்க்கை.	ஆண்பால்.	நடந்தான்.
	பெண்பால்.	நடந்தாள்.
	பலர்பால்.	நடந்தார்.
	ஒன்றன்பால்	நடந்தது.
	பலவின்பால்	நடந்தன.

[இவை 'த்' இடைநிலைபெற்றன.]

உண்டான், 'ட்' இடைநிலை. சென்றன், 'ற்' இடைநிலை. உறங்கினன், 'இன்' இடைநிலை. [மற்றைப்பால் இடங்களிலும் அமைத்துக்கொள்க.]

'இன்' இடைநிலை 'பாடியது' 'சொல்லியது,' 'எஞ்சியது' எனக் கடை குறைந்தும், 'போனது' 'சொன்னது' என முதல் குறைந்தும் வரும்.

[நிகழ்கால இடைநிலை—3.]

49. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை யிடைநிலை.

உரை:—ஆநின்று கின்று கிறு - ஆநின்று, கின்று, கிறு என்ற மூன்றும்,—ஐம்பால் மூவிடத்தின் - ஐந்து பால்களிலும் மூன்று இடங்களிலும், நிகழ் பொழுது - நிகழ்காலத்தை, அறை - காட்டுகின்ற, வினை இடைநிலை - வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.

(உ-ம்.) நடவாநின்றன்; 'ஆநின்று' இடைநிலை. நடக்கின்றன்; 'கின்று' இடைநிலை. நடக்கிறன்; 'கிறு' இடைநிலை. [மற்றைப்பால் இடங்களிலும் அமைத்துக்கொள்க.]

[எதிர்கால இடைநிலை—2.]

50. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழுது
இசைவினை யிடைநிலை யாமிவை சில இல.

உரை:—ப வ-பகரமெய்யும் வகரமெய்யும்,—ஐம்பால் மூவிடத்து-ஐம்பால் மூவிடங்களிலும், எதிர் பொழுது-எதிர்காலத்தை, இசை - காட்டுகின்ற, வினை இடைநிலை ஆம் - வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்; இவை-இந்த மூன்றுகால இடைநிலைகளும்—சில இல-சில (முற்றுவினை எச்சவினைகட்கு) இல்லை.

(உ-ம்.) நடப்பான் 'ப்' இடைநிலை.
வருவான் 'வ்' இடைநிலை.

மற்றைப்பால் இடங்களிலும் அமைத்துக்கொள்க.

குறிப்பு:—இல், அல், ஆ என்னும் மூன்றும் எதிர்மறை யிடைநிலைகளாம்; இவற்றுள், ஆகார இடைநிலை வருமெழுத்து உயிராயிற்கெட்டும், மெய்யாயிற் கெடாதும் வரும். (உ-ம்.) நடந்திலன்; நடக்கலன்; நடவான்; நடவாதான்.

'இவை சில இல' என்றதனால், வேறு இடைநிலையாவது, பகுதியாவது, விகுதியாவது காலங் காட்டும் என்க.

வேறு இடைநிலை காலங் காட்டுவன:—

யகர இடைநிலை இறந்தகாலங்காட்டும்; (உ-ம்.) போயது.

'ஆகிடந்து, ஆவிருந்து' என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலங்காட்டும்; (உ-ம்.) உண்ணுகிடந்தான், உண்ணுவிருந்தான்.

'க்' இடைநிலை எதிர்காலங் காட்டும்; (உ-ம்.) செய்கேன்.

'இசின்' என்பது இறந்தகால இடைநிலையாயும், 'ம், மன்' இரண்டும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்;

(உ-ம்.) என்றிசினோர்; என்மர், என்மனார்.

பகுதி காலங் காட்டுவன:—

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில பகுதிகள் தம் ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டும். (உ-ம்.) புகு-புக்கான்; தொகு-தொக்கான்; நகு-நக்கான்; தொடு-தொட்டான்; போடு-போட்டான்; விடு-விட்டான்; உறு-உற்றான்; பெறு-பெற்றான்.

விகுதி காலங்காட்டுதலைப் பின்வரும் சூத்திரத்திற் காண்க.

[காலங்காட்டும் விகுதி.]

51. றவ்வொ டுகர உம்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோள் இ(ம்)மார் எதிர்வும் பாந்தம்
செல்லொடு வரவும் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.

உரை:—1. றவ்வொடு உகர உம்மை-'ற்' மேலேறிய உ, உம் (அதாவது 'று', 'றும்') என்ற இரண்டு விகுதிகளும், நிகழ்பு அல்லவும்-நிகழ்காலமல்லாத காலங்களையும் (அதாவது இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்,)

2. தவ்வொடு (உகர உம்மை)-'த்' மேலேறிய உ, உம் (அதாவது து, தும்) என்ற இரண்டு விகுதிகளும், இறப்பும் எதிர்வும்-இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்,

3. டவ்வொடு (உகர உம்மை)-'ட்' மேலேறிய உ, உம் (அதாவது டு, டும்) என்ற இரண்டு விகுதிகளும், கழிவும்- இறந்த காலத்தையும்,

4. கவ்வோடு (உகர உம்மை)-'க்' மேலேறிய உ, உம் (அதாவது கு, கும்) என்ற இரண்டு விகுதிகளும், எதிர்வும்-எதிர்காலத்தையும்,

5. மின்-'மின்' விகுதியும், ஏவல்-மற்றை ஏவல் விகுதிகளும், வியங்கோள்-வியங்கோள் விகுதிகளும், இ மார்-'இ' விகுதியும் 'மார்' விகுதியும், எதிர்வும்-எதிர்காலத்தையும்,

6. ப அந்தம்-'ப' விகுதி, செலவொடு வரவும்- இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும்,

7. செய்யும்-'செய்யும்' என்னும் வாய்பாட்டு முற்றின்விகுதி, நிகழ்பு எதிர்வும்-நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும்,

8. எதிர்மறை-எதிர்மறையின் ஆகார விகுதி, மும்மையும்-மூன்று காலங்களையும், ஏற்கும்-ஏற்றுவரும்.

குறிப்பு:—(1) று றும் து தும் ப-இவை இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், (2) டு டும்-இவை இறந்தகாலத்தையும், (3) கு கும் மின் ஏவல் வியங்கோள் இ மார்-இவை எதிர்காலத்தையும், (4) 'செய்யும்' என்னும் முற்று நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், (5) எதிர்மறை முக்காலத்தையுங் காட்டும்.

று து டு கு-இவை தன்மை ஒருமை; றும் தும் டும் கும்-இவை தன்மைப் பன்மை.

(உ-ம்.) ஒருமை.		பன்மை.		
1. சென்று	(சென்றேன்)	சென்றும்	(சென்றேம்)	- இறப்பு.
சேறு	(செல்வேன்)	சேறும்	(செல்வோம்)	- எதிர்வு.
2. வந்து	(வந்தேன்)	வந்தும்	(வந்தோம்)	- இறப்பு.
வருது	(வருவேன்)	வருதும்	(வருவோம்)	- எதிர்வு.
3. உண்டு	(உண்டேன்)	உண்டும்	(உண்டோம்)	- இறப்பு.
4. உண்கு	(உண்பேன்)	உண்கும்	(உண்போம்)	- எதிர்வு.

5. உண்ணாய் உண்மின், உண்ணீர், உண்ணும், வாழ்க, வாழிய, வாழியர்.
சேறி (செல்வாய்.)
உண்மார் (உண்பார்.)
} எதிர்வு.

6. உண்ப (உண்டார்) என்ப (என்றார்.) —இறப்பு.
உண்ப (உண்பார்.) என்ப (என்பார்.) —எதிர்வு.
7. உண்ணும் (உண்ணுகிறான், உண்ணுவான்) நிகழ்பு, எதிர்வு.
8. உண்ணு-இறப்பு, நிகழ்பு, எதிர்வு.

இச்சூத்திரம் வினைமுற்றுக்கே பொருந்தும்; இகர விகுதி தனித்து வாராது; யாதானும் ஒரு மெய்யின்மேல் வரும்; அப்போது இகரம் காலங் காட்டுமேயொழிய அம்மெய் காலங்காட்டாது; அம்மெய் காலங்காட்டின், இகர விகுதி காலங் காட்டாது. 'சென்றி', 'செல்லாநின்றி' என்பவைகளில் 'ற்', 'ஆநின்று' என்ற இடைநிலைகள் காலங்காட்டும்; அப்போது 'இ' தான் காலங் காட்டாது விகுதியாய் மாத்திரம் நிற்கும்.

'ஈங்கே' என்றதனால், காண்டும் (காண்போம்) என 'டும்' விகுதி எதிர்காலங் காட்டுதலையும், வருதி (வருகின்றாய்) என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையுங் கொள்க.

வடமொழியாக்கம்:

ஆரிய மொழியுள் உயிரெழுத்துப் பதினாறு:—𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃. இவைகளுள், 𑌋 𑍠 𑌌 𑍡 𑌅𑌂 𑌅𑌃 என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; ஒழிந்தபத்தும் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்கள். மெய்யெழுத்து முப்பத்தேழு:—𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷 ᳵ𑌕 ᳶ𑌪. இவைகளுள், 𑌖 𑌗 𑌘 𑌛 𑌜 𑌝 𑌠 𑌡 𑌢 𑌥 𑌦 𑌧 𑌫 𑌬 𑌭 𑌶 𑌷 𑌸 𑌹 𑌕𑍍𑌷 ᳵ𑌕 ᳶ𑌪 என்னும் இருபத்திரண்டும் ஆரியத்துக்குச் சிறப்பெழுத்துக்கள்; ஒழிந்த பதினைந்தும் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்கள். (தமிழிலுள்ள ழகர றகர னகரமெய்கள் வடமொழியிலில்லை.)

ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவாயுள்ள எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, தற்சமம் (அதை யொத்தது) எனப்படும்;

(உ-ம்.) 𑌅𑌮𑌲𑌂—அமலம்; 𑌕𑌾𑌰𑌣𑌂—காரணம்; 𑌕𑌮𑌲𑌂—கமலம்; 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌂—குங்குமம்.

ஆரியத்துக்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம்பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, தற்பவம் (அதினின்று தோன்றுவது) எனப்படும்;

(உ-ம்.) 𑌶𑍁𑌕𑍀—சுகி; 𑌭𑍋𑌗𑍀—போகி;—இவை சிறப்பெழுத்தாலாயின.

𑌹𑌰𑌃—அரன்; 𑌜𑌪𑌃—ஜபம்; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂—ஞானம்;—இவை பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றன. ஐவருக்கமாவன:—

1. க வர்க்கம் ... 𑌕 𑌖 𑌗 𑌘 𑌙
2. ச வர்க்கம் ... 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞
3. ட வர்க்கம் ... 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣
4. த வர்க்கம் ... 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨
5. ப வர்க்கம் ... 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮

ஆரியமொழி தமிழில் விகாரப்படுதல்.

52. அவற்றுள்,—
ஏழாமுயி ரிய்யும் இருவு மைவருக்கத்து
இடையில் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே அகவும் ஐந்திரு கவ்வும்
ஆவீ றையும் ஈயீ றிகரமும்.

உரை:—அவற்றுள்-(முன்னே "திரியும்" என்ற) சிறப்பெழுத்துக்களுள், (1) ஏழ் ஆம் உயிர்-ஏழாவது உயிராகிய-'𑌋', இய்யும் இருவும்-இகரமாகவும், இருவாகவும், (2) ஐ வருக்கத்து-ஐந்து வருக்கங்களிலும், இடையில் மூன்று-நடுநின்ற மும்மூன்று எழுத்துக்களும், அவ்அவ் முதலும்-அந்தந்த வருக்கத்தின் முதலெழுத்தாகவும், (3) எட்டு-எட்டாவது மெய்யாகிய 'ஜ', யவ்வும்-(சகரமாகத் திரிதல் மாத்திரமேயன்றி மொழியிடையில்) யகரமாகவும்;

(4) முப்பது-முப்பதாம் மெய்யாகிய 'ஶ', ச யவும்-(மொழிமுதலிலும் இறுதியிலும்) சகரமாகவும் (இடையில்) சகரமாகவும் யகரமாகவும், (5) மேல் ஒன்று-முப்பத்தொன்றாம் மெய்யாகிய 'ஷ,' ச டவும்-(மொழிமுதலில்) சகரமாகவும், (இடை கடைகளில்) டகரமாகவும், (6) இரண்டு-முப்பத்திரண்டாம் மெய்யாகிய 'ஸ', ச தவும்-(மொழிமுதலில்) சகரமாகவும், (இடையில்) சகரமாகவும் தகரமாகவும், (7) மூன்றே-முப்பத்து மூன்றாவது மெய்யாகிய 'ஹ', அ கவும்-(மொழிமுதலில்) அகரமாகவும், (இடையிலும் கடையிலும்) ககரமாகவும், (8) ஐந்து-முப்பத்தைந்தாம் மெய்யாகிய 'க்ஷ', இரு கவ்வும்-(மொழியிடையில்) இரண்டு ககரமாகவும், (9) ஆ ஈறு-(பொது எழுத்துக்களில்) மொழி இறுதி ஆகாரமானது, ஐயும்-ஐகாரமாகவும், (10) ஈ ஈறு-மொழியிறுதி ஈகாரமானது, இகரமும்-இகரமாகவும், (திரியும்.)

(உதாரணம்.)

(1) 𑌋- 𑌋𑌷𑌭𑌃 ... இடபம். } ஏழா முயிர் இ இரு
𑌮𑍃𑌗𑌃 .... மிருகம். } எனத் திரிந்தது.

(2) { 𑌖- 𑌨𑌖𑌂 .... நகம் (உகிர்.)
{ 𑌗- 𑌨𑌗𑌂 .... நகம் (மலை.)
{ 𑌘- 𑌮𑍇𑌘𑌃 .... மேகம்.

{ 𑌛- 𑌛𑌵𑌿𑌃 .... சவி (ஒளி.)
{ 𑌜- 𑌵𑌿𑌜𑌯𑌃 .... விசயம்.
{ 𑌝- 𑌝𑌰𑍍𑌝𑌰𑌾 .... சருச்சரை (சிதைவு)

{ 𑌠- 𑌪𑍀𑌠𑌂 .... பீடம்.
{ 𑌡- 𑌜𑌡𑌂 .... சடம்.
{ 𑌢- 𑌗𑍂𑌢𑌂 ... கூடம் (மறைவு.)

{ 𑌥- 𑌕𑌥𑌨𑌂 .... கதனம் (சொல்லல்.)
{ 𑌦- 𑌦𑌿𑌨𑌂 .... தினம்
{ 𑌧- 𑌧𑌨𑌂 .... தனம் (பொருள்.)

{ 𑌫- 𑌫𑌲𑌂 .... பலம் (பயன்.)
{ 𑌬- 𑌬𑌲𑌂 ... பலம் (வலிமை).
{ 𑌭- 𑌭𑌾𑌰𑌃 .... பாரம் (சுமை).

ஐ வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்று எழுத்துக்களும், அவ்வவ் வருக்கத்தின் முதல் எழுத்தாகத் திரிந்தன.

(3) ஜ- பங்கஜம் பங்கயம். 'ஜ'-யகரமாகத் திரிந்தது.

(4) ஶ- ஶங்கர: சங்கரன் } 'ஶ'-மொழிமுதலிலும் இறுதியிலும் சகரமாகத் திரிந்தது.
ஆஶா ஆசை.

பாஶ: பாசம். } 'ஶ'மொழியிடையில் சகரமாகவும், யகரமாகவும் திரிந்தது.
தேஶ: தேயம்.

(5) ஷ- ஷண்முக: சண்முகன். 'ஷ'-மொழிமுதலில் சகரமாகத் திரிந்தது.

விஷம் விடம். } 'ஷ'மொழிஇடையிலும் கடையிலும் டகரமாகத் திரிந்தது.
ராஷ்ட்ரா பாண்ட

(6) ஸ- ஸபா சபை. 'ஸ'-மொழிமுதலில் சகரமாகத் திரிந்தது.

வாஸ: வாசம். } 'ஸ'—மொழியிடையில் சகரமாகவும் தகரமாகவும் திரிந்தது.
மாஸ: மாதம்.

(7) ஹ. ஹர: அரன். 'ஹ'-மொழிமுதலில் அகரமாகத் திரிந்தது.†

மோஹ: மோகம் } 'ஹ'-மொழியிடையிலும் கடையிலும் ககரமாகத் திரிந்தது.
மஹீ மகி.

(8) க்ஷ- பக்ஷ: பக்கம். ['க்ஷ'-மொழியிடையில் இரண்டு ககரமாகத் திரிந்தது.]

(9) ஆ- மாலா மாலை. ['ஆ'-ஈறு ஐ ஆயிற்று]

(10) ௫- ப்ரு புரி. ['௫'-ஈறு இகரமாயிற்று.]

---

†ஹகாரமெய் மொழிக்கு முதலில், அகரமாகத் திரியும் என்றல் பொருந்தாது; கெடும் என்றலே பொருந்தும்;

(உ-ம்.) ஹர: அரன்.
ஹாடகம் ஆடகம்.
ஹிமம் இமம்.
ஹேரம்ப: ஏரம்பன்
ஹோம: ஓமம்.
ஹௌத்ரீ ஔத்திரி

} இவைகளில் ஹகாரமெய் கெட, அம்மெய்யின் மேல் ஏறிநின்ற உயிர் மாத்திரம் நிற்றல் காண்க.

பயின்றுவருவனவற்றிற்குத் திரிபுகூறி, மற்றவை வந்த இடத்தில் காண்க என்பார், 'இகரமுமாகும்' எனப் பயனிலைகொடுத்து முடியாமல் 'இகரமும்' என *அவாய் நிலையாகமுடித்தார்; அதனால்,

க்ஷ-	க்ஷீரம்	கீரம்.	'க்ஷ'-ஒரு ககரமாதலும்
	க்ஷணம்	கணம்.	
	பக்ஷம்	பட்சம்	,, டகர சகரமாதலும்
	பக்ஷி	பட்சி.	
	பிக்ஷா	பிச்சை.	,, இரண்டு சகரமாதலும்
	க்ஷேமம்	சேமம்.	,, ஒரு சகரமாதலும் கொள்க.

53. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்கு
இய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

உரை:—(ஆரியமொழி தமிழில் வரும்பொழுது) ரவ்விற்கு-ரகாத்தை முதலில் உடைய மொழிக்கு, அ முதல் ஆம் முக்குறிலும்-அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களிலொன்றும்,—லவ்விற்கு-லகரத்தை முதலில் உடையமொழிக்கு, இ முதல் இரண்டும்-இ உ என்னும் இரண்டிலொன்றும்,—யவ்விற்கு-யகரத்தை முதலில் உடைய மொழிக்கு, இய்யும்-இகரமும்,—மொழி முதல் ஆகி-மொழிக்கு முதலாகி, முன்வரும்-(அம்மூன்றெழுத்துக்களுக்கும்) முன்னே வரும்; ('முன்' இங்கே, காலமுன்.) உதாரணம்:—

ரங்கம்	(ரங்கஂ)	அரங்கம்	-ரவ்விற்கு	அ	முதலில்	வந்தது.
ராமன்	(ராமஃ)	இராமன் -	,,	இ	,,	,,
ரோமம்	(ரோமம்)	உரோமம் -	,,	உ	,,	,,
லாபம்	(லாபஃ)	இலாபம்	-லவ்விற்கு	இ	,,	,,
லோபம்	(லோபஃ)	உலோபம்-	,,	உ	,,	,,
யக்ஷன்	(யக்ஷஃ)	இயக்கன் -	யவ்விற்கு	இ	,,	,,

இனிச், சிறுபான்மை, யகரத்துக்கு முன் உகரமும், டகரத்துக்கு முன் இகரமும் வருதலும் உண்டு; (உ-ம்.) யுத்தம்-உயுத்தம் டம்பம்-இடம்பம்.

*அவாய் நிலையாவது — ஒரு சொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்பது.

[தமிழெழுத்திற் சிறப்பெழுத்தும் பொதுஎழுத்தும்.]

54. *ற ன ழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள*
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே

உரை:—(*முதலும் சார்பும் ஆகிய தமிழ் எழுத்து நாற்பதில்,*) *ற ன ழ எ ஒவ்வும்-ற ன ழ எ ஒ என்னும் இவ்வைந்தும், உயிர் மெய்யும் உயிரளபு அல்லா-உயிர்மெய்யும் உயிரளபெடையும் நீங்கலான, சார்பும்-சார்பெழுத்து எட்டும், தமிழ்-தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம்;—பிற-ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும், பொது-(ஆரியத்துக்கும் தமிழுக்கும்) பொது எழுத்துக்களாம்.*

பரீக்ஷை வினுக்கள்:— 37. *இவ்வியலுக்கு மொழியியல் எனப்பெயர் கூறுமல் பதவியல் எனப் பெயர் வைத்தது எதனுல்? பதமாவது யாது? அது எத்தனை வகைப்படும்? 38. பகாப்பதமென்றுலென்ன? அது எத்தனை வகைப்படும்? அது எத்தனை எழுத்துமுதல் எத்தனை எழுத்து ஈருகத் தொடரும்? 39. பகுபதமென்றுலென்ன? அது எத்தனை வகைப்படும்? பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? வினைப்பகுபதம் எத்தனை வகைப்படும்? பெயர்ப்பகுபதம், குறிப்புவினைமுற்றுப்பகுபதம், குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம் என்ற மூன்றுக்கும் உள்ள வேறுபாடு என்னை? தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம், தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம் என்ற இரண்டுக்கும் வேறுபாடு என்னை? பகுபதம் எத்தனை எழுத்துமுதல் எத்தனை யெழுத்து ஈருகத் தொடரும்? 40. பகுபதவுறுப்புக்கள் எவை? எழுத்தியலிற் கூறிய முதனிலை யிடைநிலை இறுதிநிலைக்கும், பதவியலிற்கூறிய முதனிலை முதலியவைகளுக்கும் பேதமென்ன? 41. பகுதிகளாவன யாவை? பெயர்ப்பகுபதங்கட்கும், குறிப்புவினைப்பகுபதங்கட்கும் எவை பகுதிகளாய் வரும்? 42. பண்புப்பகுதிகளெவை? இவை விகுதியோடாயினும் பதத்தோடாயினும் புணருங்கால் எவ்வெவ்விகாரங்களைப் பெறும்? இச்சூத்திரம் எவ்வகைச் சொற்களுக்குப் பொருந்தாது? இச்சூத்திரம் எதற்காகத் தோன்றியது? இச்சூத்திரத்தில் அமைந்த உத்தி யாது? 'இனையவும்' என்றதனுற் கொள்ளப்படுவன யா? 43. முன்னிலை ஏவல் ஒருமைவினைச் சொற்கள் விகுதி புணர்ந்தே வருமோ? 'நாலாறுமீறே' (சூ. 32.) என்றவர் 'இருபான்மூன்று மீற்றவும்' என்று கூறியது என்னை? தெரிநிலைவினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணருங்கால் எப்படிப் புணரும்? ஒரு தன்மையனவான வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணருங்கால் விகாரப்படுவதுண்டோ? தன்வினை*

யாவது யாது? பிறவினையாவது யாது? தெரிநிலைவினைப்பகுபதங்கட்கு எவ்வெச்சொற்கள் பகுதிகளாய் வரும்? 44. தன்வினை பிறவினையாகுமாறெங்ஙனம்? தன்வினைப்பகுதி வி பி முதலிய விகுதிகளைப் பெறாமல் வேறெவ்வெவ்விதமாய்ப் பிறவினையாகும்? 'ஈரேவல்' விளக்குக. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாகிய பகுதிகள், பிறவினை விகுதியின்றிப் பிறவினைப்பொருளைத் தரும் வழிகள் யா? 45. ஏவற்பகுதிபோல மற்றைவினைப்பகுதிகள் வேறுபடுமாறெங்ஙனம்? 46. தெரிநிலைவினைமுற்றுவிகுதிகள் எவை? அன் விகுதியை யிருமுறை கூறியது ஏன்? குறிப்புவினை முற்றுவிகுதிகள் எவை? பெயர்விகுதிகள் எவை? தெரிநிலைப்பெயரெச்சவிகுதிகள் எவை? குறிப்புப்பெயரெச்சவிகுதி எது? தெரிநிலை வினையெச்ச விகுதிகள் எவை? குறிப்புவினையெச்சவிகுதிகள் எவை? தொழிற்பெயர்விகுதிகள் எவை? முதனிலைத்தொழிற்பெயருக்கும் முதனிலைதிரிந்த தொழிற்பெயருக்கும் வேறுபாடென்ன? காலங்காட்டுந் தொழிற்பெயர்களெவை? பண்புப்பெயர்விகுதிகள் எவை? துணிவுப்பொருளையுணர்த்தும் விகுதிகள் யா? தற்செயலையுணர்த்தும் விகுதிகள் எவை? செயப்பாட்டுவினைப்பொருள் உணர்த்தும் விகுதிகள் எவை? தன்மைப்பொருளையுணர்த்தும் விகுதி எது? பகுதிப்பொருள் விகுதிகள் எவை? பிறவினை விகுதிகள் எவை? வினைமுதற்பொருள் செயப்படுபொருள் கருவிப்பொருள் இவைகளையுணர்த்தும் விகுதிகள் எவை? பகுதியோடு புணர்ந்து பின்கெடும் விகுதிகளெவை? 47. பெயரிடைநிலைகளெவை? பெயரிடைநிலைக்கும் வினையிடைநிலைக்கும் வேறுபாடியாது? 48. இறந்தகால இடைநிலைகளெவை? இவ்விடைநிலைகளில் விகாரப்பட்டு வருவது எது? உதாரணந் தருக. 49. நிகழ்கால இடைநிலைகள் எவை? 50. எதிர்கால இடைநிலைகள் எவை? எதிர்மறையிடைநிலைகளெவை? இங்குக்கூறிய இடைநிலைகளின்றி வேறு காலங்காட்டும் உறுப்புக்கள் எவை? 'த ட ற ஒற்றின்னே' அன்றி இறந்தகாலங் காட்டும்வேறு இடைநிலைகளெவை? 'ஆநின்று கின்று கிறு அன்றி நிகழ்காலங் காட்டும் வேறிடைநிலைகளெவை? பகர வகரமேயன்றி எதிர்காலங்காட்டும் வேறிடைநிலைகளெவை? செய்யுளில் மாத்திரம் வரும் இடைநிலைகள் எவை? அவை எக்காலங்காட்டும்? எவ்வெப்பகுதி எவ்வாறாகி எக்காலங்காட்டும்? 51. 'று, றும்' விகுதிகள் எக்காலங் காட்டும்? 'து, தும்' விகுதிகள் எக்காலங்காட்டும்? 'டு, டும்' விகுதிகள் எக்காலங் காட்டும்? 'கு, கும்' விகுதிகள் எக்காலங்காட்டும்? 'மின்' விகுதி யெக்காலங் காட்டும்? மற்றை முன்னிலையேவல் விகுதிகளும், வியங்கோள்

விகுதிகளும், இகா விகுதியும், மார் விகுதியும் எக்காலங்காட்டும்? பகரவிகுதி எக்காலங்காட்டும்? செய்யுமென்வாய்பாட்டு முற்று விகுதி எக்காலங்காட்டும்? எதிர்மறை ஆகாரவிகுதி எக்காலங்காட்டும்? இகரவிகுதி எதிர்காலமன்றிப் பிறிதுகாலங்காட்டவில்லையோ? இகரவிகுதிதான் காலங்காட்டாது நிற்குமிடங்களில்லையோ? 'ஈங்கே' என்றதனாற் கொள்ளப்படுவன யா?

வடமொழியாக்கம்:

ஆரிய மொழியுள் உயிரெழுத்துக்களெவை? அவைகளுள், ஆரியத்துக்குச் சிறப்பெழுத்துக்களெவை? ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்துக்களெவை? ஆரிய மொழியுள் மெய்யெழுத்துக்களெவை? அவைகளுள், ஆரியத்துக்குச் சிறப்பெழுத்துக்களெவை? ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களெவை? ஆக ஆரியத்துக்கேயுரிய சிறப்பெழுத்துக்களெத்தனை? ஆக ஆரியத்துக்கும் தமிழிற்கும் பொது எழுத்துக்களெத்தனை? ஆரியத்தினின்றும் தமிழில் வந்து வழங்கும் வடமொழி யெத்தனை வகைப்படும்? தற்சமம் என்பன யாவை? தற்பவம் என்பன யாவை? ஐவருக்கம் என்பன யாவை? 52. வடமொழியில் ஏழாமுயிர் எப்படித்திரியும்? ஐந்து வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்றெழுத்துக்களும் எப்படித் திரியும்? எட்டாமெய் (ஜ) சகரமாகத் திரிவதேயன்றி வேறு எழுத்தாகவும் திரியுமா? முப்பதாம்மெய் (ஶ) எப்படித்திரியும்? முப்பத்தொன்றாவது மெய் (ஷ) எப்படித்திரியும்? முப்பத்திரண்டாவது மெய் (ஸ) எப்படித் திரியும்? முப்பத்துமூன்றாம்மெய் (ஹ) எப்படித் திரியும்? முப்பத்தைந்தாம்மெய் (க்ஷ) எப்படித்திரியும்? மொழியிறுதி ஆகாரம் எப்படித்திரியும்? மொழியிறுதி ஈகாரம் எப்படித்திரியும்? அவாய்நிலையாவது யாது? 53. தமிழின் மொழிக்கு முதலாகாத எழுத்துக்களுள் ரகரத்தை முதலாகவுடைய ஆரிய மொழிகள் தமிழில் எவ்வாறு வரும்? லகரத்தை முதலாகவுடைய ஆரிய மொழிகள் எவ்வாறு வரும்? யகரத்தை முதலாகவுடைய ஆரிய மொழிகள் எவ்வாறு வரும்? 54. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்துக்களெவை? தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்துக்களெவை?

பதவியல்-முற்றிற்று.

XII. புணர்பு.

1. உயிரீற்றுப்புணரியல்.

[உயிரை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு, உயிர் முதலும மெய்ம்முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.]

[புணர்ச்சி இன்னதென்பது.]

55. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

உரை:—மெய் உயிர்-மெய்யையும் உயிரையும், முதல் ஈறு ஆம்-முதலும் இறுதியுமாகவுடைய, இரு பதங்களும்-(பகாப்பதம் பகுபதம் என்ற) இரண்டு பதங்களும், தன்னொடும்-தன்னொடு தானும் (பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடு பகாப்பதமும்), பிறிதொடும்-பிறிதொடு பிறிதுமாய் (பகுபதத்தோடு பகாப்பதமும், பகாப்பதத்தோடு பகுபதமுமாய்), அல்வழி வேற்றுமை பொருளின்-அல்வழிப்பொருளிலாவது வேற்றுமைப் பொருளிலாவது, பொருந்துழி-பொருந்துமிடத்து,—நிலை வரு மொழிகள்-நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு விகாரத்து-இயல்பாகவேனும் விகாரமாகவேனும், இயைவது-பொருந்துவது,—புணர்ப்பு-புணர்ச்சியாம்.

குறிப்பு:—

உயிரீற்றின்முன், உயிர்முதல் மொழிபுணர்தலும்
உயிரீற்றின்முன், மெய்ம்முதல் மொழிபுணர்தலும்
மெய்யீற்றின்முன், உயிர்முதல் மொழிபுணர்தலும்
மெய்யீற்றின்முன், மெய்ம்முதல் மொழிபுணர்தலும்
} எனப் புணர்ச்சி நான்கு வகைப்படும்.

நிலைமொழியாவது—முதலில் நிற்கும் மொழி; வருமொழியாவது—நிலைமொழியை யடுத்து வந்து அதனோடு சேரும் மொழியாம்.

(உ-ம்.) கிளி + அழகு ... உயிரீற்றின் முன் உயிர்.
கிளி + சிறை ... உயிரீற்றின் முன் மெய்.
நிலம் + அழகிது ... மெய்யீற்றின் முன் உயிர்.
நிலம் + பெரிது ... மெய்யீற்றின் முன் மெய்.

'உயிர்மெய்முதலீறும்' என்றும் 'வேற்றுமையல்வழி' என்றும் கூறினால், 'உயிர்மெய்யென்னும் ஓரெழுத்து' என்றும், 'வேற்றுமையல்லாத வழி' என்றும் பொருள்பட்டு, இடர்ப்படுமாதலால், அங்ஙனங்கூறாது, 'மெய்யுயிர்' என்றும், 'அல்வழிவேற்றுமை' என்றும் மாற்றிக் கூறினர்.

[வேற்றுமை, அல்வழி.]

56. வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில்பண் புவமை யும்மை அன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடைஉரி
தழுவு தொடரடுக் கெனஈ ரேழே.

உரை:—வேற்றுமை-வேற்றுமைப்புணர்ச்சியாவது,—ஐ முதல் ஆறு ஆம்-ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறு உருபுகளும் (இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள்) பொருந்தும் தொடர்ச்சியாம்; அல்வழி-அல்வழிப்புணர்ச்சியாவது,-தொழில்-வினைத்தொகையும், பண்பு-பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி-அன்மொழித்தொகையும், எழுவாய்-எழுவாய்த்தொடரும், விளி-விளித்தொடரும், ஈர் எச்சம்-பெயரெச்சத்தொடரும் வினையெச்சத்தொடரும், (ஈர்)முற்று-தெரிநிலைவினைமுற்றுத்தொடரும் குறிப்பு வினைமுற்றுத்தொடரும், இடை-இடைச்சொற்றொடரும், உரி-உரிச்சொற்றொடரும், அடுக்கு-அடுக்குத்தொடரும், என-என்று, ஈர் ஏழ்-பதினான்காம்; தழுவுதொடர்-இவையெல்லாம் தழுவு தொடர்களாம். [அல்வழி-வேற்றுமையல்லாதவழி.]

'ஐ' முதலிய ஆறு வேற்றுமையுருபுகள் இடையில் மறைந்துநிற்கப் பதங்கள் புணருவது 'வேற்றுமைத்தொகைநிலை' யெனவும், அவ்வுருபுகள் வெளிப்பட்டுநிற்கப் புணருவது 'வேற்றுமைத்தொகாநிலை அல்லது வேற்றுமைவிரி' யெனவும் கூறப்படும். அல்வழியில் வினைத்தொகை முதலிய ஐந்தும் தொகைநிலைகள்; மற்றை ஒன்பதும் தொகாநிலைகள்.

(உதாரணம்.)

[வேற்றுமைப்புணர்ச்சி.]

தொகைநிலை (சூ. 181.)		தொகாநிலை (சூ. 189).	
நீர் குடித்தான்	[ஐ]	நீரைக் குடித்தான்.	(2)
கல் எறிந்தான்	[ஆல்]	கல்லால் எறிந்தான்.	(3)

அரசன் மகன்	[கு]	அரசனுக்கு மகன்.	(4)
மலை வீழருவி	[இன்]	மலையின் வீழருவி.	(5)
அரசன் மாளிகை	[அது]	அரசனது மாளிகை.	(6)
வீடு புகுந்தான்	[கண்]	வீட்டின்கண் புகுந்தான்.	(7)

[அல்வழிப்புணர்ச்சி.]

தொகைநிலைத்தொடர். 5.

1. வினைத்தொகை ... கொல்யானை. (சூ. 182.)
2. பண்புத்தொகை ... கருங்குதிரை. } (சூ. 183.)
   இருபெயரொட்டுப் பண்புத்தொகை ... பனைமரம். சாரைப்பாம்பு. }
3. உவமைத்தொகை ... மதி முகம். (சூ. 184.)
4. உம்மைத்தொகை ... இராப்பகல். (சூ. 186.)
5. அன்மொழித்தொகை... பொற்றொடி. (சூ. 187.)

தொகாநிலைத்தொடர். 9.

1. எழுவாய்த்தொடர் ... இராமன் உண்டான்.
2. விளித்தொடர் ... இராமா வா.
3. பெயரெச்சத்தொடர் ... { உண்ட மனிதன். கரிய மனிதன்.
4. வினையெச்சத்தொடர் ... { உண்டு வந்தான். மெல்லச் சென்றான்.
5. தெரிநிலைவினைமுற்றுத்தொடர். உண்டான் இராமன்.
6. குறிப்புவினைமுற்றுத்தொடர். பெரியன் இராமன்.
7. இடைச்சொற்றொடர் ... மற்றொன்று.
8. உரிச்சொற்றொடர் ... நனி பேதை.
9. அடுக்குத்தொடர் ... பாம்பு பாம்பு.

(சூ. 189.)

இவையெல்லாம் தழுவுதொடர் எனவே, இருவழியிலும் தழாத்தொடரும் உள என்றதாயிற்று, [தழுவுதொடராவது—நிலைமொழி வருமொழியைப் பொருட்பொருத்தமுறத்தழுவுவது] [தழாத்தொடராவது—நிலைமொழி வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாதது.]

வேற்றுமைத் தழாத்தொடர்:—

(உ-ம்.) 'பாற்குடம்' என்பது 'பாலை யுடைய குடம்' என விரிதலால், 'பால்' என்பது 'உடைமை' என்பதைத் தழுவிக் 'குடம்'

என்பதைத் தழுவாமையால், இது தழாத்தொடராகிய வேற்றுமைத்தொகை; இங்ஙனம் வருவது 'உருபும் பயனும் உடன்றொக்க தொகை' அல்லது உருபும் பொருளும் உடன்றொக்கதொகை (சூ. 181). 'மலையில் பெரிய மரங்கள் வளரும்' என்பதில் 'மலையில்' என்பது 'வளரும்' என்பதைத் தழுவிப் 'பெரிய' என்பதைத் தழுவாமையால், இது தழாத்தொடராகிய வேற்றுமை விரி.

அல்வழித் தழாத்தொடர்:—

'சுரை ஆழ அம்மி மிதப்ப' என்பதில் 'சுரை' என்பது 'மிதப்ப' என்பதனோடும் 'அம்மி' யென்பது 'ஆழ' என்பதனோடும் கூட்டப்படுதலால், 'சுரை' என்பது 'ஆழ' என்பதையும், 'அம்மி' யென்பது 'மிதப்ப' என்பதையும் தழுவாது தொடர்ந்தன. இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும் பெயரின் விகாரமுமேயன்றித் தமக்கென வேறு உருபு இல்லாமையால், அவ்விரண்டையும் 'எழுவாய்', 'விளி' என்று அல்வழியில் சேர்த்தார். இங்கு, அவை யொழிந்த ஆறையுமே வேற்றுமை யென்றார்.

[இயல்பு புணர்ச்சி.]

57. விகார மனைத்தும் மேவல தியல்பே.

உரை:—விகாரம் அனைத்தும்-(வருஞ் சூத்திரத்திற் சொல்லப்படும்) விகாரவகை முழுவதையும், மேவலது - அடையாதது,— இயல்பு-இயல்பு புணர்ச்சியாம்.

(உ-ம்.) ஒளி + மணி = ஒளிமணி; பொன் + மணி = பொன்மணி; புகழ் + அழகு = புகழழகு.

[விகாரப்புணர்ச்சி.]

58. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

உரை:—தோன்றல்- (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், திரிதல்- (ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக) மாறுபடுதலும், கெடுதல்- (உள்ள எழுத்துக்) கெடுதலும்,— விகாரம்-விகாரப்புணர்ச்சியாம்; மூன்றும்-இம்மூவகை விகாரங்களும்,—மொழி-நிலைமொழி வருமொழிகளினுடைய, மூ இடத்தும்- (முதல் இடை கடை என்னும்) மூன்றிடத்திலும், ஆகும்- (ஏற்றபடி) வரும்.

(உதாரணம்.)

மா + கனி = மாங்கனி —[எழுத்துத்தோன்றிற்று.]
புளி + பழம் = புளியம்பழம்—['அம்'சாரியைதோன்றிற்று.]
என் + நெய் = எண்ணெய் —[நிலைமொழி ஈற்றிலும், வருமொழி முதலிலும் உள்ள மெய்கள் திரிந்தன.]
மரம் + வேர் = மரவேர் —[நிலைமொழி யீற்று மெய் கெட்டது.]
ஆறு + பத்து = அறுபது —[நிலைமொழி முதல் உயிர் திரிந்து வருமொழி இடை மெய் கெட்டது.]
பனை + காய் = பனங்காய் —[நிலைமொழி ஈற்று உயிர் கெட்டு 'அம்' சாரியை தோன்றி, அதன் ஈறு திரிந்தது.]
ஒன்பது + பத்து = தொண்ணூறு —[நிலைமொழி வருமொழிகள் மூன்றிடத்தும் (முழுவதும்) விகாரப்பட்டன.]

[செய்யுள் விகாரம்.]

59. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

உரை:—வலித்தல்- (மெல்லொற்றை) வல்லொற்றாக்கலும், மெலித்தல்- (வல்லொற்றை) மெல்லொற்றாக்கலும், நீட்டல்- (குற்றெழுத்தை) நெட்டெழுத்தாக்கலும், குறுக்கல்- (நெட்டெழுத்தைக்) குற்றெழுத்தாக்கலும், விரித்தல்- (இல்லாத எழுத்தை) வருவித்தலும், தொகுத்தல்- (உள்ள எழுத்தை) நீக்கலும்,— செய்யுள்-செய்யுளிடத்து, வேண்டுழி-வேண்டுமிடத்து, வரும்—.

(உ-ம்) 1. குறுந்தாட் பூதம் [குறுந்தாள்] — வலித்தல்.
2. தண்டையி னினக்கிளி [தட்டை] (கிளியோட்டுங்கருவி) — மெலித்தல்.
3. கற்பக நீழல் [நிழல்] — நீட்டல்.
4. நன்றென்றேன் தியேன் [தீயேன்] — குறுக்கல்.
5. நெல்விளையும்மே [விளையுமே] — விரித்தல்.
6. நீ பெறுகேன [பெறுக] — தொகுத்தல்.

புணர்ச்சிவிகாரத்துக்குஞ் செய்யுள்விகாரத்துக்கும் வேறுபாடு:—

புணர்ச்சி விகாரம்.	நிலைமொழி வருமொழிப்புணர்ச்சியில்மாத்திரம்வரும். தனிமொழியில் வாராது. உலகவழக்குச் செய்யுள்வழக்கு இரண்டுக்கும் உரியது.
செய்யுள் விகாரம்.	செய்யுளில்மாத்திரம் வரும். உலகவழக்கில் வாராது. தனிமொழி தொடர்மொழி யிரண்டுக்கும் பொது.

[இதுவும் அது.]

60. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

உரை:—ஒரு மொழி-ஒருசொல்லினுடைய, மூ வழி-(முதல் இடை கடை என்னும்) மூன்றில் ஓரிடத்து, குறைதலும்-குறைந்து வருதலும்,—அனைத்தே-அச்செய்யுள் விகாரமேயாம்.

(உ-ம்,) 1. 'மரை யிதழ்' ...[தாமரை] முதலிற்குறைந்தது.
2. 'ஓதி முதுபோத்து' ... [ஓந்தி]—இடை குறைந்தது.
3. 'நீலுண் துகிலிகை' ... [நீலம்] —கடை குறைந்தது.

[ஓந்தி-ஓணான்.]

தொகுத்தல்விகாரம் பகுபதத்திலும், முதல் இடை கடைக் குறைவிகாரங்கள் பகாப்பதத்திலும் வரும். இனி, உரையிற்கோடல் என்னும் உத்தியால் விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களுங்கொள்க. அவை தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், எழுத்துநிலைமாறுதல், சொல்நிலைமாறுதல் என்பனவாம்.

(உதாரணம்.)

யாது	...	யாவது.	—தோன்றல்.
மாகி	...	மாசி.	—திரிதல்.
கண்ணகல் பரப்பு	...	கண்ணகன் பரப்பு.	—திரிதல்.
உயர்திணைமேல	...	உயர்திணைமேன.	—திரிதல்.

யார்	...	ஆர்.	—கெடுதல்.
யானை	...	ஆனை.	—கெடுதல்.
யாவர்	...	யார்.	—கெடுதல்.
யாடு	...	ஆடு.	—கெடுதல்.
யாறு	...	ஆறு.	—கெடுதல்.

பொழுது	...போழ்து.	—நீளல்.
பெயர்	...பேர்.	
வைசாகி	...வைகாசி.	—எழுத்து நிலை மாறுதல்.
சிவிறி	...விசிறி.	
தசை	...சதை.	
மிஞிறு	...ஞிமிறு.	
நகர்ப்புறம்	...புறநகர்.	—சொல் நிலைமாறுதல்.
கண்மீ	...மீகண்.	
இல்வாய்	...வாயில்.	

[புணர்ச்சி விகாரத்தில் வரும் ஐயத்தை நீக்குதல்.]

61. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

உரை:—ஒருபுணர்க்கு-ஒரு புணர்ச்சிக்கே, இரண்டும் (ஒரு விகாரமேயன்றி) இரண்டு விகாரங்களும், மூன்றும்-மூன்று விகாரங்களும், உற பெறும்-வரப் பெறும்.

(உ-ம்.) குதிரை + கால் = குதிரைக்கால்—[தோன்றல்.]
நிலம் + பனை = நிலப்பனை —[கெடுதலும் தோன்றலும்]
பனை + காய் = பனங்காய் —[கெடுதலும் தோன்றலும் திரிதலும்.]

பொதுப்புணர்ச்சி.

[உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொது.]

[எல்லாஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.]

62. *எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைநொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

உரை:— (1) எண் மூ எழுத்து-இருபத்துநான்கு எழுத்துக்களையும், ஈறு-இறுதியாகவுடைய, எ வகை மொழிக்கும்-(பெயர் வினை இடை உரி திசை வடசொல் எனப்படும்) எல்லாவகைச் சொற்களுக்கும், முன்-முன்னே, வரும்-வருகின்ற, ஞ ந ம ய வக்கள்-'ஞ' முதலாகிய இந்த ஐந்து எழுத்துக்களும், இயல்பு-இயல்பாதலும்,—(2) குறில் வழி,ய-தனிக்குற்றெழுத்தின் பின் நின்ற யகர

* 32-ஆஞ் சூத்திரம் பார்க்க.

மெய்க்கும், தனி ஐ-ஓரெழுத்தொருமொழியாகிய (உயிர் உயிர்மெய் என்னும்) ஐகாரத்துக்கும், நொ து- (ஓரெழுத்தொருமொழியாகிய) 'நொ' என்பதற்கும், 'து' என்பதற்கும் (ஆகிய இவற்றுக்கு), முன்-முன் வருகிற, மெலி-ஞகர நகர மகரங்கள், மிகலும்-மிகுதலும்,— ஆம்-ஆகும்;—(3) ண ள ன ல வழி-ணகர ளகர னகர லகர மெய்களின் பின் வருகிற, ந-நகரமானது, திரியும்—.

(உ-ம்.)	அல்வழி.	வேற்றுமை.
1.	விள+ஞான்றது =விளஞான்றது.	விளஞாற்சி.
	விள+நீண்டது =விளநீண்டது.	விளநீட்சி
	விள+மாண்டது =விளமாண்டது.	விளமாட்சி.
	விள+யாது =விளயாது.	விளயாப்பு.
	விள+வலிது =விளவலிது.	விளவலிமை.

[மற்றைய ஈற்று மொழிகளோடும் (பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு) இவ்வாறே புணர்க்க ஞ ந ம ய வ இயல்பாதல் காண்க.

(உ-ம்.)	அல்வழி.	வேற்றுமை.
2.	மெய்+ஞான்றது =மெய்ஞ்ஞான்றது.	மெய்ஞ்ஞாற்சி.
	மெய்+நீண்டது =மெய்ந்நீண்டது.	மெய்ந்நீட்சி.
	மெய்+மாண்டது =மெய்ம்மாண்டது.	மெய்ம்மாட்சி.

[குறில்வழி 'ய' முன் மெலி மிக்கன.]

	அல்வழி.	வேற்றுமை.
	கை+ஞான்றது =கைஞ்ஞான்றது.	கைஞ்ஞாற்சி.
	கை+நீண்டது =கைந்நீண்டது.	கைந்நீட்சி.
	கை+மாண்டது =கைம்மாண்டது.	கைம்மாட்சி.

[தனி 'ஐ' முன் மெலி மிக்கன.]

	நொ+ஞெள்ளா =நொஞ்ஞெள்ளா.	துஞ்ஞெள்ளா.
	நொ+நாகா =நொந்நாகா.	துந்நாகா.
	நொ+மாடா =நொம்மாடா.	தும்மாடா.

['நொ து' முன் மெலிமிக்கன. ஞெள்ளா முதலியன விளிப்பெயர்.]

'நொ து முன் மெலிமிகலுமாம்' என்ற எச்ச உம்மையால் அவ்விரண்டின் முன்னும் இடையெழுத்தும் மிகும் என்க.

(உ-ம்) நொ+யவனா=நொய்யவனா. | து+யவனா=துய்யவனா.
நொ+வளவா=நொவ்வளவா. | து+வளவா=துவ்வளவா.

[நொ-வருந்து. து-உண். இவை வினையாதலால் அல்வழி.]

3. 'ண ள ன ல வழி நத் திரியும்' என்றதை சூ. 102-ல் காண்க.

[புணரியலிலே அல்வழி, வேற்றுமைகளில் ஒன்றை வெளிப் படையாகவேனும், குறிப்பாகவேனுங் கூறாத இடங்களிலெல்லாம் அவ்விரண்டையுங் கொள்க.]

[பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் ஈறு.]

63. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

உரை:—(1) பொதுப்பெயர்-(இருதிணைக்கும்) பொதுவான பெயர்களுக்கும்,- உயர்திணைப்பெயர்கள்-உயர்திணைப்பெயர்களுக்கும், ஈறுமெய்-இறுதியிலுள்ள மெய்கள்,—வலி வரின்-(வருமொழி முதலில்) வல்லெழுத்து வந்தால், இயல்பாம்-இயல்பாகும்;— (2) ஆவி யர முன்-(பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களின் இறுதியில் வருகின்ற) உயிரெழுத்துக்களின் முன்னும் யகர ரகர மெய்களின் முன்னும் வருகிற, வன்மை-வல்லெழுத்துக்கள், மிகா-மிகாவாம்;— (3) (இவ்வாறன்றி) சில உயர்திணை-(மெய்யீறும் உயிரீறுமாகிய) சில உயர்திணைப்பெயர்கள், (நாற்கணங்களோடும் புணருமிடத்து), விகாரம் ஆம்-(நிலைமொழி வருமொழிகள்) விகாரப்பட்டு வருதலும் உண்டு.

பொதுப்பெயராவது—உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர். பொதுப்பெயரை விரவுப்பெயரென்றும் கூறுவர்.

'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய்' என்றது 'ண் ன் ல் ள்' என்பவைகளை என்க. இவைகளுக்குமுன் வல்லினம் வந்தால் திரியாமல் இயல்பாதலால் 'இயல்பாம்' என்றார். (இது நிலைமொழியீற்றை நோக்கியது).

'வலி' என்றது 'க ச த ப' என்க. ஆவி யரக்களுக்குமுன் மிகுதற்குரிய வருமொழிமுதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதலால் 'வன்மை மிகா' என்றார். (இது வருமொழிமுதலை நோக்கியது).

நாற்கணமாவன—வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்.

(உ-ம்.)	அல்வழி.	வேற்றுமை.
1. ஆண் + குறியன்	= ஆண் குறியன்.	ஆண்கை.
ஆண் + சிறியது	= ஆண் சிறியது.	ஆண்செவி.

சாத்தன் + தீயன் = சாத்தன்றீயன்.	சாத்தன்றலை.
சாத்தன் + பெரிது = சாத்தன் பெரிது.	சாத்தன்புறம்.
நான் + சிறியேன் = நான் சிறியேன்.	

[பொதுப்பெயரீற்றுமெய் வலிவர இயல்பாயின.]

பொதுப்பெயரின் மற்றை ஈறுகளின் முன்னும் இவ்வாறே அமைத்துக்கொள்க. 'சாத்தன்' என்பது ஒரு தெய்வத்தின் பெயராதலாலும், மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுதலாலும், இருதிணைப் பொதுப்பெயராம்.

அல்வழி.	வேற்றுமை.
அவள் + குறியள். = அவள் குறியள்.	தையல் பெருமை.
மகன் + சிறியன் = மகன் சிறியன்.	மகன் றலை.
குரிசில் + பெரியன் = குரிசில் பெரியன்.	வேள் சிறுமை.

[உயர்திணைப்பெயர்களீற்றுமெய் வலிவர இயல்பாயின.*]

அல்வழி.	வேற்றுமை.
2. பிள்ளை + சிறியன் = பிள்ளை சிறியன்.	சாத்திகை.
பிள்ளை + சிறிது = பிள்ளை சிறிது.	சாத்திசெவி.
நீ + குறியை = நீ குறியை.	தாய் தலை.
நீர் + குறியீர் = நீர் குறியீர்.	தாய் பொருள்.

[பொதுப்பெயரீற்று ஆவி யகர ரகரமுன் வன்மை மிகாவாயின.]

---

* தோன்றல் + தலை = தோன்றறலை, தோன்றல் + தீயன் = தோன்றறீயன். வேள் + தலை = வேடலை, வேள் + தீயன் = வேடீயன் என, லகர ளகர மெய்கள் தகரம் வருமிடத்துக் கெடுதல், மயக்க விதியின்மைபற்றி யென்றறிக.

மொழிக்கு ஈறாகுமெனப்பட்ட பதினொரு மெய்களின்முன்னும், மொழிக்கு முதலாகுமெனப்பட்ட ஒன்பது மெய்களும் புணரும்போது, மயங்குதற்கு உரியனவல்லாதமெய்கள் பின்வருமாறு:-

1. லகர ளகரங்களின் முன்னே த ஞ ந ம என்னும் நான்கும் மயங்கா. 2. ணகர னகரங்களின் முன்னே த ந என்னும் இரண்டும் மயங்கா. 3. மகரமெய்யின்முன்னே க ச த ஞ ந என்னும் ஐந்தும் மயங்கா. 4. ஞகரத்தின் முன்னே சகரமும் யகரமும் அல்லாத ஏழும் மயங்கா. 5. நகரத்தின் முன்னே தகரமும் யகரமும் அல்லாத ஏழும் மயங்கா. (6) வகரத்தின் முன்னே யகரமல்லாத எட்டும் மயங்கா.

அல்வழி.	வேற்றுமை.
நம்பி + குறியன் = நம்பி குறியன்.	நங்கை தலை.
சேய் + சிறியன் = சேய் சிறியன்.	சேய் சிறுமை.
அவர் + பெரியர் = அவர் பெரியர்.	அவர் பெருமை.

[உயர்திணைப்பெயரீற்று ஆவி யகர ரகரமுன் வன்மை மிகாவரியின]

3. கபிலன் + பாணன் = கபிலபரணர்.
நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன்.
வடுகன் + நாதன் = வடுகநாதன்.
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்.
விராடன் + அரசன் = விராடவரசன்.
} — அல்வழி.

ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி.
வாணிகர் + தெரு = வாணிகத்தெரு.
மக்கள் + குணம் = மக்கட்குணம்.
நளன் + வெண்பா = நளவெண்பா.
வாசுதேவன் + கோட்டம் = { வாசுதேவகோட்டம். வாசுதேவக்கோட்டம்
குமரன் + கோட்டம் = { குமரகோட்டம். குமரக்கோட்டம்.
} — வேற்றுமை.

[உயர்திணையுள் சில தமக்கு ஏற்றபடி விகாரமாயின.]

['சில விகாரமாமுயர்திணை' என்றதற்கு வருமொழி முதலெழுத்தைக் கூறாமையால் நாற்கணமுங் கொள்ளப்பட்டன. இங்கு நிலைமொழி உயர்திணையாகவே யிருத்தல்வேண்டும் என்றறிக.]

இனி, *ஒப்பின்முடித்தல் என்னும் உத்தியால் உயர்திணைப் பெயர்ச்சொல்லின் இறுதிபோல, உயர்திணை வினைச்சொல்லின் இறுதிகளும் இயல்பாம் என்க.

(உ-ம்.) உண்டான் + புலவன் = உண்டான்புலவன்.

[வினாப்பெயர், விளிப்பெயர் முன்வல்லினம்.]

64. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே.

உரை:—(1) ஈறு (வினா)-இறுதியில் வருகின்ற (ஆ ஓ எ எனனும்) மூன்று வினா எழுத்துக்களின் முன்னும், (2) யா வினா(முன்)—

* ஒப்பின்முடித்தல்:—ஒன்றற்குச் சொல்லிய இலக்கணம், மற்றொன்றுக்கும் ஒத்துவருமாயின், அதற்கும் அதுவே யிலக்கணமாக உடன்கூட்டி முடித்தல்; இது 76, 91-ஆஞ் சூத்திரங்களிலும் வரும்.

'யா' என்னும் வினாப்பெயரின் முன்னும், (3) விளிப்பெயர்முன்-(உயிரீறும் மெய்யீறுமாகிய) விளிவேற்றுமைப்பெயரின் முன்னும், (வருகின்ற) வலி-வல்லெழுத்துக்கள், இயல்பு-இயல்பாகும்.

(உதாரணம்.)

1. அவனா+கொண்டான்=அவனா கொண்டான்.
அவனா+சென்றான் =அவனா சென்றான்.
அவனா+தந்தான் =அவனா தந்தான்.
அவனா+போயினான் =அவனா போயினான்.
} ஈற்று 'ஆ' வினாமுன் இயல்பாயின.

ஈற்று 'ஓ' ஏ வினாக்களோடும் இவ்வாறே ஒட்டியியல்பாதல்காண்க].

(இவை அல்வழி).

யா+குறியன =யாகுறியன.
யா+சிறியன =யாசிறியன.
யா+தீயன =யாதீயன.
யா+பெரியன=யாபெரியன.
} 'யா' வினாமுன் இயல்பாயின.

[யா+யாவை. இது அல்வழி வேற்றுமை இரண்டுக்கும் பொது.]

3. நம்பீ +கொள்=நம்பீகோள்.
பிள்ளாய்+செல் =பிள்ளாய்செல்
தோழீ +தா =தோழீதா.
மக்காள் +போம்=மக்காள்போம்.
} விளிப்பெயர் முன் வலி யியல்பாயின.

[இது அல்வழி.]

[முன்னிலைவினை ஏவல்வினைமுன் வல்லினம்]

65. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

உரை:—ஆவி-உயிரையும், யரழ-ய் ர் ழ என்னும் மூன்று மெய்களையும், இறுதி-ஈறாகவுடைய, (1) முன்னிலைவினை-முன்னிலைவினை முற்றுக்களுக்கும், (2) ஏவல்-ஏவல்வினைமுற்றுக்களுக்கும், முன்-முன் வருகிற, வல்லினம்-வல்லெழுத்துக்கள் (க ச த ப);—இயல் பொடு-இயல்புடனே, விகற்பு-விகற்பமும் ஆகும்.

விகற்பமாவது—ஒரு புணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகையாகவும், மற்றொருகால் வேறுவகையாகவும் வருவது: விகற்பம் உறழ்ச்சி, பொருவு என்பன ஒருபொருட்சொற்கள். 76, 93, 97-ஆஞ் சூத்திரங்களிலும் காண்க.

(உதாரணம்.)

1. உண்டனை + கொற்றா = உண்டனை கொற்றா.
உண்டாய் + சாத்தா = உண்டாய் சாத்தா.
உண்டாய் + தேவா = உண்டாய் தேவா.
உண்டீர் + புலவரே = உண்டீர் புலவரே.
} ஆவி யர இறுதி முன்னிலைவினை முன் வலி யியல்பாயின.

ழகர மெய்யீற்று விகுதி இல்லாமையால், ழகரமெய்முன்னிலை வினைக்கு ஈறுகாது; ஆனதுபற்றி அதற்கு உதாரணமில்லை. முன்னிலைவினை முன் விகற்பித்தல் வந்த இடத்துக்காண்க.

2. வா + கொற்றா = வா கொற்றா.
பாய் + சாத்தா = பாய் சாத்தா.
சேர் + தேவா = சேர் தேவா.
வாழ் + புலவா = வாழ் புலவா.
} ஆவி யர ழ இறுதி ஏவல் வினைமுன்வலியியல்பாயின

நட + கொற்றா = நட கொற்றா, நடக்கொற்றா.
எய் + கொற்றா = எய் கொற்றா, எய்க்கொற்றா.
} ஏவல்வினை முன் வலி விகற்பித்தன.

முன்னிலைவினைக்கும் ஏவல்வினைக்கும் வேறுபாடு:—

முன்னிலைவினை—மூன்று காலத்துக்கும் தனித்தனிவருவதாய், முன்னிற்கும் பொருளினது தொழிலையுணர்த்தி ஏவற் பொருள்படாதது. (உ-ம்.) உண்டாய், உண்கின்றாய், உண்பாய்.

ஏவல்வினை—எதிர்காலத்துக்குமாத்திரமே வருவதாய் முன்னிற்கும் பொருளைக் கட்டளையிடுவது. (உ-ம்.) நட, நடமின், நடவும். ஏவலெல்லாம் முன்னிலையாம்; முன்னிலையெல்லாம் ஏவலாகா.

இவை வினைமுற்றுத் தொடராதலால் அல்வழிப்புணர்ச்சி.

உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

குறிப்பு:—புணரியல் மூன்றனுள் உயிரீற்றுப்புணரியல் முதலதாதலால், அதில் முதற்பதினொரு சூத்திரங்களால் இதுவரையிலும் புணர்ச்சிவிதியை, உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுப்படக்கூறி, இனி உயிரீற்றுப்புணர்ச்சிச்சிறப்புவிதி கூறுகின்றார்.

[உயிர்முன் உயிர் புணர்தல்.]

66. இஈஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

உரை:—உயிர்வரின்-(வருமொழிமுதலில்) உயிர் வந்தால், (1) இ ஈ ஐ வழி-இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, யவ்வும்-யகர மெய்யும்;—(2) ஏனை உயிர்வழி-மற்றை (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்) இவ்வேழு உயிர்களின் பின்னே, வவ்வும்-வகரமெய்யும்;—(3) ஏ முன்-ஏகாரத்தின் பின்னே, இவ் இருமையும்-இவ்விரண்டும் (யகரமெய்யும் வகரமெய்யும்),—உடம்படுமெய் என்று ஆகும்-உடம்படு மெய்யாக வரும். ('முன்' இங்கே, இடமுன்).

உடம்படுமெய்—நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும்மெய்; 'உடம்படுத்தல்' என்றாலும் 'உடன்படுத்தல்' என்றாலும் பொருள் ஒக்கும்-['உடம்பு அடு' எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுக்கும்மெய் எனினும் பொருந்தும்].

(உ-ம்.) அல்வழி.	வேற்றுமை.
1. கிளி + அழகிது = கிளியழகிது.	கிளி + அழகு = கிளியழகு.
தீ + எரிந்தது = தீயெரிந்தது.	தீ + அழகு = தீயழகு.
மலை + உயர்ந்தது = மலையுயர்ந்தது.	மலை + அழகு = மலையழகு.

[இ ஈ ஐ முன் யகரம் வந்தது.]

2. விள + அழகிது = விளவழகிது	விள + அழகு = விளவழகு.
பலா + அழகிது = பலாவழகிது	பலா + அழகு = பலாவழகு.
மடு + அழகிது = மடுவழகிது	மடு + அழகு = மடுவழகு.
பூ + அழகிது = பூவழகிது	பூ + அழகு = பூவழகு.
நொ + அழகிது = நொவ்வழகிது	நொ + அழகு = நொவ்வழகு.
கோ + அழகிது = கோவழகிது	கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகிது = கௌவழகிது	கௌ + அழகு = கௌவழகு.

[மற்றை உயிர்களின்முன் வகரம் வந்தது.]

3. அவனே + அழகன் = அவனேயழகன் என (இடைச்சொல் 'ஏ' முன் யகரம் வந்தது.)

ஏ + எலாம் = ஏவெலாம்
சே + உழுதது = சேவுழுதது
தே + அடியார் = தேவடியார்
} (பெயர்ச்சொல்) 'ஏ' முன் (இருவழியும்) வகரம் வந்தது.

சே + அடி = சேயடி, சேவடி எனச் 'செம்மை' என்னும் பண்புப் பெயரின் விகாரமாகிய 'சே' முன், யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன. ['சேயடி', 'சேவடி' என்பவற்றை 42-ஆஞ் சூத்திரத்து 'முன்னின்றமெய்திரிதல்' என்றதில் அடக்குதலுமாம்.]

[எகரவினா முன் சுட்டு முன் நாற்கணமும் புணர்தல்.]

67 எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுதல் நெறியே.

உரை:—(1) எகரவினா (முன்னர்)·எகர வினாவிடைச்சொல் லின்முன்னும், முச் சுட்டின் முன்னர்-மூன்று சுட்டிடைச்சொற் களின் முன்னும், உயிரும்—, யகரமும்—, எய்தின்-வந்தால், வவ்வும் - வகரமெய்யும்;—(2) பிற-யகரமொழிந்த மெய்கள், வரின்-வந்தால், அவையும்-அவ் வந்தமெய்களும்;—(3) தூக்கில்-செய்யுளில், சுட்டு-சுட்டெழுத்து, நீளின்-நீண்டால், யகரமும்-யகரமெய்யும்,—தோன்றுதல்-மிகுதல்,—நெறி-முறையாம்.

[தூக்கு—இது 74-ஆஞ் சூத்திரத்திலும் வந்துளது.]

(உதாரணம்.)

(1) எ+அணி=எவ்வணி.
எ+யானை=எவ்யானை.
} எகரவினா முன் உயிரும் யகரமும் வர, வகரமெய் தோன்றிற்று.

[சுட்டின் முன்னும் இப்படியேகூட்ட வகரந்தோன்றுதல் காண்க.]

(2) எ+குதிரை=எக்குதிரை.
எ+நாடு =எந்நாடு.
எ+வீடு =எவ்வீடு.
} யகரம் ஒழிந்த மெய்கள்வர, அவ் வந்த மெய்கள் தோன்றின.

[சுட்டின் முன்னும் இவ்வாறே காண்க.]

(3) ஆ+இடை=ஆயிடை—சுட்டு நீண்டவிடத்து யகரமெய் தோன்றிற்று. (ஆயிடை-அவ்விடம்) சுட்டு நீளுதற்கும் இதுவே விதி. [இவை அல்வழிப்புணர்ச்சி.]

இனி, 'நெறி' என்ற மிகையால்— (1) யா வினா முன்னும், நீண்ட சுட்டின் முன்னும் ஙகரம் மிகும்; (உ-ம்.) யாங்ஙனம், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம். (2) சுட்டுப்பெயர்நீளும்; (உ-ம்.) ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு. (3) மெய்யீற்றின் முன் உயிர்வர உடம்படுமெய்யல்லாத வகரம் வரும்; (உ-ம்.) விண்+அத்து=விண்வத்து; செல்+உழி=செல்வுழி. [இது 'மெய்யீற் றுடம்படுமெய்' எனவும் பெயர் பெறும்]

இனிக், காயாங்கோடு, காயாக்கோடு; யாங்கோடு, யாக்கோடு; எனவிகற்பித்து வருதலையும், 'பெறுனவும்' என்ற உம்மையாலேயே யமைத்துக்கொள்க.

அகரஈற்றுச் சிறப்புவிதி.

[சில அகரஈற்றின் முன் வலியியல்பாதல்]

செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமு னியல்பே.

உரை:—(1) செய்யிய் என்னும் வினையெச்சம்-செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சமும், (2) பல்வகை பெயரின் எச்சம்-பலவகைப்பட்ட (அகரவீற்றுப்) பெயரெச்சங்களும், (3) (பல்வகை) முற்று- (பலவகைப்பட்ட அகரவீற்று) வினைமுற்றுக்களும், (4) ஆறன் உருபே- ஆறும் வேற்றுமை அகர உருபும், (5) அஃறிணை பன்மை- (அகர வீற்று) அஃறிணைப் பன்மைப்பெயர்களும், (6) அம்ம-'அம்ம' என்னும் இடைச்சொல்லும், முன்- (ஆகிய இவற்றின் முன்), இயல்பு-(வருகிற க ச த ப) இயல்பாகும்.

(உதாரணம்.)

1. உண்ணிய தந்தான், செய்யிய போனான்—செய்யிய என்னும் வினையெச்சம்.
2. உண்ட குதிரை, பெரிய பொருள்—பல்வகைப் பெயரினெச்சம்.
3. உண்டன குதிரைகள், வாழிய கொற்றா—பல்வகை முற்று.
4. தன கைகள், தன தாள்கள்—ஆறனுருபு.
5. பல குதிரைகள், சில செய்தான்—அஃறிணைப் பன்மை.
6. அம்ம கொற்றா, அம்ம தேவா—அம்ம என்னு மிடைச்சொல்.

[உண்ணிய-உண்ணுதற்கு; வாழிய-வாழ்க.]

இச்சூத்திரத்தில் முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்ததனால் இடையிலுள்ளனவும் அகரவீறு என்க. இச்சூத்திரம் அகரவீற்றுச் சொற்களுக்கே பொருந்தும்.

'பல்வகை' என்றது முற்று என்பதனோடுங் கூட்டப்பட்டது. "பல்வகை" என்றதனால் வினையடி நான்கினும் பிறந்த உடன்பாடும் எதிர்மறையுமாகிய எல்லாப் பெயரெச்சங்களும், அவ்வாறு பிறந்த எல்லா வினைமுற்றுக்களும் என்க. முன்னே 'முற்று' என வேறு கூறியதனால் 'அஃறிணைப் பன்மை' என்றது பெயர் என்க.

[வினையடி நான்காவன:—இயற்கையான வினையடி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரி அடியாகப் பிறக்கும் செயற்கை வினையடி மூன்றுமாம்.]

'அம்ம' என்னும் உரையசை யிடைச்சொல், 'அம்மா' என நீண்டு வரினும் வலி யியல்பாகும்; (உ-ம்.) அம்மா கொற்றா.

['பல', 'சில' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

72. பலசில வெனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

உரை:—பல சில என்னும் இவை-பல சில என்னும் இரண்டு சொல்லும், தம்முன் தாம் வரின்-தமக்கு முன்னே தாமேவருமாயின் ['பல' என்பதன்முன் 'பல' என்பதும், 'சில' என்பதன்முன் 'சில' என்பதும் வந்தால்], (1) இயல்பும்-(வருமொழி முதலிலுள்ள) வல்லினம் இயல்பாதலும், (2) மிகலும்-மிகுதலும், (3) அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும்-(நிலைமொழியிறுதியிலுள்ள) அகரம் கெட லகர மெய் றகர மெய்யாகத்திரிதலும்;—(4) பிறவரின் - (இவ்விரண்டு சொற்களின் முன்) வேறு சொற்கள் வந்தால், அகரம்-(நிலைமொழி இறுதியிலுள்ள) அகரம், விகற்பம் ஆகலும்-(நிற்பதும் நீங்குவது மாகிய) விகற்பித்தலும்,— உள-உள்ளனவாம்.

(உ-ம்.) 1. பல+பல=பலபல. சிலசில—இயல்பாயின.
2. பல+பல=பலப்பல. சிலச்சில—மிக்கன.
3. பல+பல=பற்பல. சிற்சில—அகரம்கெட லகரம் றகர மாயிற்று.

4. பல+கலை=பலகலை, பல்கலை.
சில+வளை=சிலவளை, சில்வளை.
சில+நாள்=சிலநாள், சின்னாள்.
பல+ஆயம்=பலவாயம், பல்லாயம்,
} பிறவர அகரம் நின்றும், நீங்கியும் விகற்பித்தது.

'பிற' என்ற மிகையால் (1) சிறுபான்மை தம்முன் தாம்வர அகரங்கெட்டு லகரம் றகரமாகாமல் வரும்; (உ-ம்.) பல+பல=பல்பல; சில+சில=சில்சில. (2) பிறவர அகரங்கெட்டு லகரம் றகரமாகத் திரியும்; (உ-ம்.) பல+பகல்=பற்பகல்; சில+கலை=சிற்கலை. (3) (இன்னும், அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவன உளவாயின் கொள்க.)

ஆகாரவீற்றுச் சிறப்புவிதி.
[ஆகாரத்தின் முன் வல்லினம்.]

73. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

உரை:—அல்வழி-அல்வழிப் புணர்ச்சியில்— (1) ஆமா-'ஆ' என்னும் பெயருக்கும் 'மா' என்னும் பெயருக்கும் (2) மியா-'மியா' என்னும் இடைச்சொல்லுக்கும், (3) முற்று-(ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை) வினைமுற்றுக்கும், முன்-முன்னே, மிகா-(வருகிற வல்லினம்) மிகாவாம்; (இயல்பாகும்.).

[ஆ-பசு; மா-விலங்கின் பொதுப்பெயர்.]

(உ-ம்.) 1. ஆ + சிறிது = ஆசிறிது.
மா + பெரிது = மாபெரிது. } —'ஆ' 'மா' முன்வலி இயல்பாயிற்று.

2. கேண்மியா + புலவா = கேண்மியா புலவா — 'மியா' முன் வலி இயல்பாயிற்று.

3. உண்ணா + பசுக்கள் = உண்ணா பசுக்கள்—முற்று முன் வலி இயல்பாயிற்று.

இனி, இரடடுறமொழிதலால் 'காட்டுப்பசு' என்னும் பொருளைத் தருவதாகிய 'ஆமா' என்பதன் முன்னும் இயல்பாம்; (உ-ம்.) ஆமா + குறிது = ஆமா குறிது; ஆமா + சிறிது = ஆமா சிறிது.

'முற்று முன் மிகா' எனவே, அருத்தாபத்தியால் அவ்வினையாலணையும் பெயரின் முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமானவற்றின் முன்னும் மிகாமையுங்கொள்க. (உ-ம்.) உண்ணாகிடந்தன. இங்கே, 'உண்ணா' என்றது வினையாலணையும் பெயராயின் 'உண்ணாதனவாகிய பிராணிகள்' என்றும், வினைமுற்று வினையெச்சமாயின் 'உண்ணாதனவாய்' எனவும் பொருள்படும்.

இவ்வாய்பாட்டுச் சொல், (1) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமும் (2) ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமும் (3) உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமுமாயின், (பொவிதியால்) (சூ. 69) வல்லினம் மிகும் என்றறிக.

(உ-ம்.) 1. உண்ணாக் குதிரைகள்—[உண்ணாத.]
2. உண்ணாக் கிடந்தன —[உண்ணமல்.]
3. உண்ணாக் கிடந்தான் —[உண்டு.]

[குறிலணைந்த ஆகாரத்துக்குச் சிறப்புவிதி.]

74. குறியதன் கீழாக் குறுகலு மதனோடு
உகர மேற்றலும் இயல்புமாம் தூக்கின்.

உரை :— குறியதன் கீழ் ஆ-குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம், (1) குறுகலும்-(அகரமாகக்) குறுகுதலும்,—(2) அதனோடு-அவ்வாறு குறுகுதலுடனே, உகரம் ஏற்றலும்-உகரம் பெறுதலும்,—(3) இயல்பும்- (அவ்விரண்டுமில்லாமல்) இயல்பாதலும்,—(ஆகிய இம்மூன்று விதியும்),— தூக்கின் ஆம்-பாட்டினிடத்து ஆகும்.

(உ-ம்.) 1. 'நில விரி கானல்'—குறியதன் கீழ் ஆ, குறுகிற்று.

2. 'என் செய்யுமோ நிலவு'—குறுகி உகரம் ஏற்றது.

3. 'நிலா வணங்கு'—இயல்பாயிற்று.

செய்யுளில் இம்மூன்றும் ஆமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்க. குறுகி உகரமேற்காமல் 'நில' என நிற்றல் வழக்கில் இல்லை.

(உ-ம்.) நிலவு, நிலா; கனவு, கனா-குறுகி உகரமேற்றலும், இயல்பும். தரா, மிடா-இயல்புமாத்திரம் ஆயிற்று. (இவைவிகாரப்படா).

இகரவீற்றுச் சிறப்புவிதி.
['அன்றி' 'இன்றி' என்பன].

75. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

உரை:—அன்றி இன்றி என் வினை எஞ்சு இகரம்— 'அன்றி' 'இன்றி' என்னும் (எதிர்மறைக் குறிப்பு) வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள, இகரம்—, தொடர்பினுள்-செய்யுளில், உகரம் ஆய் வரின்-உகரமாய்த் திரிந்து வந்தால்,—இயல்பே-(வரும், 'க ச த ப') இயல்பாகும். [தொடர்பு-செய்யுள்].

(உ-ம்.) அன்றி+போகி=அன்றுபோகி. } இகரம், உகரமாக
இன்றி+புற்கை=இன்றுபுற்கை. } இயல்பாயிற்று.

உகரமாகத் திரியாவிடின், 'அன்றிப்போகி', 'இன்றிப்புற்கை' எனப் பொதுவிதிப்படி வல்லெழுத்து மிகும் என்க.

இகர, ஐகார, வீற்றுச் சிறப்புவிதி.

76. அல்வழி இஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

உரை:—அல்வழி-அல்வழிப் புணர்ச்சியில், இ, ஐ முன்னர்-(நிலைமொழியீற்று) இகர ஐகாரங்களின் முன், ஆயின்-(வல்லினம்) வருமாயின்,— (1) இயல்பும்-இயல்பாதலும், (2) மிகலும்-(பொது விதியால்) மிகுதலும், (3) விகற்பமும்-விகற்பித்தலும், ஆகும்—. 1. இயல்பு எழுவாய்த்தொடர், உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும், 2. மிகுதல் பண்புத்தொகை, உவமைத்தொகைகளிலும், 3. விகற்பித்தல் சில எழுவாய்த்தொடர்களிலும், ஆம் எனக் கொள்க.

(உதாரணம்).

1. புலி + பெரிது = புலிபெரிது.
பூனை + சிறிது = பூனைசிறிது. } எழுவாய்த்தொடரில் வலி யியல்பாயின.
செடி + கொடி = செடிகொடி.
யானை + குதிரை = யானைகுதிரை } உம்மைத்தொகையில் வலி யியல்பாயின.
* இடி + சுவர் = இடிசுவர்.
உரை + கல் = உரைகல். } வினைத்தொகையில் வலி யியல்பாயின.

2. மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்.
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு. } பண்புத்தொகையில் வலிமிக்கன.
காவி + கண் = காவிக்கண்.
பனை + கை = பனைக்கை. } உவமைத்தொகையில் வலிமிக்கன.

3. கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது.
தினை + சிறிது = தினைசிறிது, தினைச்சிறிது. } எழுவாய்த் தொடரில் விகற்பித்தன

இகரத்துக்குச் சொல்லப்படும் இலக்கணம் ஐகாரத்துக்கும் அமைதலால், அதனையுங்கூட்டி யிங்குக்கூறினார். இது ஒப்பின் முடித்தல் என்னும் உத்தி.

உகரவீற்றுச் சிறப்புவிதி:
[சில முற்றியலுகரத்தின் முன்வலி.]

77. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீறு
ஆகு முகர முன்ன ரியல்பாம்.

---

* இடிசுவர், உரைகல் முதலிய உதாரணங்களை 'இயல்பினும் விதியினும்' (சூ. 69) என்ற பொது விதியுள்ளும் அடக்குவர்.

உரை:—மூன்று ஆறு உருபு— (1) ('ஒடு' என்னும்) மூன்றாம் வேற்றுமை யுருபும், (2) ('அது' என்னும்) ஆறாம் வேற்றுமை யுருபும், (3) எண்- (இயல்பாயும் விகாரமாயும் வரும்) எண்ணுப்பெயர்களும், (4) வினைத்தொகை-வினைத்தொகையும், (5) சுட்டு-சுட்டுப் பெயர்களும் (ஆகிய இவற்றிற்கு), ஈறு ஆகும்-இறுதியாகிய, உகரம் முன்னர்-முற்றியலுகரத்தின் முன்னே, இயல்பு ஆகும்- (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

(உதாரணம்.)

1. அவனொடு+கொண்டான்=அவனொடுகொண்டான்—மூன்றனுருபு.
2. இராமனது+செவி=இராமனதுசெவி—ஆறனுருபு.
3. ஏழு + தலை =ஏழுதலை —இயல்பெண்ணுப்பெயர்.
   ஒரு, இரு, எழு+புறம்=ஒருபுறம் —விகாரஎண்ணுப்பெயர்.
4. விடு+கணை=விடுகணை —வினைத்தொகை.
5. அது+கண்டான்=அதுகண்டான்—வேற்றுமை. } —சுட்டு.
   இது+சிறிது =இதுசிறிது —அல்வழி. }

'சுட்டுமாகும்' என்றதன் * உபலக்ஷணத்தால், எது+கண்டான்=எதுகண்டான், எது+பெரிது=எதுபெரிது, என வினாவீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் இயல்பாதல்கொள்க.

[குற்றியலுகரத்தின் முன் வலி: அல்வழி.]

78. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி

உரை:—வன்றொடர் அல்லன முன்-வன்றொடர் அல்லாத மற்றை ஐந்து தொடர்க்குற்றியலுகரத்தின் முன்னும், (வருகிற வல்லினம்),— அல்வழி-அல்வழிப்புணர்ச்சியில், மிகா-மிகாவாம்; (இயல்பாகும்).

(உ-ம்.) நாடு +சிறிது =நாடுசிறிது —நெடிற்றொடர்.
எஃகு+பெரிது =எஃகு பெரிது —ஆய்தத்தொடர்.
வரகு +தின்றான்=வரகு தின்றான் —உயிர்த்தொடர்.
வந்து+போனான்=வந்துபோனான்—மென்றொடர்.
எய்து+பொருள்=எய்து பொருள்— இடைத்தொடர்.

'வன்றொடரல்லன முன்மிகா' என்றதனால், வன்றொடரின் முன் 'கழுத்து+சிறிது=கழுத்துச்சிறிது' 'படித்து+சென்றான்=படித்துச்சென்றான்', என அல்வழியில் வலி மிகு மென்க.

---

* உபலக்ஷணம்— சூ-179-ல் காண்க.

குறிப்பு:— ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்; (உ-ம்.) அங்குக் கண்டான், இங்குச்சென்றான், உங்குத்தந்தான், எங்குப்போனான், ஆங்குக்கற்றான், ஈங்குச்சேர்ந்தான், ஊங்குக்கொண்டான், யாங்குப்போனான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப் போயினான்.

ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து, என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்; (உ-ம்.) அன்று கண்டான், இன்று சென்றான், என்று தந்தான், பண்டு போயினான், முந்து பெற்றான்.

இவையெல்லாம் சொல்லால் அல்வழியும், பொருளால் வேற்றுமையுமாதலால், சில அல்வழிவிதியையும், சில வேற்றுமை விதியையும் ஏற்றன.

[குற்றியலுகரத்தின் முன் வலி: வேற்றுமை.]

79. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

உரை:— இடைத்தொடர்-இடைத்தொடரும், ஆய்தத்தொடர்-ஆய்தத்தொடரும், ஒற்று இடையில் மிகா-ஒற்று இடையே மிகாத, நெடில் உயிர்த்தொடர்-நெடிற்றொடரும், உயிர்த்தொடரும், முன்-(ஆகிய இவற்றின்) முன்னர், (வருகிற வல்லினம்), வேற்றுமை மிகா-வேற்றுமைப்புணர்ச்சியில் மிகாவாம்; (இயல்பாகும்.)

(உ-ம்.) மார்பு+கடுமை =மார்பு கடுமை—இடைத்தொடர்.
எஃகு+சிறுமை=எஃகு சிறுமை—ஆய்தத்தொடர்.
நாகு +தலை =நாகு தலை —மிகாநெடிற்றொடர்.
வரகு +கதிர் =வரகு கதிர் —மிகாஉயிர்த்தொடர்.

ஒற்றிடையே மிகும் நெடிற்றொடர்- உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும்; அவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

இங்குக், கூறப்பெறாத மென்றொடரின் முன்னும் வன்றொடரின்முன்னும் வேற்றுமையில் வல்லினம் மிகுமென்க; (உ-ம்.) வண்டு+கால்=வண்டுக்கால்; கொக்கு+சிறகு=கொக்குச்சிறகு.

[டுகர றுகர ஈற்றுச் சில குற்றியலுகரங்களுக்குச் சிறப்புவிதி.]

80. *நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்*
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

உரை:— *நெடிலோடு உயிர்த்தொடர் - நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களும் (ஆகிய), குற்றுகரங்களுள்-குற்றியலுகரமொழிகளுள், ட ற ஒற்று-(அவ்வுகரம் ஏறிநின்ற) டகர றகர மெய்கள், வேற்றுமை-வேற்றுமைப்புணர்ச்சியில், மிக-பெரும்பாலும், இரட்டும்—.*

[வரும் எழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.]

நெடிற்றொடர். (உ-ம்.) *உயிர்த்தொடர்.*

ஆடு + கால் = ஆட்டுக்கால்.	*பகடு + நலம் = பகட்டு நலம்.*
சோறு + வளம் = சோற்றுவளம்.	*களிறு + அடி = களிற்றடி.*

'பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்' *என்றதனால் பின் வரும் மூன்றுங்கொள்க.*

1. *ட ற ஒற்றுச் சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாது;* (உ-ம்.) *வீடு + புகுந்தான் = வீடுபுகுந்தான்; பயறு + தின்றான் = பயறு தின்றான்.*

2. *ட ற ஒற்றுச் சிறுபான்மை அல்வழியில் இரட்டும்;* (உ-ம்.) *காடு + அரண் = காட்டரண்; களிறு + யானை = களிற்றியானை.*

3. *ட ற ஒற்றுப் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டுமெனவே, பிற ஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டும்;*

(உ-ம்.) *வெருகு + கண் = வெருக்குக்கண் — வேற்றுமை.*
எருது + மாடு = எருத்துமாடு — அல்வழி.

[மென்றொடர் முன் நாற்கணம்: இருவழி.]

81. *மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்*
தம்மின் வன்றொட ராகா மன்னே

உரை:— (1) *மென்றொடர் மொழியுள்-மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள், சில-சில நிலைமொழிகள்,—வேற்றுமையில்—, தம் இனம்-தமக்கு இனமாகிய, வன்றொடர்-வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரியும்;* (2) *ஆகா மன்-அவ்வாறு திரியாதன பலவாம்.*

[வரும் எழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க.]

(உ-ம்.) 1. கரும்பு + ஆலை = கருப்பாலை.
மருந்து + பை = மருத்துப்பை.
கரும்பு + வில் = கருப்புவில்.
கன்று + ஆ = கற்றா.
} வேற்றுமையில் வன்றொடராயின.

2. சங்கு + இனம் = சங்கினம்.
வண்டு + கால் = வண்டுக்கால்.
பந்து + நலம் = பந்துநலம்.
ஞெண்டு + வளை = ஞெண்டுவளை.
} வேற்றுமையில் வன்றொடராகாதன.

'சில வன்றொடராம் எனவே' ஆகாதன 'பல' என்பது தானே வந்து இயையும்.

இனி, 'மன்' என்றமிகையால் (1) அல்வழியிலும் சிறுபான்மை வன்றொடராதலும், (2) இருவழியிலும் விகற்பித்து வருதலுங் கொள்க.

(உ-ம்.) 1. நஞ்சு + பகைமை = நச்சுப்பகைமை.
இரும்பு + மனம் = இருப்புமனம்.
} அல்வழியில் வன்றொடராயின

2. குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி.
குரக்குக்குட்டி.
பாம்பு + தோல் = பாம்புத்தோல்.
பாப்புத்தோல்.
} வேற்றுமையில் விகற்பித்தன.

அன்பு + தளை = அன்புத்தளை.
அற்புத்தளை.
} அல்வழியில் விகற்பித்தன.

[சில குற்றியலுகரத்துக்குச் சிறப்புவிதி.]

82. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

உரை:— ஐ-ஐகாரச்சாரியையை, ஈறு உடை - இறுதியிலே பெற்றுவருகின்ற, குற்றுகரமும்-குற்றியலுகரமொழிகளும், உள-(சில) உண்டு.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால் மென்றொடர் என்க. வரும் எழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க.

(உ-ம்.) பண்டு + காலம் = பண்டைக்காலம்.
இன்று + நாள் = இற்றைநாள்.
} —அல்வழி.

முந்து + வளம் = முந்தைவளம்.
இன்று + அழகு = இற்றையழகு.
} —வேற்றுமை.

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' எனப் பொதுப்படக்கூறினமையால், நேற்று + பொ

ழுது=நேற்றைப்பொழுது, நேற்று+கூலி=நேற்றைக்கூலி; பொழுது+செலவு=பொழுதைச்செலவு, என்ப பிறதொடர்களும் ஐகாரச்சாரியை பெறும் என்க.

இனி, 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' என உடைமையாக்கிக் கூறியதனால், வருமொழியை நோக்காமல், ஒன்று=ஒற்றை, இரண்டு=இரட்டை, வேடு=வேட்டை எறு=எற்றை என ஒருமொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும், ஓராண்டு=ஓராட்டை, ஈராண்டு=ஈராட்டை, எனத் தொடர்மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலுங்கொள்க.

[திசைப்பெயர்க்குச் சிறப்புவிதி.]

83. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற் றுநீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

உரை:— திசையொடு-திசைப்பெயரோடு, திசையும்-திசைப்பெயரும், பிறவும்-வேறு பெயர்களும், சேரின்-புணருமிடத்து, நிலை ஈறு-நிலைமொழி இறுதியில் நின்ற, உயிர்மெய்-'கு' என்னும் உயிர்மெய்யும், க ஒற்று-(அதன் அயலில் நின்ற) ககர மெய்யும், நீங்கலும்-கெடுதலும்,— றகரம்-(ஈற்று அயலில் நின்ற) றகரமெய்யானது, ன ல ஆ திரிதலும் - னகரமெய்யாகவும், லகரமெய்யாகவும் திரிதலும்,—ஆம்-ஆகும்;

குறிப்பு:— (1) திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும் போது நிலைமொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே எனவும், (2) நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்குதல்-கிழக்கு, குணக்கு, குடக்கு, வடக்கு என்பவற்றிலும், (3) றகரம் 'ன' ஆதல் தெற்கு என்பதிலும், (4) றகரம் 'ல' ஆதல் மேற்கு என்பதிலும் "ஏற்புழிக் கோட"லாற் கொள்க.

(உ-ம்.) வடக்கு + கிழக்கு=வடகிழக்கு.
குடக்கு + திசை =குடதிசை.
குணக்கு+கடல் =குணகடல். } உயிர்மெய்யும், ககரமெய்யும் கெட்டுவந்தன.
தெற்கு+கிழக்கு=தென்கிழக்கு.
தெற்கு+மலை =தென்மலை. } உயிர்மெய் கெட, றகரம் னகரமாயிற்று.
மேற்கு+காற்று=மேல்காற்று.
மேற்கு+ஊர் =மேலூர். } உயிர்மெய் கெட, றகரம் லகரமாயிற்று.

'பிற' என்ற மிகையால், 'கிழக்கு' என்பது ழகரத்தின் 'அ' கெட்டு முதல் நீண்டே வருதல்கொள்க;

(உ-ம்.) கிழக்கு + காற்று = கீழ்காற்று. } ஈற்றுயிர்மெய்யும், ககர ஒற்றும், அகரமும் கெட்டு முதல் நீண்டது.
கிழக்கு + நாடு = கீழ்நாடு.

இன்னும் 'பிற' என்றதனால் (1) 'கீழைக்குளம்', 'கீழைச்சேரி', 'மேலைக்குளம்', 'மேலைச்சேரி', என ஐகாரம்பெறுதலும், (2) 'வடக்கூர்'; 'வடக்குமலை', 'தெற்கூர்', 'தெற்குமலை', என மேற்கூறிய விகாரமின்றி வருதலும், (3) 'தெற்குவடக்கு', 'வடக்குத்தெற்கு', 'கிழக்குமேற்கு', 'மேற்குக்கிழக்கு' எனத்திசையோடு திசைபுணரும்போது, பொதுவிதி பெறுதலுங்கொள்க.

எண்ணுப்பெயர்.

'ஒன்று' என்னும்எண் வருமொழியோடு புணரும்போது ஈற்றுயிர்மெய் கெட்டு, னகரவொற்று ரகரமாகத்திரியும்; வந்தது மெய்யாயின் ரகரம் உகரம்பெறும்; உயிராயின், உகரம்பெறாமல் முதல்நீளும்.

(உ-ம்.) ஒன்று + கோடி = ஒருகோடி; ஒன்று + அம்பு = ஓரம்பு.

'இரண்டு' என்னும் எண் இகரமும் ரகர ஒற்றுமே நிற்க, மற்றைய எழுத்தெல்லாங் கெட்டு உகரம்பெறும்; உயிர்வரின் உகரம்பெறாமல் முதல் நீளும்.

(உ-ம்.) இரண்டு + கோடி = இருகோடி; இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.

'மூன்று' என்னும் எண் ஈற்றுஉயிர்மெய்கெடும்; நின்ற னகரமெய் வந்தது உயிராயின் தானும்கெடும்; மெய்யாயின் முதல் குறுகி, னகரமெய் வருமெய்யாகத்திரியும்.

(உ-ம்.) மூன்று + ஆயிரம் = மூவாயிரம்; மூன்று + கோடி = முக்கோடி; முந்நாழி; முவ்வட்டி.

'நான்கு' என்னும் எண் ஈற்று உயிர்மெய் கெடும்; நின்ற னகரம், வந்தவை, உயிரும் இடையெழுத்துமாயின், லகரமாகத் திரியும்; வல்லெழுத்தாயின், றகரமாகத்திரியும்; மெல்லெழுத்தாயின் இயல்பாகும்.

(உ-ம்.) நான்கு + ஆயிரம் = நாலாயிரம்; நான்கு + யானை = நால்யானை; நான்கு + கலம் = நாற்கலம்; நான்கு + மணி = நான்மணி

'ஐந்து' என்னும் எண் மெய்வரின் ஈற்றுயிர்மெய்கெட்டு நகரம் வருகிற மெய்யாதலும், அதற்கு இனமாதலும், உயிர்வரின் கெடுதலுமாம்.

(உ-ம்.) ஐந்து + மூன்று = ஐம்மூன்று; ஐந்து + கலம் = ஐங்கலம்; ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.

'ஆறு' என்னும் எண் முதல் குறுகலும் இயல்புமாம்.
(உ-ம்.) ஆறு + தொழில் = அறுதொழில், ஆறு + முகம் = ஆறுமுகம்.

'ஏழு' என்னும் எண் உயிர்வரின் ஈற்றுகரம் கெடுதலும், மெய்வரின் முதல் குறுகலும் குறுகாமையுமாம்.

(உ-ம்.) ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்; ஏழு + கடல் = எழுகடல், ஏழுகடல்; (இது 'ஏழ்கடல்' எனவும் வரும்.)

'எட்டு' என்னும் எண் ஈற்றுயிர்மெய்கெட்டு டகரம் ணகரமாம்.
(உ-ம்.) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்.

குறிப்பு:—மேற்கூறியவை இவ்விகாரங்களின்றி, இரண்டுகோடி, மூன்றுகண், நான்குபொருள், ஐந்துமுகம், ஆறுகுணம், ஏழுகடல், எட்டுத்திக்கு எனவும் வரும்.

'ஒன்பது' என்பதன் முன் 'பத்து' என்னும் எண்வரின் 'பது' கெட்டு, முதல் உயிரோடு தகரமெய் சேர்ந்து, நின்ற னகரம், ணகரமாகவும், வருமொழியாகிய பத்து நூறாகவும் திரியும்.

ஒன்பது + பத்து = ஒன் + பத்து, தொன் + பத்து, தொண் + பத்து, தொண் + நூறு, தொண்ணூறு.

'ஒன்பது' என்பதன் முன் நூறு வந்தால், 'பது' கெட்டு, முதல் உயிரோடு தகரமெய் சேர்ந்து நின்ற னகரம் ளகரமாகவும், வருமொழியாகிய நூறு, ஆயிரமாகவும் திரியும்.

(உ-ம்.) ஒன்பது + நூறு = ஒன்நூறு, தொன்நூறு, தொள்நூறு தொள்ஆயிரம், தொள்ளாயிரம். (இது இக்காலத்துத் தொளாயிரம் என வழங்கும்.)

'பத்து' என்னும் எண் முன் இரண்டு வந்தால், ஈற்றுயிர் மெய்கெட்டு தகரமெய் னகரமெய்யாகத் திரியும்.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

'பத்து' என்பதன் முன், ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு இவ்வேழு எண்களும் உம்மைத்தொகையிலும், ஆயிரம் என்பது பண்புத்தொகையிலும் வந்தால் ஈற்று உயிர்மெய் கெட்டு இன்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு; பதினாயிரம்; பதிற்றொன்று, பதிற்றிரண்டு எனவரின், பண்புத்தொகையில் இற்றுச்சாரியை தோன்றியதென்க.

ஒன்றுமுதல் எட்டீறாகிய எண்களின் முன், பத்தென்னும் எண்வந்தால், பத்தின் இடையில் நின்ற தகரம் கெடும்; ஆய்தமாகத் திரிவதுமுண்டு.

(உ-ம்.) ஒன்று+பத்து=ஒருபது, ஒருபஃது; பிறவுங்காண்க.

ஒருபது முதல் எண்பது ஈறாகிய எண்களின்முன், ஒன்று முதல் ஒன்பதெண்ணும் வரின், நிலைமொழியீற்றுக்கு அயலில் தகரவொற்றுத் தோன்றும்.

(உ-ம்.) ஒருபது+ஒன்று=ஒருபத்தொன்று; பிறவுங்காண்க.

ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களை யும் இரட்டித்துச்சொல்லுமிடத்து, நிலைமொழியின் முதலெழுத்து மாத்திரம் நிற்க, மற்றவையெல்லாங் கெடும்; முதல் நெடில் குறுகும்; வந்தவை உயிராயின் வகரம் தோன்றும்; மெய்யாயின் வந்த மெய் மிகும்.

(உ-ம்.) ஒன்று+ஒன்று=ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

[சிறுபான்மை ஓரோவொன்று, ஒன்றொன்று எனவும் வரும்.]

இன்னும் வேறு+வேறு=வெவ்வேறு; பாதி+பாதி=பப்பாதி எனப் பிறபெயர்கள் இரட்டிக்கும் போதும் இவ்விகாரம் பெறும் என்க.

ஊகார ஈற்றுச் சிறப்புவிதி.

['பூ' முன் வல்லினம்.]

84. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

உரை:— பூ பெயர் முன்- 'பூ' என்னும் பெயர்ச்சொல்லின் முன், இனம் மென்மையும்- (வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகுதலேயல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லினமும், தோன்றும்-மிகும்.

(உ-ம்.) பூ+கொடி=பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை, பூம்பொழில்.

இங்குப், 'பூ' என்பது மலராயின், 'பூவையுடைய கொடி' என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்கதொகை; அழகாயின், 'பூவாகிய கொடி' எனப் பண்புத்தொகை.

'ஏகார', 'ஓகார' ஈற்றுச் சிறப்புவிதி.

85 இடைச்சொல் ஏ ஓ முன்வரி னியல்பே.

உரை:—இடைச்சொல் - இடைச்சொற்களாகிய, எ ஓ முன்- எ ஓ என்பவற்றின்முன், வரின்-(வல்லினம்) வந்தால், இயல்பே- இயல்பேயாகும்.

(உ-ம்.) அவனே+செய்தான் = அவனேசெய்தான்.
அவனோ+கண்டான் = அவனோகண்டான்.

வினாப்பொருளில் வரும் ஏகார ஓகாரங்களின் முன் வலி இயல்பாதல் கீழ்* 'ஈற்றியாவினா' என்ற சூத்திரத்தில் கூறப்பட்ட தனால், இவ்விதி, மற்றப்பொருள்களில் வருமிடத்து என அறிக.

ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

['ஐ' முன் மெய்.]

86. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடு மம் மேற்பவு முளவே.

உரை:—ஐகான் இறு மொழி-ஐகாரவீற்றுச் சொற்கள், வேற் றுமை ஆயின்-வேற்றுமைப்புணர்ச்சியில் வருமாயின், ஈறு அழி வோடும்-ஈற்று ஐகாரங் கெடுதலுடனே, அம்-'அம்' சாரியையை, ஏற்பவும்-பெற்று முடிவனவும், உள-சில உள்ளன.

[வரும் எழுத்தைக் கூறாமையால் நாற்கணத்துள் ஏற்பனகொள்க.]

(உ-ம்.) மாதுளை + கனி = மாதுளங்கனி.
எலுமிச்சை + மரம் = எலுமிச்சமரம்.
தாழை + பூ = தாழம்பூ
} 'ஐ' அழிவோடு 'அம்' ஏற்றன.

'அழிவோடும்' என்ற உம்மையால், அழியாமையோடு, 'அம்' ஏற்பவும் உள எனக்கொள்க.

புன்னை + கானல் = புன்னையங்கானல்.
முல்லை + தொடை = முல்லையந்தொடை.
} 'ஐ' அழியாமையோடு 'அம்' ஏற்றன.

இனி, 'ஏற்பவுமுள' என்றதனால், முல்லை + புறவு = முல்லைப் புறவு, கொல்லை + சாரல் = கொல்லைச்சாரல் எனப் பொதுவிதி பெற்று வருதலுங்கொள்க.

['பனை' என்பதற்குச் சிறப்புவிதி.]

87. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

---

* 64-ஆஞ் சூத்திரம் பார்க்க.

உரை:—(1) பனை முன்-'பனை' என்னும் பெயரின் முன், கொடி வரின்-'கொடி' என்னும் பெயர் வருமாயின், மிகலும்-(வந்த க்கரம்) மிகுதலும்,—(2) வலி வரின்-வல்லினம் (க ச த ப) வருமாயின், ஐ போய்-(நிலைமொழியீற்று) ஐகாரங் கெட்டு, அம்மும்-'அம்' சாரியை பெறுதலும்,—(3) திரள் வரின்-'திரள்' என்னும் பெயர் வருமாயின், உறழ்வும்-(வந்த தகரம் மிகுந்தும், 'ஐ'போய் 'அம்' சாரியை பெற்றும்) விகற்பித்தலும்,—(4) அட்டு உறின்-'அட்டு' என்னும் பெயர் வருமாயின், ஐ கெட்டு-(நிலைமொழியீற்று) ஐகாரங் கெட்டு, அ நீள்வும்-(வருமொழிமுதல்) அகரம் ஆகாரமாதலும்,—ஆம்-ஆகும்;—வேற்றுமை-வேற்றுமைப்புணர்ச்சியில்.

(உ-ம்:) 1. பனை+கொடி =பனைக்கொடி—மிகுந்தது.

2. பனை+காய் =பனங்காய். பனஞ்செறும்பு, பனந்தூண், பனம்பழம் } ஐ போய் அம் பெற்றது.

3. பனை+திரள் =பனைத்திரள். =பனந்திரள். } உறழ்ந்தது.

4. பனை+அட்டு =பனாட்டு—'ஐ'கெட்டு அ நீண்டது.

பரீக்ஷை வினக்கள்:— 55. புணர்ச்சியாவதியாது? 'மெய்யுயிர் முதலீறும்' என்றும், 'அல்வழி வேற்றுமையென்றும்' மாற்றிக் கூறியதன் காரணம் யாது? 56. வேற்றுமைப் புணர்ச்சியாவதியாது? அல்வழிப்புணர்ச்சியாவதியாது? அல்வழிப்புணர்ச்சி எத்தனை? அவைகளில் தொகைநிலைத்தொடர்களெவை? தொகாநிலைத்தொடர்களெவை? தழுவுதொடராவதியாது? தழாத்தொடராவதியாது? எழுவாயும் விளியும் ஏன் அல்வழியிற் சேர்க்கப்படுகின்றன? 57. இயல்புபுணர்ச்சியாவதியாது? 58. விகாரப்புணர்ச்சியாவதியாது? 59. செய்யுள் விகாரங்களெவை? புணர்ச்சி விகாரத்துக்கும் செய்யுள் விகாரத்திற்கும் வேறுபாடென்னை? 60. வலித்தல் முதலிய ஆறேயன்றிச் செய்யுள்விகாரங்கள் இன்னும் உளவோ? முதல் இடை கடைக்குறைகள் தொகுத்தல்விகாரத்தின் வேறானதெப்படி? புணர்ச்சியில் விகாரங்கள் எவை? 61. ஒரு புணர்ச்சிக்குப் பல விகாரம் வருதலுமுண்டோ? 62. எல்லா ஈற்றின் முன்னும் 'ஞ, ந, ம, ய, வ' வரின், எவ்வாறும்? 'ஞ, ந, ம, ய, வ' இவைகள் எந்த எந்த மொழிமுன் மிகும்? 63. பொதுப்பெயராவதியாது? பொதுப்பெயருக்குப் (பரியாயநாமம்) வேறு பெயர் என்ன? நிலைமொழியோடு வருமொழி முதல் வல்லெழுத்துப் புணருமிடத்து, நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்

துக்கள் எவை? வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற்குரிய எழுத்துக்கள் எவை? ‘ஈற்றுமெய் வலி வரினியல்பாம்’, ‘ஆவி ய ர முன் வன்மை மிகா’ என வேறுபிரித்துக் கூறுவானேன்? நாற்கணமென்பன எவை? பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்று லகர, ளகர, ணகர, னகர மெய்களின் முன் வல்லினம் வரின், இருவழியும் எவ்வாறாம்? வல்லினத்துள் எது வரினும் ‘ல ள’ இயல்பேயாமோ? ‘ல ள’ கெடுவது யாது பற்றி? பொதுப்பெயருயர்திணைப் பெயரீற்றுயிர் முன்னும் யகர ரகரமெய் முன்னும் வல்லினம் வரின் எவ்வாறாம்? எல்லா உயர்திணைப் பெயரும் நாற்கணங்களோடு புணருமிடத்து இயல்பாகவே புணருமோ? 64. ஈற்று விஞ முன்னும், யா விஞ முன்னும், விளிப்பெயர் முன்னும் வல்லினம் வரின் எவ்வாறாம்? 65. உயிரையும், ய ரழமெய்யையும் இறுதியாகவுடைய முன்னிலைவினை முன்னும் ஏவல்வினை முன்னும் வல்லினம் வரின் எவ்வாறாம்? விகற்பமாவதியாது? விகற்பத்துக்குப் பரியாயநாமம் (வேறு பெயர்) என்ன? முன்னிலைவினைக்கும் ஏவல்வினைக்கும் வேறுபாடென்னை? 66. உயிரீற்றின்முன் உயிர் வரின், இருவழியும் எவ்வாறு புணரும்? உடம்படுமெய் யென்றுலென்ன? எவ்வுயிரீற்றின் முன் உயிர் வரின், யகர வுடம்படுமெய் தோன்றும்? எவ்வுயிரீற்றின் முன், உயிர் வரின், வகர வுடம்படு மெய் தோன்றும்? யகர வகர மிரண்டும் உடம்படுமெய்யாகத் தோன்றப்பெறும் இடம் எது? எவ்வேகாரத்தின்முன் யகர வுடம்படுமெய் தோன்றும்? எவ்வேகாரத்தின்முன் வகர வுடம்படுமெய்யும் தோன்றும். உடம்படுமெய் இரண்டனுள், எது தோன்றினும் ஒத்துநிற்கப் பெறுவது எவ்வேகாரத்தின் முன்? 67. எகரவினு முன்னும், முச்சுட்டின் முன்னும், நாற்கணமும் வரின், எவ்வாறு புணரும்? செய்யுளிடத்து நீண்ட அகரச்சுட்டின் முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்? யா விஞ முன்னும், நீண்ட சுட்டின் முன்னும், ஙகரம்வரின், எவ்வாறு புணரும்? சுட்டெழுத்து நீளப்பெறும் தனிமொழிகள் எவை? மெய்யீற்றுடம்படுமெய் (உடம்படுமெய் யல்லாதமெய்) யென்றுலென்ன? 68 குற்றியலுகரவீற்றின் முன், உயிர் வரின். எவ்வாறு புணரும்? குற்றியலுகரவீற்றின் முன் யகரம் வரின் எவ்வாறு புணரும்? முற்றியலுகரம் இவ்விதி பெறுமாறெங்ஙனம்? குற்றியலுகரம் உயிர் வரின் எங்குங் கெட்டே புணருமோ? குற்றியலுகரம் உயிர்வரக் கெடாது வகர வுடம்படுமெய்பெறுதலுக்கு நன்னூற் சூத்திரத்திலிருந்தே யுதாரணந் தருக. 69. உயிரீற்றின் முன் வல்லினம் வரின் இருவழியும் எவ்வாறு புணரும்? இயல்புயிரீருவது யாது? விதியுயிரீருவதியாது? உயிரீற்றஃறிணைப்பெய

ரின் முன்வரும் வல்லினம் வேற்றுமையில் எவ்வாறும்? வன்றொடர்க் குற்றியலுகரவீற்றின்முன்வரும் வல்லினம் வினைத்தொகையிலெவ்வாறும்? ஏவல்வினைமுன்வரும் வல்லினம் மிக்கே வருதலுமுண்டோ? 70. உயிரீற்றின் முன் எங்கு மெல்லெழுத்து மிகும்? 71. 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன் வலி வரின், எவ்வாறும்? அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன் வலி வரின், எவ்வாறும்? அகரவிற்று வினைமுற்றுச்சொல் முன் வலி வரின், எவ்வாறும்? வினையடி யெத்தனைவகைப்படும்? 'அ' என்னும் ஆறனுருபின் முன், வலிவரின் எவ்வாறும்? அகரவீற்று அஃறிணைப் பெயர்முன் வலிவரின், எவ்வாறும்? 'அம்ம' என்னும் இடைச்சொல்லின் முன் வலிவரின், எவ்வாறும்? பல்வகைப்பெயரெச்சமென்றாலென்ன? என்னென்ன அகரவீற்றின் முன் வலியியல்பாம்? 72. 'பல', 'சில' என்னும் இவ்விரு சொல்லும் தம்முன்னே தாம்வரின் எவ்வாறும்? 'பல', 'சில' என்னும் இவ்விருசொல்லும், அல்வழியிற் பிறமொழிகள் வரின், எவ்வாறும்? 'பிற' என்ற மிகை யாற் கொள்ளப்படுவனயா? 73. 'ஆ', 'மா' என்னும் பெயர்கள் முன் வரும்வல்லினம் எவ்வாறும்? 'மியா' என்னும் இடைச்சொல் முன் வலிவரின் எவ்வாறும்? ஆகாரவீற்றஃறிணைப்பன்மை யெதிர்மறை முற்றுவினைமுன் வலிவரின் எவ்வாறும்? [ஆகாரவீற்றுச் சொற்களுள் எவற்றின்முன் வரும்வல்லினம்மிகாவாம்?] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வலிவரின், எவ்வாறும்? ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்தின்முன் வலிவரின், எவ்வாறும்? உடன்பாட்டு இறந்தகால வினையெச்சத்தின் முன் எவ்வாறும்? 74. தனிக்குறிற் கீழ்நின்ற ஆகாரம் செய்யுளில் எவ்வெவ்விகாரங்களைப்பெறும்? வழக்கினிடத்து இம்மூன்று விதிகளுள் எவ்விதி பெறும்? 75. 'அன்றி', 'இன்றி' என்னும் வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் எவ்வாறும்? 'அன்று', 'இன்று' என்பவற்றின் முன் எவ்வாறும்? 76. இகர, ஐகாரவீற்று அஃறிணைப்பெயர்முன் வல்லினம் வரின், எவ்வாறும்? இம்மூன்று விதியுள் இயல்பு எவ்விடத்துக்கொள்ளப்பெறும்? மிகுதி எவ்விடத்துக்கொள்ளப்பெறும்? விகற்பம் எவ்விடத்துக் கொள்ளப்பெறும்? 77. 'ஒடு' உருபின் முன்னும் 'அது' உருபின் முன்னும் வலிவரின் எவ்வாறும்? 'ஓடு' உருபின் முன்னும் 'ஆது' உருபின் முன்னும் வல்லினம் வரின், எவ்வாறும்? இவற்றிற்கு விதி யெச்சூத்திரத்தாற் பெறப்படும்? முற்றுகரவீற்று எண்ணுப்பெயர்முன்வலிவரின் எவ்வாறும்? முற்றுகரவீற்று வினைத்தொகைமுன் வரும் வல்லினம் எவ்வாறும்? முற்றுகரவீற்றுச் சுட்டுப்பெயர்முன் வலிவரின் எவ்வாறும்?

78. அறுவகைக் குற்றுகரங்களுள் எவற்றின்முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்? வன்றொடர்க் குற்றுகரவீற்றின்முன் இருவழியும் வல்லினம்வரின் எவ்வாறாம்? அது எச்சூத்திரத்தாற் பெறப்படும்? வன்றொடர்முன்வரும் வல்லினம் இயல்பாதல் எத னாற் பெறப்படும்? மென்றொடர்க் குற்றுகரவீற்றின்முன்வரும் வல் லினம் வேற்றுமையில் எவ்வாறாம்? அது எச்சூத்திரத்தாற் பெறப் படும்? இடப்பொருள் தந்து ஏழாம்வேற்றுமைப் பொருள்படவரும் மென்றொடர்க்குற்றுகர வீற்றிடைச்சொற்களின்முன் வலிவரின் எவ்வாறாம்? காலப் பொருள்தந்து, ஏழாம்வேற்றுமைப் பொருள் படவரும் மென்றொடர்க் குற்றுகரவீற்று இடைச்சொற்களின் முன் வலிவரின் எவ்வாறாம்? 79. எக்குற்றுகரங்களின்முன்வரும் வல் லினம் வேற்றுமையிலும் இயல்பாம்? 80. நெடிற்றொடர்க்குற்றுகர மொழிகளுள்ளும், உயிர்த்தொடர்க்குற்றுகர மொழிகளுள்ளும் எவ் வெவைகள் இடையே மெய்யிரட்டித்து வரப்பெறும்? வேற்றுமை யில் இரட்டாது வருதலில்லையோ? அல்வழியில் எங்கும் இவ்வாறு இரட்டுதல் இல்லையோ? ட ற ஒற்றன்றிப் பிறவொற்று இருவழியும் இரட்டுதலில்லையோ? ['டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே' என்றதனால் கொள்ளப்படுவனயா?] 81. மென்றொடர்க்குற்றுகர மொழி வேறுவிதி பெறாதோ? அல்வழியில் இங்ஙனம் வாராதோ? 82. மென்றொடர்க்குற்றுகரம் இன்னும் எவ்வாறாம்? வேறு குற்று கரம் ஐகாரச்சாரியை பெறாதோ? 83. திசைப்பெயர் வந்து புண ரும்போது நிலைமொழிகளாக நிற்கும் திசைப் பெயர்களெவை? வடக்கு என்பதன்முன் திசைப்பெயரும் பிறபெயரும் வரின் எவ்வாறாம்? 'தெற்கு' என்பதன்முன் திசைப்பெயரும் பிற பெய ரும் வரின் எவ்வாறாம்? 'மேற்கு' என்பதன்முன் பிற பெயர் வரின் எவ்வாறாம்? குணக்கு குடக்கு என்பவற்றின் முன் பிற பெயர் வரின் எவ்வாறாம்? 'கிழக்கு' என்பதன் முன் பிற பெயர் வரின் எவ்வாறாம்? 'கிழக்கு', 'மேற்கு' என்னும் பெயர்கள் வேறுவிதியும் பெறுமோ? திசைப்பெயர்கள் பொதுவிதி பெறாவோ?

எண்ணுப்பெயர்:— ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, என்பவைகளின்முன் நாற்கணமும் வரின், தனித்தனி யெவ்வாறாம்? இவ்வெண்ணுப் பெயர்கள் இவ்விகார மின்றியும் வருமோ? ஒன்பது என்பதன்முன், பத்துவரின் எவ் வாறாம்? ஒன்பது என்பதன்முன், நூறு வரின் எவ்வாறாம்? பத் தின் முன், இரண்டு வரின், எவ்வாறாம்? பத்தின் முன், இரண் டொழிந்த ஒன்று முதல் எட்டீறாகிய எண்கள்வரின், உம்மைத் தொகையி லெவ்வாறாம்? பத்தின்முன் ஆயிரம் வரின், பண்புத்

தொகையி லெவ்வாறாம்? ஒன்று முதல் எட்டீறாகிய எண்களின் முன் பத்துவரின் எவ்வாறாம்? ஒருபது முதல் எண்பது ஈறாகிய எண்களின்முன், ஒன்று முதல் ஒன்பதெண்ணும் வந்தால் எவ்வாறாம்? ஒன்பதொழிந்த, ஒன்று முதல் பத்து ஈறாகிய ஒன்பது எண்களையும் இரட்டித்துச்சொல்லுமிடத்து எவ்வாறாம்? பிறபெயர்கள் இரட்டிக்கும்போது எவ்வாறாம்?

84. 'பூ' என்னும் பெயர்முன் வல்லினம்வரின் எவ்வாறாம்? 85. 'ஏ', 'ஓ' என்னும் இடைச்சொற்களின்முன் வல்லினம்வரின் எவ்வாறாம்? 86. ஐகாரவீற்றுப் பெயர்களின்முன் வேற்றுமையில் நாற்கணத்துள் ஏற்பனவரின் எவ்வாறாம்? 87. 'பனை' முன் கொடிவரின் எவ்வாறாம்? 'பனை' முன் வல்லினம்வரின் எவ்வாறாம்? 'பனை' முன் திரள் வரின் எவ்வாறாம்? 'பனை' முன் அட்டு வரின் எவ்வாறாம்?

உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

2. மெய்யீற்றுப்புணரியல்.

[மெய்யெழுத்தை இறுதியிலுடைய மொழிகளோடு, உயிர் முதல் மொழியும், மெய்ம்முதல்மொழியும் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.]

[மெய்யீற்றின்முன் உயிர்: பொதுவிதி.]

88. உடல்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

உரை:—உடல் மேல்-(நிலைமொழியீற்றிலுள்ள) மெய்யெழுத்தின்மேல், உயிர்-(வருமொழிமுதலிலுள்ள) உயிரெழுத்து, வந்து ஒன்றுவது-வந்து கூடுவது,—இயல்பே-இயல்புபுணர்ச்சியேயாம்.

(உ-ம்.) மரம் + உயர்ந்தது = மரமுயர்ந்தது —அல்வழி.
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்—வேற்றுமை.

[தனிக்குறில்முன் மெய்க்குச் சிறப்புவிதி.]

'89. தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

உரை:—தனி குறில் முன்-தனித்த குற்றெழுத்தின் முன் நின்ற, ஒற்று-மெய்,—உயிர்வரின்-(வருமொழிமுதலில்) உயிர் வந்தால், இரட்டும்-இரட்டித்து நிற்கும்.

(உ-ம்.) கல் + உயர்ந்தது = கல்லுயர்ந்தது — அல்வழி.
பொன் + ஓலை = பொன்னோலை — வேற்றுமை.

[மெய்யீற்றின்முன் மெய்.]

90. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

உரை:—தன் ஒழி-தன்னை [யகரத்தை] ஒழிந்த, மெய் முன்-(மொழிக்கு இறுதியில்வரும் ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து) மெய்களின்முன், ய வரின்-(வருமொழிமுதலில்) யகரம் வந்தால், இகரம் துன்னும்-இகரம் (இடையில்வந்து) சேரும், என்று—, துணிநரும்-(அருமையாகக்) கொள்பவர்களும், உளர்-(சிலர்) உண்டு.

(உ-ம்.) வேள் + யாவன் = வேளியாவன் — அல்வழி.
மண் + யாப்பு = மண்ணியாப்பு — வேற்றுமை.

'துணிநரும் உளர்' என்றதனால் வேள்யாவன், மண்யாது எனப் பொதுவிதி*பெறும் என்பார் பலருளரென்க.

ணகர னகர ஈறு.

91. ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

உரை:—(1) ண ன-ணகர னகரங்கள், வேற்றுமைக்கு-வேற்றுமைப்புணர்ச்சியில், வல்லினம் வர-(வருமொழிமுதலில்) வல்லினம் வந்தால், ட ற உம்-(முறையே) டகரமாகவும் றகரமாகவும், (2) பிறவரின்-மெல்லினமும் இடையினமும் வந்தால், இயல்பும்-இயல்பாகவும் ஆகும்—; (3) அல்வழிக்கு-அல்வழிப்புணர்ச்சியில், அனைத்து மெய் வரினும்-மூன்றினமெய்களும் வந்தாலும், இயல்பு ஆகும்-இயல்பேயாகும்.

(உதாரணம்.)

1. கண் + களிறு = கட்களிறு. } வேற்றுமையில் ண ன
பொன் + தகடு = பொற்றகடு. } வல்லினம் வரட் 'ட ற' ஆயின.

* 62-ஆஞ் சூத்திரம்.

2. மண் + மாட்சி = மண்மாட்சி.
மண் + வண்மை = மண்வண்மை.
பொன் + மாட்சி = பொன்மாட்சி.
பொன் + வன்மை = பொன்வன்மை. } வேற்றுமையில் பிற வர இயல்பாயின.

3. மண் + பெரிது = மண்பெரிது.
மண் + மெலிது = மண்மெலிது.
மண் + யாது = மண்யாது.
பொன் + பெரிது = பொன்பெரிது.
பொன் + மெலிது = பொன்மெலிது.
பொன் + யாது = பொன்யாது. } அல்வழியில் அனைத்து மெய்யும்வர இயல்பாயின.

ணகரத்துக்குச் சொல்லப்படும் இலக்கணம், னகரத்துக்கும் அமைதலால், அதனையுங்கூட்டி இங்குக்கூறினார்; இது ஒப்பின் முடித்தல் என்னும் உத்தி.

[ணகர னகர ஈற்றின் கேடு.]

92. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

உரை:—குறில்-(தனிக்) குற்றெழுத்தை, அணைவு இல்லா-சார்தலில்லாத (ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த), ண னக்கள்-ணகர னகரமெய்களானவை,—வந்த நகரம்-(வருமொழிமுதலாக) வந்த நகரமானது,—திரிந்த உழி-திரிந்தவிடத்து, கேடு-(தாம்) கெடுதலை, நண்ணும்-பொருந்தும்.

நகரம் திரிதலை 102-ஆஞ் சூத்திரத்திற் காண்க.

(உ-ம்.) தூண் + நன்று = தூணன்று.
பசுமண் + நன்று = பசுமணன்று.
அரசன் + நல்லன் = அரசனல்லன்.
செம்பொன் + நன்று = செம்பொனன்று. } அல்வழி.

தூண் + நன்மை = தூணன்மை.
பசுமண் + நன்மை = பசுமணன்மை.
அரசன் + நன்மை = அரசனன்மை.
செம்பொன் + நன்மை = செம்பொனன்மை. } வேற்றுமை

['தன்', 'என்', 'நின்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

93. தன்னென் னென்பவற் றீற்றனவ் வன்மையோடு
உறழு நின்னீ றியல்பா முறவே.

உரை:—(1) தன் என் என்பவற்று-('தான்', 'யான்' என்பவற்றின் விகாரமாகிய) 'தன்', 'என்' என்னும் மொழிகளினுடைய, ஈறு ன-இறுதியிலுள்ள னகரமெய்யானது, வன்மையோடு உறழும்-(வல்லினம் வந்தால்) தனக்கு இனவல்லெழுத்தாகிய றகரமாகத் திரிந்தும் இயல்பாகியும் விகற்பிக்கும்;—(2) நின் ஈறு-('நீ' யென்பதன் விகாரமாகிய) 'நின்' என்னும் மொழியினது இறுதியிலுள்ள னகர மெய்யானது, இயல்பு ஆம்-(வல்லினம்வந்தால்) இயல்பாகும்.

(உ-ம்.) 1. தன் + பகை = தன்பகை, தற்பகை. } னகரம்
என் + பகை = என்பகை, எற்பகை. } உறழ்ந்தது.
2. நின் + பகை = நின்பகை—னகரம் இயல்பாயிற்று.

இவ்விதி வேற்றுமைப்புணர்ச்சிக்கே யென்க. 'நின்' என்பது விகாரமொழியாதலால் 'பொதுப்பெயர்' என்ற 63-ஆஞ் சூத்திரத்து அடங்காதாயிற்று.

'உறவே' என்ற மிகையால்—(1) மான் + குளம்பு = மான்குளம்பு, வான் + சிறப்பு = வான்சிறப்பு, அழன்கை, கான்கோழி, அலவன்கால், கலுழன்சிறை, என வேற்றுமையில் சிறப்புவிதி சொல்லப்பெறாதவை இயல்பாதலும், (2) வரின் + கொள்ளும் = வரிற் கொள்ளும் என அல்வழியில் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாமல் திரிதலும், (3) உன் + பகை = உன்பகை, என, 'நீ' என்பதன் திரிபாகிய 'உன்' என்பதன் னகரம் வலி வர இயல்பாதலும், பிறவுங்கொள்க.

மகரவீறு: பொதுவிதி.

94. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

உரை:—(1) ம ஈறு-மகரத்தை யிறுதியிலுடைய மொழிகள், (நாற்கணமும் வந்து புணரும்போது), ஒற்று அழிந்து-(இறுதியிலுள்ள) மகரமெய் கெட்டு, உயிர் ஈறு ஒப்பவும்-உயிரீற்றுச்சொற்கள் போலப் புணர்வனவும்,—(2) வன்மைக்கு இனம் ஆ(க) திரிபவும்-(வல்லினம் வந்தால் கெடாமல்) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், ஆகும்—.

உயிரீறொத்தலாவது—உயிர்வந்தால் *உடம்படுமெய் பெறுதலும், வல்லினம் வந்தால் †மிகுதலும், மெல்லினமும் இடையினமும் வந்தால் ‡இயல்பாகப் புணர்தலுமாம்.

*66-ஆஞ் சூத்திரம். †69-ஆஞ் சூத்திரம். ‡62-ஆஞ் சூத்திரம்.

(உ-ம்.) அல்வழி.	வேற்றுமை.
1. வட்டம்+ஆழி =வட்டவாழி.	மரம்+அடி =மரவடி.
வட்டம்+கல் =வட்டக்கல்.	மரம்+கிளை =மரக்கிளை.
வட்டம்+நேமி =வட்டநேமி.	மரம்+நார் =மரநார்.
வட்டம்+வடிவம்=வட்டவடிவம்.	மரம்+வேர்=மரவேர்.

[இருவழியிலும் மவ்வீறு கெட, உயிரீறு ஒத்தது.]

2. மரம்+சிறிது—மரஞ்சிறிது, நம்+கை=நங்கை. இனமாயிற்று.

'இனமாத்திரியும்' என்றமையின், நாம்+பெரியம்=நாம்பெரியம், மரம்+பெரிது=மரம்பெரிது எனப் பகரம் வருமிடத்து, மகரம், பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும் என்க.

['நும்' முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி.]

95. நும் தம்,
எம்நம் மீறு மவ்வரு ஞநவே.

உரை:—நும் தம் எம் நம்-'நும்' முதலிய நான்கு விகாரமொழிகளுக்கும், ஈறு ஆம்-இறுதியாகிய, ம-மகரமெய்யானது,—வரும் ஞ ந-(வருமொழிமுதலில்) வருகிற ஞகர நகரங்களாகத் திரியும்.

(உ-ம்.)	
நும்+ஞாண்=நுஞ்ஞாண்.	நும்+நூல்=நுந்நூல்.
தம்+ஞாண்=தஞ்ஞாண்.	தம்+நூல்=தந்நூல்.
எம்+ஞாண்=எஞ்ஞாண்.	எம்+நூல்=எந்நூல்.
நம்+ஞாண்=நஞ்ஞாண்.	நம்+நூல்=நந்நூல்.

[இவை முறையே, நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் விகாரங்கள்; வேற்றுமை; 108-ஆஞ் சூத்திரத்துங் காண்க. ஞ ந வரின் அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின், நும்+மணி=நும்மணி என இயல்பாம் என்க.

['அகம்' என்பதற்குச் சிறப்புவிதி.

96. அகமுனர்ச் செவிகை வரி னிடை யனகெடும்.

உரை:—அகம் முனர்-'அகம்' என்னும் இடப்பெயரின்முன்; செவி கை வரின்-செவி கை (என்னும் சினைப்பெயர்கள்) வந்தால்,—இடையன-(நிலைமொழியின்) நடுவில் நின்ற ககரமெய்யும் (அதன் மேலேறிய) அகரவுயிரும், கெடும்-அழியும்.

(உ-ம்.) அகம்+செவி=அஞ்செவி; அகம்+கை=அங்கை.

'கெட்டேவரும்' என்றமையால் அகம்+செவி=அகஞ்செவி, அகம்+கை=அகங்கை எனவும் வரும். [ககர சகர முறைப்படி

'கை செவி' என்னாமல், 'செவி கை,' என்றதனால், அகம்+சிறை= அஞ்சிறை, எனச் சிறுபான்மை பிற சொல்லும் வரும் என்க.]

யகர ரகர ழகர வீறு.

97. யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்.

உரை:—(1) ய ர ழ முனனர்-யகர ரகர ழகர மெய்களின்முன், க ச த ப-ககர சகர தகர பகரங்கள் (வந்தால்)—,அல்வழி-அல்வழியில், இயல்பு-இயல்பாதலும், மிகலும்-மிகுதலும்; (2) வேற்றுமை-வேற்றுமையில், மிகலும்-மிகுதலும், இனத்தோடு உறழ்தலும்-வல்லினமாவது மெல்லினமாவது மிகுந்து விகற்பித்தலும், விதி ஆகும்-இலக்கணமாகும்.

குறிப்பு:— அல்வழியில் இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத் தொகை வினைத்தொகை ரகரவீற்றுவினையெச்சங்களிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகை யகரவீற்றுவினையெச்சங்களிலும் கொள்ளப்படும்.

(உதாரணம்.)

1. வேய்கடிது, வேர்சிறிது, யாழ்பெரிது.
பேய்பூதம், நீர்கனல், இகழ்புகழ்.
செய்கடன், வளர்பிறை, வீழ்புனல்.
உண்ணியர் போவான். ... ... } அல்வழியில் இயல்பாயின.

மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், யாழ்க்கருவி.
வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம்.
போய்க்கொண்டான். ... ... } அல்வழியில் மிகுந்தன.

2. நாய்+கால் =நாய்க்கால்.
தேர்+தட்டு=தேர்த்தட்டு.
ஊழ்+பயன்=ஊழ்ப்பயன். } வேற்றுமையில் வலி மிக்கது.

வேய்+குழல் =வேய்க்குழல், வேய்ங்குழல்.
ஆர் +கோடு=ஆர்க்கோடு, ஆர்ங்கோடு.
குமிழ்+கோடு=குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு. } வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

'மேல்' என்ற மிகையால் (1) வாய்+புகுவது=வாய்புகுவது, என வேற்றுமையில் இயல்பாதலும் (2) பாழ்+கிணறு=பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு என அல்வழியில் இனத்தோடு உறழ்தலும், (3) வேய்+யாது=வேயாது, வேய்+யாப்பு=வேயாப்பு, எனத்

தனிக்குறிலைச் சாராத யகரவீறு, யகரம்வர இருவழியிலுங்கெடுதலும், இன்னும் அடங்காதவைகளிருப்பின் அவையுங் கொள்க.

லகர ளகர ஈறு: பொதுவிதி.

98. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

உரை:—(1) ல ள-(மொழி யிறுதியிலுள்ள) லகர ளகரமெய்கள்,—வலி வரின்-வல்லினம் வந்தால், வேற்றுமையில்—, ற டவும்-(முறையே) றகரமெய் டகரமெய்யாகத்திரிதலும்,—(2) அல்வழி-அல்வழியில், அவற்றோடு உறழ்வும்-அந்த றகர டகர மெய்களாகத் திரிந்தும் திரியாமலும் விகற்பித்தலும், ஆம்-ஆகும்;—(3) இருவழி யானும்-வேற்றுமை அல்வழி யிரண்டிலும், மெலி மேவின்-மெல்லினம் வந்தால், ன ண வும்-(முறையே) னகர ணகரமெய்களாகத் திரிதலும்,—(4) இடை வரின்-இடையினம் வந்தால், இயல்பும்-இயல்பாதலும், ஆகும்—; என்ப-என்று சொல்லுவர் (புலவர்).

[‘இருவழியான்’—இது உருபுமயக்கம்.]

(உதாரணம்.)

1 கல் + குறை = கற்குறை.
முள் + குறை = முட்குறை. } வேற்றுமையில் வலிவர றகர டகரங்களாகத் திரிந்தன.

2. கல் + குறிது = கல்குறிது, கற்குறிது.
முள் + குறிது = முள்குறிது, முட்குறிது. } அல்வழியில் வலி வர உறழ்ந்து வந்தன.

3. நெல் + மலிவு = நென்மலிவு.
முள் + முனை = முண்முனை. } வேற்றுமை.
நெல் + மலிந்தது = நென்மலிந்தது.
முள் + மாண்டது = முண்மாண்டது. } அல்வழி
} இருவழியிலும் மெல்லினம் வர னகர ணகரங்களாகத் திரிந்தன.

4. நெல் + வளம் = நெல்வளம்.
முள் + வன்மை = முள்வன்மை. } வேற்றுமை.
நெல் + விளைந்தது = நெல்விளைந்தது.
முள் + வலிது = முள்வலிது. } அல்வழி
} இருவழியிலுமிடையினம் வர இயல்பாயின.

'அல்வழியவற்றோடுறழ்வும்' என்றதனால், இவற்றோடு மயங்காத் தகரம் வரின், ஏற்புழிக்கோடலால், செல்+தீமைத்தது=செற்றமைத்தது, முள்+தீது=முட்டீது, எனத்திரிந்தே வரும் என்க.

[சிறப்புவிதி.]

99. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

உரை:—குறில் வழி-தனிக்குறிலின் பின் நின்ற, ல ள-லகர ளகர மெய்கள்,—அல்வழியான்-அல்வழிப்புணர்ச்சியில், த அணையின்-தகரம் (வருமொழிமுதலில்) வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம்-(றகர டகரமெய்களாகத் திரிதலேயன்றி) ஆய்தமாகத் திரிதலையும் பெறும். [இது, ஆய்தக்குறுக்கம். சூ. 23.]

(உ-ம்.) கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது.

[லகர ளகரவீற்றின் கேடு முதலியன.]

100. குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

உரை:—(1) குறில் செறியா-தனிக்குறிலைச் சாராத, ல ள-லகர ளகரமெய்கள்,—அல்வழி - அல்வழிப்புணர்ச்சியில், வந்த - (வருமொழிமுதலாக) வந்த, தகரம்—, திரிந்தபின்-(*றகர டகரங்களாகத்) திரிந்த இடத்து, கேடும்-(தாம்) கெடுதலும்;—(2) ஈர் இடத்தும்-அல்வழி வேற்றுமை யிரண்டிலும், வரு ந-(வருமொழிமுதலில்) வருகின்ற நகரமானது, திரிந்தபின்-*(னகர ணகரங்களாகத்) திரிந்தவிடத்து, மாய்வும்-(தாம்) கெடுதலும்;—(3) வலிவரின்-(வருமொழிமுதலில்) வல்லெழுத்து வந்தால், இயல்பும் திரிபும்-(அல்வழிப்புணர்ச்சியில் உறழாமல்) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைப்புணர்ச்சியில்) திரியாமல் இயல்பாதலும், ஆவன-பொருந்துவன, உள-உண்டு.

(உதாரணம்.)

தோன்றல்+தீயன்=தோன்றறீயன்.	அல்வழியில்வந்த தகரம்
வேள் +தீயன்=வேடீயன்.	திரிய ல ள கெட்டன.

* 102-ஆஞ் சூத்திரம்.

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன். } அல்வழியில் வந்த நகரந்
வேள் + நல்லன் = வேணல்லன். } திரிய ல ள கெட்டன.

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை. } வேற்றுமையில்வந்தநக
வேள் + நன்மை = வேணன்மை. } ரந்திரிய ல ளகெட்டன

காலகடிது, மாங்கள்கடிய -எழுவாய்த்தொடர்
கால்கை, பொருள்புகழ் -உம்மைத்தொகை.
தோன்றல்கூறாய், மக்காள்சொல்லீர் -விளித்தொடர்.
உண்பல்சிறியேன், கேள்சாத்தா -வினைமுற்றுத்தொடர்.
கால்சுடர், அருள்குரு -வினைத்தொகை.
} இயல்பு

வேற்படை, வாட்படை—பண்புத்தொகை.
வேற்கண், வாட்கண் —உவமைத்தொகை.
வந்தாற்கொள்ளும் —வினையெச்சத்தொடர்.
} அல்வழியில் திரிந்தது.

கால்குதித்து, வாள்போழ்ந்து—வேற்றுமையில் இயல்பாயின.

'பிற' என்றமிகையால், (1) தோன்றல் + தீமை = தோன்றதீமை, வேள் + தீமை = வேடீமை, எனக் குறில்செறியா ல ள வேற்றுமையிலும் தகரம் திரியுமிடத்துக் கெடுதலும், (2) கால் + துணை = காற்றுணை, தாள் + துணை = தாட்டுணை, என் அல்வழியிலுங் கெடாமையும், (3) வில் + படை = விற்படை, விற்புருவம் எனக் குறில் செறிந்த லகரம் அல்வழியில் உறழாமல் திரிதலும், (4) கொல் + களிறு = கொல்களிறு, கொள்பொருள், நில்கொற்றா, கொள்பூதா என அல்வழியில் உறழாமல் இயல்பாதலும் (5) அகல் + பரப்பு = அகன்பரப்பு, விழல் + காடு = விழன்காடு என, இருவழியிலும் லகரம் வல்லினம் வர னகரமாகத் திரிதலும், பிறவுங்கொள்க.

வகர வீறு.

101. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

உரை:— சுட்டு வகரம்: (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பலவின்பாற்) சுட்டுப்பெயர்களின் இறுதியிலுள்ள வகரமெய்,— மூ இனம் உற-வல்லின மெல்லின இடையினங்கள் வர,— முறையே-முறையாக—(1) ஆய்தமும்—, (2) மென்மையும்-வரும் மெல்லினமும் (3) இயல்பும்—, ஆகும்—.

(உ-ம்.) 1. அவ் + கடிய = அஃகடிய —வலிவர ஆய்தமாயிற்று.
2. அவ் + ஞானம் = அஞ்ஞானம் —மெலிவரமெலியாயிற்று.

3. அவ் + யானை = அவ்யானை — இடைவரஇயல்பாயிற்று.

[‘இவ் உவ்’ என்பவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.]

இவ்விதி அல்வழிக்கே என்க; மேல் சூ. 110-ல் வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறும் என்று கூறுவர்.

வருமொழித் தகர நகரத் திரிபு.

102. னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

உரை:— ன ல முன்-னகர லகர மெய்களின் முன், த நக்கள்-(வருமொழி முதலில் வருகின்ற) தகர நகரங்கள், ற ன வும்-(முறையே) றகர னகரங்களாகவும்; ண ள முன்-ணகர ளகர மெய்களின் முன், (தகர நகரங்கள்), ட ண வும்-(முறையே) டகர ணகரங்களாகவும், ஆகும்—; ஆயுங்கால்-ஆராயுமிடத்து.

குறிப்பு:— ன ல முன்வருகிற ‘தகரம்’ றகரமாகும்.
ன ல முன்வருகிற ‘நகரம்’ னகரமாகும்.
ண ள முன்வருகிற ‘தகரம்’ டகரமாகும்.
ண ள முன்வருகிற ‘நகரம்’ ணகரமாகும்.

(உதாரணம்.)

பொன் + தீது = பொன்றீது — அல்வழி.	னகரமுன் தகரம்
பொன் + தீமை = பொன்றீமை — வேற்றுமை.	றகரமாயிற்று.
கல் + தீது = கற்றீது — அல்வழி.	லகரமுன் தகரம்
கல் + தீமை = கற்றீமை — வேற்றுமை.	றகரமாயிற்று.
பொன் + நன்று = பொன்னன்று — அல்வழி.	னகரமுன் ‘ந’
பொன் + நன்மை = பொன்னன்மை — வேற்றுமை.	னகரமாயிற்று
கல் + நன்று = கன்னன்று — அல்வழி.	லகரமுன் நகரம்
கல் + நன்மை = கன்னன்மை — வேற்றுமை.	னகரமாயிற்று.
மண் + தீது = மட்டீது — அல்வழி.	ணகரமுன் தகரம்
மண் + தீமை = மட்டீமை — வேற்றுமை.	டகரமாயிற்று.
முள் + தீது = முட்டீது — அல்வழி.	ளகரமுன் தகரம்
முள் + தீமை = முட்டீமை — வேற்றுமை.	டகரமாயிற்று.
மண் + நன்று = மண்ணன்று — அல்வழி.	ணகரமுன் நகரம்
மண் + நன்மை = மண்ணன்மை — வேற்றுமை.	ணகரமாயிற்று.
முள் + நன்று = முண்ணன்று — அல்வழி.	ளகரமுன் நகரம்
முள் + நன்மை = முண்ணன்மை — வேற்றுமை.	ணகரமாயிற்று.

'ஆயுங்காலே' என்றதனால், அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தாலல்லாமல், மயக்கவிதியில்லாமையால் இப்படிப் புணரும் முதல் ஈறு இரண்டனுள், ஒன்றாவது இரண்டுமாவது விகாரப் பட்டு மயங்குதற்குரியனவாகி நின்று புணருமென்பதும், மயக்க விதியுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வரும் என்பதும் பெறப்பட்டன.

புணரியல்களுக்குப் புறனடை.

103. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

உரை:— (1) இடை-இடைச்சொற்களுள்ளும், (2) உரி-உரிச் சொற்களுள்ளும் (3) வடசொலின்-வடசொற்களுள்ளும், இயம்பிய-(உயிரீற்றுப்புணரியல் மெய்யீற்றுப்புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்), சொல்லிய புணர்ச்சியிலக் கணங்கள், கொளாதவும்-பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும், (4) போலியும்-இலக்கணப்போலிமொழிகளும் (5) மரூஉம்-மரூஉ மொழிகளும், பொருந்திய ஆற்றிற்கு- (உலகவழக்குச் செய்யுள் வழக்குக்களில்) நடக்கும் முறைமைக்கு, இயைய-பொருந்தும்படி, புணர்த்தல்-கூட்டி முடித்தல்,— யாவர்க்கும்- (அறிவுடையோர்) எல்லாருக்கும், நெறி-முறைமையாம்.

(உதாரணம்.)

1. ஆன் + கன்று = ஆன்கன்று. வண்டின் + கால் = வண்டின்கால்.	வேற்றுமையில், சாரியை யிடைச்சொற்களின் ஈற்று 'னகரம்' இயல்பாயிற்று.
2. மழ + களிறு = மழகளிறு. தட + தோள் = தடந்தோள்.	உரிச்சொல்லீற்று உயிர்முன் வலிவர, இயல்பாயும், மெலி மிகுந்தும் வந்தன.
3. அளி + குலம் = அளிகுலம். ஆதி + பகவன் = ஆதிபகவன். பாத + கமலம் = பாதகமலம்.	வடசொல்லீற்று உயிர்முன் வலிவர, மிகாது இயல்பாயின.
4. இல் + முன் = முன்றில். பொது + இல் = பொதியில். வேட்கை + அவா = வேணவா.	இலக்கணப்போலி மொழிகள் முன்விதி பெறாமல், தமக் கேற்ற விகாரம் பெற்றன.

5. அருமருந்தன்ன = அருமந்த. குடக்குள்ளது = குடாது. சோழநாடு = சோணாடு. தஞ்சாவூர் = தஞ்சை. வடுகன்தந்தை = வடுகந்தை.	மரூஉ மொழிகள் முன்விதி பெறாமல், தமக்கேற்றபடி விகாரம்பெற்றன.

வடமொழிப்புணர்ச்சி.

வடமொழித்தொடர்கள், தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற்புணர்ச்சியையே பெறும்; வடநூலார் புணர்ச்சியைச் 'சந்தி' என்பர். அது-உயிரோடு உயிர் புணர்கையில், தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூன்றுவகைப்படும்.

தீர்க்கசந்தி: இடையில் நெடில் வருவது.

1. அ ஆ முன் அ ஆ வரின் இரண்டுங்கெட, 'ஆ' தோன்றும்; (உ-ம்.)

பத + அம்புஜம் = பதாம்புஜம்	சேநா + அதிபதி = சேநாதிபதி.
சிவ + ஆலயம் = சிவாலயம்.	சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

2. இ ஈ முன் இ ஈ வரின், இரண்டுங்கெட, 'ஈ' தோன்றும்; (உ-ம்.)

கவி + இந்திரன் = கவீந்திரன்.	மகீ + இந்திரன் = மகீந்திரன்.
கிரி + ஈசன் = கிரீசன்.	கௌரீ + ஈசன் = கௌரீசன்.

3. உ ஊ முன் உ ஊ வரின், இரண்டுங்கெட 'ஊ' தோன்றும்; (உ-ம்.)

குரு + உதயம் = குரூதயம்.	சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்
சிந்து + ஊர்மி = சிந்தூர்மி.	சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்

குணசந்தி: இடையில் 'ஏ' 'ஓ' வருவது.

1. அ ஆ முன் இ ஈ வரின், இரண்டுங்கெட 'ஏ' தோன்றும்; (உ-ம்.)

தேவ + இந்திரன் = தேவேந்திரன்.	தரா + இந்திரன் = தரேந்திரன்
தேவ + ஈசன் = தேவேசன்.	மகா + ஈசன் = மகேசன்.

2. அ ஆ முன் உ ஊ வரின், இரண்டுங்கெட, 'ஓ' தோன்றும்;

(உ-ம்.) சூர்ய + உதயம் = சூர்யோதயம்.
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்.
கங்கா + உத்பத்தி = கங்கோத்பத்தி.
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

விருத்திசந்தி: இடையில் 'ஐ' 'ஔ' வருவது.

1. அ ஆ முன் ஏ ஐ வரின், இரண்டுங்கெட, 'ஐ' தோன்றும்;

(உ-ம்.) லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன்.
சர்வ + ஐச்வர்யம் = சர்வைச்வர்யம்.

தேவதா + ஏகத்வம் = தேவதைகத்வம்.
மகா + ஐச்வர்யம் = மகைச்வர்யம்.

2. அ ஆ முன் ஓ ஔ வரின், இரண்டுங்கெட, ஔ தோன்றும்;

(உ-ம்.) வன + ஓஷதி = வனௌஷதி.
திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்.
மகா + ஓஷதி = மகௌஷதி.
மகா + ஔதார்யம் = மகௌதார்யம்.

[மெய்யீற்றுப்புணர்ச்சிவிதியை விரிக்கிற் பெருகும்.]

பரீக்ஷை வினாக்கள்:—88. மெய்யீற்றின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்? 89. தனிக்குறிலைச் சார்ந்துநின்ற மெய்முன் உயிர்வரின் எவ்வாறாம்? 90. யகரமல்லாத மற்றைய மெய்கள் முன் யகரம்வரின் எவ்வாறாம்? 91. ண ன முன் வேற்றுமையில் வன்கணம் வரின், எவ்வாறாம்? ண ன் முன் வேற்றுமையில் மென் கணமும் இடைக்கணமும் வரின் எவ்வாறாம்? ண ன முன் அல்வழியில் மூக்கணமும் வரின், எவ்வாறாம்? 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திறுதி னகரம் வன்கணம் வரின், எவ்வாறாம்? இதற்கு விதியெதனாற்கொள்ளப்படும்? 92. தனிக்குறிலைச் சாராது (நெடில் முதலியவற்றைச் சார்ந்து) நின்ற ணகர னகாம் எவ்வாறாம்? 93, 'தன்', 'என்' என்பவற்றின் னகரம் வலிவரின், எவ்வாறாம்? 'நின்'-இது இங்ஙனம் வாராதோ?' 'ஊறவே' என்றதனாற்கொள்ளப் படுவனயா? 94. மகரவீற்றின் முன் நாற்கணமும் வரின், எவ்வாறாம்? 'உயிரீறொத்தல்' என்பது என்ன? 95. மெல்லினம் வர மகரங்கெடாது முடிதல் எங்கு மில்லையோ? 96. 'அகம்' என்பதன் முன் 'செவி', 'கை' என்பனவரின் எவ்வாறாம்? 97. ய ர ழ வீற்றின் முன் வல்லினம் வரின், எவ்வாறாம்? 'மேல்' என்றதனால் கொள்ளப் படுவன எவை? 98. ல ள வீற்றின்முன் மூவின மெய்களும் வரின், எவ்வாறாம்? ல ள வீற்றின் முன், அவற்றோடு மயங்காத தகரம் வரின், அல்வழியில் எவ்வாறாம்? 99. ல ளக்கள் தகரம் வருமிடத்து ற டக்களாதலன்றி வேறு எவ்வாறு திரியும்? 100. ல ளக்கள் எவ்வெவ்விடத்துக் கெடும்? தனிக்குறிலைச் சாராத ல ளக்கள் அல்வழியிலே தகரம்வரிற், கெடுதலன்றித் திரிதல் எங்கும் பெறுவோ? தனிக்குறிலைச் சாராத ல ளக்கள் அல்வழியில் வல்லினம்வரின், உறழாது. இயல்பாதலும் திரிதலும் பெறுவோ? தனிக்குறிலைச் சாராத ல ளக்கள் வேற்றுமையின் வல்லினம்வரிற், திரியாது எங்கும் இயல்பாதலில்லையோ? தனிக்குறிலைச் சாராத ல ளக்கள் வேற்றுமையிலே தகரம்வரிற், திரிதலேயன்றிக் கெடுதல் யாண்டும்

பெறுவோ? 'பிற' என்றதனால் கொள்ளப்படுவன யா? 101. வகர வீற்றுச் சுட்டுப்பெயர் முன், அல்வழியில் மூவின மெய்களும் வரின் எவ்வாறும்? 102. னகர லகரங்களின் முன் தகரம்வரின், எவ்வாறும்? னகர லகரங்களின் முன், நகரம் வரின், எவ்வாறும்? ணகர ளகரங்களின் முன், தகரம்வரின், எவ்வாறும்? ணகர ளகரங்களின் முன் நகரம்வரின் எவ்வாறும்? 'ஆயுங்காலே' என்றதனாற் கொள்ளப்படுவனயா? 103. இதுவரையுங் கூறப்பெற்ற புணர்ச்சி விதிகளுள் வேறுபட்டுவருவனவும் உளவோ?

வடமொழிச் சந்தி எத்தனைவகைப்படும்? தீர்க்கசந்தி யென்று லென்ன? குணசந்தி யென்றுலென்ன? விருத்திசந்தி யென்று லென்ன?

மெய்யீற்றுப்புணரியல் முற்றிற்று.

3. உருபுபுணரியல்.

[உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமையுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைக் கூறும் இயல்.]

சாரியை.

104. பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

உரை:—பதம் முன்-பதத்தின்முன், விகுதியும்-விகுதியாவது, பதமும் - பதமாவது, உருபும் - உருபாவது, புணர்வழி - புணருமிடத்து, (அவற்றிற்கு இடையே), சாரியை ஒன்றும் பலவும்-ஒரு சாரியையாயினும் பல சாரியைகளாயினும்,— (1) வருதலும்—, (2) தவிர்தலும்-வாராதிருத்தலும், (3) விகற்பமும்-(ஒன்றுக்கே வருதலும் தவிர்தலுமாகிய) உறழ்ச்சியும், ஆகும்—.

(உதாரணம்.)

விகுதிப்புணர்ச்சி.	பதப்புணர்ச்சி.	உருபுபுணர்ச்சி.	
1. நடந்தனன்.	புளியங்காய்.	அவற்றை	— வருதல்.
2. நடந்தான்.	புளிக்கறி.	தன்னை	— தவிர்தல்.
3. நடந்தன. } நடந்த. }	நெல்லின்குப்பை. } நெற்குப்பை. }	ஆனை. } ஆவை. }	— விகற்பம்.

ஆவினுக்கு, மரத்தினுக்கு—சாரியைகள் பல வந்தன.

மாடத்துக்கு-மாடக்கு, நிலத்துக்கு-நிலக்கு, இவைபோல்வன சாரியை வேண்டுமிடத்து இல்லாமையால், தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரம் என அறிக.

[பொதுச் சாரியை]

105. அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

உரை:— அன் ...... ன- 'அன்' முதல் 'னகரமெய்[ன்]' ஈறுகச் சொல்லப்பட்ட பதினேழும், இன்ன பிறவும்-இவை போல்வன பிறவும்,— பொது சாரியை- (விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுச் சாரியை யாகும்.

(உதாரணம்.)

சாரியை.			சாரியை.		
அன்	-ஒன்றன்கூட்டம்	(பத)	நம்	-எல்லாநம்மையும்	(உரு)
ஆன்	-ஒருபாற்கு	(உரு)	நும்	-எல்லீர்நும்மையும்	(உரு)
இன்	-வண்டின்கால்	(பத)	ஏ	-ஒன்றேகால்	(பத)
அல்	-தொடையல்	(தனி)	அ	-நடந்தது	(விகு)
அற்று	-பலவற்றை	(உரு)	உ	-சாத்தனுக்கு	(உரு)
இற்று	-பதிற்றுப்பத்து	(பத)	ஐ	-ஒற்றை	(தனி)
அத்து	-மரத்திலே	(பத)	கு	-செய்குவாய்	(விகு)
அம்	-நெஞ்சம்	(தனி)	ன்	-கோன்	(தனி)
தம்	-எல்லார் தம்மையும்	(உரு)	'இன்னபிறவும்' என்றதனால்:—		

தன் -அவன்றனை	தாம்-அவர்தாம்	ஆ-இல்லாப்பொருள்
தான்-அவன்றான்	ஆம் -மண்ணாங்கட்டி	து-நடத்தற்கு

என வருகின்றவையுங் கொள்க.

இனி, எழுத்துக்களுக்கும் சாரியை* உண்டு; அவை பின் வருமாறு:—தனிமெய்கள்—அகரச்சாரியைபெறும்; (உ-ம்.) க - ங. உயிர்நெடில்கள்—காரச்சாரியைபெறும்; (உ-ம்.) ஆகாரம், ஈகாரம், ஊகாரம். ஐ ஔ—காரம், கான் என இரண்டு சாரியைபெறும்;

*'மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும், ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ், விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற.

(உ-ம்.) ஐகாரம், ஐகான்; ஔகாரம், ஔகான். உயிர்க்குறில் உயிர்மெய்க்குறில்—கரம், காரம், கான் என மூன்றுசாரியையும் பெறும்; (உ-ம்.) அகரம், அகாரம், அஃகான்; மகரம், மகாரம், மஃகான்.

['எல்லாம்', என்பதற்குச் சிறப்புவிதி.]

106. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றேல் நம்மிடை யடைந்தற் றாகும்.

உரை:—(1) எல்லாம் என்பது-'எல்லாம்' என்னும் (இரு திணைப்பொதுப்)பெயர், இழி திணை ஆயின்-அஃறிணையில் வரும் போது, (அதனோடு ஆறு உருபுகளும் புணர்ந்தால்), அற்றோடு-(இடையில்)அற்றுச் சாரியையும், உருபின்மேல் உம் உறும்-உருபின் மேல் முற்றும்மையையும் பெறும்;— (2) அன்றேல்-அன்றாயின், (உயர்திணையில் வரும்போது), இடை-இடையிலே, நம் அடைந்து-'நம்' என்னும் சாரியை பெற்று, அற்று ஆகும்-அவ்வாறாகும். [உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.]

(உ-ம்.) 1. எல்லாம்+ஐ=எல்லாவற்றையும்—அஃறிணை.
2. எல்லாம்+ஐ=எல்லாநம்மையும்—உயர்திணை.

[எல்லாநம்மையும்-எல்லாரையும் என்பது பொருள்; படர்க்கை.]

இனி, இரட்டுறமொழிதலால், 'இழிதிணையாய் இன் அற்றோடு' எனப்பிரித்து, எல்லாவற்றினையும் என, 'அற்று', 'இன்' என்னும் இரண்டு சாரியை வருதலுங்கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

['எல்லாரும்', 'எல்லீரும்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

107. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

உரை:—எல்லாரும் எல்லீரும் என்பவற்று-(ஆறு உருபும் புணருமிடத்து) எல்லாரும் எல்லீரும் என்கிற இருபெயர்களினுடைய, உம்மை-(இறுதியிலுள்ள) முற்றும்மைகளை, தள்ளி-நீக்கி,—நிரலே-முறையே, தம்-'தம்' என்னும் சாரியையும், நும்-'நும்' என்னும் சாரியையும், சார-(அவையிருந்த இடங்களிலே) பொருந்த,—உம்-(அவற்றினாலே நீக்கப்பட்ட) முற்றும்மைகள், உருபின் பின்னர்-உருபுகளின் பின்னே, புல்லும்-வந்து பொருந்தும்.

(உ-ம்.) எல்லாரும்+ஐ=எல்லார்தம்மையும்.
எல்லீரும் +ஐ=எல்லீர்நும்மையும்.
[எல்லாரையும், எல்லீரையும் எனச்சாரியை பெறாமலும் வரும்.]

['தான்' முதலிய பெயர்களுக்குச் சிறப்புவிதி.]

108. *தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்*
நீ நீர் என் எம் நின் நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

உரை:—(1) (உருபுகள் புணருமிடத்து) தான் தாம் நாம்-இம் மூன்று பெயர்களும், முதல் குறுகும்-முதல் நெடில்குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; (2) யான் யாம் நீ நீர்-இந்நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம்-(முறையே) என் எம் நின் நும் எனவரும்; (3) குவ்வின்-(இவ்வேழு பெயர்களோடும்) 'கு' உருபு புணருமிடத்து, அ வரும்-(நடுவில்) அகரச்சாரியை வரும்; (4) நான்கு-நான்காம்வேற்றுமையருபு வந்து புணரும்போது அகரச் சாரியை உயிர்வந்தாலும், ஆறு-ஆறாம்வேற்றுமை உருபுகளின் முதல் உயிர்கள் வந்தாலும், இரட்டல-(அவ்வேழு விகாரமொழிகளிலும் இறுதியாகிய தனிக்குறில் முன்னொற்றுக்கள்) இரட்டாவாம்.

(உதாரணம்.)

1. தான்+ஐ=தன்னை
தாம் +ஐ=தம்மை
நாம் +ஐ=நம்மை } குறுகின
மற்றஉருபுகளோடுங்கூட்டுக.

2. யான்+ஐ=என்னை
யாம் +ஐ=எம்மை
நீ +ஐ=நின்னை
நீர் +ஐ=நும்மை } என் எம் நின் நும் எனத் திரிந்தன.

3. தான்+கு=தன்+அ+கு=தனக்கு—'கு' வர, அகரச்சாரியை [பெற்றது.

4. தான்+கு =தன்+அ+கு=தனக்கு
தான்+அது=தன்+அது =தனது
தான்+ஆது=தன்+ஆது =தனாது
தான்+அ =தன்+அ =தன } நான்காம் வேற்றுமையில் அகரச்சாரியை பெறுமிடத்தும், ஆறாம்வேற்றுமையுருபு உயிர்கள் புணருமிடத்தும், தனிக்குறில்முன் ஒற்று இரட்டாதாயிற்று.

குறிப்பு:— 'தன்னுடைய' என்பதில், 'உடைய' என்பது ஆறாம்வேற்றுமைக்குச் சொல்லுருபாதலின், அது புணரும்போது தனிக்குறில்முன்னொற்றிரட்டும் என்க.

'பிற' என்றதனால் 'நீ' என்பது 'உன்' எனவும் 'நீர்' என்பது 'உம்' எனவும் திரிந்து வருதல் கொள்க. 'நுன்' எனவழங்குவது திசைச்சொல்.

['ஆ', 'மா', 'கோ' என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி.]

109. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

உரை:—ஆ-'ஆ' என்னும் பசுவின் பெயரும், மா-'மா' என்னும் மிருகத்தின் பொதுப்பெயரும், கோ-'கோ' என்னும் தலைவனது பெயரும்,— ன அணையவும்- (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும், பெறும்—.

'அணையவும் பெறும்' என்றதனால், அணையாமலிருக்கவும் பெறும் என்றதாயிற்று; எனவே, விகற்பித்துவரும் எனக்கொள்க.

(உதாரணம்.)

ஆ +ஐ=ஆனை, ஆவை.
மா +ஐ=மானை, மாவை.
கோ+ஐ=கோனை, கோவை.
} னகரச்சாரியை பெற்றும், பெறாதும், விகற்பித்தன. [மற்றை உருபுகளோடுங் கூட்டுக.]

'னவ்வணையவும்' என்றதனால் (1) 'கு' உருபு புணரும்பொழுது 'ஆனுக்கு' என உகரச்சாரியையும் உடன்பெறுதலும் (2) 'ஆவுக்கு' என உகரச்சாரியை ஒன்றேபெறுதலும், (3) 'ஆவினுக்கு' என 'இன்' சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், (4) மற்றை உருபுகள் புணரும்பொழுது 'ஆவினை', 'ஆவினால்' என 'இன்' சாரியை ஒன்றேபெறுதலும் கொள்க. ['மா', 'கோ' என்பனவும் இவ்வாறே.]

இனி, 'இரட்டுறமொழிதலால், 'ஆமா' என ஒருசொல்லாய்க் காட்டுப்பசுவை உணர்த்தி நின்ற இடத்தும், 'ஆமானை', 'ஆமாவை', 'ஆமானுக்கு', 'ஆமாவுக்கு', 'ஆமாவினுக்கு', 'ஆமாவினை' என இவ்விதி பெறுதலுங்கொள்க.

'அணையும்' என நிறுத்தாமல், 'அணையவும்பெறும்' என்றதனால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனிமொழியிலும் னகரச்சாரியை பெறும் என்க.

[வகரவீற்றுச் சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி.]

110. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

உரை:—வ இறு சுட்டிற்கு-(அஃறிணைப் பலவின்பாலாகிய 'அவ்' 'இவ்' 'உவ்' என்னும்) வகரமெய்யீற்று மூன்று சுட்டுப்

பெயர்களுக்கும், அற்று உறல்- (உருபுகள் புணருமிடத்து) அற்று என்னும் சாரியை பொருந்துதல், வழி-முறைமையாம்.

(உ-ம்.) அவ் + ஐ = அவற்றை.
இவ் + ஐ = இவற்றை.
உவ் + ஐ = உவற்றை.
} என அற்றுச்சாரியை வேண்டியே வந்தன. [மற்றை வேற்றுமை உருபுகளோடுங் கூட்டுக]

'வழியே' என்ற மிகையினால், (1) அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றுச் சாரியையோடு இன் சாரியைவருதலும், (2) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டாமையும், (3) எவற்றை, யாவற்றை என வினாப்பெயரும் இவ்வாறு நிற்றலுங் கொள்க.

[அத்துச்சாரியை முதல் கெடுதல்.]

111. அத்தின் அகரம் அகரமுனை யில்லை.

உரை:—அத்தின்-அத்துச்சாரியையின், (முதலிலுள்ள), அகரம்-அகர உயிரானது,— அகரம் முனை-(இயல்பினாலும் விதியினாலும் நிலைமொழியீற்றில் நின்ற) அகர உயிரின் முன் (வந்தால்), இல்லை-கெடும்.

(உ-ம்.) மக + அத்து + ஐ = மகத்தை, மகத்துக்கை-இயல்புஉயிரீறு
மா + அத்து + ஐ = மாத்தை, மாத்துக்குறை-விதிஉயிரீறு.
[இது தொல்காப்பியச் சூத்திரம்.]

[இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சிக்குச் சிறப்புவிதி.]

112. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

உரை:—ஐ உருபு-இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி,—இயல்பின் விகாரமும், விகாரத்து இயல்பும்-(பொது விதிப்படி முடிதலேயன்றி அப்படி விதித்த) இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும்,—உயர்திணை இடத்து-உயர்திணைப் பெயரிடத்து, விரிந்தும்-உருபு வெளிப்பட்டும், தொக்கும்-உருபு மறைந்தும், விரவுப்பெயரின்-பொதுப்பெயரிடத்து, விரிந்தும்-உருபு வெளிப்பட்டும், நின்றும்-உருபு மறைந்தும், அன்ன பிறவும்-அவை போல்வன வேறுபாடுகளும், ஆகும்-ஆகி வரும்.

(உதாரணம்.)

நின் + புறங்காப்ப = 'நிற்புறங்காப்ப'— ['நின்னீறு இயல்பாம்' என இயல்பாகவேண்டுமிடத்து விகாரமாயிற்று.]

மண் சுமந்தான், பொன் கொணர்ந்தான்—['ண ன வல்லினம் வரட் டறவும்' என விகாரமாகவேண்டு மிடத்து இயல்பாயிற்று.]

நம்பியைக்கொணர்ந்தான்-[உயர்திணையிடத்து விரிந்தது.]

நான்முகற்றொழுது—[உயர்திணையிடத்துத் தொக்கது.]

கொற்றனைக்கொணர்ந்தான்-[பொதுப்பெயரிடத்து விரிந்தது.]

ஆண்பெற்றாள்—[பொதுப்பெயரிடத்துத் தொக்கது.]

'அன்னபிறவும்' என்றதனால், தன் + கொண்டான் = தற்கொண்டான், என உறழவேண்டுமிடத்துத் திரிந்தே வருதலுங் கொள்க. இனி, வேற்றுமைக்கு என விதித்த பொதுவிதியோடு பெரும்பான்மையொத்து, வரகு + தந்தான் = வரகுதந்தான், என இயல்பில் இயல்பாகியும், சுக்கு + தின்றான் = சுக்குத்தின்றான், பலா + குறைத்தான் = பலாக்குறைத்தான் என விகாரத்தில் விகாரமாகியும் வரும் என்க.

பரீக்ஷை வினாக்கள்:— 104. சாரியைகள் எவ்வெவற்றிற்கு வேண்டப்படும்? சாரியைகள் விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபுபுணர்ச்சி-என்னும் மூன்றுக்கும் இன்றியமையாதனவோ? ஒரு புணர்ச்சிக்குச் சாரியை ஒன்றே வருமோ பலவருதலுமுண்டோ? 105. சாரியைகள் என்பன எவை? 'இன்னபிறவும்' என்றதனாற் கொள்ளப்படுஞ் சாரியைகளெவை? மெய்கள் எச்சாரியை பெறும்? உயிர்நெடில்கள் எச்சாரியை பெறும்? 'ஐ ஔ' இவைகள் எச்சாரியை பெறும்? உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் எச்சாரியை பெறும்? 106. 'எல்லாம்' என்னும் பெயர் 'ஐ' முதலிய ஆறுருபும் ஏற்கு மிடத்து எவ்வாறாம்? 107. எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரும் ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறாம்? 108. 'தான்', 'தாம்', 'நாம்' என்னும் பெயர்கள் ஆறுஉருபும் ஏற்குமிடத்து எவ்வாறு திரியும்? 'யான்,' 'யாம்', 'நீ', 'நீர்' என்னும் பெயர்கள் ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறு திரியும்? இவ்வேழு பெயரும் 'கு' உருபு புணருமிடத்து வேறு விதியும் உடன்பெறுமோ? விகாரமடைந்து நின்ற இவ்வேழு பெயர்களின் முன்னும் அகரச்சாரியையும், ஆறும்வேற்றுமை யுருபுயிர்களும், புணருமிடத்துத் தனிக் குறின்முன் னொற்றுக்கள்

இரட்டுமோ? 'நீ', 'நீர்' என்பன பிறவாறு திரிதலுமுண்டோ? 109. 'ஆ', 'மா', 'கோ' என்னும் பெயர்கள் உருபுகள் ஏற்குமிடத்து எவ்வாறாம்? 'ஆ' முதலிய பெயர்கள் 'கு' உருபு ஏற்குமிடத்து, வேறு சாரியையும் உடன்பெறுமோ? 'ஆ' முதலிய பெயர்கள் 'ஐ' முதலிய உருபுகளேற்குமிடத்து னகரச்சாரியை யன்றி வேறு சாரியை பெறுவோ? 'ஆ' முதலிய பெயர்கள் உருபேலாது தனித்து நிற்குமிடத்துச் சாரியை பெறுவோ? 110. வகரவீற்றுச்சுட்டுப் பெயர்கள் உருபேற்குமிடத்து எவ்வாறாம்? இச்சுட்டுப் பெயர்கள் அற்றுச்சாரியையோடு வேறு சாரியையும் உடன்பெறுவோ? 111. (இயல்பினும் விதியினும் நின்ற) அகரவீற்றுப் பால்பகாவஃறிணைப் பெயர்முன் பெயரேனும் உருபேனும் வரின் எவ்வாறாம்? 112. இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சியில் வேறுபட்டுவருவனவும் உளவோ? 'அன்னபிறவும்' என்றதனாற் கொள்ளப்படுவன யா?

உருபுபுணரியல் முற்றிற்று.

அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே.

பரீக்ஷைவினா:—பெரியோர் என்னென்ன விஷயம் உணர்ந்தாரை எழுத்தின் அகப்புறவிலக்கணமுணர்ந்தார் என்பர்?

எழுத்ததிகாரம் முற்றுப்பெற்றது.

உ

இரண்டாவது

சொல்லதிகாரம்.

பலவகைச்சொற்களின் இலக்கணங்களை உணர்த்தும் அதிகாரம்.

1. பெயரியல்.

[பெயர்ச்சொல்லின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்.]

கடவுள் வணக்கமும், அதிகாரமும்.

முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

உரை:—முச்சகம் - (சுவர்க்கம் பூமி பாதாளம் என்னும்) மூன்றுலோகங்களுக்கும், நிழற்றும் - நிழலைச்செய்கிற, முழுமதி - பூர்ணசந்திரன்போன்ற, முக் குடை-மூன்று குடைகளையுடைய, அச்சுதன்-அழியாத கடவுளாகிய அருகதேவனது, அடி-பாதங்களை, தொழுது-வணங்கி, சொல்-(முன்னதிகாரத்துட்சொல்லிய எழுத்தினாலாகிய) சொல்லின் இலக்கணத்தை, அறைகுவன்-சொல்வேன்.

ஒன்றன்மேலொன்றாக அமைந்துள்ள—சந்திராதித்யம், நித்ய விநோதம், சகலபாசனம், எனப் பெயர்பெறும் பிரபாமண்டலங்களை 'முக்குடை' யென்பர்; இது அருகமதக் கோட்பாடு.

சொல்லின் பொதுவிலக்கணம்.

[சொல் இன்னதென்பது.]

113. *ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா*
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

உரை:—ஒரு மொழி-ஒருமொழியும், தொடர்மொழி-தொடர் மொழியும், பொதுமொழி - பொதுமொழியும், என்று-என்று (மூன்று பிரிவையுடையதாய்), இரு திணை-இரண்டு திணைகளையும், ஐம்பால் பொருளையும்-(அவற்றின் கூறுபாடான) ஐந்து பால்களை யும், தன்னையும்-தன் பொருளையும், மூ வகை இடத்தும்-மூன்று இடங்களிலும், வழக்கொடு-உலக வழக்கத்திலும், செய்யுளின்-செய்யுள் வழக்கத்திலும், வெளிப்படை-வெளிப்படையாகவாவது, குறிப்பின்-குறிப்பாகவாவது, விரிப்பது-தெரிவிப்பது, சொல்-சொல்லாகும். [சொல்-பொருளைச் சொல்வது.]

[மூவகைமொழி.]

114. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன.

உரை:—(1) ஒரு மொழி-ஒருமொழிகளாவன:—ஒரு பொரு ளன ஆம்-ஒரு பொருளைத் தருவனவாம்; (2) தொடர்மொழி-தொடர்மொழிகளாவன:—பல பொருளன-இரண்டு முதலிய பல பொருள்களைத் தருவனவாம்; (3) பொது-பொதுமொழிகளாவன:-இருமையும் ஏற்பன-(ஒருமொழியாய் நின்று ஒரு பொருளைத்தந் தும், அதுவே தொடர்மொழியாய் நின்று பல பொருளைத் தந்தும்) அவ்விரண்டிற்கும் பொதுவாய் நிற்பனவாம்.

(உதாரணம்.)

1. ஒருமொழி—பொன், பொன்னன்; நட, நடந்தான்; தில், மன்; தவ, நனி.

2. தொடர்மொழி—பொன்வலிது, அதுகொல், சாலப்பகை, மண் அளந்த மால்.

3. பொதுமொழி—எட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந் தான். இவை-, ஓர் எண், தாமரைப்பூ, ஒருவகை மிருகம், எழுந்தான் என்ற பொருளைத் தருவதல்லாமல், எள்+து [எள்ளை உண்], தா+மரை [தாவுகின்ற மான்], வேம்+கை [வேகின்ற கை], எழுந்து+இருந்தான் [எழுந்து பின் இருந்தான்] எனத் தொடர் மொழிகளாய் நின்று ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொரு ளாகப் பல பொருள்களைத் தருதலுங் காண்க.

ஒருமொழி - தனிமொழி; தொடர்மொழி - சொற்றொடர்; பொதுமொழி-இவ்விரண்டின் தன்மையையும் ஏற்று வருபவை.

[இருதிணை.]

115. மக்கள் தேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

உரை:— மக்கள்-மனிதர்களும், தேவர்-தேவர்களும், நரகர்-நரகர்களும், உயர்திணை-உயர்திணையாகும்; மற்று உயிர் உள்ளவும்-(மற்ற மிருகம் பறவை முதலாகிய) உயிருள்ளவையும், இல்லவும்-(நிலம் நீர் முதலாகிய) உயிரில்லாதவையும், அஃறிணை-அஃறிணையாகும்.

[திணை-குலம் அல்லது சாதி; உயர்திணை-உயர்வாகிய குலம்; அஃறிணை-(அல்+திணை) அதுவல்லாத (தாழ்வாகிய) குலம்.]

மக்கள்-பூலோகத்தில் வசிப்பவர்; தேவர்-சுவர்க்கலோகத்தில் வசிப்பவர்; நரகர்-பூமியின் கீழ் உள்ள நரகலோகத்தில் வசிப்பவர். மனிதராய்ப் பிறந்து புண்ணிய பாவங்களைச் செய்து, புண்ணிய மிகுதியால் தேவராகவும், பாவ மிகுதியால் நரகராகவும் தோன்றுவதனால், மக்கள் தேவர் நரகர் என முறைப்படுத்தினார்.

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் (தனித் தனி) வேறாகக் குறிக்கும் போது அவ்விரண்டும் அஃறிணையே யாம்; (உ-ம்.) உடம்பு இளைத்தது; உயிர் நீங்கிற்று.

இனித், (1) தேவரையும் (2) தேவகணத்தாரையும் உயர்திணையாகச் சொல்வதுமல்லாமல் அஃறிணையாகச் சொல்வதும் உண்டு.

உயர்திணை. (உதாரணம்.)	அஃறிணை.
1. சூரியன் உதித்தான்	சூரியன் உதித்தது.
வந்தான் கூற்றுவன்	வந்தது கூற்று.
சந்திரன் மறைந்தான்	சந்திரன் மறைந்தது.
கலி நீங்கினான்	கலி நீங்கிற்று.
2. சேடன் எழுந்தான்	சேடன் எழுந்தது.
கார்க்கோடகன் தீண்டினான்	கார்க்கோடகன் தீண்டிற்று.

கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறலாம்; (உ-ம்.) கடவுள் இருக்கிறார்; தெய்வம் இருக்கிறது.

[உயர்திணையின் பால்கள்—3.]

116. ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

உரை:— ஆண்-ஆண்பால், பெண்-பெண்பால், பலர்-பலர்பால், என-என்று, உயர்திணை—, முப்பாற்று-மூன்று பாலினையுடையது.

பால்-பகுப்பு. ஆண்பாலும் பெண்பாலும் ஒருமை; பலர்பால்-பன்மை.

ஆண்பால். ஆண் ஒருமை ... (உ-ம்.) அவன்.
பெண்பால். பெண் ஒருமை ... (உ-ம்.) அவள்.

பலர்பால், { ஆண் பன்மை ... (உ-ம்.) ஆடவர், காளையர்.
பெண் பன்மை ... (உ-ம்.) பெண்டிர், மங்கையர்.
ஆண் பெண் இருவர் பன்மை (உ-ம்.) மக்கள், அவர்.

[அஃறிணையின் பால்கள்—2.]

117: ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

உரை:—ஒன்றே-ஒன்றன்பால், பல-பலவின்பால், என்று—, அஃறிணை—, இரு பாற்று-இரண்டு பால்களை யுடையது.

அஃறிணையுள்ளும் களிறு சேவல் கடுவன் முதலிய ஆண்பாலும், பிடி பெடை மந்தி முதலிய பெண்பாலும் உள்ளனவேனும், அவ்வாண்பாலும், பெண்பாலும் புழு முதலிய உயிருள்ளவற்றிற்கும், கல் முதலிய உயிரில்லனவற்றிற்கும் இல்லாமையால், அப்பகுப்பை யொழித்து, எல்லாவற்றிற்கும் பொருந்த 'ஒன்று' என்றும், களிறுகள் சேவல்கள் கடுவன்கள் முதலிய அஃறிணை ஆண் பன்மையும், பிடிகள் பெடைகள் மந்திகள் முதலிய அஃறிணைப் பெண்பன்மையும் அடங்கப் 'பல' என்றும் கூறினார்; ஒன்றன்பால்-ஒருமை; பலவின்பால்-பன்மை.

குறிப்பு:—ஆணும் பெண்ணுமல்லாத பேடுகளை ஆண்தன்மை மிகுந்திருந்தால் ஆணாகவும், பெண்தன்மை மிகுந்திருந்தால் பெண்ணாகவுஞ் சொல்லலாம்; இவ்விருவகைப் பேடுகளையும், அஃறிணையாக வழங்குவதும் உண்டு; (உ-ம்.) பேடி இவன்; பேடி இவள்; பேடி இது.

[மூவகை இடம்.]

118. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

உரை:—மூ இடன்-மூன்று இடங்களாவன:—தன்மை-தன்மையும், முன்னிலை-முன்னிலையும், படர்க்கை-படர்க்கையும் ஆம்.

தன்மை-தன்னைக்குறிப்பது; முன்னிலை - எதிரில் நிற்கும் பொருளைக்குறிப்பது; படர்க்கை-இவ்விரண்டுமல்லாத வேறு பொருளைக் குறிப்பது.

(உ-ம்.)	ஒருமை.	பன்மை.
தன்மை.	—யான், வந்தேன்.	யாம், வந்தோம்.
முன்னிலை.	—நீ, வந்தாய்.	நீர், வந்தீர்.
படர்க்கை. —	அவன், வந்தான். அவள், வந்தாள்.	அவர், வந்தார்.
	அது, வந்தது.	அவை, வந்தன.

குறிப்பு:—படர்க்கைப் பெயர்ச்சொல்லும் வினைமுற்றுச்சொல்லும் திணை பால் அனைத்தையும் காட்டும்; தன்மை முன்னிலைகளில் ஒருமை பன்மைகள் மாத்திரம் வெளிப்படும்; (உ-ம்.) இராமன்; வந்தார்கள். நான்; வந்தேன். நீ; வந்தாய். பிறவுங்காண்க.

[வழக்கு.]

119. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கல் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

உரை:— (1) இலக்கணமுடையது-இலக்கணமுடையதும், இலக்கணப்போலி-இலக்கணப்போலியும், மரூஉ-மரூஉவும், என்று ஆகும்-என்று வழங்குகின்ற, மூவகை இயல்பும்-மூன்றுவகை இயல்பு வழக்குக்களும்; (2) இடக்கரடக்கல்-இடக்கரடக்கலும், மங்கலம்-மங்கலமும், குழூஉக்குறி-குழூஉக்குறியும், எனும்-என்று வழங்குகிற, முத்தகுதியோடு-மூன்று தகுதி வழக்குக்களும், (ஆக) வழக்கு இயல்-வழக்கிலக்கணம், ஆறும்-ஆறுவகைப்படும்.

1. இயல்பு வழக்கு.

1. இலக்கணமுடையது:—இலக்கணவழியால் வருவது; (உ-ம்.) தீ, நீர், நிலம், பொன்னன், காற்று, வானம், தண்ணீர், வெந்நீர், நன்னிலம் முதலியன.

2. இலக்கணப்போலி:—இலக்கணமில்லாததாயினும், இலக்கணமுடையதுபோல அறிவுடையோரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது;

(உ-ம்.)		
முன்றில்	-[இல்முன்]	போதியில்-[பொதுவில்.]
புறநகர்	-[நகர்ப்புறம்]	கோயில் -[கோவில்.]
உலாப்புறம்	-[புறவுலா]	மீகண் -[கண்மீ.]
வைகாசி	-[வைசாகி]	ஞிமிறு -[மிஞிறு.]
சதை	-[தசை.]	வாயில் -[இல்வாய்.]

3. மரூஉ:—தொன்றுதொட்டு வருதலின்றி, இடையிலே, சில எழுத்துக்கள் தோன்றியும், திரிந்தும், கெட்டும், இலக்கணஞ் சிதைந்து தானே மருவி வழங்குவது;

(உதாரணம்.)

அருமந்த-(-அருமருந்தன்ன.)	ஆச்சு-(-ஆயிற்று.)
சோணாடு-(-சோழநாடு.)	உறந்தை-(-உறையூர்.)
தொண்டைநாடு-(-தொண்டை	ஆறை-(-ஆற்றூர்.)
மலாடு-(-மலையமானாடு.) [மானாடு.)	தஞ்சை-(-தஞ்சாவூர்.)
பாண்டிநாடு (-பாண்டியநாடு.)	யார் / ஆர் } -(-யாவர்) வினாப் பெயர்.
குணாது-(-குணக்குள்ளது.)	அந்த, இந்த, உந்த,-(-அ இ உ)
வடாது-(-வடக்குள்ளது.)	எந்த-(-எ.)
தெனாது-(-தெற்குள்ளது.)	ஆடு-(-யாடு.)
வாசல்-(-வாயில்.)	ஆனை-(-யானை.)
போது / போழ்து } -(-பொழுது.)	ஆறு-(-யாறு.)
மராடி-(-மரவடி.)	ஆக்கை-(-யாக்கை.)
குளாம்பல்-(-குளவாம்பல்.)	ஆளி-(-யாளி.)
ஆர்-(-யார்) குறிப்புவினை.	ஆமை-(-யாமை.)
ஆய்-(-யாய்.)	என், என்னை, என்ன-(-எவன்) குறிப்புவினை.
பூந்தை-(-பூதன்தந்தை.)	
வருகுது-(-வருகிறது.)	பேர்-(-பெயர்.)

இம்மூன்றும் எப்பொருளுக்கு எச்சொல் இயல்பிலே யமைந்ததோ, அப்பொருளை அச்சொல்லால் வழங்குதலால், 'இயல்பு வழக்கு' எனப்பட்டன.

2. தகுதி வழக்கு.

1. இடக்கரடக்கல்:—நன்மக்களிடத்துச் சொல்லத்தகாத வார்த்தைகளை மறைத்துப் பிறவாற்றாற் சொல்வது; (உ-ம்.)

பகரவீ, பவ்வீ-(-பீ). கால் கழுவி வந்தான்-(-மலங் கழுவி வந்தான்)

2. மங்கலம் (சுபம்):—மங்கலமல்லாத சொல்லை யொழித்து, மங்கலமான சொல்லாற் கூறுவது; (உ-ம்.)

துஞ்சினார். / காலஞ்சென்றார் } -(-செத்தார்.)	வெள்ளாடு-(-காராடு.)
	நன்காடு-(-சுடுகாடு.)
தாலிபெருகிற்று-(-தாலியறுந்தது.)	திருமுகம்-(-ஓலை.) [ம்பு.)
மங்களவாரம்-(-செவ்வாய்க்கிழமை.)	மெய்-(-பொய்யாகிய உட

3. குழூஉக்குறி:—[குழூஉ-கூட்டம்; குறி-அடையாளம்] ஒரு கூட்டத்தார் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் சொற்குறியை யொழித்து, வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது;

(உ-ம்.) பறி-[பொன்]—தட்டார் சொல்வது.
சோல்விளம்பி-[கள்]—வேடர் சொல்வது.
காரை-[ஆடை]—யானைப்பாகர் சொல்வது.

இம்மூன்றும் பொருள்களுக்கு இயல்பாய் ஏற்பட்ட சொற்களை ஒழித்துத் தகுதியான வேறு சொற்களால் அப்பொருள்களைக் கூறுதலால் 'தகுதிவழக்கு' எனப்பட்டன.

[செய்யுள்.]

120. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

உரை:—பல்வகை தாதுவின்-(தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர்) என்னும் ஏழுவகைத் தாதுக்களினாலே, உயிர்க்கு-உயிருக்கு (இடமாகச் செய்யப்பட்ட), உடல் போல்-உடம்பு போல, பல சொல்லால்-பலவகைக் சொற்களாலும், பொருட்கு-பொருளுக்கு, இடன் ஆக-இடமாக, உணர்வினின்-கல்வி அறிவினால், வல்லோர்-(செய்யுள்செய்ய) வல்லவரால், அணி பெற-அலங்காரம் தோன்ற, செய்வன-செய்யப்படுவன, செய்யுள்-செய்யுளாம்.

எனவே—எழுத்து, சொல், பொருள், அணி, என்னும் நான்கினாலும் உண்டாவது செய்யுள், பலசொல்—ஈண்டு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நான்குமாம்.

(உ-ம்.) 'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு' இக்குறள் வெண்பா, 'கடவுள் வாழ்த்து' என்னும் பொருளுக்கு இடமாகி, எடுத்துக்காட்டுவமையணியும் பிறவும் உடையதாயிருத்தல் காண்க.

[குறிப்பும், வெளிப்படையும்.]

121. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவுங்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

உரை:—ஒன்றுஒழி பொதுச்சொல்-(இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுள்) ஒன்றை ஒழிக்கும் பொதுச்சொற்களும், விகாரம்-(வலித்தல் முதலிய ஒன்பது வகை செய்யுள்) விகாரச் சொற்களும், தகுதி-(இடக்கரடக்கல் முதலிய மூவகைத்) தகுதி வழக்குச் சொற்களும், ஆகுபெயர்-ஆகுபெயர்ச்சொற்களும், அன்மொழி - அன்மொழித்தொகைச்சொற்களும், வினைக்குறிப்பே - குறிப்புவினைச்சொற்களும், முதல்-முதலில் நிற்கிற மொழியைக் குறிக்கிற சொற்களும், தொகை-பொருளின் தொகையைக் குறிக்கிற சொற்களும், குறிப்போடு-(இம்முதற் குறிப்பும் தொகைக் குறிப்பும் அல்லாத பலவழியாலும் வரும்) பிறகுறிப்புச் சொற்களும், இன்ன பிறவும்-இவ்வபோல்வன பிறவும்—, குறிப்பின்-குறிப்பினால், தரும்மொழி-(இருதிணைஐம்பால்)பொருள்களைத் தருகின்ற சொற்களாம்;—அல்லன-இவையல்லாதவையெல்லாம், வெளிப்படை-வெளிப்படையாற் பொருளைத் தருகின்ற சொற்களாம்.

(உதாரணம்.)

ஆயிரம் மக்கள் பொருதார். இம்மாடுகள் கறந்தன.	ஒன்றொழி பொதுச்சொல்-இருதிணையிலும் ஒருபாலை யொழித்து ஒரு பாலைக் குறிப்பாற் காட்டிற்று. (சூ. 176.)
'தண்டையினினக்கிளி.' 'மரைமலர்.'	செய்யுள் விகாரச்சொற்கள்-'தட்டை', 'தாமரை', என்பவற்றைக் குறிப்பாற் காட்டின. (சூ. 60.)
கால்கழுவி வந்தான். திருமுகம் படி. பறி கொடு.	தகுதிவழக்குக்கள்-மலங்கழுவி,ஓலை, பொன் என்பவற்றைக் குறிப்பாற் காட்டின. (சூ. 119.)
ஊர் அடங்கிற்று. புளி தின்றான்.	ஆகுபெயர்கள்-மனிதர், பழம் இப்பொருள்களைக் குறிப்பாற் காட்டின. (சூ. 134.)
பூங்குழல் வந்தாள். பெருந்தகை வந்தான்.	அன்மொழித்தொகைகள்- அவற்றையுடைய பெண்ணையும், ஆணையும் குறிப்பாற் காட்டின. (சூ. 187.)
இப்போது பொன்னன். முன்பு சிறியன்.	வினைக்குறிப்புக்கள்-பெயர்ப்பொருளை நீக்கி, பொன்னையுடையனாயிருக்கிறான், சிறுமையுடையனாயிருந்தான் என்னும் பொருளைக் குறிப்பாற் காட்டின.
ஆத்திசூடி படித்தான். வெற்றிவேற்கை படி.	முதற்குறிப்புக்கள்-அச்சொல்லை முதலிலே யுடைய நூல்களைக் குறிப்பாற் காட்டின.

ஐவரோடு குந்திவந்தாள். } தொகைக்குறிப்புக்கள்-பாண்டவர்களை
ஐவரை அடைத்த முனி. } யும் ஐம்பொறிகளையும் குறிப்பாற் காட்டின.

கல்லைக் கிடிக்க நன்றுய்ச்சமைத்தாய். } பிறகுறிப்புக்கள்-நன்றாகச்
பாயா வேங்கை. } சமைக்கவில்லை, வேங்கை
பறவாக் கொக்கு. } மரம், மாமரம், லோபிகள்,
உவர்க்கடலன்ன செல்வர். } என்பவற்றைக் குறிப்பாற் காட்டின.

(உப்புக் கடல்போன்ற செல்வமுள்ளோர்.)

'இன்னபிறவும்' என்றதனால்,—தெரிநிலை குறிப்பு வினையாலணையும்பெயர்களும், இருவகை முற்றெச்சங்களும், செய்யுமென்னும் முற்றும், 'கேட்குநபோல' முதலியனவாக அஃறிணையிடத்துச் சொல்லப்படுவனவும் ஆகிய இவை முதலானவை குறிப்பாற் பொருள் உணர்த்தும் எனக் கொள்க.

இவ்வாறன்றி, நிலம், நீர், தீ, காற்று, வானம், வீடு, மரம், வந்தான், சென்றது என வருவன வெளிப்படையாற் பொருள் உணர்த்துவனவாம்.

சொல்லின் வகை.

122. அதுவே,—
இயற்சொல் திரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.

உரை:—அது-(முன்சொல்லிய) சொல்,—இயற்சொல்-இயற்சொல்லும், திரிசொல்-திரிசொல்லும் என்கிற, இயல்பின்-தன்மையையுடைய, பெயர்-பெயர்ச்சொல்லும், வினை-வினைச்சொல்லும், என-என்று, இரண்டு ஆகும்-இரண்டு வகையாம்; இடை-இடைச்சொல்லும், உரி-உரிச்சொல்லும், அடுத்து-(அவற்றுடன்) சேர்ந்து, நான்கும் ஆம்-நான்குவகையும் ஆகும்; திசை வடசொல்-திசைச்சொல்லும் வடசொல்லும், அணுகாவழி-(அச்சொற்களுடன்) சேராவிடத்து;

எனவே, சொல்,—பெயரியற்சொல், பெயர்த்திரிசொல்; வினையியற்சொல், வினைத்திரிசொல்; இடையியற்சொல், இடைத்திரிசொல்; உரியியற்சொல் உரித்திரிசொல் என எட்டுவகைப்படும் என்றும், திசைச்சொல்லையும், வடசொல்லையும் சேர்த்தால் பத்து வகைப்படும் என்றுங் கொள்க.

[இயற்சொல்.]

123. செந்தமி ழாகித் திரியா து யார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

உரை:— செந்தமிழ் ஆகி-செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாகி, திரியாது-திரிசொற்போல் ஆகாமல், யார்க்கும்-கற்றாருக்கும் கல்லாதார்க்கும், தம்பொருள்-தமது பொருள்களை, விளக்கும்-தெரிவிக்கின்ற, தன்மைய-தன்மையை யுடைய உலகவழக்கச் சொற்களே,—இயற்சொல்-இயற்சொற்களாம்

குறிப்பு:—செந்தமிழ்நாடு—வடபாண்டிநாடு; தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும், சங்கப்புலவர்களுக்கும், தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும் உறைவிடம் அதுவாதலால் என்க. இயற்சொல்-இயல்பாய் [யாவர்க்கும்] பொருள் விளங்குஞ் சொல்.

(உ-ம்.) மண், பொன், மரம்,—பெயரியற்சொல்

நடந்தான், வந்தான்—வினையியற்சொல்

அவனை, அவனால், என்பவற்றுள், 'ஐ', 'ஆல்' என்பன. }—இடையியற்சொல்.

அழகு, அன்பு —உரியியற்சொல்.

[திரிசொல்.]

124. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

உரை:— ஒரு பொருள் குறித்த-ஒரு பொருளையே தெரிவிக்கின்ற, பல சொல் ஆகியும்-பல சொற்களாகியும், பல பொருள் குறித்த- பல பொருள்களைத் தெரிவிக்கின்ற, ஒரு சொல் ஆகியும்-ஒரே சொல்லாகியும், அரிது உணர் பொருளன-அருமையாக (கற்றோர்க்கு மாத்திரம்) அறியப்படுகிற அருத்தத்தை யுடையவை,—திரிசொல் ஆகும்-திரிசொற்களாம்.

குறிப்பு:—திரிசொல்—இயற்சொல்லின் நின்று வேறுபட்ட சொல்; அதாவது எளிதிற் பொருள் அறியப்படாத சொல்

(உதாரணம்.)

கிள்ளை, தத்தை—இவை, 'கிளி' யென்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்த்திரிசொல்.

ஆழி—இது, சக்கரம் மோதிரம் சமுத்திரம் என்னும் பல பொருள்களைக் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.

படர்ந்தான், சென்றான், ஏகினான்—இவை, 'போயினான்' என்னும் ஒரு பொருளைக் குறித்த பல வினைத்திரிசொல்.

வரைந்தான்—இது, நீக்கினான் கொண்டான் எழுதினான் என்னும் பல பொருள்களைக் குறித்த ஒரு வினைத்திரிசொல்.

சேறும், வருதும்—இவற்றிலுள்ள 'றும், தும்' விகுதிகள் தன்மைப் பன்மை யெதிர்காலம் என்னும் ஒரு பொருளைக் குறித்த பல இடைத்திரிசொல்.

கொல்—இது, ஐயம் வினா அசைநிலை முதலிய பல பொருள்களைக் குறித்த ஓர் இடைத்திரிசொல்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி—இவை 'மிகுதி' யென்னும் ஒரு பொருளைக் குறித்த பல உரித்திரிசொல்.

கடி—இது, காப்பு கூர்மை அச்சம் விளக்கம் சிறப்பு மணம் முதலிய பல பொருள்களைக் குறித்த ஓர் உரித்திரிசொல்.

[திசைச்சொல்.]

125. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப

உரை:—செந்தமிழ் நிலம் சேர்-செந்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டைச்சேர்ந்த, பன்னிரு நிலத்தினும்-பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிலும், ஒன்பதிற்று இரண்டினில்-பதினெட்டுத் தேசங்களுள், தமிழ் ஒழி நிலத்தினும்-தமிழ்நாடு ஒழிந்த (பதினேழு) நாடுகளிலும், தம் குறிப்பின-(வசிப்பவர்கள் தமது பேசும் பாஷைகளிலுள்ள பதங்கள்) தம் பொருளையே யுடையனவாய் (அத்திசைகளினின்றும் செந்தமிழ் நாட்டில் வந்து) வழங்குவன,—திசைச்சொல்-திசைச்சொற்களாம்; என்ப-என்று சொல்லுவர் (புலவர்.)

குறிப்பு:—திசைச்சொல் — திசைகளில் வழங்குகிற தேச பாஷைகளிலிருந்து செந்தமிழில் வந்து வழங்குஞ் சொற்கள்.

கொடுந் தமிழ்நாடு பன்னிரண்டாவன:—

'தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண் பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்'. —என்பதனாலறிக.

(உதாரணம்.)

1	பெற்றம்	(பசு)	—தென்பாண்டிநாட்டுச்சொல்.
	சொன்றி	(சோறு)	
2	தள்ளை	(தாய்)	—குட்டநாட்டுச்சொல்.
3	அச்சன்	(தந்தை)	—குடநாட்டுச்சொல்.
4	கையர்	(வஞ்சகர்)	—கற்காநாட்டுச்சொல்.
5	கிழார்	(தோட்டம்)	—வேணாட்டுச்சொல்.
6	பாழி	(சிறு குளம்)	—பூழிநாட்டுச்சொல்.
7	செய்	(வயல்)	—பன்றிநாட்டுச்சொல்.
8	கேணி	(சிறு குளம்)	—அருவாநாட்டுச்சொல்.
9	எகின்	(புளி)	—அருவாவடதலைநாட்டுச்சொல்.
10	எலுவன்	(தோழன்)	—சீதநாட்டுச்சொல்.
	இதலை	(தோழி)	
11	வெள்ளம்	(நல்ல நீர்)	—மலையமானாட்டுச்சொல்.
12	ஆய்	(தாய்)	—புனனாட்டுச்சொல் (சோழநாடு.)

தமிழ்நாடு ஒழிந்த பதினேழு நாடாவன:—

'சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக் குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே'

கோக்கு -(மாமரம்)		—துளுவநாட்டுச்சொல்.
சிக்குதல் -(அகப்படுதல்)		—கன்னடநாட்டுச்சொல்.
எச்சரிக்கை-(கருத்தாகஇரு.)		—தெலுங்கநாட்டுச்சொல்.
பாண்டில் -(எருது.)		
செப்பு -(சொல்லு.)		

அந்தோ -(ஐயோ)—சிங்களச்சொல். (இதை 'ஹந்த' என்னும் வடசொற்சிதைவென்பர்.)

பிறவும் இவ்வாறு அங்கங்கே வந்து வழங்கும்; ஆராய்ந்தறிக.

[வடசொல்.]

126. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

உரை:—பொது எழுத்தானும்-(ஆரியத்துக்கும் தமிழுக்கும்) பொதுவாகிய எழுத்துக்களானும், சிறப்பு எழுத்தானும்-ஆரியத்துக்கேயுரிய சிறப்பெழுத்துக்களாலும், ஈர் எழுத்தாலும்-பொது

வும் சிறப்பும் ஆகிய இருவகை எழுத்துக்களாலும், இயைவன-உள்ளனவாய் ஆரியச்சொற்கள் தமிழில் திரிந்தும் திரியாமலும் வந்து வழங்குவன,—வடசொல்-வடசொற்களாம்.

குறிப்பு:—வடசொல்-வடமொழியிலிருந்து செந்தமிழில் வந்து வழங்குஞ் சொல். ஆரியம் ஆதியில் இமயமலையைச் சார்ந்த வடநாடுகளில் கங்காதீரத்தில் காசி முதலிய இடங்களில் மிக்கு வழங்கினமைபற்றி 'வடமொழி' எனப்பட்டது. வடசொல்லும் ஓர் திசைச்சொல்லாயிருந்தாலும், அதனைத் திசைச்சொல்லிற் சேராது பிரித்துக்கூறியது, அதன் பலவகைச் சிறப்பும் * பற்றியென்க.

(உதாரணம்.)

கமலம், மேரு, காரணம், காரியம்—பொது எழுத்தாலியைந்தன.
சுகி, போகி, சுத்தி ... —சிறப்பெழுத்தாலியைந்தன.
அரன், அரி, கடினம் ... —ஈரெழுத்தாலுமியைந்தன.

பெயர்ச்சொல்.

இவ்வியலில் இதுவரை சொல்லின் இலக்கணத்தைப்பொதுப் படக்கூறினார். இனிப், பெயர்ச்சொல்லிலக்கணங் கூறுகிறார்.

[பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம்.]

127. இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல் காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவு மாவன பெயரே.

உரை:—இடுகுறி-இடுகுறியும், காரணம்-காரணக்குறியும், (என்னும் இரண்டும்), மரபோடு ஆக்கம்-மரபும் ஆக்கப்பாடும் (என்னும் இரண்டையும்), தொடர்ந்து-பற்றி,—தொழில் அல-வினையாலணையும் பெயர்களல்லாதவை, காலம் தோற்றா - காலத்தைக் காட்டாமல்,—வேற்றுமைக்கு-எட்டு வேற்றுமைகளும் சார்தற்கு, இடன் ஆய் - இடமாகி,—திணை-இருதிணையிலும், பால் - ஐம்பாலிலும், இடத்து-மூவிடத்திலும், ஒன்று-ஒன்றை, ஏற்பவும்-ஏற்றுவருபவையும், பொதுவும்-பலவற்றிற்குப் பொதுவாய் வருபவையும், ஆவன-ஆகி நிற்பன,—பெயர்-பெயர்ச்சொற்களாம்.

* இஃது ஒரு நிலத்திற்கே யுரித்தன்றிப் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் பூவாதிக்கும் பொதுவாய் வருதலின், திசைச் சொல்லின் அடக்காது வேறு ஓதினார் என்க.

எனவே,—பெயர் - இடுகுறிமரபுப்பெயர், இடுகுறியாக்கப் பெயர், காரணமரபுப்பெயர், காரணவாக்கப்பெயர் என நால்வகைப் படும். இடுகுறி காரணங்களின் இலக்கணங்களைக் கீழ் 5-ஆவது சூத்திரத்திற் காண்க. மரபாவது—ஒருவரால் ஆக்கப்படாமல் தொன்றுதொட்டு வழங்கிவருவது; ஆக்கமாவது—புலவர்களால் புதிதாக உண்டாக்கப்பெற்று வருவது.

(உ-ம்.) 1. மரம், விள, பனை—இடுகுறிமரபு.

2. அவன், அவள், பறவை, விலங்கு—காரணக்குறிமரபு.

3. "மானவேன் முட்டைக்கு மாறுயதெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு"—இதில், பொய்யாமொழிப்புலவர், முருகக்கடவுளுக்கு 'முட்டை' என்று பெயர் கூறியது இடுகுறியாக்கம். (கடவுளர் பெயரை மனிதர்கட்கும் விலங்குகட்கும் இட்டு வழங்குதல் இடுகுறியாக்கத்தின்பாற்படும்.)

4. பொன்னன், பூணன், மலைமகள்மகன்-காரணக்குறியாக்கம்.

5. நடந்தவனை, நடக்கின்றவனோடு, நடப்பவனால்—வினையாலணையும் பெயர்கள் காலங்காட்டின.

குறிப்பு:—வினையாலணையும் பெயர்மாத்திரமேயல்லாமல் சில தொழிற்பெயர்களுங் காலங்காட்டும்;

(உ-ம்.) நடந்தமை, நடக்கின்றமை, செய்வது.

'மரம்' முதலிய இடுகுறிப்பெயரும், 'அவன்' முதலிய காரணப்பெயரும்—தொன்றுதொட்டுவருவன. 'முட்டை' முதலிய இடுகுறிப்பெயரும், 'பொன்னன்', முதலிய காரணப்பெயரும்—நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

[பால்பகா அஃறிணைப்பெயர்.]

128. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

உரை:—பால் பகா-ஒருமைப்பால் பன்மைப்பால்கள் பகுக்கப் படாத, அஃறிணை பெயர்கள்-அஃறிணைப் பெயர்ச்சொற்கள்,—பால்-(அத்திணையின்) இருபால்களுக்கும், பொதுமைய-பொதுவாகிய பெயர்களாம்.

குறிப்பு:—ஒன்றன்பாலைக் காட்டுகின்ற 'து' விகுதியையும், பலவின்பாலைக் காட்டுகின்ற 'வை, அ, கள்' என்னும் விகுதிகளுள் ஒன்றையும், பெறாத அஃறிணைப்பெயர்கள்—ஒன்றன்பால் பலவின்பால் என்னும் இரண்டு பால்களுக்கும் பொதுவாம்; இவை முன்னும் பின்னும் வருகின்ற சொற்களால் இன்னபால் என்று அறியப் படும்.

ஒருமை.	பன்மை.
(உ-ம்.) பறவை வந்தது.	பறவை வந்தன.
மரம் வளர்ந்தது.	மரம் வளர்ந்தன.
சென்றது குதிரை.	சென்றன குதிரை.

[இவை பெரும்பாலும் பகாப்பதமாகவும், சிறுபான்மை பகுபதமாகவும் வரும்.]

[தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.]

129. *தன்மை யான் நான் யாம் நாம் முன்னிலை*
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லா மெனல் பொது.

உரை:—தன்மை - தன்மைப்பெயர்,—யான் நான் யாம் நாம் என நான்காம்; முன்னிலை-முன்னிலைப்பெயர்,—எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என ஐந்தாம்; அல்லன-இவ்வொன்பதுமல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை-படர்க்கையிடத்திற்கு உரியனவாம்; எல்லாம் எனல்-(அவற்றுள்) 'எல்லாம்' என்னும் பெயர் ஒன்றும், பொது-(மூன்றிடத்துக்கும்) பொதுவாம்.

(உ-ம்.) யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம்—எல்லாம் என்பது மூன்று இடத்திலும் வந்தது.

[தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்கட்கு இடம்.]

130. *வினையின் பெயரே படர்க்கை வினையா*
-லணையும் பெயரே யாண்டு மாகும்.

உரை:—வினையின் பெயர்-தொழிற்பெயர்கள், படர்க்கை-படர்க்கை இடத்திற்கே உரியனவாம்; வினையாலணையும்பெயர்-வினையாலணையும் பெயர்கள், யாண்டும், ஆகும்-தனித்தனி மூன்றிடத்துக்கும் உரியனவாம். [வினைப்பெயர்=தொழிற்பெயர்.]

(உ-ம்.) உணல், வருகை,—தொழிற்பெயர்கள் படர்க்கையிடத்திற்கே வந்தன. (உணல் நன்று, வருகை தீது என இவ்வாறு படர்க்கையாகிய கொண்டு முடியுஞ் சொல்லோடு கூட்டிக்காண்க.)

உண்டேனை	[உண்ட என்னை]	-தன்மை.	வினையாலணையும் பெயர் மூன்றிடத்தும் வந்தன.
உண்டாய்க்கு	[உண்ட உனக்கு]	-முன்னிலை.	
உண்டானது	[உண்டவனுடைய]	-படர்க்கை.	

தொழிற்பெயருக்கும் வினையாலணையும்பெயருக்கும் வேறுபாடு:—தொழிற்பெயர்-தொழிலுக்குப்பெயராகிப் படர்க்கையிடத்

திற்கே உரியதாம்; வினையாலணையும்பெயர்—தொழிலையுடைய பொருளுக்குப் பெயராகிப் பால் காட்டும் விகுதிகள் பெற்று மூன்றிடத்துக்குந் தனித்தனி உரியதாம் என்க.

யான் உணல், நீயுணல், அவன் உணல் என்பவற்றில் 'உணல்' என்னும் தொழிற்பெயர், யான், நீ, அவன் என்னும் எழுவாய்களை நோக்கி, முறையே தன்மை முன்னிலை படர்க்கை இடங்களில் வந்ததோ என்று ஐயப்படாது படர்க்கையேயென்று கொள்க.

[சில இருதிணைப்பொதுப்பெயர்களுக்கு எண் வகுத்தல்]

131. *தான் யான் நான் நீ ஒருமை பன்மை தாம்*
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்.

உரை:—தான் யான் நான் நீ-தான் முதலிய இந்த நான்கு சொற்களும், ஒருமை-ஒருமைப் பெயர்களாம்; தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்-தாம் முதலிய இந்த எட்டுப்பெயர்களும், பன்மை-பன்மைப்பெயர்களாம்.

எனவே, தான் முதலிய ஒருமைப்பெயர்கள் நான்கும் ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்னும் ஒருமைப்பால் மூன்றுக்கும் பொது; தாம் முதலிய பன்மைப்பெயர்கள் எட்டும் பலர்பால் பலவின்பால் என்னும் பன்மைப்பால் இரண்டுக்கும் பொது. [ஒரு பொருளைக் குறிப்பது - ஒருமை; ஒன்றின்மேற்பட்ட பொருளைக் குறிப்பது-பன்மை.] இங்குக் கூறிய பன்மைப்பெயர் 'கள்' விகுதி பெற்றும் வரும்; (உ-ம்.) தாங்கள்; யாங்கள்.

[எண்ணடியாகப்பிறந்த உயர்திணைப்பெயர்க்குப்புறனடை]

132. *ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.*

உரை:—ஒருவன் ஒருத்தி பெயர்-('ஒன்று' என்னும் எண்ணின் அடியாக) 'ஒருவன்' என்னும் ஆண்பாற் பெயரும், 'ஒருத்தி' என்னும் பெண்பாற்பெயரும் (வருமேயல்லாமல்),—மேல் எண்-(ஒன்றுக்கு) மேற்பட்ட, (இரண்டு முதலிய) எண்களின் அடியாக, இல-(ஆண்பாற் பெயரும்-பெண்பாற்பெயரும்) வருதலில்லை.

குறிப்பு:—ஒன்று என்பது ஒருமை எண்ணாதலின் அதன் அடியாக ஆண்பால் பெண்பால்களாகிய ஒருமைப்பாற்பெயர்கள் தோன்றுமேயன்றிப், பலர்பாலாகிய பன்மைப்பாற் பெயர் தோன்றாது; இரண்டு முதலியவை பன்மையெண்களாதலால் அவற்றினடியாகப் பன்மையாகிய பலர்பாற்பெயரே தோன்றுமேயன்றி ஒருமையாகிய ஆண்பாற்பெண்பாற்பெயர்கள் தோன்றாவென்றறிக.

133. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

உரை:—ஒருவர் என்பது-ஒருவர் என்று வழங்குகிறசொல்,—உயர் இருபாற்று ஆய் - உயர்திணை ஆண் பெண் இருபாலுக்கும் பொதுப்பெயராய்,—(ஒரு பொருளையே உணர்த்துமாயினும்) பன்மை வினை-பலர்பால் வினையை, கொளும்-கொண்டு முடிகின்ற, பாங்கிற்று - தன்மையையுடையது,—என்ப - என்று சொல்லுவர். (அறிவுடையோர்).

(உ-ம்.) ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்—ஆண்பால்.
பெண்களுள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்—பெண்பால்.

ஒருவர் என்பது விகுதியை நோக்கிப் பன்மையேயாயினும், பகுதியை நோக்கிப் பொருளால் ஒருமையே யென்க. இனி இப் பெயரின் 'அர்' விகுதி உயர்வு குறிக்க வந்ததென்றுங் கொள்வர்.

குறிப்பு:—உயர்த்தற்பொருட்டு 'ஆர்' என்னும் இடைச் சொல்லை ஈற்றிற் பெற்ற இருதிணைப்பொதுப்பெயரும், பால்பகா அஃறிணைப்பெயரும், சிறுபான்மை உயர்திணைப்பெயரும், பன்மைச் சொல்லோடு முடியும்; (உ-ம்.) தந்தையார் வந்தார்; நரியார் வந்தார்; அகத்தியனார் வந்தார்.

[ஆகுபெயர்.]

134. பொருள்முத லாறோடு அளவை சொல் தானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே.

உரை:—பொருள் முதல் ஆறோடு-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்ற ஆறும், அளவை-(எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகை) அளவும், சொல்-சொல்லும், தானி-ஸ்தானத்தில் உள்ளதும், கருவி-காரணமும், காரியம்-காரியமும், கருத்தன்-கருத்தாவும், ஆதியுள்-இவை முதலான பொருள்களுள், ஒன்றன் பெயரான்-ஒரு பொருளினது இயற்கைப் பெயரால், அதற்கு இயை பிறிதை - அப்பொருளுக்குச் சம்பந்தப் பட்ட வேறொருபொருளை, தொல் முறை-பழைய முறைப்படியே, உரைப்பன - சொல்லப்பட்டு வருவன,—ஆகுபெயர் - ஆகுபெயர்களாம். [ஒரு பொருளின் பெயர் மற்றொன்றுக்கு ஆகுவது].

(உதாரணம்.)

1. பொருளாகுபெயர்:—முதற் பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆவது. 'தாமரைமுகம்'—இதில் 'தாமரை' என்னும் கொடியின் பெயர், அதன் மலருக்கு ஆயிற்று. (ஆம்பல் வாய்; முதலியன) [சினை-உறுப்பு; முதல்-உறுப்பையுடையது.]

2. இடவாகுபெயர்:—இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆவது. 'நாடு களித்தது'—இதில் 'நாடு' என்னும் இடத்தின் பெயர் அதிலுள்ளவருக்கு ஆயிற்று. [ஊர் வந்தது; உள் மகிழ்ந்தான்; அகன் அமர்ந்து; வான் உவந்தது; முதலியன.]

3. காலவாகுபெயர்:—காலத்தின் பெயர் அக்காலத்திலுள்ள பொருளுக்கு ஆவது. 'கார் அறுத்தது'—இதில், 'கார்' என்னும் மழைக்காலத்தின் பெயர் அதில் விளையும் பயிருக்கு ஆயிற்று (வசந்தம் அணிந்தான்; கார்த்திகை பூத்தது; முதலியன.) [கார்த்திகை-தோன்றிப்பூ.]

4. சினையாகுபெயர்:—சினைப்பொருளின் பெயர் அதன் முதற் பொருளுக்கு ஆவது. 'வெற்றிலை நட்டான்'-இதில் 'இலை' என்னும் சினையின் பெயர் அதன் கொடிக்கு ஆயிற்று. (மருக்கொழுந்து நட்டான்; முதலியன.)

5. குணவாகுபெயர்:—குணத்தின் பெயர் அதனையுடைய பொருளுக்கு ஆவது. 'நீலஞ் சூடினாள்'.—இதில் 'நீலம்' என்னும் நிறக்குணப்பெயர் அந்நிறத்தையுடைய குவளை மலருக்காயிற்று. (வெள்ளை உழுதது; முதலியன.)

6. தொழிலாகுபெயர்:—தொழிலின்பெயர் அத்தொழிலையுடைய பொருளுக்கு ஆவது. 'வற்றல் உண்டான்'—இதில் 'வற்றல்' என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலையுடைய ஓர் உணவுக்கு ஆயிற்று. (எழுத்து எழுதினான்; பாட்டுப் படித்தான்; கடவுள் இருக்கிறார்; செய்யுள் இயற்றினான்; யாக்கை நிலையாதது; முதலியன.

7. அளவை: எண்ணலளவையாகுபெயர்:—எண்ணி யளக்கின்ற 'ஒன்று', 'இரண்டு', 'அரை', 'கால்' முதலிய எண்ணுப்பெயர்கள் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆவது. 'கால்நொந்தது'—இதில் 'கால்' என்னும் எண்ணலளவைப்பெயர், உடம்பில் அவ்வளவைக்கொண்ட உடம்புக்கு ஆயிற்று. (அரையில் உடுத்தான்; இரண்டு கொடுத்தான்; முதலியன.)

எடுத்தலளவையாகுபெயர்:—நிறுத்து அளக்கின்ற 'வீசை, சேர், தூக்கு' முதலிய பெயர்கள் அவ்வளவைக்கொண்ட பொரு

ளுக்கு ஆவது. 'வீசை கொடுத்தான்'—இதில் 'வீசை' என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (மணங்கு தந்தான்; முதலியன.)

முகத்தலளவையாகுபெயர்:—மொண்டு அளக்கின்ற 'நாழி', 'குறுணி', 'கலம்' முதலிய பெயர்கள் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆவது. 'குறுணி விற்றான்'—இதில் 'குறுணி' யென்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (நாழி கொடு; பதக்கு எடுத்தான்; கலம் குத்தினான்; முதலியன.)

நீட்டலளவையாகுபெயர்:—நீட்டி யளக்கின்ற 'சாண், முழம், யோசனை, காதம்' முதலிய பெயர்கள் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆவது. 'சாண் தந்தான்'—இதில் 'சாண்' என்னும் நீட்டலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (முழம் அறுந்தது; யோசனை கடந்தான்; காதம் நடந்தான்; முதலியன.)

8. சொல்லாகுபெயர்:—சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆவது. 'இந்நூலுக்கு உரை செய்தான்'—இதில் 'உரை' என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆயிற்று. (மொழி யுணர்ந்தான்; முதலியன.)

9. தானியாகுபெயர்:—தானத்திலுள்ள பொருளின் பெயர் அதற்குத் தானமான பொருளுக்கு ஆவது. 'விளக்கு ஒடிந்தது'-இதில் 'விளக்கு' என்னும் தீச்சுடரின் பெயர் அதற்கு இடமான தண்டுக்கு ஆயிற்று. [நெஞ்சு (மார்பு) நொந்தது; முரசு உயர்த்தவன்; முதலியன] தானி-ஸ்தானி.

10. கருவியாகுபெயர்:—காரணத்தின் பெயர் காரியத்துக்கு ஆவது. 'யாழ் கேட்டான்'-இதில் 'யாழ்' என்னும் கருவியின் பெயர் அதனாலாகிய இசைக்கு ஆயிற்று. (திருவாய்மொழி ஓதினான்; திருவாசகம் படித்தான்; திருக்குறள் முற்றிற்று; முதலியன).

11. காரியவாகுபெயர்:—காரியத்தின் பெயர் காரணத்துக்கு ஆவது. 'அலங்காரம் படி'-இதில் 'அலங்காரம்' என்னும் இலக்கணமாகிய காரியத்தின் பெயர் அதனை யறிவித்தற்குக் காரணமாகிய நூலுக்கு ஆயிற்று. (பாட்டியல் முற்றிற்று; முதலியன).

12. கருத்தாவாகுபெயர்:—செய்தவன் பெயர் அவனாற் செய்யப்பட்டதற்கு ஆவது. 'திருவள்ளுவர் படி'-இதில் 'திருவள்ளுவர்' என்னும் கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று. (மனுமுறை தவறாதவன்; முதலியன).

13. 'ஆதி' என்றதனால், உவமையாகுபெயர், இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர், அடையடுத்தவாகுபெயர் முதலியவைகளையுங் கொள்க.

உவமையாகுபெயர்:—உபமானத்தின் பெயர் உபமேயத்துக்கு ஆவது. 'காளை வந்தான்'-இதில் 'காளை' என்னும் உபமானத்தின் பெயர் அது போன்றவனுக்கு ஆயிற்று. (பாவை வந்தாள்; முதலியன) [பாவை-சித்திரப்பதுமை.]

இருமடியாகுபெயர்:—'புளி தின்றான்'-இதில் புளி என்னும் சுவைக்குணப்பெயர் அதனையுடைய பழத்துக்காதலால் குணவாகுபெயர். 'புளி முளைத்தது'-இதில் 'புளி' என்னும் சுவைப்பெயர் பழத்திற்கு ஆய், பழத்தின் பெயர் மரத்துக்கு ஆதலால் இருமடியாகுபெயர். [வரை பிளந்தான்; முதலியன] வரை-என்னும் கணுவின்பெயர் அதனையுடைய மூங்கிலுக்கும், பின்பு அது மூங்கில் விளையும் மலைக்கும் ஆனமை காண்க.]

மும்மடியாகுபெயர்:—'கார் பெய்தது'-இதில் 'கார்' என்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய மேகத்துக்கு ஆதலால், குணவாகுபெயர். 'கார் வந்தது'-இதில் 'கார்' என்னும் நிறப்பெயர் மேகத்துக்கு ஆய், மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்துக்கு ஆதலால், இருமடியாகுபெயர். 'கார் அறுத்தது'-இதில் 'கார்' என்னும் நிறப்பெயர் மேகத்துக்கு ஆய், மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆய், பருவத்தின் பெயர் அதில் விளையும் பயிருக்கு ஆதலால், மும்மடியாகுபெயர்.

அடையடுத்தவாகுபெயர்:—'வெற்றிலை நட்டான்', 'மருக்கொழுந்து நட்டான்,' திருவாசகம் என்பவற்றில்-'வெறு மரு திரு' என்னும் அடைமொழிகளால் அடுக்கப்பட்ட இலை, கொழுந்து, வாசகம் என்பன ஆகுபெயராதலால், இவை அடையடுத்தஆகுபெயர்; (அறுபதம்; வார்சான்ற கூந்தல் [பெண்ணே!] கேள்-முதலியன).

(இன்னும் தேவர்கள் முதலியோர் பெயரை மனிதர்கட்கு இட்டு வழங்குவனவும் ஆகுபெயரில் அடக்கப்படும்.)

பொருளாகுபெயரை முதலாகுபெயர் எனவும்,
இடவாகுபெயரைத் தானவாகுபெயரெனவும், } கூறுவர்.
குணவாகுபெயரைப் பண்பாகுபெயரெனவும்,
கருவியாகுபெயரைக் காரணவாகுபெயரெனவும்,

முதலாகு பெயரோடு சினையாகுபெயரும்,
தானவாகு பெயரோடு தானியாகுபெயரும், } ஒன்றற்கொன்று மாறுபாடு கொண்டது.
காரணவாகு பெயரோடு காரியவாகுபெயரும்,

ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு:—
ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் தம்பொருளை யுணர்த்தாமல் வேறு பொருளை யுணர்த்தலால், இவை யிரண்டுக்கும் வேறுபாடு என்னவென்றால்:—

1. ஆகுபெயர்-ஒரு சொல்லாய் வரும்;
அன்மொழித்தொகை-பல சொல்லாய் வரும்.
2. ஆகுபெயர்-முதல் சினை முதலிய சம்பந்தத்தால் வேறு பொருளை யுணர்த்தும்;
அன்மொழித்தொகை-வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத்தொகை யாற்றலால் வேறு பொருளை யுணர்த்தும்.
3. ஆகுபெயர்-நியதிப்பெயராய் வரும்;
அன்மொழித்தொகை-நியதிப்பெயராய் வராது.
4. ஆகுபெயர்-தொன்றுதொட்டு வரும்;
அன்மொழித்தொகை-யாதாயினும் ஒரு காரணத்தாற் புதிது புதிதாக உண்டாக்கப்பட்டு வரும்.

வேற்றுமை.

135. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.

உரை:—ஏற்கும்-(தம்மை) ஏற்றுக்கொள்ளுதற்கு உரிய, எவ்வகை பெயர்க்கும்-எல்லா வகைப்பட்ட பெயர்களுக்கும், ஈறு ஆய்-இறுதியில் வருவனவாய், பொருள்-(அப்பெயர்களின்) பொருளை, வேற்றுமை செய்வன-வேறு படுத்துவனவாகிய, வேற்றுமை-வேற்றுமைகள், எட்டே-எட்டேயாகும்.

[வேற்றுமைகளின் பெயரும் முறையும்.]

136. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

உரை:—அவற்றின் - அவ்வேற்றுமைகளினுடைய, பெயர்-பெயர்களும், முறை-முறையுமாவன:—(1) பெயரே-பெயரும், (2) ஐ-ஐயும், (3) ஆல்-ஆலும், (4) கு-குவ்வும், (5) இன்-இன்னும், (6) அது-அதுவும், (7) கண்-கண்ணும், (8) விளி-விளியும், என்று ஆகும்-என்று இப்படிச் சொல்லப்பெற்றவையாகும்.

['ஐ' முதலிய வேற்றுமையுருபுகளை ஏற்காத பெயர்கள்.]

137. நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.

உரை:—நீயிர் நீவிர்-'நீயிர்', 'நீவிர்' என்னும் முன்னிலைப் பெயர்களும், நான்-'நான்' என்னும் தன்மைப்பெயரும்,—எழுவாய் அல-எழுவாய் அல்லாத மற்றைய ஏழு வேற்றுமையுருபுகளை, பெறா-பெற்றுவாராவாம்.

'நும்மை', 'நும்மால்', 'உம்மை', 'உம்மால்' முதலியன-'நீர்' என்னும் முன்னிலைப்பெயரின் வேற்றுமைகள்; 'என்னை', 'என்னால்' முதலியன-'யான்' என்னும் தன்மைப்பெயரின் வேற்றுமைகள்; ஆதலால் நீயிர், நீவிர், நான் இம்மூன்றும் எழுவாய் வேற்றுமையை மாத்திரம் ஏற்கும் என்றார்.

[முதல் வேற்றுமை.]

138. அவற்றுள்,
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினக்கொள லதன்பய னிலையே.

உரை:—அவற்றுள்-முன்சொல்லப்பெற்ற எட்டு வேற்றுமைகளுள்,—எழுவாய் உருபு-முதல் வேற்றுமையின் உருபாவது, திரிபு இல்-('ஐ' முதலிய உருபேற்றுத்) திரிதலில்லாத (அதாவது இயல்பாய் நிற்கிற), பெயரே-பெயரேயாம்; வினை-வினையையும்; பெயர்-பெயரையும், வினா-வினாவையும், கொளல்-கொள்ளவருதல்,-அதன்-அவ்வுருபினது, பயனிலை-பயனிலையாம்.

(உ-ம்.) இராமன் வந்தான், அவன் பெரியன்-[வினைகொள வந்தன.]
யானை நூறு, அரசன் இவன்—[பெயர்கொள வந்தன]
அவன் யார்? ஆ யாது? —[வினாக்கொள வந்தன.]

எழுவாய் வேற்றுமைக்கென்று தனியே உருபுகள் இல்லை; என்றாலும் 'உரையிற்கோடல்' என்னும் உத்தியால் ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்றவன், என்கின்றவன், என்பவன் முதலிய ஐம்பாற்சொற்களும் சொல்லுருபுகளாக வரும் என்று கொள்க. [சொல்லுருபாவது-சொல்லே உருபாய் வருவது.]

(உ-ம்.) இராமனானவன், சீதையானவள், சாத்தரானவர், யானையானது, யானையானவை என வரும். பிறவுங் காண்க.

இவ்வேற்றுமையின் பொருள் கருத்தாப்பொருள். கருத்தா, எழுவாய்வேற்றுமை, முதல்வேற்றுமை, பெயர் வேற்றுமை, வினைமுதல், செய்பவன் என்பன ஒரு பொருட்சொற்கள். கருத்தாப் பொருளாவது:—தொழிலிற் சுதந்தரமுடைய பொருளாம்; 'இராமன் வந்தான்' என்றதில் 'இராமன்' வருகைத்தொழிலிற் சுதந்தரமுடையனாதல் காண்க.

கருத்தா-இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இருவகைப் படும். இயற்றுதற்கருத்தா:—தானே நேராகச் செய்வது; ஏவுதற் கருத்தா:—தானே நேராகச் செய்யாமல் வேறு ஒருவனைக் கொண்டு செய்விப்பது.

(உ-ம்.) தச்சன் கோயிலைக் கட்டினான்—இயற்றுதற்கருத்தா.
அரசன் கோயிலைக் கட்டினான்—ஏவுதற்கருத்தா.

இனி, இது தோன்றா எழுவாயாக வருதலும் உண்டு; (உ-ம்.) 'சொல்லாயோ இராமா' என்றவிடத்து 'நீ' என்பது தோன்றா எழுவாய். (எழுவாய் தொக்கது.)

[இரண்டாம் வேற்றுமை.]

139. இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்க லழித்த லடைதல் நீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

உரை:—இரண்டாவதன்-இரண்டாம் வேற்றுமையினது, உருபு-உருபாவது,— ஐயே-'ஐ' ஒன்றுமேயாம்; அதன் பொருள்-அதனுடைய பொருள்களாவன:— ஆக்கல்-ஆக்கப்படுபொருளும், அழித்தல்-அழிக்கப்படுபொருளும், அடைதல்-அடையப்படுபொருளும், நீத்தல்-நீக்கப்படுபொருளும், ஒத்தல்-ஒக்கப்படுபொருளும், உடைமை-உடைமைப் பொருளும், ஆதி ஆகும்-முதலியனவாம்.

(உ-ம்.) குடத்தை வனைந்தான்—ஆக்கப்படுபொருள்.
கோட்டையை இடித்தான்—அழிக்கப்படுபொருள்.
ஊரை அடைந்தான்—அடையப்படுபொருள்.
வீட்டை விட்டான்—நீக்கப்படுபொருள்.
புலியைப் போன்றான்—ஒக்கப்படுபொருள்.
பொன்னை உடையான்—உடைமைப்பொருள்.

எனவே, இவ்வேற்றுமையின் பொருள் செயப்படுபொருளாம். செயப்படுபொருளாவது:—கருத்தாவின் தொழிலின் பயனை யடைவது. 'குடத்தைச் செய்தான்' என்றதில், 'செய்தல்' கருத்தாவினது தொழில்; 'உருவம் அமைதல்' அத்தொழிலின் பயன்; அப்பயனை யடைவது குடம்; ஆதலால் 'குடம்' செயப்படுபொருள்.

செயப்படுபொருள்,—செய்பொருள், கருமம், காரியம் எனவும் பெயர் பெறும்.

சில இடங்களில் (தன்வினை பிறவினைகட்கு) இரண்டு செயப் படுபொருள்கள் வருதலுமுண்டு; (உ-ம்.) பசுவைப் பாலைக் கறந் தான்; அரசன் பகைவரைச் சிறைச்சாலையை யடைவித்தான்.

'ஆதி' யென்றதனுல், விரும்பப்படுதலும் அறியப்படுதலும் கொள்க; (உ-ம்.) வீட்டை விரும்பினுன்; நூற்பொருளை அறிந்தான்.

[மூன்ரும் வேற்றுமை.]

140. மூன்ரு வதனுருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.

உரை:—மூன்ருவதன்-மூன்ரும் வேற்றுமையினுடைய, உருபு-உருபுகளாவன,—ஆல் ஆன் ஒடு ஓடு-இந்த நான்குமாம்; அதன் பொருள்-அதனுடைய பொருள்களாவன:—கருவி-கருவிப்பொருளும், கருத்தா-கருத்தாப்பொருளும், உடனிகழ்வு-உடனிகழ்ச்சிப் பொருளுமாம்.

(உ-ம்.) வாளால் வெட்டினுன்.
வாளான் வெட்டினுன். }—கருவிப்பொருள்.

அரசனுல் ஆகிய கோவில்.
அரசனுன் ஆகிய கோவில். }—கருத்தாப்பொருள்.

தந்தையோடு மைந்தன் வந்தான்.
தந்தையொடு மைந்தன் வந்தான். }—உடனிகழ்ச்சிப் பொருள்.

உருபுகளையும் பொருள்களையும் பொதுவாகக் கூறினுராயினும், 'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்தியால், 'ஆல், ஆன்' உருபுகள் கருவி கருத்தாப்பொருள்களிலும், 'ஒடு, ஓடு' உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருதல் சிறப்பு எனக்கொள்க.

கருவியாவது—கருத்தாவின் தொழிலுக்குச் சாதனமாயிருப்பது. 'வாளால் வெட்டினுன்' என்றதில், 'வெட்டுதல்' கருத்தாவின் தொழில்; அவ்வெட்டுதலுக்குச் சாதனமாயிருப்பது 'வாள்': ஆதலால், அது-கருவிப்பொருளாம். அக்கருவி—'முதற்கருவி, துணைக்கருவி' என இரண்டு வகைப்படும். முதற்கருவியாவது—காரியமாக மாறி அதினின்றும் வேறுபடாதது; (உ-ம்) மண்ணுல் குடத்தை வனைந்தான்-[மண்-முதற்கருவி]. துணைக்கருவியாவது-முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் நின்று பின்பு பிரிவது; (உ-ம்) தண்டசக்கரத்தால் குடத்தை வனைந்தான்.-[தண்டசக்கரம்-துணைக்கருவி]. [முதற்கருவி=முதற்காரணம். துணைக்கருவி=துணைக்காரணம்] (சூ. 2).

கருத்தா இன்னதென்பது முதல் வேற்றுமைச் சூத்திரவுரையிற் காட்டப்பட்டது. இதுவும்-இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இரண்டுவகைப்படும்;

(உதாரணம்.)

தச்சனாற் கோயில் கட்டப்பட்டது—[தச்சன்-இயற்றுதற்கருத்தா.]
அரசனாற் கோயில் கட்டப்பட்டது—[அரசன்-ஏவுதற்கருத்தா.]

முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும், மூன்றாம்வேற்றுமைக்கருத்தாவுக்கும் உள்ள வேறுபாடு:—

1. முதல்வேற்றுமைக்கருத்தா-தன்விகுதி வினையினால் முடியும்; மூன்றாம்வேற்றுமைக் கருத்தா-செயப்படுபொருளின் விகுதி வினையினால் முடியும்;

2. முதல்வேற்றுமைக் கருத்தாவின் வினை-செய்வினையாயிருக்கும்; மூன்றாம்வேற்றுமைக் கருத்தாவின் வினை-செயப்பாட்டு வினையாயிருக்கும்;

3. முதல்வேற்றுமைக் கருத்தாவுக்குச் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாயிருக்கும்; மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவுக்குச்செயப்படுபொருள் முதல் வேற்றுமையாயிருக்கும்; (உ-ம்.)
தச்சன் கோயிலைக் கட்டினான்—[முதல்வேற்றுமைக்கருத்தா.]
தச்சனாற் கோயில்கட்டப்பட்டது-[மூன்றாம்வேற்றுமைக் கருத்தா]

உடனிகழ்ச்சிப்பொருளாவது-வினைகொண்டு முடிகிற பொருளினது தொழிலைத் தன்னிடத்தும் உடன் [ஒரேகாலத்தில்] நிகழ்கின்றதாக உடையது; 'தந்தையோடு மகன் வந்தான்' என்றதில், 'மகன்' வினைகொண்டு முடிகிற பொருள்; 'வருதல்' அப்பொருளினது தொழில்; அத்தொழிலைத் தன்னிடத்தும் உடன்நிகழ்கிறதாக உடைய பொருள் 'தந்தை'; ஆதலால், அது-உடனிகழ்ச்சிப் பொருள்.

சிறுபான்மை ஆல் ஆன் உருபுகள்-உடனிகழ்ச்சிப் பொருளிலும், ஒடு ஓடு உருபுகள் கருவி கருத்தாப்பொருள்களிலும் வரும்;

(உ-ம்.) 'தூங்குகையா லோங்கு நடைய', 'உறழ்மணியானுயர் மருப்பின'—கையால்-கையோடு, மணியான்-மணியோடு என 'ஆல்', 'ஆன்' உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தன.

'கொடியோடு துவக்குண்டான்', 'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்'—கொடியோடு-கொடியால், ஊசியொடு-ஊசியால் என 'ஒடு', 'ஓடு' உருபுகள் கருவிப்பொருளில் வந்தன.

சிலவிடத்து 'ஆல்', 'ஆன்' உருபுகள் 'தோறும்' என்ற பொருளையும், 'ஒடு ஓடு' உருபுகள் அடைமொழிப் பொருளையுந் தரும்;

(உ-ம்.) ஊரானொருகோயில்—[-ஊர்தோறும்.]

கோபத்தோடு வந்தான்—['கோபம்' வருவதற்கு அடைமொழி.]

கருவிப்பொருளில் 'கொண்டு' என்பதும், உடனிகழ்ச்சிப் பொருளில் 'உடன்' என்பதும் சொல்லுருபாக வரும்;

(உ-ம்.) வாள்கொண்டு வெட்டினான்; மகனுடன் தந்தை வந்தான்.

[நான்காம் வேற்றுமை.]

141. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

உரை:—நான்காவதற்கு-நான்காம் வேற்றுமைக்கு, உருபு-உருபாவது,—குவ்வே ஆகும்-'கு' ஒன்றுமே யாகும்; பொருள்-அதன் பொருள்களாவன:—கொடை-கொடுத்தலும், பகை-பகையும், நேர்ச்சி-நட்பும், தகவு-தகுதியும், அது ஆதல்-அதுவாதலும், பொருட்டு-பொருட்டும், முறை-உறவுமுறையும், ஆதியின்-முதலான பொருள்களில், இதற்கு இது எனல்-இதற்கு இது என்பதுபட வருதலாம்.

கொடை யெனவே	—கொள்ளுதற்பொருளும்,	'கு' உருபின் பொருள்களாம்.
பகை யெனவே	—பகைதொடர்பொருளும்,	
நேர்ச்சி யெனவே	—நட்புத்தொடர்பொருளும்,	
தகுதி யெனவே	—தகுதியுடைப்பொருளும்,	
அதுவாதல் எனவே	—முதற்காரணகாரியப் பொருளும்,	
பொருட்டு எனவே	—நிமித்தகாரண காரியப் பொருளும்,	
முறை யெனவே	—முறைக்கு இயை பொருளும்,	

யாசகர்க்குப் பொன்னைக் கொடுத்தான்	-கொள்ளுதற்பொருள்.
பாம்புக்குப் பகை கருடன்	-பகைதொடர்பொருள்.
இராமனுக்கு நண்பன் குஹன்	-நட்புத்தொடர்பொருள்.
அரசர்க்கு இவ்வாபரணம் உரியது	-தகுதியுடைப்பொருள்.
குண்டலத்திற்குப் பொன்	-முதற்காரண காரியப்பொருள்.
கூலிக்கு வேலை செய்தான்	-நிமித்தகாரணகாரியப்பொருள்.
தசரதனுக்கு மகன் இராமன்.	-முறைக்கியைபொருள்.

'ஆதி' என்றதனால், எல்லைப்பொருளில் வருதலுங்கொள்க. (உ-ம்.) மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்; இராமனுக்குச் சிறந்தவன் கிருஷ்ணன்.

கொள்ளுதற்பொருளாவது-கொடுக்கப்படுவதைக் கொள்ளுதலையுடைய பொருள். பகைதொடர்பொருளாவது-ஒரு பொரு

ளினிடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருள். நட்புத் தொடர்பொருளாவது-ஒரு பொருளினிடத்துள்ள நட்புத்தொடர் தற்கு இடமாகிய பொருள். தகுதியுடைப்பொருளாவது-தன்னோடு பொருந்துவதற்குத் தகுதியாகிய பொருளையுடைய பொருள். முதற் காரண காரியப்பொருளாவது-முதற்காரணத்தாலாகும் பொருள். நிமித்தகாரணகாரியப்பொருளாவது-நிமித்த காரணத்தால் ஆகும் பொருள். முறைக்கியை பொருளாவது-பிறப்பினால் ஒரு பொரு ளின் முறைக்குத்தான் இயைந்து நிற்கும் பொருள்.

பொருட்டுப்பொருளில் 'கு' உருபு நிற்றற்குரிய சில இடங் களில் 'பொருட்டு, நிமித்தம்' என்பவையும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும் சொல்லுருபுகளாக வரும்; (உ-ம்.) கூழின்பொருட்டு வேலை செய்தான்; கூலியின்நிமித்தம் வேலை செய்தான்; கூலிக்காக வேலை செய்தான்.

[ஐந்தாம் வேற்றுமை.]

142. ஐந்தா வதனுரு பின்னு மில்லும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

உரை:—ஐந்தாவதன்-ஐந்தாம் வேற்றுமையினுடைய, உருபு-உருபுகளாவன,—இன்னும் இல்லும்-'இன்' என்பதும் 'இல்' என் பதும் ஆம்; பொருள்-அதன் பொருள்களாவன:—நீங்கல்-நீக்கப் பொருளும், ஒப்பு-ஒப்புப்பொருளும், எல்லை-எல்லைப்பொருளும், ஏது-ஏதுப்பொருளுமாம்.

(உ-ம்.) மலையின் வீழருவி —நீக்கப்பொருள்.
காக்கையிற் கரிது களம்பழம் —ஒப்புப்பொருள்.
மதுரையின் வடக்குச் சிதம்பரம்—எல்லைப்பொருள்.
கல்வியிற் பெரியன் கம்பன் —ஏதுப்பொருள்.

எல்லைப்பொருள்—திசையளவு, வழியளவு, காலஅளவு, பண் பளவு இந்நான்கையும் பற்றி வரும்; (உ-ம்.)

மதுரையின் வடக்குச் சிதம்பரம் ... —திசையளவு.
கச்சியில் திருத்தணிகை முக்காவதம் ... —வழியளவு.
இராமனில் இரண்டாண்டு மூத்தவன் குகன் —காலவளவு.
அரசரிற் பெரியர் அந்தணர் ... ... —பண்பளவு.

'காக்கையிற் கரிது' என்பதில் 'காக்கை போல' எனப்பொருள் கொண்டால், ஒப்புப்பொருள்; இதனை 'உவமைப்பொருவு' என் பர். 'காக்கையைக் காட்டிலும்' எனப் பொருள் கொண்டால், எல்லைப்பொருள்; இதனை 'உறழ்பொருவு' என்பர்.

நீக்கப்பொருளாவது—பிரிவையுண்டாக்குந் தொழிலின்றிப், பிரிவை மாத்திரம் தன்னிடத்துடைய பொருள். ஒப்புப்பொருளாவது—உபமேயப்பொருளிலும், தன்னிலும் இருக்கின்ற பொதுத்தன்மையால் உபமானமாகும் பொருள். எல்லைப்பொருளாவது—அறியப்படாத பொருளினது திசையளவு, வழியளவு, காலவளவு, பண்பு முதலியவற்றைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருள். ஏதுப்பொருளாவது—ஒரு பொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும் பொருள்.

நீக்கப்பொருளிலும் எல்லைப்பொருளிலும் இன் இல் உருபுகளின்மேல் 'நின்று, நின்றும், இருந்து, இருந்தும்' என்பவை சொல்லுருபுகளாக வரும்; (உ-ம்.)

ஊரினின்று நீங்கினான், ஊரினின்றும் நீங்கினான். } நீக்கப்
ஊரிலிருந்து போயினான், ஊரிலிருந்தும் போயினான். } பொருள்.
காட்டினின்று ஊர்காதம், காட்டினின்றும் ஊர்காதம். } எல்லைப்
காட்டிலிருந்துஊர்காதம், காட்டிலிருந்தும்ஊர்காதம், } பொருள்.

[ஆறும் வேற்றுமை]

143. ஆற னொருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்பு உறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

உரை:—ஆறன் ஒருமைக்கு-ஒருமையாகிய வருமொழியையுடைய ஆறும் வேற்றுமைக்கு, அதுவும் ஆதுவும்-அது என்பதும் ஆது என்பதும், பன்மைக்கு-பன்மையாகிய வருமொழியையுடைய ஆறும் வேற்றுமைக்கு, அவ்வும்-'அ' என்பதும், உருபு ஆம்-உருபுகளாம்; பொருள்- (அதன்) பொருள்களாவன:— பண்பு-(குணமும் தொழிலுமாகிய)பண்பும், உறுப்பு-அவயவமும், ஒன்றன் கூட்டம்-ஒரு பொருட்கூட்டமும், பலவின் ஈட்டம்-பலபொருட் கூட்டமும், திரிபின் ஆக்கம்-ஒன்று திரிந்து மற்றொன்று ஆதலும், ஆம்-ஆகிய, தற்கிழமையும் (ஐந்து)தற்கிழமைப் பொருளையும், பிறிதின் கிழமையும்-(அவையல்லாத பொருள் இடம் காலம் ஆகிய மூன்று)பிறிதின் கிழமைப் பொருளையும், பேணுதல்-உடையனவாய் வருதலாம்.

'தற்கிழமை'-தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் சம்பந்தம்; 'பிறிதின்கிழமை'-தன்னின் வேறுபட்ட பொருளின் சம்பந்தம். ஆறும் வேற்றுமையின் பொருள் சம்பந்தப் பொருளே என்க.

(உ-ம்) இராமனது கருமை } குணப் } -பண்புத் தற்கிழமை.
இராமனது வரவு } தொழிற் }
இராமனது கை } - உறுப்புத் தற்கிழமை.
புலியது வால் }
மாந்தரது தொகுதி } - ஒன்றன்கூட்டத் தற்கிழமை.
நெல்லது குப்பை }
படைகளது தொகுதி } - பலவினீட்டத் தற்கிழமை.
பறவைகளது கூட்டம் }
நெல்லினது பொரி } - திரிபின் ஆக்கத் தற்கிழமை.
மஞ்சளது பொடி }
இராமனது பசு } - பொருட் பிறிதின்கிழமை.
முருகனது வேல் }
இராமனது வீடு } - இடப் பிறிதின்கிழமை.
முருகனது குறிஞ்சி }
இராமனது நாள் } - காலப் பிறிதின்கிழமை.
மாரனது வேனில் }

எனது கை, நினது வரவு, தனது பொருள் —'ஆது' உருபு.
என கைகள், தன பொருள்கள், நின வீடுகள்—'அ' உருபு.

சிறுபான்மை 'அது' உருபு வருமொழி பன்மையாயிருக்கும் பொழுதும் வரும்; (உ-ம்) எனது கைகள்; நினது அடியார்.

இவ்வேற்றுமைக்குத் தற்கிழமை பிறிதின்கிழமையேயன்றி 'ஒற்றுமைக்கிழமை' என ஒன்றும் உண்டு; (உ-ம்.) எனது உயிர்; இராகுவினது தலை; பூமியினது தலம். [யான் என்பதும் உயிர் என்பதும், இராகு என்பதும் தலை யென்பதும், பூமியென்பதும் தலம் என்பதும், ஒரேபொருளாதலால், இவை-ஒற்றுமைக்கிழமை.]

இவ்வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபாக வரும்; (உ-ம்.) என்னுடைய வீடு; இராமனுடைய தம்பி.

குறிப்பு:—'இவ்வீடு எனது'—இதில், எனது என்பது துவ் விகுதியும் அகரச்சாரியையும் பெற்றுநின்ற குறிப்புவினைமுற்று; 'இராமனது வந்தது' என்பதில், மேற்கூறியபடிவந்த குறிப்பு வினையாலணையும்பெயர்; ஆறனுருபன்று.

[ஏழாம் வேற்றுமை.]

144. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

உரை:—ஏழன் உருபு-ஏழாம் வேற்றுமையின் உருபுகளாவன:-கண் ஆதிஆகும்-கண் முதலியனவும் பிறவுமாம்; இதன் பொருள்-இதனுடைய பொருளாவது:—பொருள் முதல் ஆறும்-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களும், ஓர் இரு கிழமையின் தற்கிழமை பிறிதின்கிழமை என்னும் இரண்டு பொருள்களுக்கும், இடன் ஆய் நிற்றல்-இடமாகி நிற்றலாம், என்ப-என்று சொல்வர். (அறிவுடையோர்.)

எனவே, இவ்வேற்றுமையின் பொருள் இடப்பொருள் என்க.

(உதாரணம்.)

மணியின்கண் ஒளி —தற்கிழமை.	}	பொருள் இடமாயிற்று.
மரத்தின்கண் பறவை —பிறிதின்கிழமை.		
ஊரின்கண் வீடு —தற்கிழமை.	}	இடம் இடமாயிற்று.
ஆகாயத்தின்கண் பருந்து —பிறிதின்கிழமை.		
நாளின்கண் நாழிகை —தற்கிழமை.	}	காலம் இடமாயிற்று.
வேனிலின்கண் பாதிரி —பிறிதின்கிழமை.		
கையின்கண் விரல் —தற்கிழமை.	}	சினை இடமாயிற்று.
விரலின்கண் மோதிரம் —பிறிதின்கிழமை.		
கறுப்பின்கண் அழகு —தற்கிழமை.	}	குணம் இடமாயிற்று.
இளமையின்கண் செல்வம் —பிறிதின்கிழமை.		
ஆட்டத்தின்கண் அபிநயம் —தற்கிழமை.	}	தொழில் இடமாயிற்று.
ஆட்டத்தின்கண் பாட்டு —பிறிதின்கிழமை.		

'ஆதி' என்றதனால் குறித்த உருபுகள்:—கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல், பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் முதலானவை; உதாரணம் வந்த விடத்துக் காண்க.

இனிக், 'கண்' முதலியன இடவேறுபாடுகளை யுணர்த்துஞ் சொற்களாகவும் வரும்; (உ-ம்.) கண்ணகன் ஞாலம்; அகத்தில் இருந்தான்; புறத்திற்போனான்; மேற்சென்றான்.

[எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை.]

145. எட்ட னுருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம் பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

உரை:—எட்டன் உருபு-எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகளாவன,—எய்து பெயர்-(விளியை) அடையும் பெயரினது, (1) ஈற்றின் திரிபு-இறுதி திரிதலும், (2) குன்றல்-இறுதி கெடுதலும், (3) மிகுதல்-இறுதியில் ஓர் எழுத்து மிகுதலும், (4) இயல்பு-இயல்பாதலும், (5) அயல் திரிபும்-ஈற்றெழுத்துக்கு முந்தின எழுத்துத்திரிதலும், ஆம்-ஆகும்; பொருள்-பொருளாவது:—படர்க்கையோரை-படர்க்கை இடத்துப் பொருளை, தன் முகமாக-தனக்கு எதிர் முகமாக, அழைப்பது-அழைப்பதாம். [எனவே, 'விளிக்கப் படுபொருளே' இவ்வேற்றுமையின் பொருள் என்க.]

(உ-ம்.) 1. தந்தை-தந்தாய், தோழி-தோழீ. —[ஈறுதிரிபு.]
2. அரசன்-அரச, சோழன்-சோழ. —[ஈறுகுன்றல்.]
3. மகன் -மகனே, தந்தை-தந்தையே. —[மிகுதல்.]
4. நம்பி, தோழி, இராமன், விடலை, நங்கை.—[இயல்பு.]
5. மக்கள்-மக்காள், புலவர்-புலவீர். —[அயல்திரிபு.]

இவற்றில் பல உருபுகளை ஓரிடத்தே ஏற்று வருதலும் உண்டு;

(உ-ம்.) அப்பன்-அப்பா, [ஈறுகுன்றலும், அயல்திரிபும்.]

ஐயன்-ஐயாவே [ஈறுகுன்றலும், அயல்திரிபும், மிகுதலும்.]

சிலவிடத்து அளபெடையும் விளியுருபாம்; (உ-ம்.) வேள்-வேஎள், அம்மான்-அம்மாஅன்.

குறிப்பு:—'படர்க்கை...அழைப்பதுவே' என்றதனால், 'யான் யாம், நாம்' முதலிய தன்மைப் பெயர்களும், 'நீ, நீர், எல்லீர்' முதலிய முன்னிலைப் பெயர்களும் விளியுருபேலாமை காண்க.

[விளியுருபுகளுக்குப் புறனடை.]

146. அண்மையி னியல்புமீ றழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவு மாகும்.

உரை:—அண்மையின்-சமீபத்திலிருக்கிற பொருளை யழைக்குமிடத்து, இயல்பும்-இயல்பாதலும், ஈறு அழிவும்-ஈறு கெடுதலும், சேய்மையின்-தூரத்திலிருக்கிற பொருளை யழைக்குமிடத்து, அளபும்-அளபெடுத்தலும்; புலம்பின்-அழுகையில் ஒரு பொருளை யழைக்குமிடத்து, ஓவும்-ஓகாரம் மிகுதலும், ஆகும்-வரும்.

அண்மைவிளி —தம்பி, அரச.
சேய்மைவிளி —மாஅல், சிறுஅர்.
புலம்பல்விளி —அப்பாவோ.

மற்றைவிளியுருபுகள் இம்மூன்றிடத்துங் கலந்து வருமென்க.

[விளிக்கப்படாத பெயர்கள்.]

147. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாம்தான் இன்னன விளியா.

உரை:—நுவ்வொடு-'நு' என்பதையும், வினா-(எ, யா, ஏ என்னும் மூன்று முதல்) வினாவையும், சுட்டு-(அ, இ, உ என்னும் மூன்று) சுட்டையும், உற்ற-(முதலாகப்) பொருந்திய, னளர-ன ள ர என்னும் மூன்று மெய்யீற்று உயர்திணைப்பெயர்களும், வை து-வை து என்கிற இரண்டு ஈற்று அஃறிணைப் பெயர்களும், தாம் தான்-தாம் தான் என்னும் இரண்டு பொதுப்பெயர்களும், இன்னன-இவைபோல்வனபிறவும், விளியா-விளிக்கப்படுவனவல்ல.

ன ள ர-அன், அள், அர் விகுதிகள். வை, து என்கிற இரண்டும் நுவ்வொடு பொருந்தா; அதனால்அதனை 'ஒடு' கொடுத்துப்பிரித்தார்.

வருமாறு:—நுமன், நுமள், நுமர். அவன், அவள், அவர்.
எவன், எவள், எவர். இவன், இவள், இவர்.
யாவன், யாவள், யாவர். உவன், உவள், உவர்.
ஏவன், ஏவள், ஏவர். அவை, அது.
எவை, எது. இவை, இது.
யாவை, யாது. உவை, உது.
ஏவை, ஏது. தாம், தான்.

தன்மை முன்னிலைப்பெயர்கள் விளியுருபு ஏலாமையை முன்னர்க் கூறினமையின் (சூ. 145.) இங்குப் படர்க்கைப் பெயர்களுள் விளியுருபு ஏலாதவற்றைக் கூறினார். 'இன்னன' என்றதனால்—பிறன், மற்றையான், (ஐம்பாலிலும் ஒட்டுக) எல்லாம் முதலியனவும் விளியேலா என்க.

[முதற்பெயர் சினைப்பெயர்களின் வேற்றுமை.]

148. முதலை ஐ உறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கு ஐ ஆகும்.

உரை:—முதலை-முதற்பெயரை, 'ஐ' உறின்-ஐ உருபு பொருந்தினால், சினையை-சினைப்பெயரை, கண் உறும்-கண்ணுருபு பொருந்தும்; அது-'அது' என்னும் உருபு, முதற்கு-முதற்பெயர்க்கு, ஆயின்-வந்தால், சினைக்கு ஐ ஆகும்-சினையினுக்கு ஐ யுருபு வரும்.

(உ-ம்.) யானையைக் காலின்கண் வெட்டினான்.
யானையது காலை வெட்டினான்.

'இனி, 'இரட்டுறமொழிதல்' என்னும் உத்தியால், 'அது முதற்கு ஆயின்' என்பதற்கு, 'கண்' உருபு முதற்பெயர்க்கு வந்தால் எனவும் பொருள் கொள்ளலாம்; (உ-ம்.) யானையின்கண் காலை வெட்டினான்.

எனவே, முதல் சினை இரண்டினும் 'ஐ' உருபு வருதல் சிறப்பன்று என்க. முதல் சினை என்பவை சொல்வான் குறிப்பில் அடங்கும்.

[உருபு மயக்கம்.]

149. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

உரை:—யாதன் உருபின் கூறிற்று ஆயினும்-எந்த வேற்றுமை உருபால் (எந்த வேற்றுமைப் பொருள்) சொல்லப்பட்டதாயினும்,—(உருபு சென்ற வழியே பொருள் சேராமல்) பொருள் செல் மருங்கின்-அப்பொருள் சென்ற வழியே, வேற்றுமை சாரும்-அவ்வுருபு சேரும்.

எனவே, 'பொருளுக்கு இயையாமல் மாறி வருவதைப் பொருளுக்கு இயைந்த உருபாகத் திரித்துக்கொள்க' என்பதாம். உருபுமயக்கம் எனினும் வேற்றுமைமயக்கம் எனினும் ஒக்கும்* மயக்கம்-மாறுதல்.

(உதாரணம்:)

1. 'காலத்தினாற் செய்த நன்றி'—இங்குக், 'காலம் 'கருவி கருத்தாப் பொருளாகாமல், இடப்பொருளாய் நிற்றலின் 'காலத்தின் கண் செய்த' என ஆல் உருபைக் 'கண்' உருபாகத் திரித்துக் கொள்க. 99-ஆஞ் சூத்திரத்தில், 'அல்வழியான்' என்றது—அல்வழியில் எனப்பொருள் படுதலும் இது.

2. 'புலியோடு ஒத்தான்'—இங்குப் 'புலி' உடனிகழ்ச்சிப் பொருளாகாமல், செயப்படுபொருளாய் நிற்கையால் 'புலியை' என 'ஒடு' உருபை 'ஐ' உருபாகத் திரித்துக்கொள்க.

3. 'இந்நகர்க்கே வாழ்கின்றோம்'—இங்கு, 'நகர்' ஏற்றுக்கொள்ளுதற் பொருளாகாமல், இடப்பொருளாய் நிற்றலின் 'நகர்க்கண்'

---

*உருபுமயக்கத்தையும், வேற்றுமைமயக்கத்தையும் வேறு படுத்திக் கூறுவதும் உண்டு. உருபுமயக்கமாவது—ஒரு வேற்றுமையின் பல உருபுகளில், ஒருருபு குறிக்கவேண்டிய பொருளை, அவ்வேற்றுமையின் மற்றோருருபு குறிப்பது; வேற்றுமைமயக்கமாவது—ஒரு வேற்றுமையின் உருபு நிற்கவேண்டியவிடத்து மற்றொரு வேற்றுமையின் உருபு தகுதிபட வந்து நிற்பது.

எனக் 'கு' உருபைக் 'கண்' உருபாகத் திரித்துக்கொள்க. 91-ஆஞ் சூத்திரத்தில் 'வேற்றுமைக்கு', 'அல்வழிக்கு' என்பன—வேற்றுமையில் அல்வழியில் எனப் பொருள்படுதலும் இது.

[இது தொல்காப்பியச்சூத்திரம்.]

இனி, உரையிற்கோடல் என்னும் உத்தியால், ஒரு வேற்றுமைப்பொருள் மற்ற வேற்றுமை யுருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டெனக்கொள்க. அவை வருமாறு:—

சூத்திரம்:—1. ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு
வருமே வினைமுத லெனவகுத் தனரே.

(உ-ம்.) அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம்: 4—கு. அவாது வரவு: 6—அது.

சூ. 2. எல்லா வுருபொடுஞ் செயப்படு பொருளெழும்.

(உ-ம்.) சோறு அடப்பட்டது: எழுவாய். அரிசியாற்சோறாக்கினான்: 3—ஆல். அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம்: 4—கு. பழியின் அஞ்சும்: 5—இன். நூலது குற்றங் கூறினான்: 6—அது. தூணின்கட் சார்ந்தான்: 7—கண்.

சூ. 3. ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்.

(உ-ம்.) கண் காணும்: எழுவாய். கண்ணிற்குக் காணலாம்: 4—கு. கண்ணது காட்சி: 6—அது.

சூ. 4. எல்லா வுருபொடுங் கொள்வோ னெழுமே.

(உ-ம்.) இரப்பவர் என்பெறினும் கொள்வர்: எழுவாய். செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்: 2—ஐ. நாகராற்பலி: 3—ஆல். நாகரினன்புசெய்தான்: 5—இன். நாகரதுபலி: 6—அது. நாகர்கண் அன்புசெய்தான்: 7—கண்.

சூ. 5. இரண்டுநான் கைந்தொடு மெழுமே நீக்கம்.

(உ-ம்.) மதுரையை நீங்கினான்: 2—ஐ. (நீக்கப்பொருள்) மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்: 4—கு. (எல்லைப்பொருள்).

சூ. 6. நான்கைந் தாறே ழொடுகுறை நடக்கும்.

(உ-ம்.) இராமனுக்கு மகன்: 4—கு. மரத்தினீங்கின கொம்பு: 5—இன். உயிரின்கண் உணர்வு: 7—கண்.

சூ. 7. ஒன்றி ரண்டுநான் கேழா டிடமெழும்.

(உ-ம்.) தூண் போதிகை தொட்டது: எழுவாய். தூணைச் சார்ந்தான். 2—ஐ. இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊர்க்கு, வீட்டிற்கு, வருவன்: 4-கு,

[எட்டு வேற்றுமைகளுக்கும் முடிக்குஞ் சொல்.]

150. எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனூர் புலவர்.

உரை:—(1) எல்லை இன்னும்-எல்லைப்பொருளில் வரும் ஐந்தாம்வேற்றுமையும், அதுவும் - ஆறாம்வேற்றுமையும், பெயர் கொளும்-பெயரைக்கொண்டு முடியும்; (2) அல்ல-மற்றை எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம், வினைகொளும் - வினையைக் கொண்டு முடியும்; (3) நான்கு ஏழ்-நான்காம்வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும், இருமையும் - இரண்டையும் [வினையையும், வினையொடு பொருந்தும்பெயரையும்], புல்லும்-கொண்டுமுடியும்,பெரும் பாலும்,—என்மனூர் புலவர்-என்று சொல்வர் அறிவுடையோர்.

(உதாரணம்.)

1 மதுரையின் வடக்கு, இராமனது கை.	எல்லை இன்னும், அதுவும் பெயர் கொண்டன.

2. இராமன் வந்தான், இராமன் நல்லன். குடத்தை வனைந்தான், குடத்தை உடையன். வாளால் வெட்டினான், வாளால் வலியன். இராமனுக்குக் கொடுத்தான், இராமனுக்கு நல்லன். நோயின் நீங்கினான்; காக்கையிற்கரிது. அவைக்கண் இருந்தான், அவைக்கண் பெரியன். இராமா கொடு, இராமா வலியை	மற்றவை-தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைகளைக்கொண்டன.

3. பிணிக்கு மருந்து, மணியின்கண் ஒளி—நான்கும், ஏழும்—வினையேயன்றிப் பெயரையும் கொண்டன. [இவை, 'பிணிக்குக் கொடுக்கும் மருந்து,' 'மணியின்கண் இருக்கும் ஒளி' என வினையை வேண்டி நிற்றலின் வினையொடு பொருந்தும் பெயர்களாயின.]

'பெரும்பாலும்' என்றதனால்—வினைகொளற்குரியன சிறுபான்மை தொழிற்பெயரையும், வினையாலணையும்பெயரையும் கொண்டு முடிதலும், எழுவாய்வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரையும் வினாவையுங் கொண்டுமுடிதலுங் கொள்க. (உ-ம்.)

இராமன் வருதல் குடத்தைவனைந்தவன்.	வினைகொள்வன-தொழிற்பெயரையும் வினையாலணையும்பெயரையுங்கொண்டன
இராமன் அவன் இராமன் யாவன்.	எழுவாய்வேற்றுமை-பெயரையும் வினாவையுங் கொண்டது.

பரீக்ஷை வினாக்கள்:—113. சொல்லாவதுயாது? சொல்லுக்கும் பதத்திற்கும் வேறுபாடென்ன? 114. ஒருமொழிகளாவன யாவை? தொடர்மொழிகளாவன யாவை? பொதுமொழிகளாவன யாவை? 115. இருதிணை யென்பன யாவை? உயர்திணை யாவன யாவை? அஃறிணை யாவன் யாவை? உயர்திணை என்பதற்குப் பொருளென்னை? அஃறிணை என்பதற்குப் பொருளென்னை? மக்கள் தேவர் நரகர் என முறைப்படுத்தக் காரணமென்னை? உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறப்பெறும் இடங்களெவை? 116. ஐம்பால் என்பன யாவை? உயர்திணை யெத்தனை பாலையுடையது? 117. அஃறிணை எத்தனை பாலையுடையது? அஃறிணையில் பெண் ஆண் பாகுபாடு கொள்ளாதது எதனால்? பேடு எத்திணையில் அடங்கும்? 118. மூவிடம் என்பன யாவை? 119. வழக்காவன யாவை? இலக்கணமுடையது என்பதியாது? இலக்கணப்போலி என்பதியாது? மரூஉ என்பதியாது? இம்மூன்றும் யாதுகாரணம்.பற்றி இயல்பு வழக்கெனப்பட்டன? இடக்கரடக்கல் என்பதியாது? மங்கலமென்பதியாது? குழூஉக்குறி யென்பதியாது? இம்மூன்றும் யாதுகாரணம் பற்றித் தகுதிவழக்கெனப்பட்டன? 120. செய்யுளாவன யாவை? எழுவகைத் தாதுக்கள் என்பன எவை? 121. (இருதிணை ஐம்பாற் பொருளைக்) குறிப்பால் உணர்த்துவன எவை? வெளிப்படையால் உணர்த்துவன எவை? 122. சொல் எத்தனை வகைப்படும்? இயற்சொல் எத்தனை வகைப்படும்? திரிசொல் எத்தனை வகைப்படும்? 123. இயற்சொல்லாவன யாவை? இயற்சொல் என்பதற்குப் பொருளென்னை? செந்தமிழ்நாடு எனப்படுவது யாது? 124. திரிசொல்லாவன யாவை? திரிசொல் என்பதற்குப் பொருளென்னை? 125. திசைச்சொல்லாவன யாவை? கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டென்பன எவை? தமிழ் நிலத்தைச் சூழ்ந்த பதினேழ்நிலமென்பன எவை? 126. வடசொல்லாவன யாவை? வடசொல்லைத் திசைச்சொல்லில் அடக்காது வேறுகூறியது என்னை? 127. பெயர்ச்சொல்லாவதியாது? இடுகுறிமரபாவன யாவை? காரணக்குறி மரபாவன யாவை? இடுகுறி யாக்கமாவன யாவை? காரணக்குறி யாக்கமாவன யாவை? எழுத்தியலிற் கூறிய பெயரின் பொதுவிலக்கணத்துக்கும் பெயரியலிற் கூறிய பெயரின் பொதுவிலக்கணத்துக்குமுள்ள வேறுபாடு யென்ன? 128. அஃறிணையிற் பாற் பொதுவாய் வரும் பெயர்கள் யாவை? 129. தன்மைப் பெயர் நான்காவன எவை? முன்னிலைப்பெயர் ஐந்தாவன எவை? படர்க்கைப் பெயர்கள் எவை? மூன்றிடத்திற்கும் பொதுவான

பெயர் எது? 130. வினையாலணையும்பெயர்கள் எவ்விடத்திற் குரியனவாம்? மூவிடத்து எழுவாய்கட்குப் பயனிலையாய் வரும் தொழிற்பெயர் அவ்வவ்விடத்திற்கே உரியவாமோ? தொழிற் பெயருக்கும் வினையாலணையும்பெயருக்கும் வேறுபாடென்னை? 131. தான் முதலாகிய பன்னிரண்டு பொதுப்பெயர்களுள்ளும் இருதிணை முக்கூற்றொருமைப் பெயர்களெவை? இருதிணை யிரு கூற்றுப்பன்மைப் பெயர்களெவை? 132. உயர்திணையில் ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் எவ்வெண்ணால் வரும்? எவ்வெண் ணால் வாரா? 133. உயர்திணையிற் பாற்பொதுவாய் வரும் பெயர் யாது? ஒருவர் என்னும் பாற்பொதுப்பெயர் ஒருமைச் சொற் கொண்டுமுடியுமோ பன்மைச்சொற்கொண்டுமுடியுமோ? ஒருமைப் பெயர் உயர்த்தற்பொருட்டு எதனைப்பெற்று வரும்? உயர்த்தற் பொருட்டு 'ஆர்' என்னும் இடைச்சொல்லை யீற்றிற்பெற்று வரும் பெயர்கள் ஒருமைச் சொல்லோடு முடியுமோ பன்மைச்சொல்லோடு முடியுமோ? 134. ஆகுபெயர் என்றாலென்ன? அவ்வாகுபெயர் எத்தனை வகைப்படும்? ஆகுபெயர்கள் இன்னும் எவ்வெவ்வகையிற் பெயர்பெற்று வழங்கும்? உவமையாகுபெயராவதியாது? இருமடி யாகுபெயராவதியாது? மும்மடியாகுபெயராவதியாது? அடை யடுத்தவாகுபெயராவதியாது? பொருளாகுபெயர் இடவாகுபெயர் கருவியாகுபெயர் ' இவற்றிற்கு எதிரிடையாகுபெயர்களெவை? ஆகுபெயருக்கும் அன்மொழித்தொகைக்கும் உள்ளவேறுபாடியாது? 135. வேற்றுமையாவன யாவை? 136. எட்டுவேற்றுமைகளின் பெயரும் முறையும் எவை? 137. ஐ முதலிய உருபுகளையேலாத (எழுவாய்வேற்றுமை ஒன்றையே யேற்கும்) பெயர்களெவை? 138. எழுவாய்வேற்றுமையுருபு யாது? எழுவாய்க்கு வருஞ் சொல்லுருபுகளெவை? எழுவாயுருபின் பொருள் யாது? கருத்தாப் பொருளாவது யாது? இராமன் வந்தான்-என்னும் உதாரணத்தில், கருத்தாப்பொருட்குக் கூறிய இலக்கண மிருக்குமாறெங்ஙனம்? இயற்றுதற்கருத்தாவாவது யாது? ஏவுதற்கருத்தாவாவது யாது? 139. இரண்டாம் வேற்றுமை உருபுயாது? அவ்விரண்டாம் வேற் றுமை உருபிற்குப் பொருளென்னை? செயப்படுபொருளாவது யாது? 'குடத்தை வனைந்தான்' என்னும் உதாரணத்திற் செயப்படு பொருளுக்குக் கூறிய இலக்கணம் இருக்குமாறெங்ஙனம்? ஒரோ விடத்து இரண்டு செயப்படுபொருள் வருதலுண்டோ? 'ஆதி' என்றதனாற் கொள்ளப்படுவன யா? 140 மூன்றாம்வேற்றுமை உருபுகள் யாவை? அம்மூன்றாம் வேற்றுமை உருபுகளுக்குப் பொரு ளென்னை? எவ்வெவ்வுருபுகட்கு எவ்வெப் பொருள் சிறந்தன?

கருவியாவதியாது? அக்கருவி எத்தனை வகைப்படும்? முதற்கருவி யாவதியாது? துணைக்கருவியாவதியாது? முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்கும் உள்ள வேறுபாடென்னை? உடனிகழ்ச்சிப்பொருளாவது யாது? ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வாராவோ? ஒடு ஓடு உருபுகள் வினைமுதற் பொருள் கருவிப் பொருள்களில் வாராவோ? ஆல் ஆன் உருபுகள் கருவி முதலிய மூன்று பொருள்களிலன்றி வேறு பொருளில் வாராவோ? ஒடு ஓடு உருபுகள் வேறு பொருளில் வாராவோ? மூன்றும்வேற்றுமையின் சொல்லுருபுகளெவை? 141. நான்காம்வேற்றுமை உருபுயாது? அந்நான்காம்வேற்றுமை உருபிற்குப் பொருளென்னை? கொள்ளுதற்பொருளாவதியாது? பகைதொடர் பொருளாவதியாது? நட்புத்தொடர்பொருளாவதியாது? தகுதியுடைப் பொருளாவது யாது? முதற்காரண காரியப்பொருளாவதியாது? நிமித்தகாரண காரியப்பொருளாவதியாது? முறைக்கிளை பொருளாவதியாது? குவ்வுருபு வேறு பொருளில் வாராதோ? நான்காம் வேற்றுமையின் சொல்லுருபு களெவை? 142. ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் யாவை? அவ்வைந்தாம்வேற்றுமை உருபுகளுக்குப் பொருளென்னை? நீக்கப்பொருளாவதியாது? ஒப்புப் பொருளாவதியாது? எல்லைப்பொருளாவதியாது? ஏதுப்பொருளாவதியாது? எல்லைப் பொருள் எத்தனை வகைப்படும்? உவமைப் பொருவு என்றுலென்ன? உறழ்பொருவு என்றுலென்ன? ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளெவை? 143. ஆறும்வேற்றுமை உருபுகள் யாவை? அவ்வாறும் வேற்றுமையின் உருபுகளுக்குப் பொருளென்னை? தற்கிழமைப் பொருளாவதியாது? பிறிதின் கிழமைப் பொருளாவதியாது? ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபினுக்கம்-இவையெவை? ஆறனுருபு வேறு பொருளில் வருதலின்றோ? ஆறும் வேற்றுமையின் சொல்லுருபு எது? 144. ஏழாம் வேற்றுமை உருபுகள் யாவை? அவ்வேற்றுமை உருபுகளுக்குப் பொருளென்னை? ஆதி என்றதனுல் கொள்ளப்படும் உருபுகள் யா? 145. எட்டாம்வேற்றுமை உருபுகள் யாவை? அவ்வெட்டாம் வேற்றுமை உருபுகளுக்குப் பொருளென்னை? 146. எவ்வெவ் விளியுருபுகள் எவ்வெவ்விடத்தில் வரும்? 147. விளிக்கவாராத பெயர்களெவை? 148. முதலுஞ்சினையுந் தொடர்ந்து வரும் போது, அவ்விரண்டிலும் வேற்றுமையுருபுகள் எவ்வாறு வரும்? 149. உருபுமயக்கமாவதியாது? வேற்றுமைமயக்கத்திற்கும், உருபு மயக்கத்திற்கும் வேறுபாடென்னை? எவ்வெப்பொருளுக்கு எவ்வெவ்வேற்றுமை வரும்? எப்படி? 150. உருபுகளுள், பெயரைக்

கொண்டு முடிவன எவை? வினையைக்கொண்டு முடிவன எவை? இரண்டையுங் கொண்டு முடிவன எவை? வினைகொளற்குரியன பிறகொண்டு முடிதலின்றோ? எழுவாய்வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிப் பிறகொண்டு முடிதலின்றோ? 'பெரும்பாலும்' என்றதனாற் கொள்ளப்படுவன யா?

பெயரியல் முற்றிற்று.

2. வினையியல்.

[வினைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறும் இயல்.]

வினைச்சொல்.

[தெரிநிலைவினை.]

151. செய்பவன் கருவி நிலஞ் செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

உரை:—செய்பவன்-கருத்தாவும், கருவி-கருவியும், நிலம்-இடமும், செயல்-தொழிலும், காலம்-காலமும், செய்பொருள்-செயப்படுபொருளும் (ஆகிய), ஆறும்-அறுவகைப் பொருளையும், தருவது-காட்டுவது,—வினை-தெரிநிலை வினைச்சொல்லாம்.

(உ-ம்.) வனைந்தான்,—இதில், குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டம் சக்கரம் முதலிய துணைக்கருவிகளும், வனைந்த இடமும், 'வனைதல்' என்ற தொழிலும், இறந்தகாலமும், குடம் முதலிய செய்பொருளும் தோன்றுதல் காண்க.

இந்த ஆறையுந்தருவது செயப்படுபொருள் குன்றாத [உள்ள] வினை; செயப்படுபொருள் குன்றிய [இல்லாத] வினை—அச்செயப்படுபொருள் ஒழிந்த ஐந்தையுமே காட்டும். (உ-ம்.) வந்தது.

'செய்பவன்' என ஆண்பாலிற் கூறினாராயினும் 'ஒருமொழி ஒழி தன்னினங்கொளற்குரித்தே' (சூ-179.) என்பதனால், ஐம்பாலுங்கொள்க.

வருஞ் சூத்திரத்தாற் குறிப்புவினை கூறுதலால், இச்சூத்திரம் தெரிநிலை வினையென்க; தெரிநிலைவினை—செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும்; அங்ஙனமின்றி, அவற்றைக் குறிப்பாகக் காட்டுவது, குறிப்புவினை.

முற்றுவினைச் சொற்களிலே பகுதியாற் செயலும், விகுதியாற் கருத்தாவும், இடைநிலை முதலியவற்றாற் காலமும்; பெயரெச்ச வினையெச்சங்களில் இம்முறையே செயலுங் காலமும் வெளிப் படையாகத் தோன்றுதலால் மற்றவை குறிப்பாகத் தோன்றும் என்று கொள்க.

[குறிப்புவினை.]

152. பொருள்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

உரை:—பொருள் முதல் ஆறினும்-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறையும் அடியாகக்கொண்டு, தோற்றி-பிறந்து, முன் ஆறனுள்-முன் சூத்திரத்திற் சொல்லப் பெற்ற (செய்பவன் முதலிய) ஆறனுள், வினை முதல் மாத்திரை-கருத்தா ஒன்றையே, விளக்கல் - காட்டுதல்,—வினைக்குறிப்பு - குறிப்புவினையின் இலக்கணமாம்.

(உதாரணம்.)

குழையன், பொன்னன்-பொருள்.	காதன், கண்ணன்—சினை.
அகத்தினன், ஊரன்—இடம்.	கரியன், நல்லன்—குணம்.
ஆதிரையான், வேனிலான்-காலம்	நடையன், சொல்லன்-தொழில்

இவற்றுள், விகுதியாற் செய்பவன் விளங்கிற்று; மற்றவை குறிப்பாக உண்டெனக் கொள்க.

[வினைச்சொற்களின் பிரிவு.]

153. அவை தாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

உரை:—அவை தாம்-(முன் இரண்டு சூத்திரங்களாலும் கூறிய தெரிநிலை குறிப்பு என்ற) அவ்வினைச்சொற்கள்,—முற்றும்-வினை முற்றும், பெயர் வினை எச்சமும்-பெயரெச்சமும் வினையெச்சமும், ஆகி-(என்ற மூன்று வகை) ஆகி, ஒன்றற்கு உரியவும்-(திணைபால் இடங்களுள்) ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும், பொதுவும்-(பல வற்றிற்குப்) பொதுவாய் நிற்பனவும், ஆகும்—.

(உ-ம்.) நடந்தான், பொன்னன்-ஆண்பாலுக்கே உரியன.

செய்க, இல்லை -ஐம்பால் மூவிடங்களுக்கும்பொது.
செய்த, பெரிய } -இப்பெயரெச்ச வினையெச்சங்களும்
செய்து, மெல்ல } ஐம்பால் மூவிடங்களுக்குப்பொது.

[இவை யெல்லாம் பின்வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் கூறப்படும்.]

இனிப் பிறவழிகளால் ஒன்றற்கு உரியவும் பொதுவுமாய் வருவனவுஞ் சில உள.

(உ-ம்.) தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை:— 'வெளுத்தான்' 'தேற்றாதவர்' இவை—'தான் வெளுத்தான்' 'அறியாதவர்' எனப் பொருள்படும்போது தன்வினை; 'ஒன்றை வெளுக்கச் செய்தான்' 'அறிவியாதவர்' எனப் பொருள்படும்போது பிறவினை. (இவையே செயப்படுபொருள்குன்றியவினைக்கும்செயப்படுபொருள் குன்றாவினைக்கும் பொதுவினைக்கும் உதாரணமாம்.)

உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவினை:—'சாவான்' 'செய்யாய்'. இவை—'இறப்பான்' 'செய்' எனப் பொருள்படும் போது, உடன்பாட்டுவினை; 'இறவான்' 'செய்யமாட்டாய்' எனப் பொருள் படும்போது, எதிர்மறைவினை. [*உடன்பாட்டுவினையை விதிவினை என்றும், எதிர்மறைவினையை மறைவினையென்றுங் கூறுவர்.]

செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை:— 'புலி கொன்ற யானை' 'மீன் விழுங்கினவன்' இவை-'கொல்லுதலைச் செய்த' 'விழுங்குதலைச்செய்த' எனப் பொருள்படும்போது செய்வினை; 'கொல்லப்பட்ட' 'விழுங்கப்பட்ட' எனப்பொருள்படும் போது செயப்பாட்டுவினை. இன்னும் பலவகையால் வரும் பொதுவினை:—

1. உண்டு.	[உண்டேன்]	—தன்மை யொருமை வினைமுற்று.
,,	[புசித்து]	—இறந்தகால வினையெச்சம்.
,,	[உளது]	—குறிப்புவினைமுற்று.
2. ஓதுவான்.	[படித்தல்]	—தொழிற்பெயர்.
,,	[படிப்பான்]	—எதிர்காலவினைமுற்று.
,,	[படிக்க]	—எதிர்காலவினையெச்சம்.
3. நடப்ப.	[நடப்பார்]	—பலர்பால்வினைமுற்று.
,,	[நடப்பன]	—பலவின்பால்வினைமுற்று.
,,	[நடக்க]	—வினையெச்சம்.

*உடன்பாட்டுவினையாவது,—தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்தும் வினையாம்; (உ-ம்.) நடந்தான், நடந்த, நடந்து, பெரியன், பெரிய மெல்ல; எதிர்மறைவினையாவது,—தொழில் நிகழாமையை உணர்த்தும் வினையாம்; (உ-ம்.) நடவான், நடவாத, நடவாது, இலன், இல்லாத, இன்றி.

4. தேடிய. [தேடின] —இறந்தகாலவினைமுற்று.
,, [தேடுக] —வியங்கோள்வினைமுற்று.
,, [தேடின] —இறந்தகாலப்பெயரெச்சம்.
,, [தேடுதற்கு] —எதிர்காலவினையெச்சம்.
பிறவும் இவ்வாறே வருதல் காண்க.

வினைமுற்று.

154. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர் முதலறு பெயரல தேற்பில முற்றே.

உரை:— பொது இயல்பு ஆறையும்-(எல்லாவித வினைகளுக்கும்) பொதுவாகிய (செய்பவன் முதலிய) ஆறையும், தோற்றி-தோன்றச்செய்து, பொருள் பெயர் முதல்-பொருட்பெயர் முதலிய, அறு பெயர்-ஆறுவகைப் பெயரையும் (பயனிலையாக ஏற்பனவாகி),— அலது ஏற்பில-மற்றொன்றையும் ஏற்காதன,—முற்று-(தெரிநிலையும் குறிப்புமாகிய) வினைமுற்றுக்களாம்.

(உதாரணம்.)

தெரிநிலை.	குறிப்பு.	அறுபெயர்.	
செய்தான் இராமன்.	பெரியன் இராமன்	—இராமன்	-பொருள்.
குளிர்ந்தது நிலம்.	வலியது நிலம்	—நிலம்	-இடம்.
வந்தது கார்.	கரியது கார்	—கார்	-காலம்.
குவிந்தது கை.	நல்லது கை	—கை	-சினை.
வந்தது நன்மை.	உள்ளது நன்மை	—நன்மை	-குணம்.
ஒழிந்தது பிறப்பு.	நல்லது பிறப்பு	—பிறப்பு	-தொழில்.

மற்றைத் திணை பால் இடம் காலங்கள்தோறும் இவ்வாறே ஒட்டுக.

குறிப்பு:—தன்மையொருமை, தன்மைப்பன்மை, முன்னிலையொருமை, முன்னிலைப்பன்மை, படர்க்கைஆண்பால், படர்க்கைப் பெண்பால், படர்க்கைப்பலர்பால், படர்க்கையொன்றன்பால், படர்க்கைப்பலவின்பால் என ஒன்பது வகையையும் முக்காலத்தாலும் பெருக்க தெரிநிலைவினைமுற்றுச்சொல் ஒன்றே இருபத்தேழு ஆகும்*. குறிப்புவினைமுற்று, காலம் விளங்காததனால் ஒன்பதாகும்.

[ஆண்பாற் படர்க்கை வினைமுற்று.]

155. அன் ஆ னிறுமொழி ஆண்பாற் படர்க்கை.

---

* 'முற்றுவினைப்பதமொன்றே மூவொன்பானும்' என்பது கவனிக்கத்தக்கது.

உரை:—அன் ஆன் இறுமொழி-அன் ஆன் என்கிற *இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—ஆண்பால் படர்க்கை-உயர்திணை ஆண்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றுங் குறிப்பு முற்றுமாம்;

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அன்.	நடந்தனன்	நடக்கின்றனன்	நடப்பன்	குழையன்.	அவன்
ஆன்.	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்	குழையான்.	

[பெண்பாற் படர்க்கை வினைமுற்று.]

156. அள் ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.

உரை:—அள் ஆள் இறுமொழி-அள் ஆள் என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—பெண்பால் படர்க்கை-உயர்திணைப் பெண்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றுங் குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அள்.	நடந்தனள்	நடக்கின்றனள்	நடப்பள்	குழையள்.	அவள்.
ஆள்.	நடந்தாள்	நடக்கின்றாள்	நடப்பாள்	குழையாள்.	

[பலர்பாற் படர்க்கை வினைமுற்று.]

157. அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே.

உரை:—அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற-அர் ஆர் ப மார் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—பல்லோர் படர்க்கை-உயர்திணைப் பலர்பாற் படர்க்கைத் தெரிநிலை முற்றும் குறிப்புமுற்றுமாம்;—மார்-(இவற்றுள்) மார் ஈற்றுவினை முற்று,—வினையொடுமுடிமே-(பொதுவிதியாற் பெயருடன் முடிவதேயன்றி) வினையுடனும் முடியும்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அர்.	நடந்தனர்	நடக்கின்றனர்	நடப்பர்	குழையர்.	அவர்.
ஆர்.	நடந்தார்	நடக்கின்றார்	நடப்பார்	குழையார்.	
ப.	*நடப்ப	—	*நடப்ப	—	
மார்.	—	—	நடமார்	—	

* நடந்தார், நடப்பார் என்று பொருள். நடப்பன என்ற பொருளில், அ என்ற பலவின்பால் விகுதி பகர விடைநிலை பெற்றதாம்.

'நடமார் வந்தார்' இங்கு 'மார்' வினையொடு முடிந்தது. [நடமார்-நடப்பார்.] 'ப, மார்' விகுதிகள் தாமே காலங்காட்டு தலால், குறிப்புவினைமுற்றிற்கு வாரா. (சூ. 51.)

[ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று.]

158. து று டுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பி னாகும்.

உரை:—து று டு குற்றியலுகரம் ஈற்ற-து று டு என்கிற குற்றியலுகரவீற்று மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்—ஒன்றன்படர்க்கை-அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றுங் குறிப்பு முற்றுமாம்; (இவற்றுள்) டு-'டு' என்கிற விகுதி,—குறிப்பின் ஆகும்-குறிப்புவினைமுற்றில் மாத்திரம் வரும். [தெரிநிலைவினைமுற்றிற்கு வாராது.]

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
து.	நடந்தது.	நடக்கின்றது	நடப்பது	குழையது.	அது.
று.	கூயிற்று	—	—	குழையிற்று.	
டு.	—	—	—	பொருட்டு.	

(பொருட்டு-பொருளையுடையது.)

['று' விகுதி தெரிநிலையில் இறந்தகால இடைநிலையோடு மாத்திரம் கூடிவரும்.]*

[பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.]

159. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

---

*'று' விகுதி, வந்தன்று, உண்டன்று, சென்றன்று, எனத் த ட ற ஒற்றிடைநிலைகளின் முன்னும், புக்கன்று, விட்டன்று, பெற்றன்று என விகாரப்பட்டிறந்தகாலங்காட்டும் கு டு று ஈற்றுப் பகுதிகளின் முன்னும், அன் சாரியைபெற்றுவரும். இவை, முறையே வந்தது, உண்டது, சென்றது, புக்கது, விட்டது, பெற்றது என்று பொருள்படும். 'று' விகுதி கூயிற்று, ஓடிற்று, என 'இன்' இடைநிலையின்முன் மாத்திரம், சாரியை பெறாது வரும்; 'தந்தின்று' என, 'று' விகுதி தகரவிடைநிலையின்முன் 'இன்' சாரியை பெற்ற தன்றோவெனின்; அன்று. அது, தந்தன்று, என்னும் உடன்பாட்டுவினையை மறுத்தற்குத் தகர விடைநிலைக்கும் 'று' விகுதிக்கும் இடையே 'இல்' என்னும் எதிர்மறையிடைநிலையேற்றுவந்த எதிர்மறை வினையென்க. [தந்தின்று-தந்ததில்லை.]

உரை:—அ ஆ ஈற்ற-அ ஆ என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—பலவின் படர்க்கை-அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைத் தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்; (இவற்றுள்) ஆ-'ஆ' என்கிற விகுதி,—எதிர்மறைக் கண்ணது ஆகும்-எதிர்மறையில் மாத்திரமே வரும்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு	எதிர்வு.	குறிப்பு.	
அ.	நடந்தன நடந்த	நடக்கின்றன நடக்கின்ற	நடப்பன நடப்ப	கரியன. கரிய.	அவை.

ஆ. நடவா—'ஆ' விகுதி எதிர்மறையில் மாத்திரம் வந்தது.

[இது முக்காலமும் ஏற்கும் (சூ. 51.)]

[இருதிணைப் பொதுவினை.]

160. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

உரை:—தன்மை-தன்மை வினைமுற்றுக்களும், முன்னிலை-முன்னிலை வினைமுற்றுக்களும், வியங்கோள்-வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு இல்லை உண்டு-இம்மூன்று குறிப்புவினைமுற்றுக் களும், ஈர் எச்சம்-பெயரெச்சங்களும் வினையெச்சங்களும்,—இரு திணை பொதுவினை-இரண்டு திணைகளுக்கும் பொதுவாகிய வினை களாம்.—[இலை-இல்லை; விகாரம்.]

'செய்யும்' என்னும் பெயரெச்சமே 'செய்யும்' என்னும் முற்றாதலால், அம்முற்றும் இருதிணைப்பொதுவினையாம் என்க.

[தன்மை ஒருமை வினைமுற்று.]

161. கு டு து று என்னுங் குன்றிய லுகரமோடு
அல் அன் என் ஏன் ஆகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

உரை:—கு டு து று என்னும் குன்றியலுகரமோடு-கு டு து று என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய குற்றியலுகரமாகிய மொழிகளும், அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற-அல், அன், என், ஏன் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழி களும்,— இருதிணை முக்கூற்று ஒருமை தன்மை-உயர்திணை ஆண் பால் பெண்பால் அஃறிணை ஒன்றன்பால், என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய தன்மை ஒருமைத் தெரிநிலைமுற்றுங் குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
கு.	—	—	உண்கு	—	யான்.
டு.	உண்டு	—	—	—	
து.	வந்து	—	வருது	—	
று.	சென்று	—	சேறு	—	
அல்.	—	—	செய்வல்	—	
அன்.	உண்டனன்	உண்கின்றனன்	உண்பன்	குழையன்.	
என்.	உண்டனென்	உண்கின்றனென்	உண்பென்	குழையென்	
ஏன்.	உண்டேன்	உண்கின்றேன்	உண்பேன்	குழையேன்	

'அல்' விகுதி தெரிநிலையில் எதிர்கால இடைநிலைகளோடு மாத்திரம் வரும். கு டு து று என்ற நான்கும்—தாமே காலங்காட்டுதலால் (சூ-51) குறிப்புவினைக்கு வாரா. இவை ஒரு புருஷனுக்கும், ஒரு பெண்ணுக்கும், ஒரு விலங்குக்கும் தனித்தனி உரியன; முன்னிலை ஒருமை முற்றும் இத்தன்மையதே.

[தன்மைப் பன்மை வினைமுற்று.]

162. அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊர் க ட த ற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

உரை:—அம் ஆம் என்பன-அம் ஆம் என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், முன்னிலையாரையும்-முன்னிலையிடத்தாரையும்; எம் ஏம் ஓம் இவை-எம் ஏம் ஓம் என்கிற மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், படர்க்கை யாரையும் - படர்க்கையிடத்தாரையும்; உம் ஊர் க ட த ற - கும், டும், தும், றும் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், இருபாலாரையும்—(முன்னிலை படர்க்கை என்னும்) இரண்டிடத்தார்களையும், தன்னொடு படுக்கும்-தன்னுடன் கூட்டுகின்ற, தன்மை பன்மை-தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அம்.	உண்டனம்	உண்கின்றனம்	உண்பம்	குழையம்.	யாம் [யானும் நீயும்]
ஆம்.	உண்டாம்	உண்கின்றாம்	உண்பாம்	குழையாம்	
எம்.	உண்டனெம்	உண்கின்றனெம்	உண்பெம்	குழையெம்	யாம். யானும் அவனும்.
ஏம்.	உண்டேம்	உண்கின்றேம்	உண்பேம்	குழையேம்.	
ஓம்.	உண்டோம்	உண்கின்றோம்	உண்போம்	குழையோம்	

கும்.	—	—	உண்கும்	—	யாம் [யானும் நீயும் அவனும்]
டும்.	உண்டும்	—	—	—	
தும்.	வந்தும்	—	வருதும்	—	
றும்.	சென்றும்	—	சேறும்	—	

கும் டும் தும் றும் என்னும் நான்கும் தாமே காலங்காட்டுதலால் (சூ. 51.) குறிப்புவினைக்கு வாரா. இவற்றை, உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றென்பர். இவை, சிறுபான்மை இம்முறை மாறி வருதலும் உண்டு. இனி, இயல்புபற்றிய தனித் தன்மைப்பன்மையும், உயர்வுத் தன்மைப் பன்மையும் இவ்விகுதி வரையறையை வேண்டாமல் ஏற்றபடிபெற்றுவருமென்றறிக.

[உளப்பாட்டு முன்னிலைப்பன்மை வினைமுற்று.]

163. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை.

உரை:—(தன்மையோடுகூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மையாகுற்போல),—முன்னிலை - முன்னிலையிடத்துச் சொல்லோடு, கூடிய-சேர்ந்த, படர்க்கை-படர்க்கையிடத்துச்சொல்லும்,—முன்னிலை-முன்னிலையாம்.

(உ-ம்.) உண்டனிர், உண்மின் குழையீர்—நீர் [நீயும் அவனும்.]

இச்சூத்திரம், முன்னிலைப்பன்மைவினைமுற்றைக் கூறுமிடத்துக் கூறுமல், ஒன்றினமுடித்தல்தன்னினமுடித்தல் என்கிற உத்தியால் இங்கே கூறப்பட்டது.

[முன்னிலை ஒருமை வினைமுற்று.]

164. ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

உரை:—ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்-ஐ ஆய் இ என்கிற மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகளும், ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்-(விகுதி பெற்றும் பெறுமலும்) ஏவலில் வருகின்ற (நட, வா, மடி, சீ முதலிய) இருபத்துமூன்று ஈற்று மொழிகளும்,—முப்பால்-(ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்கிற) மூன்று பால்களுக்கும் பொதுவாகிய, ஒருமை முன்னிலை மொழி-முன்னிலை ஒருமைத்தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
ஐ.	உண்டனை	உண்கின்றனை	உண்பை	குழையை.	நீ.
ஆய்.	உண்டாய்	உண்கின்றாய்	உண்பாய்	குழையாய்.	
இ.	உண்டி	உண்ணாநின்றி	சேறி	வில்லி.	

உண்டி, உண்ணாநின்றி-இவற்றில் இடைநிலையும், சேறி-என்பதில் 'இ'விகுதியுங் காலங்காட்டின. (சூ-51). ஆய், இ, அல், ஏல், ஆல், என்கிற விகுதிகளை யிறுதியிலுடைய வினைச்சொற்களும், 'ஆய்' விகுதியில்லாமல் பகுதிமாத்திரமாய் நிற்கிற வினைச்சொற்களும், ஏவலொருமை முற்றுக்களாம்; இவ்விகுதிகளுள், அல் ஏல் ஆல்— என்பவை-எதிர்மறையில் மாத்திரமே வரும்.

(உ-ம்.) உண்ணாய், உண்ணுதி, உண்.
உண்ணல், உண்ணேல், மறால். } நீ.

எதிர்மறை ஏவல் ஒருமை முற்றுக்கள்—எதிர்மறை ஆகார இடைநிலையின் முன் தகர எழுத்துப்பேற்றுடன் ஏ இ என்கிற விகுதிகளுள் ஒன்றைப்பெற்று வரும்; (உ-ம்.) உண்ணாதே, உண்ணாதி.

[முன்னிலைப் பன்மை வினைமுற்று.]

165. *இர் ஈர் ஈற்ற இரண்டு மிருதிணைப்*
பன்மை முன்னிலை மின்அவற் றேவல்.

உரை:—இர் ஈர் ஈற்ற இரண்டும்-இர் ஈர் என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,— இருதிணை-இரண்டு திணைகளுக்கும் பொதுவாகிய, பன்மை முன்னிலை-முன்னிலைப் பன்மைத் தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்; மின்-'மின்' விகுதியை யிறுதியிலுடைய மொழிகள்,— அவற்று ஏவல்-முன்னிலை ஏவற் பன்மை முற்றாம்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
இர்.	உண்டனிர்	உண்கின்றனிர்	உண்பிர்	குழையிர்.	நீர்.
ஈர்.	உண்டீர்	உண்கின்றீர்	உண்பீர்	குழையீர்.	
மின்.	—	—	உண்மின்	—	

'மின்' விகுதியேயல்லாமல் ஈர், உம் விகுதிகளும் புதியன புகுதலால், முன்னிலைப் பன்மை ஏவலுக்கு வரும்; (உ-ம்.) உண்ணீர், உண்ணும்.

[வியங்கோள் வினைமுற்று.]

166. *க ய வொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்*
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

உரை:—க ய ஒடு-க ய என்கிற இரண்டு உயிர்மெய்களுடன், ர ஒற்று-ரகரமெய்யையும்; ஈற்ற-இறுதியிலுடைய மொழிகள்,—வியங்கோள்-வியங்கோள்வினைமுற்றுக்களாம்; (அவை) இடம் பால் எங்கும்-மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலும், இயலும்-செல்லும், என்ப-என்று சொல்லுவர். (அறிவுடையோர்.)

[இது, எதிர்காலத்துக்கு மாத்திரம் வரும் (சூ-51.)]

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர். } யான், யாம்; நீ, நீர்; அவன்,
உண்க, உண்ணிய, நிலீயர். } அவள், அவர், அது, அவை.

இனி,—அ, ஆல், தல், மை-விகுதிகளும் வியங்கோள் வினை முற்று விகுதிகளாய் வரும் என்க. (உ-ம்.) எழுந்தருள; ஒரால் [ஒருவுக]; 'மாசிலனுதல்' [ஆகுக]; 'அஞ்சாமை [அஞ்சற்க] அஞ்சுவது'; இன்னும் 'அல்' என்பது உடன்பாடு எதிர்மறை இரண்டிலும் வரும்; (உ-ம்.) மக்கட்பதடிஎனல் [என்க.] மகனெனல் [என்னற்க]

இவ்வியங்கோள் வினைமுற்றுகளின் பொருள்களாவன:—

1. வாழ்த்துப்பொருள் ... ... (உ-ம்.) வாழ்க, சிறக்க.
2. விதித்தற்பொருள் ... ... (உ-ம்.) உண்க, நடக்க.
3. வேண்டிக்கொள்ளுதற்பொருள் ... (உ-ம்.) அருளுக, ஈக.
4. வைதற்பொருள் ... ... (உ-ம்.) அழிக, கெடுக.
5. வெகுளிப்பொருள் ... ... (உ-ம்.) எறிக.
6. மகிழ்ச்சிப்பொருள் ... ... (உ-ம்.) வருக.

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு:—(1) ஏவல்,—முன்னிலையில் மாத்திரம் வரும்; வியங்கோள்,—ஐம்பால் மூவிடங்களிலும் வரும்; (2) ஏவல்-கட்டளைப்பொருளில் மாத்திரமே வரும்; வியங்கோள்,— வாழ்த்துதல் முதலிய பலபொருள்களில் வரும். (3) ஏவலில்-ஒருமை பன்மை என்ற பகுப்புஉண்டு; வியங்கோளில் அப்பகுப்பு இல்லை.

குறிப்பு:—'வாழிய' என்பது—ஆ வாழி, அந்தணர் வாழி, எனப் பெரும்பாலும் ஈற்றுயிர்மெய்கெட்டு வரும்; இவ்வியங்கோள் சிறுபான்மை, இக்காலத்து உலகவழக்கிலே, வாழக்கடவன் வாழக் கடவள் வாழக்கடவர் எனவும், வாழ்வானாக வாழ்வாளாக வாழ்வாராக எனவும், பாலிடங்களுள் ஒன்றற்குரியவாய் வருமென வுங் கொள்க.

[ஐம்பால் மூவிடத்துக்கும்பொதுவாகியகுறிப்புவினைமுற்று.]

167. வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன.

உரை:—வேறு இல்லை உண்டு-வேறு இல்லை உண்டு என்கிற மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும், ஐம்பால் மூ இடத்தன-ஐம்பால்களுக்கும் மூன்றிடங்களுக்கும் உரியன.

(உ-ம்.) வேறு, இல்லை, உண்டு. } யான், யாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை.

இனி, வேண்டும், தகும், படும் என்னும் சொற்களும் ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாம்; (உ-ம்.) நீபோதல் வேண்டும்; இச்சோறு உண்ணத்தகும்; வஞ்சகரை அஞ்சப்படும்.

பெயரெச்சம்.

168. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

உரை:—செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்-செய்த, செய்கின்ற, செய்யும் என்று சொல்லப்படும் மூன்றுவகை வாய்பாட்டுச் சொற்களிலே, காலமும்-(முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்று) காலங்களும், செயலும்-தொழிலும், தோன்றி-தோன்றப்பெற்று,— பாலொடு-பாலுடனே, செய்வது ஆதி அறுபொருள் பெயரும்-செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்கிற அறுவகைப் பொருட்பெயர்களும், எஞ்ச நிற்பது-ஒழிய நிற்பன,— பெயரெச்சம்-தெரிநிலைப் பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சமுமாம்.

பெயரெச்சம்-பெயரைக்கொண்டு முடிவதாகிய குறைந்து நிற்குஞ்சொல். எஞ்சுவது-எச்சம். பால் எஞ்சிநிற்றல்-கொண்டுமுடிக்குஞ் சொல்லின் பாலல்லாமல் தனக்கென்று ஒருபால் இல்லாமை. அறுபொருட் பெயர் எஞ்சிநிற்றல்-ஆறுவகைப் பொருட்பெயருள் ஒன்று கொண்டுமுடியுஞ் சொல்லாக நிற்கப்பெறுதல். இச்சூத்திரத்தில் 'தோன்றி' என்பதுவரையிலும் தெரிநிலைக்கும், ஒழிந்தவை தெரிநிலை குறிப்பு இரண்டுக்குங் கொள்க.

(உதாரணம்.)

இறப்பு-உண்ட	இராமன்-செய்பவன்.	ஊண் -செயல்.
நிகழ்வு-உண்கிற	கலம் -கருவி.	பகல் -காலம்.
எதிர்வு-உண்ணும்	வீடு -நிலம்.	சோறு-செய்பொருள்.

குறிப்பு—நல்ல, உள்ள, பெரிய, புதிய, இலைய, முகத்த-வேல்.
எதிர்மறைத் தெரிநிலைப்பெயரெச்சம்—உண்ணாத, செய்யாத.
எதிர்மறைக் குறிப்புப்பெயரெச்சம்—இல்லாத, அல்லாத.

உண்ணாத செய்யாத இவை-உண்ட செய்த என்பவைகளின் எதிர்மறையாதலால், இவையும் தெரிநிலை. 'உண்ணாத' செய்யாத என்பவைகளில் 'ஆ' எதிர்மறை இடைநிலை; இல்லாத, அல்லாத என்பவைகளில், இல் அல் என்ற பண்படிப் பகுதிகளே எதிர்மறை காட்டுதலால் 'ஆ' சாரியை என்க. இதைப் பின்வரும் வினையெச்சத்திற்குங்கொள்க. எதிர்மறைப்பெயரெச்சம் ஈறு கெட்டும்நிற்கும்; (உ-ம்.) உண்ணா, செய்யா, இல்லா, அல்லா.

பெயரெச்சம் 'உண்ட இளைப்பு,' 'சங்கு சுட்ட சுண்ணம்பு' எனக் காரணப்பொருளிலும், 'நோய் தீர்ந்த மருந்து', 'நின்னைக் காணும் அவா' எனக் காரியப்பொருளிலும் வரும். (உண்ட-உண்டதனாலாகிய, சுட்ட - சுட்டதனாலாகிய என்றும், தீர்ந்த-தீர்தற்குக் காரணமான, காணும்-காணவேண்டுமென்ற என்றும் பொருள்படும்.)

குறிப்பு:—செய்யும் என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சம் போதும் போது-போம் போது, ஆகும் பொருள்-ஆம் பொருள், தாவும் மரை-தாமரை, வாவும் புரவி-வாம் புரவி என இடையிலுள்ள உயிர்மெய் கெட்டும் வரும் எனக்கொள்க.

வினையெச்சம்.

169 தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

உரை:—தொழிலும்-செயலும், காலமும்—, தோன்றி-விளங்கி,— பால்-பாலும், வினை-(கொண்டு முடியும்) வினையும், ஒழிய நிற்பது-குறைந்து நிற்பன, வினையெச்சம்-தெரிநிலைவினையெச்சமும் குறிப்புவினையெச்சமுமாம்.

வினையெச்சம்-வினையைக்கொண்டு முடிவதாகிய குறைந்து நிற்குஞ் சொல்.- வினையெச்சமானது-(உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வருகிற தெரிநிலையுங் குறிப்புமாகிய) வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் ஆகிய ஐவகைச் சொற்களையுங்கொண்டு முடியும்.

(உதாரணம்.)

இறப்பு-நடந்து	- போனான்	- போன	- போய்	-போனவன்	-போதல்.
குறிப்பு-மெல்ல	,,	,,	,,	,,	,,

மற்றவைகளையும் இவ்வாறே அமைத்துக்கொள்க.

ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், தொழிலுங் காலமுந் தோன்றுதல் தெரிநிலைக்கும், பால் வினை ஒழியநிற்றல் தெரிநிலை குறிப்பு இரண்டுக்குங்கொள்க.

[தெரிநிலை வினையெச்ச வாய்பாடுகள்.]

170. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

உரை:—செய்து...செய்யியர்—'செய்து' என்பது முதலாகச் 'செய்யியர்' என்பது வரையிலுள்ள ஒன்பது வாய்பாடுகளால் வருவனவும், வான் பான் பாக்கு-இம்மூன்று விகுதிகளைப் பெற்று வருவனவும், இனபிற-இவைபோல்வன பிறவும், வினையெச்சம்-தெரிநிலை வினையெச்சங்களாம்; (இப்பன்னிரண்டினுள்), ஐந்து-(முதலிலுள்ள) ஐந்தும், ஒன்று-(நடுவிலுள்ள) ஒன்றும், ஆறு-(இறுதியிலுள்ள) ஆறும்,—முறை-முறையே, முக்காலமும்-(இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும்) மூன்று காலங்களையும், தரும்-காட்டும்.

இப்பன்னிரண்டினுள், செய்து செய்தென என்னுமிரண்டும் இடைநிலையாலும், மற்றவை விகுதியாலுங் காலங்காட்டும் என்க.

(உ-ம்.) இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.
1. நடந்து வந்தான்.	1. நடக்க வல்லன்.	1. வரின் மகிழ்வான்.
2. உண்குபு போனான்.		2. ஆடிய தந்தான்.
3. பெய்யாக் கொடுக்கும்.		3. உண்ணியர் வருவான்.
4. காணூ மகிழ்ந்தான்.		4. கொல்வான் சென்றது.
5. உண்டெனப் போனான்		5. தின்பான் புகுந்தது.
		6. செய்பாக்கு வந்தான்.

[உண்குபு-உண்டு; பெய்யா-பெய்து; காணூ-கண்டு; உண்டென-உண்டதனால்; வரின்-வந்தால்; ஆடிய-ஆடுதற்கு; உண்ணியர்-உண்ணுதற்கு; கொல்வான்-கொல்லுதற்கு; தின்பான்-தின்னுதற்கு; செய்பாக்கு-செய்தற்கு.] 'வான்' 'பான்' 'பாக்கு' என்பன-அந்தந்த விகுதிகளையுடைய சொற்களை உணர்த்தி நின்றன.

'இன' என்றதனால்-இறந்தகாலத்திற்கு—இ ய் உம் என்பனவும்,
எதிர்காலத்திற்கு—ஆல் கால் கு கடை வழி இடத்து என்பனவும்,
எதிர்மறைக்கு—மல் மை மே து என்பனவும்,
குறிப்புவினையெச்சத்துக்கு—அ றி ஆல் என்பனவும்,
விகுதிகளாய் வரும் எனக்கொள்க.

(இவையெல்லாம் பதவியலுள் உதாரணத்துடன் காட்டப்பெற்றன)

குறிப்பு:—செயவென்னெச்சம், தனக்குரிய நிகழ்காலத்தைக் காட்டும்போது, உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்; (உ-ம்.) சூரியன் உதிக்க இராமன் புறப்பட்டான். (உதிக்க-உதிக்கையில்.)

காரணப்பொருளில்* வரும்போது இறந்தகாலங் காட்டும்; (உ-ம்.) மழை பெய்ய நெல் விளைந்தது. (பெய்ய-பெய்தலால்.)

காரியப்பொருளில்† வரும்போது எதிர்காலங்காட்டும்; (உ-ம்.) நெல் விளைய மழைபெய்தது. (விளைய-விளையும்படி.)

[வினையெச்சத்தின் செயல்வினைமுற்றின் செயலுக்கு முந்தியதாக இருப்பின் இறந்தகாலம்; பிந்தியதாயிருப்பின் எதிர்காலம்; சமகாலமாக இருப்பின் நிகழ்காலம் எனக்கொள்க.]

இனி 'வான்' முதலிய மூன்றும் தொழிற்பெயர் விகுதிகளாய் வருதலுங் கொள்க. (உ-ம்.) யான் வருவானேன்; அவன் நடப்பானேன்; படுபாக்கறிந்து. (இவற்றிற்கு முறையே, வருதல், நடத்தல், படுதல் என்பன பொருள்.)

வினையெச்சம், சிறுபான்மைதொழிற்பெயர்ப்பொருளிலும் வரும்; (உ-ம்.) வரக் கண்டேன். (வருதலைக்கண்டேன்).

குறிப்பு:—இச்சூத்திரத்துக்கூறிய பன்னிரண்டு வினையெச்ச வாய்பாடுகளுள் முதலிலிருக்கும் நான்கும், இறுதியிலிருக்கும் மூன்றும், தன் கருத்தாவின் வினையைக்கொண்டு முடியும்; மற்றவை தன் கருத்தாவின் வினையையும், பிற கருத்தாவின் வினையயுங் கொண்டு முடியும்§

[வினையெச்சவாய்பாடுகள் திரிதல்.]

171. சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை.

உரை:—வினைக்குறை - வினையெச்சவாய்பாடுகள்,—சொல் திரியினும்-(வேறு வாய்பாடுகளாகச்) சொல் மாறி வந்தாலும், பொருள்-(அவற்றின்) பொருள்கள், திரியா-வேறுபடாவாம்.

---

* காரணப்பொருளில் வருதலாவது.முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்கு, வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில் காரணமென்பது படவருதல். † காரியப்பொருளில் வருதலாவது-முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்கு, வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில் காரியமென்பது படவருதல்.

§ 'அவற்றுள், முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும், வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்கும்பிற' என்பது கவனிக்கத்தக்கது.

(உ-ம்.) மழை பெய்து நெல் விளைந்தது—இதில், 'பெய்து' என்பது வேறு வினைகொண்டு முடிதற்கு ஏலாமையால், அதைப் 'பெய்ய' என்னும் செயவென்னெச்சத்தின் திரிபாகக்கொள்க.

2. யான் கோள்வான் பொன் கொடுத்தான்—இதில் 'கொள்வான்' என்பது, வேறு வினைகொண்டு முடிதற்கு ஏலாமையால் அதைக் 'கோள்ள' என்னும் செயவென்னெச்சத்தின் திரிபாகக் கொள்க.

இனி, எவ்வகை வினையெச்சச்சொல்லும் பொருளுக்கு இயையாமல் மாறி வருமாயின், அதனைப் பொருளுக்கு இயைந்த வினையெச்சச்சொல் திரிந்து வந்ததாகக்கொள்க; (உ-ம்.) தொழுதற்றெழ தெழுவாள்.—இங்குத், 'தொழாநின்று' என்னும் நிகழ்கால வினையெச்சம் 'தொழுது' எனத்திரிந்தது.

[இது, உருபுமயக்கம் போல்வது.]

['செய்யும்' என் முற்றுக்குச் சிறப்புவிதி.]

172. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

உரை:—செய்யும் என் முற்று-'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று,— பல்லோர் படர்க்கை-படர்க்கைப் பலர்பாலிலும், முன்னிலை-முன்னிலையிலும், தன்மை-தன்மையிலும், செல்லாது ஆகும்-வாராதாம்.

எனவே, படர்க்கையில், ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் பலவின்பால்களிற் செல்லும் என்க.

(உ-ம்.) அவன் உண்ணும்; அவள் உண்ணும்; அது உண்ணும்; அவை உண்ணும். [இனி இச்செய்யுமென்முற்று 'நீர் உண்ணும்' என முன்னிலையில் பன்மையேவலாய் வருதல் புதியன புகுதல் என்க.]

குறிப்பு:—'செய்யும்' என்னும் முற்று—கலுழும்-கலுழ்ம், போலும்-போன்ம், மருளும்-மருண்ம் என உயிர்கெட்டும், குணமாதும்-குணமாம், பொழுது போதும்-பொழுதுபோம் என, உயிர்மெய் கெட்டும், வரும் என்க. ஏவல்முற்றிலும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யும் கெட்டுவருதலும் உண்டு; (உ-ம்) கேளுமோ-கேண்மோ; உரையுமோ-உரைமோ.

['யார்' என்னுங் குறிப்புவினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

173. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

உரை:—யார் என்-'யார்' என்கிற, வினா-வினாப்பொருளைத் தருகின்ற, வினைக்குறிப்பு-குறிப்புவினைமுற்று,—உயர் முப்பால்-உயர்திணைப்படர்க்கை மூன்று பால்களுக்கும் பொதுவாம்.

(உ-ம்.) அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

இது, இங்குப் பலர்பால் முற்றன்று; உயர்திணைப் பொதுக் குறிப்பு முற்று; இதில், 'ர்' பொதுவிகுதி.

இனி, அஃது யார்? அவை யார்? என அஃறிணையிருபாலிலும், யான் யார்? யாம் யார்? நான் யார்? நாம் யார்? நீ யார்? நீர் யார்? எனத் தன்மை முன்னிலைகளிலும் வருதல், புதியன புகுதல் என்க. (ஆர்-யார் என்பதன் மரூஉ.)

['எவன்' என்னுங் குறிப்புவினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

174. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

உரை:—எவன் என்-'எவன்' என்கிற, வினா-வினாப்பொருளைத் தருகின்ற, வினைக்குறிப்பு-குறிப்புவினைமுற்று,—இழி இருபால்-அஃறிணைப் படர்க்கை இரண்டு பால்களுக்கும் பொதுவாம்.

(உ-ம்.) அது எவன்? அவை எவன்?

இது, இங்கு ஆண்பால் முற்றன்று; அஃறிணைப் பொதுக் குறிப்புமுற்று; எது, எவை-எனப் பொருள்படும். இதில் 'அன்' பொது விகுதி.

இது,—என், ஏன், என்ன, என்னை, என்னோ, என்னே எனவிகாரப்பட்டு வரும்.

[முற்றெச்சம்.]

175. வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

உரை:—வினைமுற்று-(தெரிநிலை) வினைமுற்றுச் சொல்லே, வினையெச்சம் ஆகலும்-வினையெச்சமாகி வருதலும், குறிப்புமுற்று-குறிப்புவினைமுற்றுச்சொல், ஈர் எச்சம் ஆகலும்-வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும், உள-உண்டு.

(உ-ம்.) 1. 'கண்டான் வணங்கினான்' என்பது—கண்டு வணங்கினான்—என்றும், 'காணான் போனான்' என்பது—காணாமற்போனான்—என்றும் பொருள்படுதலால், தெரிநிலைமுற்று வினையெச்சமாதல் காண்க.

2. 'இராமன் வில்லினன் வந்தான்'—இதில் 'வில்லினனாகி' எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்சமாதல் காண்க.

'குழையினன் இராமன் வந்தான்,'—இதில் 'குழையையுடைய' எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்றுப் பெயரெச்சமாதல் காண்க.

குறிப்பு:—இனி, 'உண்டான் சாத்தன் ஊருக்குப் போனான்' என்பதில் 'உண்ட சாத்தன்' எனப் பொருள்படுதலால், தெரிநிலை முற்றுப் பெயரெச்சமாய் வருதலுங்கொள்க.

பரீக்ஷை வினாக்கள்:—151. தெரிநிலைவினைச்சொல்லாவது யாது? செயப்படுபொருள் குன்றாதவினையாவது யாது? செயப்படுபொருள் குன்றியவினையாவது யாது? கருத்தா முதலிய ஆறும் தெரிநிலைவினைச்சொற்களில் எவ்வாறு தோன்றும்? அறுவகைப் பொருள்களெவை? பகுதி விகுதி இடைநிலை இவை முறையே யெவற்றைத் தெரிவிக்கும்? 152. குறிப்புவினைச்சொல்லாவது யாது? 153. தெரிநிலைவினைச்சொல்லும் குறிப்புவினைச்சொல்லும் தனித்தனி எத்தனை வகைப்பட்டு எவ்வாறு வழங்கும்? தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை யா? உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவினை யா? உடன்பாட்டுவினையாவதுயாது? எதிர்மறைவினையாவது யாது? செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவினை யா? 154. முற்றுவினைகளாவன யாவை? தெரிநிலைவினைமுற்றுச்சொல் ஒவ்வொன்றெத்தனை வகையாம்? எப்படி இருபத்தேழாம்? ஒருவினைப்பகுபதமே இடத்தினாலும் காலத்தினாலும் இருபத்தேழாதற்குக் காரணமெப்படி? குறிப்பு வினைமுற்று எத்தனை? 155. உயர்திணை ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை? 156. உயர்திணைப்பெண்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை? 157. உயர்திணைப்பலர்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை? 158. அஃறிணை ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை? து று டு என்னும் மூன்று விகுதியும் தெரிநிலைவினை குறிப்புவினை இரண்டிலும் வருமோ? று விகுதி எல்லா இடைநிலைகளோடுங் கூடி வருமோ? 159. அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள் யாவை? 160. இருதிணைப்பொதுவினைகளெவை? இருதிணைப்பொதுவினை இவைகளேயன்றி, வேறில்லையோ? 161. அவற்றுள், தன்மை யொருமை வினைமுற்றுக்கள் யாவை? இவ்விகுதிகள் எல்லாம் தெரிநிலைவினை குறிப்புவினை இரண்டிலும் வருமோ? அல் அன் என் ஏன் என்கிற நான்கு விகுதிகளும் எல்லா இடைநிலைகளோடுங் கூடி வருமோ? இருதிணை முக்கூற்றொருமை யெவை? 162. தன்மைப்பன்மை வினைமுற்றுக்கள் யாவை? இவ்விகுதிகளெல்லாம் தெரிநிலை குறிப்பு

இரண்டிலும் வருமோ? 163. முன்னிலையோடுகூடிய படர்க்கை எவ்விடத்ததாம்? 164. முன்னிலை ஒருமைவினைமுற்றுக்கள் யாவை? முன்னிலை ஒருமைவினைமுற்றில் ஏவல்வினைமுற்றுக்கள் யாவை? 165. முன்னிலைப்பன்மைவினைமுற்றுக்கள் யாவை? முன்னிலைப்பன்மைவினைமுற்றுக்களில் ஏவல் வினை முற்றுக்கள் யாவை? 166. வியங்கோள்வினைமுற்றுக்கள் யாவை? இவை எவ்விடங்களில் எப்பால்கட்குப் பொதுவாய் வரும்? வியங்கோள் முற்றுக்கு இவ்விகுதிகளன்றி வேறு விகுதிகள் இல்லையோ? இவ்வியங்கோள் எவ்வெப்பொருளில் வரும்? வியங்கோளுக்கும் ஏவலுக்கும் வேறுபாடென்னை? 167. வேறு இல்லை உண்டு என்பன எவ்வாறு பொதுப்பட வரும்? இவைபோல் ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாவன மற்றுமுண்டோ? 168. பெயரெச்சங்களாவன யாவை? பெயரெச்சவினை யெவ்வெப்பெயர்கொள்ளும்? இவையன்றி வேறு என்னென்ன பொருளில் வரும்? ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமென்றாலென்ன? பெயரெச்சம் விகாரப்பட்டு வருதலில்லையோ? 169. வினையெச்சங்கள் யாவை? வினையெச்சங்கள்கொண்டு முடியுஞ்சொற்களெவை? 170. அவ்வினையெச்ச வாய்பாடுகள் எவை? இவற்றுள், எவ்வெவ்வாய்பாடு எவ்வெக் காலங்காட்டும்? இவ்வினையெச்சவிகுதிகளே காலங் காட்டுமோ? இடைநிலை காலங்காட்டலுமுண்டோ? 'இன' என்றதனாற் கொள்ளப்படும் வினையெச்சவிகுதிகள் எவை? செயவெனெச்சம் எவ்வெப் பொருளில் எவ்வெக்காலங்கொள்ளும்? வான் பான் பாக்கு என்னும் மூன்றும் வினையெச்சவிகுதிகளாயன்றி, வேறு என்ன விகுதிகளாக வரக்கூடும்? இவ்வினையெச்சங்களுள், தன் கருத்தாவைக் கொண்டு முடிவன எவை? தன் கருத்தாவையும் பிறகருத்தாவையுங்கொண்டு முடிவன எவை? 171. வினையெச்சங்களுள், ஒன்று மற்றொன்றாகத் திரிதலுமுண்டோ? 172. செய்யுமென்முற்று எந்தெந்த எழுவாய்களுக்குப் பயனிலையாய் வரும்? எவ்வெவ் விடங்களிற் செல்லாது? செய்யுமென்முற்று விகாரப்படுமாறெங்ஙனம்? 173. 'யார்' என்னும் வினாவினைக் குறிப்புமுற்று எவ்வாறு பொதுப்படவரும்? 174. 'எவன்' என்னும் வினாவினைக்குறிப்பு முற்று எவ்வாறு பொதுப்படவரும்? 175. வினைமுற்றுக்கள் வினையெச்சப்பொருள் தருதலில்லையோ? பெயரெச்சப்பொருள் தருதலில்லையோ?

வினையியல் முற்றிற்று.

3. பொதுவியல்.

முன்சொல்லிய பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும், பின் சொல்லும் இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் பொது வான இலக்கணங்களைச் சொல்லும் இயல். இது, சிங்க நோக்காக நான்கு இயல்களுக்கும் நடுவில் வைக்கப்பெற்றதென்க. [சிங்கம், முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டே செல்லும்.]

[ஒன்றொழி பொதுச்சொல்.]

176. இருதிணை யாண்பெ ணுள்ளொன் றனை யொழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே.

உரை:—இருதிணை-இரண்டு திணைகளிலும், பெயரும்-(ஆண் பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், வினையும்-(அவ்விருபால்களுக்கும் பொதுவாகிய) வினைச்சொற் களும்,—ஆண் பெணுள்-அவ்வாண்பால் பெண்பால்களுள், ஒன் றனை-ஒருபாலை, குறிப்பினான்-குறிப்பினால், ஒழிக்கும்-நீக்கி மற் றொரு பாலை விளக்கும்.

(உ-ம்.) 1. ஆயிரம் மக்கள் போர் செய்தார்கள்—இதில், 'மக்கள்' என்னும் உயர்திணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், 'செய்தார்கள்' என்னும் பொதுவினையும், 'போர்' என்னுங் குறிப் பினாற் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின. (மக்கள்-மனி தர்.) இது-உயர்திணைப் பெண்ணொழி பெயரும், வினையும்.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்—இதில், 'மக்கள்' என்னும் பொதுப்பெயரும் 'உளர்' என் னும் பொதுவினையும், 'பொறையுயிர்த்த' என்னுங் குறிப்பினால் உயர்திணை ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின. (பொறையுயிர்த்தல்-பிரசவித்தல்.) இது—உயர்திணை ஆணொழி பெயரும், வினையும்.

2. இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன—இதில், 'பெற்றங்கள்' என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், 'ஒழிந்தன' என்னும் பொதுவினையும், 'உழவு' என்னுங் குறிப்பி னாற், பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின. (பெற்றம்-மாடு; இங்கே, எருது.) இது,—அஃறிணைப் பெண்ணொழி பெய ரும், வினையும்.

இப்பெற்றங்கள் பால் சொரிந்தன—இதில், 'பெற்றங்கள்' என்னும் பொதுப்பெயரும், 'சொரிந்தன' என்னும் பொதுவினை

யும், 'பால்' என்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்துப் பெண் பாலைக் காட்டின. (பெற்றம்-இங்கே, பசு.) இது—அஃறிணை ஆணொழி பெயரும், வினையும்.

[செய்யுளில் சில பெயர்வினைகளின் ஈற்றயல் திரிதல்.]

177. பெயர்வினை யிடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆ ஓ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

உரை:—பெயர் வினை இடத்து-பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு அயல் ஆ-னகர ளகர ரகர யகர (ன் ள் ர் ய்) ஈற்றுக்கு அயலிலுள்ள விகுதிமுதல் ஆகாரம், ஓ ஆகலும்-ஓகாரமாகத்திரிதலும்,—செய்யுளுள்-செய்யுளிடத்து, உரித்து-உரியதாம்.

பெயர். (உ-ம்.) வினை.

வில்லான் —வில்லோன்.	படைத்தான் —படைத்தோன்.
தொடியாள் —தொடியோள்.	பெயர்த்தாள்—பெயர்த்தோள்.
நல்லார் —நல்லோர்.	சென்றார் —சென்றோர்.
பெரியாய் —பெரியோய்.	வந்தாய் —வந்தோய்.

'ஆகலும்......உரித்தே' என்றதனால், 'செக்கான்' 'வண்ணான்' என்பன 'ஆ' ஓ ஆகாமையுங் கொள்க. இனிச், சிலவிடத்து அகரம் ஓகாரமாதலும் உண்டு; (உ-ம்.) கிழவன்,—கிழவோன்; புலவர்-புலவோர்; இருவர்-இருவோர்; சிலர்-சிலோர்; பலர்-பல்லோர்.

[இடைப்பிறவரல்.]

178. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமா மேற்பன.

உரை:—உருபு-எட்டு வேற்றுமையுருபுகளும், முற்று-வினைமுற்றுக்களும், ஈர் எச்சம்-பெயரெச்சங்களும் வினையெச்சங்களும், (ஆகிய இவற்றுக்கும்) கொள்ளும்-இவை கொண்டுமுடிகிற, பெயர் வினை-பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும், இடை-நடுவில், ஏற்பன-(அவ்விடத்துக்குப்) பொருந்துவனவாகிய, பிற-வேறு சொற்கள், வரலும்-வருதலும், ஆம்-ஆகும்.

(உதாரணம்.)

1. இராமன் (வயிறு நிரம்ப) உண்டான்.
அறத்தை (அழகுபெறச்) செய்தான்.
வாளால் (மரம்) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பு எடுத்தான்.
மலையினின்று (உருண்டு) விழுந்தான்.
} வேற்றுமை உருபு.

இராமனது (பெருங்கை) யானை. }
ஊர்க்கண் (உயர்ந்தஒளி) மாடம். } வேற்றுமை
இராமா (விரைந்து ஓடி)வா. } யுருபு.

2. வந்தான் (அவ்வூர்க்குப்போன) இராமன் —வினைமுற்று.
3. வந்த (வடகாசி) மன்னன் —பெயரெச்சம்.
4. வந்து (இராமன் அவ்வூர்க்குப்) போயினன் —வினையெச்சம்.

'ஏற்பனவரலுமாம்' என்றதனால், ஏலாதன இடையில் வாரா என்க; (உ-ம்.) 'உண்டு விருந்தோடு வந்தான்' என்றவிடத்து 'விருந்தோடு' என்பது வந்தான் என்பதோடு பொருந்தாமையறிக.

[ஒருமொழி தன்இனத்தையும்உணர்த்தல்; உபலக்ஷணம்.]

179. ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே.

உரை:—ஒருமொழி-(நால்வகைச் சொற்களுள்) ஒருசொல்,—(தன்னை யுணர்த்துவதோடு), ஒழி-ஒழிந்து நின்ற, தன் இனம்-தன் இனங்களையும், கொளற்கு - தழுவிக்கொள்ளுதற்கு, உரித்து - உரியதாம்.

(உ-ம்.) சோற்றை உண்டான்—இங்கே, 'சோறு' என்னும் பெயர், 'கறி' முதலிய் தன் இனத்தையும், 'உண்டான்' என்னும் வினை, 'தின்றான்' முதலிய தன் இனத்தையுங் குறித்தன.

நஞ்சு உண்டவன் சாவான்—இங்கே, இவ்வாண்பாற்பெயர் வினைகள், 'நஞ்சுண்டவள் சாவாள்' 'நஞ்சுண்டவர் சாவார்', 'நஞ்சுண்டது சாம்' 'நஞ்சுண்டன சாம்' முதலாகிய தன் இனமான மற்றைப்பாற் பெயர் வினைகளையுங் குறித்தன.

வெற்றிலை தின்றான்—இங்கே, 'வெற்றிலை' யென்னும் பெயர் 'பாக்கு சுண்ணம்பு' முதலிய தன் இனங்களையுங் குறித்தன.

தொகைநிலைத் தொடர்மொழிகள்*

180. வேற்றுமை வினை பண்பு உவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றகும்.

உரை:—வேற்றுமை-வேற்றுமைத்தொகையும், வினை-வினைத்தொகையும், பண்பு-பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி-அன்மொழித்

---

* தொகைநிலைத்தொடர் சூ. 56-ல் காண்க.

தொகையும், என-என்று, அ தொகை-அந்தத்தொகைநிலைத்தொடர் மொழிகள், ஆறு ஆகும்-ஆறுவகைப்படும்;

இவற்றின் இலக்கணத்தை அடுத்த ஆறு சூத்திரங்களிற் காண்க.

[வேற்றுமைத்தொகை.]

181. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

உரை:—இடை-(எழுவாய்க்கும் விளிக்கும்) நடுவில் நின்ற, இரண்டு முதல் ஆம் ஆறு உருபும்-இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமையுருபுகளும், வெளிப்படல் இல்லது-வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள்,—வேற்றுமைத்தொகை-வேற்றுமைத் தொகைகளாம். [தொகை-இங்கே, உருபு மறைதல்.]

(உதாரணம்.)

நீர் குடித்தான்	—	ஐ—இரண்டாம்வேற்றுமைத்தொகை.
கல் எறிந்தான்	—	ஆல்—மூன்றாம்வேற்றுமைத்தொகை.
அரசன் மகன்	—	கு—நான்காம்வேற்றுமைத்தொகை.
மலை வீழருவி	—	இன்—ஐந்தாம்வேற்றுமைத்தொகை.
அரசன் மாளிகை	—	அது—ஆறாம்வேற்றுமைத்தொகை:
வீடு புகுந்தான்	—	கண்—ஏழாம்வேற்றுமைத்தொகை.

கடற் கரைச் சோலை யடைந்தான்—பன்மொழித்தொடர்.

வேற்றுமையுருபுகள் இடையில் தொகுமென்றாராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ, அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கும்; அப்பொருள் படாவிடத்தே தொக்கு நில்லாவாம். (உ-ம்.)

இராமனை அடித்தான், இராமனொடு வந்தான். } என, ஐ, ஒடு உருபுகள் விரிந்து நிற்குமிடத்துச் செயப்படுபொருளும், உடனிகழ்ச்சிப்பொருளும் படுதல்போல,

இராமன் அடித்தான், இராமன் வந்தான். } என, அவ்வுருபுகள் தொக்குநிற்குமிடத்து அப்பொருள் படாததனால் இப்படிப்பட்ட இடங்களில் உருபு தொக்கு நில்லாதென்க.

இனிக், 'கைக்களிறு, பொற்குடம்', என உருபும் பொருளும் உடன்தொக்கனவும் வேற்றுமைத்தொகையெனக்கொள்க. அவை, 'கையையுடைய களிறு, பொன்னாற்செய்த குடம்' என விரியும்; இவை விரியுமிடத்து முன்னது வேற்றுமைத் தொகைநிலைத் தொடரும், பின்னது பெயரெச்சத் தொகாநிலைத்தொடருமாம்.

ஐயுருபும், கண்ணுருபும் தொடர்மொழியின் இடையிலன்றி, இறுதியிலுங்கெட்டு நிற்கும்; (உ-ம்.) கடந்தான் நிலம்—ஐயுருபு தொக்கது; இருந்தான் மாடத்து—கண்ணுருபு தொக்கது.

[வினைத்தொகை.]

182. *காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.*

உரை:—காலம்-காலங்காட்டும் உறுப்பாகிய இடைநிலை விகுதி முதலியன, கரந்த-மறைந்து நிற்கின்ற, பெயரெச்சம்-பெயரெச்சச் சொற்கள்,—வினைத்தொகை-வினைத்தொகைகளாம்.

எனவே, பெயரெச்சவிகுதியும் இடைநிலை முதலியனவும் தொக்குநிற்கப் பகுதி மாத்திரமாய் நின்று, முக்காலத்துக்கும் பொதுவாய்ப் பெயரெச்சப்பொருளை யுணர்த்திப் பெயரைக் கொண்டு முடிவது வினைத்தொகை என்க.

(உ-ம்.) தோய்தயிர், பெய்ம்மழை, அழிபொருள், கொல் யானை, உழுபடை.

இவை—முன்னும் பின்னும் வருகின்ற சொற்களின் குறிப்பால், நேற்றுத் தோய்ந்த தயிர், இன்று பெய்கிற மழை, நாளை அழியும் பொருள்; நேற்று உழுத, இன்று உழுகின்ற, நாளை உழும், படை என ஒரு காலம் பற்றியும், முக்காலம்பற்றியும் விரியும்.

'வருவழி, தருபொருள், அலமருகுதிரை, நடந்திடுபிள்ளை,' எனச் சில வினைத்தொகை, பகுதி விகாரப்பட்டும் வரும்.
கா, மோ, சா முதலிய சில பகுதிகள் வினைத்தொகையாய் வாரா.

[பண்புத்தொகை.]

183. *பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்*
ஒருபொருட்கு இருபெயர் வந்தவுங் குணத்தொகை.

உரை:—பண்பை விளக்கும் மொழி-பண்பை விளக்குதற்கு வருகின்ற 'ஆகிய' என்னும் பண்பு உருபு, தொக்கனவும்-மறைந்து நிற்பவையும், ஒரு பொருட்கு இரு பெயர் வந்தவும்-ஒரு பொருளுக்கு (ப் பொதுப்பெயரும் சிறப்புப்பெயருமாகிய) இருபெயர்கள் வந்தவையும்,—குணத்தொகை-பண்புத்தொகைகளாம்.

[பண்பு-குணம்] இப்பண்பு—வண்ணம், வடிவு, அளவு, சுவை என நால்வகைப்படும்; [வண்ணம்-நிறம்; வடிவு-உருவம்; அளவு-எண் முதலியன; சுவை-உருசி.] ஒருபொருட்கு இருபெயர் வந்தது-இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்; இதில், சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.

(உதாரணம்.)

செந்தாமரை, கருங்குதிரை —வண்ணப் பண்புத்தொகை.
சதுரப்பலகை, வட்டக்கல் —வடிவுப் பண்புத்தொகை.
ஒருபொருள், மூக்குணம் —அளவுப் பண்புத்தொகை.
உவர்க்கடல், இன்சொல் —சுவைப் பண்புத்தொகை.
மதுரைநகர், சாரைப்பாம்பு —இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
சிறுகருங்குயில், செந்நிறக்குவளை—பன்மொழித்தொடர்.

இவைமுறையே, செம்மையாகிய தாமரை, சதுரமாகிய பலகை, ஒன்றாகிய பொருள், உவர்ப்பாகிய கடல், மதுரையாகிய நகர், சிறுமையாகிய கருமையாகிய குயில் என விரியும்.

[உவமத்தொகை.]

184. உவம வுருபில துவமத் தொகையே.

உரை:—உவம உருபு-உவம உருபுகள், இலது-மறைந்து நின்ற தொடர்மொழிகள்,— உவமத்தொகை-உவமைத்தொகைகளாம்.

உபமானச்சொல்லுக்கும் உபமேயச் சொல்லுக்கும் இடையில் உவமவுருபுகள் தொக்குநிற்கத் தொடர்வது, உவமைத்தொகை என்க. இவ்வுவமைத்தொகை, வினை, பயன், மெய், உரு என்ப வற்றைப்பற்றி வரும். [வினை-தொழில்; பயன்-பிரயோசனம்; மெய்-வடிவம்; உரு-நிறம்.]

புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான் —வினையுவமத்தொகை.
மழைக்கை, கற்பகவள்ளல் —பயனுவமத்தொகை.
துடியிடை, வேய்த்தோள் —மெய்யுவமத்தொகை.
பவளவாய், கார்க்கூந்தல் —உருவுவமத்தொகை.
கற்பகக்கமலக்கை, மரகதக்கிளிமொழி —பன்மொழித்தொடர்.

இவை-முறையே, 'புலிபோலுங்கொற்றன்', 'மழைபோலுங் கை', 'துடிபோலும் இடை', 'பவளம்போலும் வாய்', 'கற்பகம் போலும் கமலம்போலும் கை' என விரியும்.

[துடி-உடுக்கை. வேய்-மூங்கில். மாகதம்-பச்சையிரத்தினம்.]

[உவம உருபுகள்.]

185. போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

உரை:—போல ... நிகர-'போல' முதலிய வினையெச்சம் பத்தும், அன்ன இன்ன் என்பவும்-இப்பெயரெச்சம் இரண்டும், பிறவும்-இவைபோல்வனபிறவும்,—உவமத்து உருபு-உவமவுருபுகளாம்.

'பிற' என்றதனால்-'போல்' 'புரை' முதலிய வினையடிகளும், அவ்வினையாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், பொருவ, ஏற்ப அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலியனவுங்கொள்க.

[உம்மைத்தொகை.]

186. எண்ண லெடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

உரை:—எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள்-எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்கிற நால்வகை அளவைகளாற் பொருளை யளக்குமிடத்துத் தொடருகின்ற அவ்வளவைப் பெயர்களுள், உம் இலது-உம் என்னும் உருபு தொக்கு நிற்பவை,— அத்தொகை-அவ்வும்மைத் தொகைகளாம்.

(உதாரணம்.)

ஒன்றேகால், கபிலபரணர் —எண்ணலும்மைத்தொகை.
கழஞ்சேகால், தொடியேகஃசு —எடுத்தலும்மைத்தொகை.
கலனே குறுணி, நாழி ஆழாக்கு —முகத்தலும்மைத்தொகை.
சாணங்குலம், சாணரை —நீட்டலும்மைத்தொகை.
சேர சோழ பாண்டியர், புலிவிற்கெண்டை-பன்மொழித்தொடர்.

இவைமுறையே, 'ஒன்றும் காலும்', 'கழஞ்சும் காலும்', 'கலனும் குறுணியும்', 'சாணும் அங்குலமும்', 'சேரனும் சோழனும் பாண்டியனும் என விரியும். [கழஞ்சு-பன்னிரண்டு பண எடை கொண்ட நிறை; தொடி-ஒருபலம்; கஃசு-காற்பலம்.]

வேற்றுமை முதலிய நான்கு தொகைகளும் இடையில் தொக்கு நிற்கும்; அன்மொழித்தொகை இறுதியிற்றொக்கு நிற்கும்; இவ்வும்மைத்தொகை இடையிலும் இறுதியிலும் தொக்குநிற்பதனால் அவைகளுக்கு நடுவிலே வைக்கப்பட்டதென்க.

குறிப்பு:—வினைத்தொகையும் பண்புத்தொகையும் விரிந்தால் தெரிநிலைப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடராம்; உவமத்தொகை விரிந்தால் சிலவிடத்து, வினையெச்சத் தொகாநிலைத்தொடரும், சிலவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடருமாம்; உம்மைத் தொகை விரிந்தால் இடைச்சொல் தொகாநிலைத்தொடராம்.

[அன்மொழித்தொகை.]

187. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

உரை:—ஐந் தொகை மொழிமேல்-(வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை என்னும்) ஐவகைத் தொகைநிலைத்தொடர் மொழிகளுக்கும் புறத்தில், பிற தொகல்-அவையல்லாத [பிறமொழிகளாகிய] உருபுகள் தொக்கு வருவன,— அன்மொழி-அன்மொழித் தொகைகளாம்.

எனவே, (ஐந்து தொகைகளுக்கும் உரியன) அல்லாத மொழி தொக்குநிற்பது, அன்மொழித்தொகை.

(உதாரணம்.)

1. பூங்குழல்—இரண்டாம்வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (பூவையுடைய குழலினையுடையாள்.)

பொற்றொடி—மூன்றாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; (பொன்னாலாகிய தொடியினையுடையாள்.)

அணியிலக்கணம்—நான்காம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (அணிக்கு இலக்கணஞ் சொன்ன நூல்)

பொற்றாலி—ஐந்தாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; (பொன்னின் ஆகிய தாலியையுடையாள்.)

சேரன்குடி—ஆறாம்வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; (சேரனது குடிமக்களிருக்கும் ஊர்.)

கீழ்வயிற்றுக்கழலை—ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (கீழ்வயிற்றின்கண் எழுந்த கட்டி போல்வான்.)

2. தாழ்குழல்—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (தாழ்ந்த குழலையுடையாள்.)

3. ஆண்டகை—பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (ஆண்மையாகிய தகுதியை [குணத்தை] யுடையான்.)

4. துடியிடை—உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (துடிபோலும் இடையை யுடையாள்.)

5. உயிர்மெய்—உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; (உயிரும் மெய்யுங் கூடிப் பிறந்த எழுத்து.)

தகரஞாழல்மார்பு—பன்மொழித்தொடர்; (தகரமும் ஞாழலுங் கூடி யுண்டாகிய சாந்தை யணிந்த மார்பையுடையான்.) [தகரம்-ஒருவகை வாசனைப்பொருள்; ஞாழல்-குங்குமப்பூ.]

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளும் கலந்துவரும் என்க;

(உ-ம்.) 'திகழ் செவ் வான் மதித் திருமுகப் பூங் குழல்.' (திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் எழுந்த மதிபோலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையும் உடையாள்.)

குறிப்பு:—அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதல் ஏற்பனவாம்.

[உம்மைத்தொகைக்குப் புறனடை.]

188. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

உரை:—உயர்திணை உம்மைத்தொகை-உயர்திணை யொருமையில் வருகிற உம்மைத்தொகைகள், பலர் ஈறே-(ரகரமெய்யும் 'கள்' என்பதுமாகிய) பலர்பால் விகுதிகளை ஈற்றிலுடையனவேயாம்.

(உ-ம்.) கபிலபரணர், சந்திரசூரியர், சேரசோழபாண்டியர், தேவன் தேவிகள்.

'பலரீறே' என்ற தேற்றேகாரத்தால்—அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் பன்மை யீறாகவே வரவேண்டுமென்ற நியதியில்லாமல் ஒருமை யீற்றாலும் வரும்; (உ-ம்.) இராப்பகல்கள்-இராப்பகல்; தந்தை தாயர்-தந்தைதாய்.

தொகாநிலைத்தொடர்மொழிகள்.*

189. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை.

உரை:—முற்று - வினைமுற்றும், ஈர் எச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய்-எழுவாயும், விளி-விளியும் ஆகிய, பொருள்-ஐவகைப் பொருள்களில் (பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), ஆறு உருபு-(வேற்றுமைப்பொருளில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய) ஆறு உருபுகளும், (இடையில் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), இடை-இடைச்சொற் புணர்ச்சியும், உரி-உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு-ஒரு சொல் அடுக்கிவரும் புணர்ச்சியும், இவை-(ஆகிய) இவ்வொன்பதும், தொகாநிலை-தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

(உதாரணம்.)

1. உண்டான் இராமன்—(தெரிநிலை)
பெரியன் இராமன் —(குறிப்பு) } வினைமுற்றுத்தொடர்.

* தொகாநிலை சூ. 56-ல் காண்க.

2. உண்ட மனிதன் —(தெரிநிலைப்) } பெயரெச்சத்தொடர்.
கரிய மனிதன் —(குறிப்புப்)
3. உண்டு வந்தான். —(தெரிநிலை) } வினையெச்சத்தொடர்.
மெல்லச் சென்றான்.—(குறிப்பு)
4. இராமன் உண்டான். ... ... —எழுவாய்த்தொடர்.
5. இராமா வா. ... ... —விளித்தொடர்.
6. நீரைக் குடித்தான், கல்லால் எறிந்தான், } வேற்றுமைத்
அரசனுக்கு மகன், மலையின்வீழருவி, } தொகாநிலைத்
அரசனதுமாளிகை, வீட்டின்கண்புகுந்தான். } தொடர்.
7. மற்றொன்று. ... ... —இடைச்சொற்றொடர்.
8. நனி பேதை. ... ... —உரிச்சொற்றொடர்.
9. பாம்பு பாம்பு. ... ... —அடுக்குத்தொடர்.

இவையெல்லாம் நிலைமொழி நோக்கி யுணரப்படும்.

எழுவாய்த்தொடருக்கும், வினைமுற்றுத்தொடருக்கும் உள்ள வேறுபாடு:—எழுவாய்க்கு வினைமுற்றைப் பயனிலையாகக்கொள்ளுமிடத்து, வினைமுதல் விசேடணமாக, வினை முக்கியப்பொருளாம்; வினைமுற்றிற்குப் பெயரைப் பயனிலையாகக் கொள்ளுமிடத்து வினை விசேடணமாக, வினைமுதல் முக்கியப்பொருளாம்.

(உ-ம்.) இராமன் உண்டான்—இங்கே, இராமன் இது செய்தான் என வினைமுதல் விசேடணமாக, வினை முக்கியப்பொருளாயிற்று; உண்டான் இராமன்—இங்கே, இது செய்தான் இராமன் என வினை விசேடணமாக, வினைமுதல் முக்கியப்பொருளாயிற்று.

வழு, வழாநிலை, வழுவமைதி.

[வழுக்கள்—7.]

190. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழும் மயங்கினும் வழுவே.

உரை:—திணையே-இருதிணையும், பால்-ஐம்பாலும், இடம்-மூவிடமும், பொழுது-முக்காலமும், வினா-வினாவும், இறை-விடையும், மரபு-(பலவகை) மரபுகளும், ஆம்-ஆகிய, எழும்—, மயங்கின்-தத்தம் முறை தவறிவந்தால், வழு ஆம்-வழுவாகும். [ஆதலால் இவ்வேழு வழுக்களையும் அறிந்து, வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் அவை வாராமல் நீக்குக.]

திணை முதலிய ஆறும் மரபாயினும், அவை யொழிந்தனவற்றையே மரபு என்க. (மரபு-பழைமையாக வழங்கும் முறைமை.)

சொற்கள் தொடரும்போது முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள், திணை பால் இடம் காலம் வினு விடை மரபு என்னும் இவ்வேழினும் மாறுபடாமல் தொடர்ந்துநிற்பது, முறைமை; அவ்வாறு தொடர்ந்து நிற்பன, வழாநிலை யெனப்படும்; வழாநிலையாவது—இலக்கணப்பிழை யில்லாதது. அத்திணை பால் முதலியவற்றில் மாறி நிற்பன, வழுவாம்; வழுவாவது—இலக்கணப் பிழையுள்ளது. அவற்றில் மாறி நின்று இலக்கணப்பிழையுள்ளதாகக் காணப்பட்டாலும், அறிவுடைய முன்னோரால், இருக்கலாமென்று ஏற்றுக்கொண்டு அமைக்கப்பட்டன, வழுவமைதியாம். இம்மூன்றனுள், வழு நீக்கப்படும். வழாநிலையும் வழுவமைதியுங் கொள்ளப்படும்.

(உ-ம்.) 1. அவன் வந்தது ... ... —திணைவழு.
2. அவன் வந்தாள் ... ... —பால் வழு.
3. யான் வந்தான் ... ... —இட வழு.
4. நாளை வந்தான் ... ... —கால வழு.
5. கறக்கின்ற எருமை பாலோ சினையோ? —வினு வழு.
6. பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப்பணம் என்பது. } விடை வழு.
7. யானை செலுத்துபவனை 'இடையன்' ஆடு மேய்ப்பவனைப் 'பாகன்' } என்பன } மரபுவழு

[வினுவிடைகள் திணை பால்களில் வழுவாமை.]

191. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

உரை:—திணை பால் ஐயம்-திணைப்பொருளிலும் பாற்பொருளிலும் ஐயம் [சந்தேகம்] தோன்றிய விடத்து, அதனை,—அவ்வப்பொதுவினும்-அத்திணைகளுக்கும் பால்களுக்கும் பொதுவாகிய சொல்லாலும்,—மெய் தெரி பொருள் மேல்-உண்மையாகத் துணிந்த பொருளின்மேல், அன்மையும்-அல்லாத் தன்மையை வைத்தும்,—விளம்புப-சொல்லுவர் (அறிவுடையோர்).

(உதாரணம்.)

வினு. 1. திணையில் ஐயந்தோன்றியபொழுது, 'குற்றியோமகனோ அவ்விடத்துத் தோன்றுகிற உரு', எனப் பொதுச் சொல்லால் வினவுக. குற்றிக்கும் மகனுக்கும் பொதுப்

பட நிற்றலால், 'உரு' பொதுச்சொல்லாயிற்று. [இவ்வாறு கூருமல், தோன்றுகின்றது, தோன்றுகின்ருன் எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், திணைவழுவும் வினவழுவுமாம்.] (குற்றி = மரக்கட்டை).

2. (1) உயர்திணையிற் பால் ஐயந் தோன்றியபொழுது, 'ஆண் மகனே பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பொதுச்சொல்லால் வினவுக. ஆண் பெண் இரண்டல்லது பலர்பாலென வேறென்று இல்லாமல், அவ்விரு பாலுக்கும் பொதுப்பட நிற்றலால், 'தோன்றுகிறவர்' என்பது-பொதுச்சொல்லாயிற்று. ['தோன்றுகிறவன், தோன்றுகிறவள்' எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், பால்வழுவும் வினவழுவுமாம்.]

(2) அஃறிணையிற் பால் ஐயந் தோன்றியபொழுது, 'ஒன்ருே பலவோ இவ்வயல் புகுந்த மாடு' எனப் பொதுச்சொல்லால் வினவுக. மாடு என்பது—பால்பகா அஃறிணைப் பெயராய், அத்திணை யிருபாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று. ['புக்கது புக்கன' எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், பால் வழுவும் வினவழுவுமாம்.]

விடை. 1. குற்றியோ மகனே என்று ஐயப்பட்டு வினவியபொழுது, துணிந்தபொருள், குற்றியாயின் 'மகனன்று' என்றும், மகனுயின் 'குற்றியல்லன்' என்றும் துணிந்த பொருளின்மேல் மற்றென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

2. (1) ஆண்மகனே பெண்மகளோ என்று ஐயப்பட்டு வினவியபொழுது, துணிந்த பொருள் ஆண்மகனுயின், 'பெண்மகளல்லன்' என்றும்; பெண்மகளாயின் 'ஆண்மகனல்லள்' என்றும், துணிந்த பொருளின்மேல் மற்றென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) ஒன்ருே பலவோ என்று ஐயப்பட்டு வினவியபொழுது, துணிந்த பொருள் ஒன்ருயின், 'பலவன்று' என்றும், பலவாயின், 'ஒன்றல்ல' என்றும் துணிந்த பொருளின் மேல் மற்றென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

['மகனல்லன், அவ்வுருக் குற்றி' என இவ்வாறு கூறினுல், 'சொல் பெருகுதல்' என்னும் விடைவழுவாம்.]

[திணைவழுவமைதி.]

192. உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

உரை:—உயர்திணை-உயர்திணை யெழுவாயை, தொடர்ந்த-தொடர்ந்துவந்து தானும் எழுவாயாக நிற்கிற, பொருள் முதல் ஆறும்-(அஃறிணையாகிய) பொருள் இடம் முதலிய ஆறும், அதனொடு சார்த்தின்-அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கப்பட்டால், அத் திணை முடிபின-அவ்வுயர்திணைமுடிபைப் பெறுவனவாம்.

தொடர்தலாவது—அஃறிணைப் பொருள் முதலிய ஆறும் உயர்திணைக்குச் சம்பந்தப்பட்டனவாய் நிற்றல்; சார்த்தலாவது-உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயையும் உடன் முடித்தல்.

(உதாரணம்.)

நம்பி பொன் பெரியன்-பொருள்.	நம்பி கை பெரியன்-சினை.
நம்பி நாடு பெரியன் -இடம்.	நம்பி புலனும் பெரியன்-குணம்
நம்பி வாழ்நாள் பெரியன்-காலம்	நம்பி நடைபெரியன்-தொழில்

[உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயும் முடிந்தது.]

'பொன்' என்னும் அஃறிணை யெழுவாய், 'நம்பி' என்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய 'பெரியன்' என்னும் உயர்திணைவினையைக்கொண்டு முடிதலால், வழுவாகித், தொடர்புண்டாகி யிருத்தல்பற்றிச் சார்த்திமுடித்தலால் வழுவமைதியாயிற்று. சார்த்தாவிடின் வழாநிலையாக 'நம்பிக்குப் பொன்பெரிது' 'நம்பிக்கு வாழ்நாள் சிறிது' எனத் தம் முடிபு கொள்ளும் என்க.

இனிக் 'கிணறு நீர் ஊறிற்று, மாடு கோடு கூரிது' என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

[திணை பால் மரபு வழுவமைதி.]

193. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

உரை:—திணை-திணைகளும், பால்-பால்களும், பல பொருள்-(வெவ்வேறு வினைகளுக்கு உரிய) பல பொருள்களும், விரவின-கலந்து ஒருதொடராக வருவனவாயின், அவை,—சிறப்பினும்-சிறப்பினாலும், மிகவினும்-மிகுதியினாலும், இழிபினும்-இழிவினாலும், ஒரு முடிபின-ஒரு முடிபைப்பெறுவனவாம்.

(உதாரணம்.)

திணை. 1. 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்'—இதில், இருதிணையுங் கலந்து, சிறப்பினால், 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. [சான்றோர் திங்கள்போல மறுத் தாங்கமாட்டாமை, இங்கே சிறப்பு.]

2. 'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தாரிளையார் பசுப் பெண்டி ரென்றிவர்கட்கு'—இதில், இருதிணையுங் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணை முடிபைப்பெற்றன. ['பசு' என அஃறிணைப் பொருள் ஒன்றேயாக, 'பார்ப்பார்' முதலிய உயர் திணைப் பொருள் ஏழாதல், இங்கே மிகுதி.]

3. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'—இதில், இருதிணையுங் கலந்து, இழிவினால், 'விடா' என அஃறிணை முடிபைப்பெற்றன. [விடத் தக்கதை விடாமை, இங்கே இழிவு.]

பால். 'தானும் தன்தையலும் தாழ்சடையோ னாண்டிலனேல்'—இதில் ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால், 'ஆண்டிலன்' என்னும் ஆண்பால் முடிபைப் பெற்றன. [பெண்ணினும் ஆண் உயர்ந்தமை, இங்கே சிறப்பு.]

இனிக், கலவாமல் எண்ணி முடிக்கும்போது, 'தோழனும் தானும் வந்தான்', 'தோழியும் தானும் வந்தாள்' என ஒருமை முடிபையேற்றலுங்கொள்க.

மரபு. 'கறியுஞ்சோறுமுண்டான்', 'மாலையும் முடியும் கவித்தான்'—இவைகளில் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்கள் கலந்து, சிறப்பினால், 'உண்டான், கவித்தான்' என ஒரு பொருளுக்குரிய வினை முடிபைப் பெற்றன. ['உண்ணல்' என்னும் வினைக்குரிய சோறு—'தின்னல்' என்னும் வினைக்குரிய கறியினுந் தலைமையுடைமையும், 'கவித்தல்' என்னும் வினைக்குரிய முடி,—'சூடுதல்' என்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமையுடைமையும், இங்கே சிறப்பு.

[திணை பால் வழுவமைதி.]

194. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினு மியல்பே.

உரை:—உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும்-மேன்மைப்படுத்திச் சொல்லுதலினாலும், சிறப்பினும்-சிறப்பினாலும், செறலினும்-கோபத்தினாலும், இழிப்பினும்-பழிப்பினாலும், பால் திணை-பாலும் திணையும், இழுக்கினும்-வழுவி வந்தாலும், இயல்பே-அமைதியேயாம்.

பால். 1. தன் புதல்வனை 'என் அம்மை வந்தாள்' என்பதில்—உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2. ஒருவனை 'அவர் வந்தார்' என்பதில்-உயர்த்திச்சொல்லுதலால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

3. 'தாதாய் மூவேழு லகுக்குந் தாயே' என்பதில்-சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4. 'எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்' என்பதில்-கோபத்தினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

5. பெண்வழிச் செல்பவனை, 'இவன் பெண்' என்பதில்-இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை. 1. ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பதில்—உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2. 'பசுங்கிளியார் சென்றார்க்கு' என்பதில்—உயர்த்திச் சொல்லுதலால் அஃறிணை உயர்திணையாயிற்று. [கிளியார்-கிளி.]

3. 'தம்பொருள் ளென்ப தம்மக்கள்' என்பதில்—சிறப்பினால், உயர்திணை அஃறிணையாயிற்று.

4. 'எவவுஞ் செய்கலான் தான்றேரா னவ்வுயிர், போஒமளவுமோர் நோய்' என்பதில்—கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

5. 'நாம் கடவுளுடைமை' என்பதில்-இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று. [இங்கே, இழிவு-தமது பணிவு.]

இனி, மகனை 'அப்பன் வந்தான்' எனவும், மகளை 'அம்மை வந்தாள்' எனவும், வழங்கும் மரபுவழுவமைதிகளுங் கொள்க.

[பால் இட வழுவமைதி.]

195. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறஇடந் தழுவலு முளவே.

உரை:—ஒருமையின் பன்மையும்-ஒருமைப்பாலிற் பன்மைப் பாற் சொல்லையும், பன்மையின் ஒருமையும்-பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், ஓர் இடம் பிற இடம்-ஓரிடத்திற் பிற இடத்துச் சொல்லையும், தழுவலும்-சேர்த்துக் கூறலும், உள-உள்ளனவாம்.

(உதாரணம்.)

பால். 1. 'வெயி லெல்லாம் மறைத்தது மேகம்' என்பதில்—'வெயில்' என்னும் ஒருமைப்பாலில் 'எல்லாம்' என்னும் பன்மைப்பாற் சொல் சேர்த்துக்கூறப்பட்டது. [வெயில் முழுவதையும் என்பது கருத்து.] இது, ஒருமைப் பன்மை மயக்கம்.

2. 'இரண்டு கண்ணுஞ் சிவந்தது' என்பதில்-இரண்டு என்னும் பன்மைப்பாலில் 'சிவந்தது' என்னும் ஒருமைப் பாற்சொல் சேர்த்துக் கூறப்பட்டது. [தனித்தனி சிவந்தது என்பது கருத்து.] இது, பன்மை யொருமை மயக்கம்.

இடம். 1. 'இராமன் தாய் இவை செய்வேனோ' என்பதில்—'யான்' எனச் சொல்லவேண்டுந் தன்மையில் 'தாய்' எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது; [இராமன் தாயாகிய யான் என்பதுபொருள்.] இது, தன்மைப் படர்க்கை.

2. 'எம்பியை யீங்குப் பெற்றேன்' என்பதில்—தன் தம்பியை முன்னிலையாக்கி, அவனையே நோக்கிக் கூறலால் 'நின்னை' எனச் சொல்லவேண்டும் முன்னிலையில் 'எம்பியை' எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது. இது, முன்னிலைப்படர்க்கை.

குறிப்பு:—நீயோ அவனோ யாரிது செய்தார்.
யானோ அவனோ யாரிது செய்தார்.
நீயோ யானோ யாரிது செய்தார்.
நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்.
} எனக் கலந்து ஓரிடத்திற் பிறவிடம் வருதலுங்கொள்க

[காலம்—3.]

196. இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே.

உரை:—காலம்-(முன் சொல்லப்பெற்ற) காலம்,—இறப்பு-இறந்தகாலமும், எதிர்வு-எதிர்காலமும், நிகழ்வு-நிகழ்காலமும், என-என்று, மூன்று-மூன்றும்.

இறப்பு-நடந்தது; எதிர்வு-நடக்கப்போகிறது; நிகழ்வு-நடக்கிறது. இறந்தகாலமும் எதிர்காலமும் மறைபொருளாய் நிற்றலின், அவைகளை முன்னும், நிகழ்காலம் வெளிப்படைப்பொருளாதலால் அதனைப் பின்னும் வைத்தார். நிகழ்காலச்சொல் மற்றைய காலங்களுக்கும் உரியதாகுமாதலால், அதனை யிறுதியில் வைத்தார் என்பாரும் உளர்.

[கால வழுவமைதி.]

197. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

உரை:—முக்காலத்தினும் - மூன்று காலங்களிலும், ஒத்து இயல் பொருளை-(தம் தொழில் இடைவிடாமல்) ஒரு தன்மையாய் நடக்கிற பொருள்களை, நிகழும் காலத்தான்-நிகழ்காலத்தினால், செப்புவர்-சொல்லுவர்.

(உ-ம்.) கடவுள் இருக்கின்றார்; காற்று வீசுகின்றது; மலை நிற்கின்றது.

[கடவுள் இருப்பதும், காற்று வீசுவதும், மலை நிற்பதும், முக்காலத்திலும் உள்ளனவாதல் அறிக.]

[இதுவும் அது.]

198. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉ முக் காலமு மேற்புழி.

உரை:—விரைவினும்-விரைவினாலும், மிகவினும்-மிகுதியினாலும், தெளிவினும்-தெளிவினாலும், இயல்பினும்-(இம்மூன்று காரணங்களுமில்லாமல்) இயல்பினாலும், முக்காலமும்-மூன்று காலங்களும், ஏற்புழி-ஏற்குமிடத்து, பிறழவும் பெறூஉம்-ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும்.

(உதாரணம்.)

1. உண்டு போவதற்கு இருப்பவனை, விரைவில் கூட அழைத்துக்கொண்டு போகவேண்டிய மற்றொருவன், 'இன்னும் உண்டிலையோ?' என்றால், அவன் 'உண்டேன் உண்டேன்' என்பான். உண்கிறவனை அவ்வாறு வினவினால் அவனும் 'உண்டேன் உண்டேன்' என்பான். [இங்கே விரைவினால், எதிர்காலமும், நிகழ்காலமும்—இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.]

2. 'அக்காட்டிற் போனால் கூறை பறிகொடுத்தான்' 'பறிகொடுக்கிறான்' 'களவுசெய்தால் கையறுக்கப்பட்டான்' 'கையறுக்கப்

படுகிறான்' என்பவற்றில், மிகுதியினால், எதிர்காலம்—இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. [கூறை பறிகொடுத்தலும், கையறுக்கப்படுதலும் சிறுபான்மை தப்பினாலுந் தப்புமாதலால், மிகுதியெனப்பட்டன. [கூறை-வஸ்திரம். மிகுதி-பெரும்பான்மை.]

3. 'அறஞ்செய்தால் சுவர்க்கம் புகுந்தான்,' 'புகுகின்றான்'. 'எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது,' 'பெய்கின்றது'—என்பவற்றில், தெளிவினால், எதிர்காலம்-இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. (திட்டை-மேடு.) [சுவர்க்கம் புகுதற்கு அறஞ் செய்தல் காரணம் என்பது சாஸ்திரப் பிரமாணத்தினாலும், மழை பெய்தற்கு எறும்பு முட்டைகொண்டு திட்டை யேறுதல் அறிகுறி யென்பது பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் தெளியப்பட்டதனால் தெளிவாயின.]

4. 'யாம் முன்னே விளையாடுவது இச்சோலை,' 'விளையாடுகிறது இச்சோலை,' என்பவற்றில், வேறொரு காரணமுமில்லாமல் இயல்பினால், இறந்தகாலம்—எதிர்காலமும், நிகழ்காலமுமாகச் சொல்லபட்டது.

[அறுவகை வினா.]

199. *அறிவு அறி யாமை ஐயுறல் கொளல்கொடை*
ஏவல் தரும்வினா ஆறு மிழுக்கார்.

உரை:—அறிவு-அறிதலும், அறியாமை-அறியாமையும், ஐயுறல்-சந்தேகப்படுதலும், கொளல்-வாங்கிக்கொள்ளுதலும், கொடை-கொடுத்தலும், ஏவல்-ஏவுதலும் (ஆகிய அறுவகைப் பொருளையும்) தரும்-தருதலால் வருகின்ற, வினா ஆறும்-அறுவகை வினாக்களையும், இழுக்கார்-தவறமற்கொள்ளுவர் (அறிவுடையோர்.)

(உதாரணம்.)

1. ஆசிரியன் 'இக்கவிக்குப் பொருள் யாது?' என்பது-அறிவினா.
2. மாணாக்கன் 'இக்கவிக்குப் பொருள் யாது?' ,, -அறியாவினா.
3. 'குற்றியோ? மகனோ?' ... ... ,, -ஐயவினா.
4. 'வணிகரே! பயறு உள்ளதோ?' ... ,, -கொளல்வினா.
5. 'இராமனுக்கு ஆடை இல்லையோ?' ... ,, -கொடைவினா.
6. 'இராமா! உண்டாயா?' ... ... ,, -ஏவல்வினா.

குறிப்பு:—அறிவினா-தனக்குத் தெரிந்தவொன்றைப் பிறருக்குத் தெரியுமா என்று அறியக் கேட்பது. அறியாவினா-தனக்குத் தெரியாதவொன்றைத் தெரிந்துகொள்ளக் கேட்பது. ஐயவினா-

தனக்குச் சந்தேகமாயிருப்பதொன்றை அச்சந்தேகந் தீர்த்துக் கொள்ளக் கேட்பது. கொளல்வினா-தான் ஒருபொருளை வாங்கிக் கொள்ள அப்பொருள் இருத்தலைப்பற்றிக் கேட்பது. கொடைவினா-தான் ஒரு பொருளைக் கொடுத்தற்பொருட்டு, அப்பொருள் இருத்தலைப்பற்றிக் கேட்பது. ஏவல்வினா-தான், ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும்பொருட்டு, அத்தொழில் நிகழ்ச்சியைப்பற்றிக் கேட்பது.

[எட்டுவகை விடை.]

200. சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய ஐந்தும் அப் பொருண்மையி னேர்ப.

உரை:—சுட்டு-சுட்டிக்கூறுதலும், மறை-எதிர்மறுத்துக்கூறுதலும், நேர்-உடன்பட்டுக்கூறுதலும், ஏவல்-எதிராக ஏவுதலும், வினாதல்-எதிராக வினவுதலும், உற்றது உரைத்தல்-நேர்ந்ததைச் சொல்லுதலும், உறுவது கூறல்-இனி நேருவதைச் சொல்லுதலும், இனம் மொழி-(வினவினதற்கு) இனமானதைச் சொல்லுதலும், எனும்-என்ற, எண் இறையுள்-இவ்வெட்டுவகை விடைகளுள், இறுதி நிலவிய ஐந்தும்-கடைசியில் நின்ற (ஏவல் முதலிய) ஐந்தும், அப் பொருண்மையின்-அவ்விடைப்பொருளைக் குறிப்பால் தருதலினாலே, நேர்ப-(விடைகள் என்று) தழுவிக்கொள்வர் (அறிவுடையோர்).

எனவே, முதல் மூன்றும் வெளிப்படை விடை; மற்றை ஐந்தும் எதிர்மறைப்பொருள்தரும் குறிப்புவிடை.

(உதாரணம்.)

1. மதுரைக்கு வழியாது? என்றால் 'இது' என்பது-சுட்டுவிடை.
2. இது செய்வாயா? ,, செய்யேன் ,, -மறைவிடை.
3. ,, ,, செய்வேன் ,, -நேர்விடை.
4. ,, ,, நீ செய் ,, -ஏவல்விடை.
5. ,, ,, செய்வேனோ ,, -வினாவிடை.
6. ,, ,, உடம்புநொந்தது / ,, நோவாநின்றது } -உற்றது உரைத்தல் விடை.
7. ,, ,, உடம்புநோம்-உறுவதுகூறல்விடை.
8. ,, ,, மற்றதுசெய்வேன்-இனமொழிவிடை.

குறிப்பு:—'நிலவிய' என்ற மிகையால், 'வினா' இல்லாமலும் விடை வரும் என்க. அறிபவனொருவன், 'இன்னநாள் காற்று

அடிக்கும்,' 'இன்னநாள் மழைபெய்யும்', 'இன்னநாள் வாழ்வு வரும்'. என்பதும், இரப்பவனொருவன் கங்கையாடிப்போந்தேன், ஒருபிடிசோறு தம்மின், ஓராடை தம்மின், என்பதுங் காண்க.

[மரபு.]

201. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே.

உரை:—எப்பொருள்-எந்தப்பொருளை, எச்சொலின்-எந்தச் சொல்லால், எ ஆறு-எவ்வழியால், உயர்ந்தோர்-அறிவுடையோர், செப்பினர் - சொன்னார்களோ, அப்படி செப்புதல் (அப்பொருளை அச்சொல்லால்) அவ்வழியாற் சொல்லுதலே, மரபு-மரபாம்.

(உ-ம்.) குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி.
யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று.
யானையிலத்தி, ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம்.
யானைப்பாகன், ஆட்டிடையன்.
} மரபு இளமை

குறிப்பு:—பசுவின் குட்டி, குதிரைக்குஞ்சு, யானைச்சாணம், ஆட்டுப்பாகன் எனக்கூறினால், மரபுவழுவாம்.

[சிறப்புவினை மரபுவழாநிலை.]

202. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

உரை:—வினை-(குறித்த பொருளை விளக்கும்) வினையும், சார்பு-சார்பும், இனம்-இனமும், இடம்-இடமும் முதலிய சொற்களை, மேவி-பொருந்தி, விளங்கா-(பொருள்) விளங்காத, பல பொருள் ஒரு சொல்-பலபொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லை, சிறப்பு எடுத்து - சிறப்புச் சொல்லோடுகூட்டி, பணிப்பர் - சொல்வர். (புலவர்.)

(உ-ம்.) 1. மா என்பது-மாமரத்திற்கும், வண்டிற்கும், குதிரைக்கும், திருமகளுக்கும் பொதுவாகிய பல பொருளொருசொல். இப்பொருள்களுள்:—

'மாப்பூத்தது' என்றவிடத்து, மரம் என்பது வினையால் விளங்கிற்று
'மாவீழ்மலர்' என்றவிடத்து, வண்டு என்பது சார்பால் விளங்கிற்று
'தேர் கரி மாக் காலாள்' என்றவிடத்து, குதிரை என்பது இனத்தால் விளங்கிற்று.
'மா வாழ் மார்பன்' என்றவிடத்து திருமகள் என்பது இடத்தால் விளங்கிற்று.

இவை—சிறப்புச்சொல் கொடாமற் கூறப்பட்டன.

இனி, மா எறிஞன், மா யாது, என்றவிடத்துக் குறித்த பொருள் விளங்காமையால், விளங்குதற்பொருட்டுப், பாய்மா எறிஞன், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச்சொல்லோடு கூட்டிக்கூறுக. பிறவும் இப்படியே.

[அடுக்குத்தொடர்.]

203. அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும்.

உரை:—அசைநிலை-அசைநிலைக்கும், பொருள் நிலை-(விரைவு, கோபம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய) பொருள்களின் நிலைக்கும், இசை நிறைக்கு-இசையை நிறைப்பதற்கும், ஒரு சொல்—, இரண்டு மூன்று நான்கு எல்லை-இரண்டு மூன்று நான்கு அளவும்; முறை அடுக்கும்-முறையே அடுக்கி நிற்கும்.

'முறை' என்றதனால், அசைநிலைக்கு-இரண்டும், பொருள்நிலைக்கு-இரண்டொடு மூன்றும், இசைநிறைக்கு-இரண்டு மூன்றொடு நான்கும் அடுக்கிவரும் என்க.

(உதாரணம்.)

1. அன்றே அன்றே ... ... —அசைநிலை.

2. பொருள் நிலை:
- உண்டேன் உண்டேன்; போ போ போ —விரைவு.
- அடி அடி; எறி எறி எறி —கோபம்.
- வாழ்க வாழ்க; வருக வருக வருக —மகிழ்ச்சி.
- பாம்பு பாம்பு; தீத் தீத் தீ —அச்சம்.
- உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் —துன்பம்.

3. இசைநிறை:
- 'ஏ ஏ இவளொருத்தி பேடியோ'.
- 'நல்குமே நல்குமே நல்குமே நாமகள்'.
- 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ'.

[நல்கும்-அருள் செய்வள். பாடுகோ-பாடுவேனே.]

ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழு:—ஆயினும் இன்ன இடத்தில் பலகாற் சொல்லலாம் என்றல் வழுவமைதி; ஆனால் இந்த எல்லை கடவாது என்றல் வழுவாமற் காத்தல்.

[இரட்டைச்சொல்.]

204. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

உரை:—இரட்டை கிளவி- இரட்டைச்சொற்கள்,—இரட்டின் - அவ்விரட்டிப்பினின்றும், பிரிந்து இசையா - பிரிந்து [தனித்து] ஒலியாவாம்.

எனவே, வலிந்து பிரித்துக்கூறிற் பொருள்படாதென்றும், இரட்டித்துக் கூறுதலே மரபு என்றுங் கொள்க.

(உ-ம்.) 'சலசல மும்மதம் பொழிய'. 'வற்றிய ஓலை கலகலக்கும்'.
'களகள உதிர்ந்தது'. 'கொளகொள கொதித்தது'.
'துறுதுறு நடந்து'. 'துடிதுடித்துத் துள்ளிவரும்'.

[துடிதுடித்து என்பதில், பின்னையது பிரிந்திசைக்குமாயினும் முன்னையது பிரிந்திசையாமையின் இரட்டைச்சொல்லேயாம் என்க.]

அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் வேறுபாடு:— அடுக்குத்தொடரும் இரட்டைக்கிளவியும் வந்ததுவே மீண்டும் வருதலால், ஒக்குமாதலின் இவை இரண்டிற்கும் வேறுபாடு என்னையெனின்:—அடுக்குத்தொடர்,—மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போல வேறுபட்டுத் தனித்தனி பொருள் கொடுத்து நிற்கும்; இரட்டைக்கிளவி,—இலையிரட்டையும் பூவிரட்டையும்போல வேறுபடாமல் ஒன்றுபட்டுத் தனித்தனி பொருள் கொடாமல் நிற்கும்; அன்றியும் இரட்டைக்கிளவி இரண்டு தரத்துக்குமேல் வந்தது வரப்பெறாது.

[இது தொல்காப்பியச் சூத்திரம்.]

[ஒருபொருள் குறித்துவரும் பல சொற்கள்.]

205. ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.

உரை:—ஒரு பொருள் பல் மொழி-ஒரு பொருளைக் குறித்து வருகிற பல சொற்கள்,—சிறப்பினின்-(அவ்வாறு வருதற்கு ஒரு காரணமில்லையாயினும்) சிறந்து நிற்கையால்,—வழா(அவை) மரபு வழுவென்று நீக்கப்படாவாம்; [எனவே, வழுவமைதியென்று கொள்ளப்படுமென்க.]

சிறந்து நிற்றல்—செவிக்குச் சொல்லின்பந்தோன்ற நிற்றல்.

(உ-ம்.) மீ மிசை ஞாயிறு. | புனிற்று நீளங் கன்று.
நா கிளங் கமுகு. | உயர்ந் தோங்கு பெருவரை.
குழிந்தாழ்ந்த கண். | வெங் கொடும் போர்.

[மீ-மேல், மிசை-மேல், புனிறு-இளமை, நாகு-இளமை.]

இது 'மீமிசைச்சொல்' எனவும் படும்.

[முற்றும்மை வேண்டும் இடம்.]

206. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

உரை:—இனைத்து என்று அறி பொருள் - இவ்வளவென்று அளவு அறியப்படும் பொருளையும், உலகின் இலா பொருள்-(எக் காலத்தும்) எவ்விடத்து மில்லாத பொருளையும், வினை படுத்து உரைப்பின்-முடிக்குஞ் சொல்லோடு கூட்டிச் சொல்லும்போது, (அவை), உம்மை வேண்டும்-முற்றும்மையை வேண்டி நிற்கும்.

(உ-ம்.) 1. இருவினையும் சேரா.
2. காலம் மூன்றும் உணர்ந்தோர்.
3. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்.
4. வேத நான்கும் அறிந்தான்.
} இனைத்தென்றறி பொருள்கள், முற்றும்மை வேண்டி நின்றன.

முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை.
ஒளிமுன் இருள் எங்கும் இல்லை.
} உலகின் இலாப்பொருள்கள், முற்றும்மை வேண்டி நின்றன.

இனி, 'உலகில் நில்லாத பொருள் என்றும்' பொருள் கூறலாம்;
(உ-ம்.) செல்வமும் நில்லாது; செல்வமும் பொய்.

இனைத்தென்றறிபொருளாயினும் வினைப்படுத்தி உரையாவிடின், உம்மை வேண்டாமல் வரும்;
(உ-ம்.) நான்மறை யந்தணர்; ஐந்தலை நாகம்; அறுதொழிலாளர்.

'வினை' என்றது முடிக்குஞ்சொல் மாத்திரமாய் நிற்பதனால், பெயர்கொண்டு முடியும்போதும் 'உம்' பெறும் என்க.

(உ-ம்.) கண் இரண்டும் குருடு; எருது இரண்டும் கிழம்.

சிலவிடத்து 'உம்' செய்யுள் விகாரத்தால் தொக்கு நிற்பதுமுண்டு;
(உ-ம்.) 'இருதோள் தோழர்பற்ற'.

[செயப்படுபொருள் முதலியவற்றைக் கருத்தாவாகக் கூறுதல்.]

207. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

உரை:—செயப்படுபொருளை—, செய்தது போல - கருத்தாவைப்போலவைத்து, தொழில் பட கிளத்தலும்-அதன்மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறலும், வழக்கினுள்-வழக்கத்திலே, உரித்து-உரியது.

(உ-ம்.) இம்மாடு யான் கொண்டது.
இச்சோறு நீ கொடுத்தது.
இவ்வெழுத்து அவன் எழுதியது. } செயப்படுபொருள் செய்ததுபோல வந்தது.

இனிக் 'கிளத்தலும்' என்ற எச்ச உம்மையால், கருவி நிலம் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும், ஏவும் வினைமுதலை இயற்றும் வினை முதலாகக் கூறுதலும் உண்டு என்க.

(உ-ம்.) இவ்வெழுத்தாணி யான் எழுதியது ...கருவி.
இவ்வீடு யான் இருந்தது ... ...நிலம்.
இத்தொழில் யான் செய்தது ...செயல்.
இந்நாள் யான் பிறந்தது ...காலம்.
அரசன் கட்டிய ஆலயம் ... ...ஏவும்வினைமுதல்.

[விடைமரபுவழுவாமற் காத்தல்.]

208. தம்பா லில்ல தில்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

உரை:—தம்பால் இல்லது-தம்மிடத்து இல்லாத பொருளை, இல் எனின்-'இல்லை'யென்று சொல்லப்புகுந்தால்,—(1) இனனாய் உள்ளது கூறி-(வினவப்பட்டதற்கு) இனமாய்த் தம்மிடத்துள்ள பொருளைச் சொல்லி, மாற்றியும்-(அச்சொல்லைக்கொண்டு அதனை) இல்லையென்று சொல்லியும்,—(2) உள்ளது சுட்டியும்-உள்ளபொருளாயின் இவ்வளவு உண்டென்றும், உரைப்பர்-சொல்லுவர், சொல் சுருங்குதற்கு-(வினவும் விடையுமாகிய) சொற்கள் சுருங்குதற் பொருட்டு.

(உ-ம்.) (1) 'பயறுளதோ வணிகரே?' என்றவருக்கு, 'அஃது இல்லை' யென்பவர் 'உழுந்துண்டு' 'உழுந்துந்துவரையுமுண்டு' என அதன் இனத்தைச் சொல்லக்கடவர். இந்த இனமொழிகள் 'பயறில்லை' என்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, மேலே 'உழுந்துளதோ'? 'துவரையுளதோ?' என்னும் வினாக்களும், அவற்றின் விடைகளும் பெருகாமல் காத்தல் காண்க.

(2) 'பயறுளதோ வணிகரே?' என்றவருக்கு, அஃது உண்டென்பவர், 'இருகலம் உண்டு,' 'இருதூணி உண்டு' என அதன் அளவைச் சொல்லக்கடவர். இந்த அளவை மொழிகள், 'பயறுண்டு' என்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, மேலே 'எவ்வளவு உண்டு?' என்னும் வினாவும், அதன் விடையும் பெருகாமல் காத்தல் காண்க.

[அஃறிணையை உயர்திணைபோல வைத்துக்கூறல்.]

209. கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

உரை:—கேட்குந போலவும்-(கேளாதவற்றைக்) கேட்பவை போலவும், கிளக்குந போலவும் - (பேசாதவற்றைப்) பேசுபவை போலவும், இயங்குந போலவும்-(நடவாதவற்றை) நடப்பவைபோலவும், இயற்றுந போலவும்-(செய்யாதவற்றைச்) செய்பவைபோலவும்,—அஃறிணை மருங்கினும் - அஃறிணையிடத்தும்,—அறையப்படும்-(உயர்திணை போல வைத்துச்) சொல்லப்படும். [இது வழுவமைதி.]

(உதாரணம்.)

நன்னீரை வாழி அனிச்சமே—கேட்பதுபோலச் சொல்லப்பட்டது
பகைமையைக் கண் உரைக்கும்-பேசுவதுபோலச் சொல்லப்பட்டது
இவ்வழி அவ்வூர்க்குப்போகும்-நடப்பதுபோலச் சொல்லப்பட்டது.
தன்னெஞ்சே தன்னைச்சுடும்-செய்வதுபோலச் சொல்லப்பட்டது.

பொருள்கோள்.

(சொற்கள் பொருள்களைக் கொள்ளும் விதம்—அந்வயம்.)

திரும்பாமலே ஒரே முகமாக ஓடுகின்ற ஆற்றுநீரின் ஓட்டம் போலச் சொற்கள் முன் பின்னாக மாறாமல் நேராகவே பொருள் கொள்ளப்படுவது யாற்றுநீர்ப்பொருள்கோள் எனப்படும்.

(உ-ம்.) சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

இதில், முதலில் 'சொல்' என்பதன் வினைகளாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி, என்னும் வினையெச்சச்சொற்கள் ஒன்றை யொன்று கொள்ளும்படி இடையிலே முறையாக நின்று இறுதியில் 'காய்த்த' என்னும் பயனிலையைப்பெற்று நேராய்ப்பொருள் கொண்டது—[சொல்-நெற்பயிர்.]

பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும், அவை கொள்ளும் பயனிலைகளையும் வேறு வேறாக, வரிசைப்பட, நிறுத்தி, முறையாகவாயினும் முறை மாறுபடவாயினும் 'இதற்கிது பயனிலை' யென்பது படக் கூறப்படுவது நிரனிறைப்பொருள்கோளாம்.

(உ-ம்.) காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.

இதில் 'கா, து, சேர், தாழ், குழை, ஆய்' என்ற ஆறு முன்னிலை ஏவல்வினைச் சொற்களும் 'கா மண், து அமிர்தம், சேர் மங்கையர் தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நுண்ணிய வாய பொருள், எனக் கூட்டப்பட்டு முறை நிரனிறையாகியது காண்க.

"வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்".

இதில், முகில்போலக்குழலும், மின்போலத்தானும் என மாற்ற வேண்டியிருப்பதால், இது எதிர்நிரனிறைப்பொருள்கோள் என்க.

பரீக்ஷை வினாக்கள்:—சொல்லதிகாரத்தில் பொதுவியலை மத்தியில் வைத்ததற்குக் காரணம் யாது? 176. 'இருதிணை...... குறிப்பினானே'—குறிப்புக்களெவை? 177. பெயரிடத்தும் வினையிடத்தும் எவ்வெழுத்தேனும் வேறெழுத்தாகத் திரிதலுமுண்டோ? ஈற்றயலாகாரமன்றி அகரமுந் திரிதலுண்டோ? 178. இடைப்பிறவரல் என்றாலென்ன? 179. உபலட்சணமென்றாலென்ன? 180. அறுவகைத்தொடர்களெவை? 181. வேற்றுமைத்தொகையாவன யாவை? வேற்றுமையுருபுகள் எவ்விடத்துந் தொகப்பெறுமோ? வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து என்ன தொடராம்? வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்கதொகை விரிந்தவிடத்து என்ன தொடராம்? 182. வினைத்தொகையாவன யாவை? கொல்யானை முதலியன முக்காலமும் பற்றிவரின் எவ்வாறு பெயர் பெறும்? வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வருமோ? வினைத்தொகையாய் வராத பகுதிகளும் உண்டோ? வினைத்தொகைக்கு வேறு பெயர் (பரியாய நாமம்) என்ன? 183. பண்புத்தொகையாவன யாவை? பண்புத்தொகை எவைபற்றி வரும்? 184. உவமைத்தொகையாவன யாவை? உவமை எவை பற்றி வரும்? 185. உவம உருபுகளெவை? போல புரைய என எச்சவாய்பாட்டாற் கூறுவானேன்? 186. உம்மைத்தொகையாவன யாவை? உம்மை எவைபற்றி வரும்? உம்மைத்தொகைக்கும் மற்றைத் தொகைகளுக்கும் வித்தியாசமென்ன? வினைத்தொகையும் பண்புத்தொகையும் விரிந்தால் என்ன தொடராம்? உவமத்தொகை விரிந்தால் என்ன தொடராம்? உம்மைத்

தொகை விரிந்தால் என்ன தொடராம்? 187. அன்மொழித் தொகையாவன யாவை? ஐந்தொகைமொழி என்பன எவை? 188. உயர்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகை ஈறு எவ்வாறு நிற்கும்? அஃறிணையொருமையும்மைத்தொகையீறு, பொதுத்திணை யொருமையும்மைத்தொகை ஈறு எவ்வாறு நிற்கும்? இது எதனுற் கொள்ளப்படும்? 189. தொகாநிலைத்தொடர்மொழிகள் என்பன எவை? எழுவாய்த்தொடருக்கும் வினைமுற்றுத்தொடருக்கும் பேதமென்ன? வினைமுற்றுத்தொடரை எப்போது உபயோகிப்பது நலம்? 190. வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் நீக்கத்தக்கனவாகிய வழுக்களெவ்வை? வழு, வழாநிலை, வழுவமைதி இவைகளுக்குள்ள வேறுபாடென்னை? 191, திணையையத்திணையும் பாலையத்திணையும் எவ்வெச்சொல்லாற் கூறல்வேண்டும்? திணையையத்திலும் பாலையத்திலும் பொருளிதுவென்று துணிந்தவிடத்து மற்றொன்றல்லாத தன்மையை எதன்மேல் வைத்துக் கூறல்வேண்டும்? 192. உயர்திணைப்பெயரெழுவாயைச் சார்ந்து நிற்கும் அஃறிணைப்பொருளாதியாறும் எத்திணை வினையான் முடியும்? 193. திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும் தத்தமிற் கலந்து வருங்கால், அவை பலவும் எவ்வாறு முடியும்? 194. திணையும் பாலும் வழுக்ிவரின் எவ்வெவ்விடங்களில் (வழுவென்று நீக்காது) அமைத்துக்கொள்ளத்தகும்? 195. ஒருமைப்பாலிற் பன்மைச்சொல்லும், பன்மைப்பாலில் ஒருமைச்சொல்லும், வருமாறெங்ஙனம்? ஓரிடத்தில் பிற இடச்சொலலைச்சேர்த்துக் கூறுமாறெங்ஙனம்? 196. காலம் எத்தனை? 'இறப்பு எதிர்வு நிகழ்வு' என முறைப்படுத்துவானேன்? 197. முக்காலத்தினும் ஒரு தன்மையாகிய தொழிலையுடைய பொருளை எக்காலத்தாற் கூறத்தகும்? 198. முக்காலங்களும் எவ்வெவ்விடத்து மாறிக் கூறத்தகும்? 199. வினு எத்தனை வகைப்படும்? எவை? 200. விடையெத்தனை வகைப்படும்? எவை? வினு இன்றி விடை வருமாறெங்ஙனம்? 201. மரபென்பது யாது? 202. வினை சார்பு இனம் இடம் முதலியவைகளைப் பொருந்திக்குறித்தபொருள் விளங்காத பல பொருள் ஒரு சொற்களை எவ்வாறு சொல்லத்தகும்? 203. அடுக்குத்தொடருள், ஒரு சொல்லேயடுக்கி வருங்கால், எவ்வெவ்விடத்தில் எத்தனை யெத்தனை யடுக்கிவரும்? 204. இரட்டைக்கிளவியென்றுலென்ன? இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் வேறுபாடென்னை? 205. ஒரு பொருளையே விளக்கி நிற்கும் இருசொற்கள் காரணமின்றிக் கூடி வருதலு முண்டோ? இதற்கு வேறு பெயர் என்னை? 206. முற்றும்மை

பெறுபவை எவை? 207. செயப்படுபொருளைக் கருத்தாவைப் போல வைத்து, அக்கருத்தாவின் வினையை அதனுக்கேற்றிக் கூறு தலுமுண்டோ? 208. ஒருவன் வினவிய பொருள் தம்மிடத் தில்லையாயின் எவ்வாறு விடை கூறல்வேண்டும்? வினவியபொருள் தம்மிடத்துளதாயின் எவ்வாறு விடை கூறல்வேண்டும்? 209. கேட்டல் பேசல் நடத்தல் முதலியவையில்லாத அஃறிணைப் பொருள்களை அவையுடையனபோலக் கூறுதலுமுண்டோ?

பொருள்கோள் என்றாலென்ன? பொருள்கோளுக்கு வேறு பெயர் (பரியாயநாமம்) என்ன? யாற்றுநீர்ப்பொருள்கோளாவது யாது? நிரனிறைப்பொருள்கோளாவது யாது?

பொதுவியல் முற்றிற்று.

4. இடையியல்.

[இடைச்சொல்லின் இலக்கணங்களை யுணர்த்தும் இயல்.]

[இடைச்சொல்லின் இலக்கணம்.]

210. வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

உரை:—(1) வேற்றுமை-(ஐ முதலிய) வேற்றுமையுருபுகளும், (2) வினை-(விகுதி முதலிய) வினையுருபுகளும், (3) சாரியை-(அன் ஆன் முதலிய) சாரியை உருபுகளும், (4) ஒப்பு உருபுகள்-(போல முதலிய) உவம உருபுகளும், (5) தம் தம் பொருள-தம் தமக்குரிய பொருளை உணர்த்தி வருகிற 'ஏ, ஓ' முதலியவையும், (6) இசை நிறை-(வேறு பொருளில்லாமற்) செய்யுளில் ஓசை நிறைத்தற்கே வருபவையும், (7) அசைநிலை-அசையாய் (பெயர்வினைகளோடு சார்த்திச் சொல்லப்பட்டு) வருதலே பொருளாக நிற்பவையும், (8) குறிப்பு-(வெளிப்படையாய் வரும் இவை போலாமல்) குறிப்பினாற் பொருளுணர்த்திவருபவையும், என்-என்கின்ற, எண் பகுதியின் - இவ்வெட்டு வகையையுடையனவாய்,—தனித்து இயல் இன்றி-தனித்து நடக்குந் தன்மையில்லாமல்,—பெயரினும் வினை

யினும் - பெயர்ச்சொல்லினிடத்தும் வினைச்சொல்லினிடத்தும், பின் முன்-(அவற்றின்) பின்னேயாயினும் முன்னேயாயினும், ஓர் இடத்து-ஒரு இடத்தில், ஒன்றும் பலவும்-ஒன்றாயினும் பலவாயினும், வந்து—, ஒன்றுவது-ஒன்றுபட்டு நடப்பது, இடைச்சொல்—.

இடைச்சொல் என்றதற்குக் காரணம்:—(1) தனித்து நடக்கும் ஆற்றலில்லாமற், பெயர்வினைகளோடு சேர்ந்து, அவற்றினிடமாக நடத்தலால், 'இடைச்சொல்' எனப்பட்டன. [இடம், இடை என்பன ஒரு பொருளன] (2) இனிப் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமாகாமல் அவற்றினும் வேறுமாகாமல் நடுத்தன்மையாய் நிற்கையால் 'இடைச்சொல்' எனப்பட்டன எனினும் அமையும். (3) இஃதன்றி முன்னும் பின்னும் வருமாயினும், பெரும்பாலும் இடையிலே வருதலால், 'இடைச்சொல்' என்பதும் பொருந்தும்.

(உ-ம்.) 1. பெயரியலிற் காண்க.
2. பதவியலிற் காண்க.
3. 105-ஆம் சூத்திரம் பார்க்க.
4. 185-ஆம் சூத்திரம் பார்க்க.
5, 6, 7. இவ்வியலில் மேற்கூறப்படும்.

(8) குறிப்பினாற் பொருளுணர்த்துபவை:—1. ஒலிக்குறிப்பு:—அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென, கடகடென, களகளென, திடுதிடென, நெறுநெறென, படபடென என்றாற்போல்வன. 2. அச்சக்குறிப்பு:—துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற்போல்வன. 3. விரைவுக்குறிப்பு:—பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென என்றாற்போல்வன.

குழையன், அதுமற்றம்ம—பெயரின்பின் ஒன்றும் பலவும் வந்தன. ஓ இராமன், இனிமற்றென்று-பெயரின்முன் ஒன்றும் பலவும்வந்தன உண்ணாய், நடந்தனனே—வினையின்பின் ஒன்றும்பலவும் வந்தன. அம்மா பெரிது, சீசீபோ—வினையின்முன் ஒன்றும் பலவும் வந்தன.

இன்னும் பலவகையாலும் வருவதுமுண்டு; அவை வருமாறு:-

அ இ உ—சுட்டுப்பொருளைத் தருவன;
(உ-ம்.) அவன், இவன், உவன்.

எ யா ஆ ஓ ஏ—வினாப்பொருளைத் தருவன;
(உ-ம்.) எவன், யாவன், இராமனா, இராமனோ, ஏது.

முன், பின்—இடப்பொருளுங் காலப்பொருளுந் தருவன;
(உ-ம்.) முன் செய், பின் இரு.

இனி—கால இடங்களின் எல்லைப்பொருளைத் தருவது; (உ-ம்.) இனிச் செய்வேன், இனி எம் ஊர்.

தொறும் தோறும்—தொழில் இடங்களின் பன்மைப்பொருளைத் தருவன; (உ-ம்.) செய்தொறும், ஊர்தோறும்.

ஆவது, ஆதல், ஆயினும், தான்—விகற்பப்பொருளைத்தருவன; (உ-ம்.) பத்தாவது எட்டாவது கொடு. (பிறவும் இவ்வாறே காண்க)

ஐயோ, ஆ, அந்தோ, முதலியவை—இரக்கப்பொருளைத் தருவன; (உ-ம்.) ஐயோ கெட்டான்.

அம்மா, ஆ, ஓ, முதலியவை—வியப்புப்பொருளைத்தருவன; (உ-ம்.) அம்மா பெரிது.

வாளா, சும்மா, கொன்னே—பயனின்மைப்பொருளைத் தருவன; (உ-ம்.) வாளா இருந்தான்.

சீ, சீச்சீ, சை முதலியவை—இகழ்ச்சிப்பொருளைத் தருவன; (உ-ம்.) சீ சீ போ.

ந—உயர்வுப்பொருளை உணர்த்துவது; (உ-ம்.) நப்பின்னை, நக்கீரன்.

கூ கூ ஐயோ, முதலியவை—அச்சப்பொருளைத் தருவன.

மற்றும் இவ்வாறு வருவனவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்க.

[ஏகார இடைச்சொல்.]

211. பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகா ரம்மே.

உரை:—ஏகாரம்-ஏகார இடைச்சொல்,—(1) பிரிநிலை - பிரிநிலையும், (2) வினா-வினாவும், (3) எண்-எண்ணும், (4) ஈற்றசை-ஈற்றசையும், (5) தேற்றம்-தெளிவும், (6) இசைநிறை-இசை நிறைத்தலும், என-என்று, ஆறு-ஆறு பொருள் தரும்.

(உதாரணம்.)

1. அவருள் இவனே கள்வன்—இங்கே, ஒரு கூட்டத்தினின்று ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

2. நீயே கொண்டாய்—இங்கே, 'நீயா கொண்டாய்?' என்னும் வினாவுதற்பொருளைத் தருமிடத்து, வினா.

3. நிலமே நீரே தீயே—இங்கே, நிலமும், நீரும், தீயும் என எண்ணுதலால், எண்.

4. 'இயம்புவன் எழுத்தே'—இங்கே, வேறு பொருளில்லாமல் இறுதியில் அசைத்து நிற்றலால், ஈற்றசை.

5. உண்டே மறுமை—இங்கே, தெளிவுப்பொருளைத் தருதலால், தேற்றம்.

6. 'ஏயே இவளொருத்தி பேடி!'—இங்கே, வேறு பொருளில்லாமற் செய்யுளில் இசையை நிறைத்து நிற்றலால், இசைநிறை

இனிப் 'புதியன புகுதலும் வழுவல' என்பதனால் 'அவனே கொண்டான்' என்பது சிலவிடத்து 'அவன் கொண்டிலன்' என எதிர்மறைப்பொருள்பட நிற்றலும், 'ஏ ஏ பேதை' என்றவிடத்து இகழ்ச்சிப்பொருள்பட நிற்றலுங் கொள்க.

[ஓகார இடைச்சொல்.]

212. ஒழியிசை வினாச் சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவு அசைநிலை பிரிப்பு எனஎட்டு ஓவே.

உரை:—ஓ-ஓகார இடைச்சொல்,—(1) ஒழியிசை-ஒழியிசையும், (2) வினா-வினாவும், (3) சிறப்பு-சிறப்பும், (4) எதிர்மறை-எதிர்மறையும், (5) தெரிநிலை-தெரிநிலையும், (6) கழிவு-கழிவும், (7) அசைநிலை-அசைநிலையும், (8) பிரிப்பு—பிரிநிலையும், என்-என்று, எட்டு-எட்டுப்பொருளைத்தரும்.

[சிறப்பு-உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு என இருவகைப்படும்; ஒரு பொருளினது உயர்வின் மிகுதியை விளக்குவது - உயர்வு சிறப்பு; இழிவின் மிகுதியை விளக்குவது-இழிவுசிறப்பு.].

(உதாரணம்.)

1. படிக்கவோ வந்தாய்—இங்கே, படித்தற்கன்று; விளையாடுதற்கு வந்தான் என ஒழிந்த சொற்களைத் தருதலால், ஒழியிசை.

2. குற்றியோ மகனோ?—இங்கே, 'குற்றியா மகனா' என வினாவுதற்பொருளைத் தருதலால், வினா.

3. ஓ ஓ பெரியன்!—இங்கே, ஒருவனது பெருமையின் மிகுதியைக் காட்டுதலால், உயர்வுசிறப்பு. ஓ ஓ கொடியன்!—இங்கே, ஒருவனது கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால், இழிவுசிறப்பு.

4. அவனோ கொண்டான்—இங்கே, 'அவன் கொண்டிலன்' என்னும் பொருளைத் தருமிடத்து, எதிர்மறை.

5. அலியை நோக்கி, 'ஆணோ அதுவுமன்று; பெண்ணோ அதுவுமன்று'.—என்றதில் அத்தன்மையில்லாமையைத் தெரிவித்தலால், தெரிநிலை.

6. நன்மையறியாமற் கெட்டவர்களை, 'ஓ ஓ தமக்கொரு நன்மை யுணரார்'—என்றதில், கழிந்ததற்கு இரங்குதலால், கழிவு.

7. 'சொல்லுவன் கேண்மினோ'—இங்கே, 'சொல்லுவேன் கேளுங்கள்' எனப் பொருள்பட்டு, வேறு பொருளில்லாமற் சார்த்தப்பட்டு நிற்றலால், அசைநிலை.

8. அவர்களுள் இவனோ கொண்டான்—இங்கே, பலரினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

இனிச், சிலவிடத்துப், 'பத்தோ? பதினொன்றோ?' என ஐயப் பொருள்பட வருதலுங்கொள்க.

['உம்' என்னும் இடைச்சொல்.]

213. எதிர்மறை சிறப்புஐயம் எச்சமுற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே.

உரை:—உம்மை-'உம்' என்னும் இடைச்சொல்,— (1) எதிர்மறை-எதிர்மறையும், (2) சிறப்பு-(இருவகைச்) சிறப்பும், (3) ஐயம்-சந்தேகமும், (4) எச்சம்-எச்சமும், (5) முற்று - முற்றும், (6) அளவை-எண்ணும், (7) தெரிநிலை-தெரிநிலையும், (8) ஆக்கமோடு-ஆக்கமுமாகிய, எட்டு-எட்டுப்பொருளைத் தரும்.

எச்சம்,—இறந்தது தழுவிய எச்சமும், எதிரது தழுவிய எச்சமும் என இருவகைப்படும். [எச்சம்—குறைந்துநின்ற பொருளைக் காட்டுவது.]

(உதாரணம்.)

(1) இராமன் வருதற்கும் உரியன்—இங்கே, 'வாராமைக்கும் உரியன்' எனப் பொருள்படுதலால், எதிர்மறை.

(2) குறவரும் அஞ்சுங் குன்று—இங்கே, குறவர் முகமாகக் குன்றினுயர்வை விளக்குதலால், உயர்வுசிறப்பு.

புலையனும் விரும்பாத யாக்கை—இங்கே, புலையன் முகமாக உடம்பின் இழிவை விளக்குதலால், இழிவுசிறப்பு.

(3) பத்தாயினும் எட்டாயினுங்கொடு—இங்கே, ஒன்றைத் துணிந்து சொல்லாமையால், ஐயம்.

(4) சாத்தனும் வந்தான்—இங்கே, 'முன் கொற்றன் வந்ததல்லாமல்' என்னும் பொருளைத் தந்தால், இறந்தது தழுவிய எச்சம். இனிக், 'கொற்றனும் வருவான்' என்னும் பொருளைத் தந்தால், எதிரது தழுவிய எச்சம்.

(5) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்—இங்கே, குறைவில்லாத பொருளைத் தருதலால், முற்று.

(6) இரவும் பகலும்—இங்கே, எண்ணி நிற்றலால், எண்.*

(7) அலியை நோக்கி 'ஆணும் அன்று, பெண்ணும் அன்று' என்றால்—இங்கே, இன்னதெனத்தெரிவித்து நிற்றலால், தெரிநிலை.

(8) பாலும் ஆயிற்று என்றால்—இங்கே, 'அதுவே மருந்துமாயிற்று', என்னும் பொருளைத் தருமிடத்து, ஆக்கம்.

['மற்று' என்னும் இடைச்சொல்.]

214. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

உரை:—மற்று-'மற்று' என்னும் இடைச்சொல்,— (1) வினைமாற்று-வினைமாற்றுப்பொருளையும், (2) அசைநிலை-அசைத்துநிற்றற்பொருளையும், (3) பிறிது-'வேறு' என்னும் பொருளையும் தரும்.

வினைமாற்றாவது—கருதியதற்கு இனமாகிய மறுதலைவினை; பிறிதாவது—கருதியதற்கு இனமாகிய பிறிது.

(உதாரணம்.)

(1) 'மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது'—இங்கே, நல்வினையை, விரைந்தறிவாம் என்னும் வினையைமாற்றி, இனிமேல், 'விரையாமல் அறிவாம்' என்னும் வினையைத் தருதலால், வினைமாற்று.

(2) 'மற்றென்னை ஆள்க'—இங்கே, வேறு பொருளின்றி நிற்றலால், அசைநிலை.

(3) "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"— இங்கே, 'மற்றொன்று' என்பது—'ஊழ்வினைக்கு மறுதலையாகியதோர் உபாயம்' எனப் பொருள் தருதலால், பிறிது.

['மற்றை' என்னும் இடைச்சொல்.]

215. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

உரை:—மற்றையது என்பது-'மற்றையது' என (ப்பெயருக்கு முதல் நிலையாய்) வரும் 'மற்றை' என்னும் இடைச்சொல், சுட்டியதற்கு இனம்-முன் சுட்டிய பொருளை யொழித்து அதற்கினமான பொருளைக் குறிக்கும்.

---

* பெயர்வினைகளிலே எண்ணிடைச்சொற் றொக்கு நிற்க எண்ணி நிற்பது 'செவ்வெண்' எனப்படும். அங்ஙனமாயின் பெயர்ச்செவ்வெண்ணுக்கும் உம்மைத்தொகைக்கும் வேறுபாடு என்னவெனின்:— பெயர்ச்செவ்வெண்—தொடர்மொழிபோல விட்டிசைத்துவரும்; உம்மைத்தொகை—ஒரு மொழிபோல விட்டிசையாமல் வரும் என்று கொள்க.

(உ-ம்.) இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக் கண்டு, அதனை வேண்டாதவன், 'மற்றையது கொண்டுவா,' என்றால், அதற்கினமாகிய ஆடையையே குறித்து நிற்றல் காண்க.

['கொல்' என்னும் இடைச்சொல்.]

216. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.

உரை:—கொல்-'கொல்' என்பது,—ஐயம்-ஐயப்பொருளிலும், அசைநிலை-அசைநிலைப்பொருளிலும் வருகிற, கூற்று - (இடைச்) சொல்லாம்.

(உ-ம்.) (1) அவன் இராமன் கொல் முருகன் கொல்—இங்கே, இராமனோ முருகனோ என்னும் பொருளைத் தருதலால், ஐயம்.

(2) 'கற்றதனா லாய பயனென்கொல்'—இங்கே, வேறு பொருளில்லாமல் நிற்றலால், அசைநிலை.

இனி, ஒவ்வோரிடத்து, 'நீ கொல் செய்தாய்' என்பதில், 'நீயோ செய்தாய்?' என வினாப்பொருளைத் தருதலுங்கொள்க.

பரீக்ஷை வினாக்கள்:—210. இடைச்சொல்லாவன யாவை? இவை யாது காரணத்தால் இடைச்சொல் எனப்பட்டன? 'இசைநிறை' யென்பது யாது? 'அசைநிலை' யென்பது யாது? 211. ஏகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? 212. ஓகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? 'சிறப்பு' எத்தனைவகைப்படும்? உயர்வுசிறப்பு என்பதியாது ? இழிவுசிறப்பென்பதியாது? 213. 'உம்' என்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? 'எச்சவும்மை' எத்தனை வகைப்படும்? செவ்வெண் என்றாலென்ன? செவ்வெண்ணுக்கும் உம்மைத்தொகைக்கும் வேறுபாடென்னை? 214. 'மற்று' என்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? 'வினைமாற்று' என்றது எது? 'பிறிது' என்றது எது? 215. 'மற்றை' என்னும் இடைச்சொல் எப்பொருள் தரும்? 216. 'கொல்' என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்?

இடையியல் முற்றிற்று.

5. உரியியல்.

[உரிச்சொல்லின் இலக்கணங்களை யுணர்த்தும் இயல்.]

[உரிச்சொல்லின் பொது இலக்கணம்.]

217. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.

உரை:—பல் வகை-(குணமுந் தொழிலுமாகிய) பலவகைப் பட்ட, பண்பும்-(பொருள்களின்) பண்புகளையெல்லாம், பகர் பெயர் ஆகி-தெரிவிக்கிற பெயராகி,—(அவ்வாறு தெரிவிக்கும்போது), ஒரு குணம்-ஒரு குணத்தையும், பல குணம்-பல குணங்களையும், தழுவி-தெரிவிப்பனவாய்,—பெயர் வினை ஒருவா-பெயர்ச்சொல் வினைச்சொற்களை விட்டு நீங்காதவையாய்,—செய்யுட்கு - செய்யுளுக்கு, உரியன-உரியவையாய் (ப்பொருளுக்கு உரிமை பூண்டு) வருபவை,—உரிச்சொல்-உரிச்சொற்களாம்.

இவ்வாறு வருவதை, இனிக்காட்டும் உதாரணங்களுட்காண்க.

உரிச்சொல் என்றதற்குக் காரணம்:—1. இவை பண்புப்பெயராயினும் மற்றைப் பெயர் வினைகளை விட்டு நீங்காமையால், 'உரிச்சொல்' என வேறு ஓதப்பட்டன என்றும், (2) பெயர்வினைகளின் பண்பை யுணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதனால் 'உரிச்சொல்' எனக் காரணப்பெயர் பெற்றன என்றும், (3) செய்யுளுக்கே உரியனவாய் வருதலால், 'உரிச்சொல்' எனப் பெயர் பெற்றது என்றும், (4) இசை குறிப்பு பண்பு என்ற மூன்றற்கும் உரிதாய் வருதலின், 'உரிச்சொல்' என்றுங் கூறுவர்.

[ஒருகுணங்குறித்த பல உரிச்சொல்.]

218. சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

உரை:—சால.........கழி-இந்த ஆறு உரிச்சொற்களும்,—மிகல்-மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.

(உ-ம்.)	சால —சாலப்பலர்.	நனி —நனிபேதை.
	உறு —உறுபுகழ்.	கூர் —களிகூர்மனம்.
	தவ —தவப்பல.	கழி —கழிபெருங்காதல்.

'சால' என்பது—'சால்' என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புவினையெச்சம். 'சால்' எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாமல், 'சால' என வினையெச்சமாகச் சூத்திரஞ் செய்தது-

இவ்வுரிச்சொற்களினடியாக மற்றை வினைவிகற்பங்களெல்லாந் தோன்றும் என்றற்கு என்க. சால்-சீர்சாலகத்தியன்.

[இந்நூலுக்குப் புறனடை.]

219. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

உரை:—பழையன கழிதலும்-முற்காலத்து உள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து ஒழிதலும், புதியன புகுதலும் - முற்காலத்து இல்லாதவை சில பிற்காலத்து இலக்கணமாக வருதலும், வழு அல-குற்றமல்லவாம்; கால வகையினான்-கால வேறுபாடு பற்றியதாதலால்.

பழையன கழிதல்—எகர ஒகாரங்களுக்கு மேலே புள்ளியிட்டு வழங்குதலும், கேட்டையென்று நின்றையென்று கண்டையென்று என்றலும் அக்காலத்துள; இக்காலத்தில் இல்லை.

புதியன புகுதல்—165, 172, 173, 211-ஆஞ் சூத்திரங்களிற் காண்க.

பரீக்ஷை வினுக்கள்:—217. உரிச்சொல் என்றுலென்ன? யாது காரணத்தால் உரிச்சொல் எனப்பட்டன? உரிச்சொல் வழக்கிற்கும் வருதலுண்டோ? 218. 'மிகுதி' யென்னும் ஒரு பண்பையுணர்த்தும் உரிச்சொற்களெவை? 219. பழையன கழிதலுக்கு நான்கு உதாரணந் தருக. புதியன புகுதலுக்கு நான்கு உதாரணந் தருக. பழையன கழிதலுக்கும் புதியன புகுதலுக்கும் காரணமென்னை?

உரியியல் முற்றிற்று.

இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லறுதொகையேழ்
அருவழு வெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று முணரச்சொல் வண்மை வருந்திருவே.

பரீக்ஷை வினு:—பெரியோர் என்னென்ன விஷயம் உணர்ந்தாரை சொல்லிலக்கணம் உணர்ந்தார் என்பர்?

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

நன்னூற் சுருக்கம் முற்றிற்று.

சில இலக்கண விஷயங்கள்.

சாதியொருமை—ஒரு சொல் ஒருமை ஈறு தோன்ற நின்றும், தோன்றாது நின்றும், பின் ஒருமை பன்மைவினை யீறாக வந்து முடிக்குஞ்சொல் உளதாகவும், இலதாகவும், தானே பன்மைப் பொருளுணர்த்துவது; (உ-ம்.) "தென்புலத்தார் தெய்வம்" என்பதில் 'தெய்வம்' என்பது 'தேவர்' எனப்பொருள்படுதல் காண்க.

சூ. 168-ல், நிற்பது-என்பது சாதி ஒருமை.

நித்தியபகுவசனம்—ஒரு சொல் ஒருமையில்லாமல் எப்பொழுதும் பன்மையிலேயே வருவது; (உ-ம்.) மாந்தர். (இது மாந்தன் என ஒருமையில் எங்கும் வாராமை காண்க).

எதிர்மறை இலக்கணை—ஒரு சொல் தனக்கு எதிர்மறையான பொருளை யுணர்த்துவது;

(உ-ம்) "நிரப்பு" எல்லாப்பொருள்களும் நிரம்புதல் என்று பொருள்படும் இவ்வார்த்தை ஒரு பொருளும் இல்லாமையாகிய வறுமையை உணர்த்துதல் காண்க "அழுக்கறுத்தல்" குற்றத்தை நீக்குதல் என்னும் பொருள் தரும் இவ்வார்த்தை, பெருங்குற்றமாகிய பொறாமைப்படுதலை யுணர்த்துதல் காண்க "உடம்போடுயிரிடை நட்பு" என்பதில் 'நட்பு' என்றது நட்பின்மையை யுணர்த்துதல் காண்க. 'புண்யஜனம்'—என்பது, பாபஜனமாகிய அரக்கரையும் உணர்த்துதல் காண்க.

தத்திதாந்தம்—ஒரு வடசொல், சிறிதுமாறித் தன்னோடு இயைபுடைய பொருளையாயினும் தன் பொருளையாயினும் உணர்த்துவது;

(உதாரணம்.)

தசரதன் மகன்-தாசரதி.	ஜனகன்மகள்-ஜானகி.
பாண்டுவின்மக்கள்-பாண்டவர்,	குருகுலத்தவர்-கௌரவர்.

குசாம்பனது நகரும்-கௌசாம்பி. ருஷிகள்செய்த நூல்-ஆர்ஷம்.
இந்திரன்செய்த நூல்-ஐந்த்ரம். வேதஸம்பந்தம்-வைதிகம்.
கோசலநாட்டிற் பிறந்தவள்-கௌஸல்யை.
விதர்ப்பதேசத்தை ஆள்பவன்-வைதர்ப்பன்.
நிஷததேசத்தை யாண்டவனைப் பற்றிய நூல்-நைஷதம்.
விஷ்ணுபக்தன்-வைஷ்ணவன்.

[இவை-தன்னோடியைபுடைய பொருளை யுணர்த்தின.]

த்ரிலோகீ-த்ரைலோக்யம்-இது, தன்பொருளை உணர்த்திற்று.

பூரண்தோடை—சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்படத் தொடுப்பது.

எதுகைத்தோடை—அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றிவரத்தொடுப்பது. சிறு பான்மை இனவெழுத்துக்களும் எதுகையாம்.

மோனைத்தோடை—பல அடிகளிலாவது, ஓரடியின் பல சீர் களிலாவது, முதலெழுத்து ஒற்றுமைப்பட்டுவரத் தொடுப்பது; அ ஆ ஐ ஔ, இ ஈ எ ஏ யா, உ ஊ ஒ ஓ, ஞ ந, ச த, ம வ, இவை ஒன்றற்கு ஒன்று மோனையாய் வருதலும் உண்டு. சிறுபான்மை இனவெழுத்துக்களும் மோனையாம். எல்லாச்சீர்களிலும் மோனை வந்தால், முற்றுமோனை யெனப்படும்;

(உ-ம்.) "காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட."

முத்தகம்—ஒரு செய்யுள் தனியே நின்று முடிவது.

குளகம்—பலபாடல் தொடர்ந்து ஒருவினைகொண்டுமுடிவது.

சூத்திர முதற்குறிப்பகராதி.

சூத்திரம்.	பக்கம்.
அ	
அ ஆ ஈற்ற	158
அ ஆ உ ஊ	22
அ ஆ எ ஒவ்	23
அ இ உம் முதல்	10
அ ஐ முதலிடை	26
அகமுனர்ச்	98
அசைநிலை	192
அண்மையி	145
அதுவே, இயற்	123
அத்தின்அகர	1,12
அம் ஆம் என்	160
அம்முதலீரா	9
அம்முனிகரம்	27
அர் ஆர் பவ்வூர்	157
அல்வழி இ ஐ	80
அல்வழியாமா	78
அவற்றுள், அஇஉ	10
அவற்றுள், எழு	136
அவற்றுள், ஏழா	52
அவைதாம், முற்	154
அள் ஆளிறு	157
அறிவுஅறியாமை	189
அன் ஆன் அள்	40
அன் ஆன் இன்	108
அன்றி யின்றி	79
அன்று னிறு	156
ஆ	
ஆ ஈ ஊ ஏ	10
ஆண் பெண்	117
ஆநின்று கின்று	48
ஆமாகோனவ்	111
ஆவி ஞணநமன	24
ஆவியரழ	70
ஆவியுமொற்று	21
ஆறனொருமைக்	142
இ	
இ ஈ ஐ வழி	71
இசைகெடின்	14
இடுகுறிகாரணப்	7
இடுகுறிகாரணம	127
இடைச்சொல்	88
இடைத்தொட	82
இடையினம்	12
இடையுரி	104
இயல்பினும்விதி	74
இயல்பின்விகா	112
இயல்பெழு	21
இரட்டைக்கிள	192
இரண்டாவதனு	137
இரண்டுமுதலா	175
இருதிணையாண்	172
இர் ஈர் ஈற்ற	162
இலக்கணமுடை	119
இலக்கியங்கண்	46
இறப்பெதிர்வு	187
இனைத்தென்	194
ஈ	
ஈறுபோத	35
ஈற்றியா	69
உ	
உ ஊ ஒ ஓ வல	22
உடல்மேலுயிர்	94
உயர்திணைதொ	184
உயர்திணையும்	180
உயிருமுடம்புமா	7
உயிர்மெய்யாய்த	7
உயிர்வரினுக்	74
உருபுமுற்றீ	173
உவப்பினு	185
உவமவுருபில	177
எ	
எகரவினமுச்	73
எட்டனுருபே	144
எண்ணலெடுத்த	178
எண்பெயர்	5
எண்மூவெழுத்தீ	65
எதிர்மறைசிற	203
எப்பொரு	191
எயாமுதலும்	11
எல்லாமென்ப	109
எல்லாருமெல்	109
எல்லைஇன்னு	149
எவனென்	169
எழுத்தே	30
ஏ	
ஏழனுருபு	143
ஏற்குமெவ்வ	135
ஐ	
ஐ ஆய் இகர	161
ஐ ஔ இ உச்	12
ஐகான் யவ்வழி	26
ஐந்தாவதனுரு	141
ஐந்தொகை	179

சூத்திரம்.	பக்கம்.
ஐயந்திணைபா	182
ஐயீற்றுடைக்குற்	84
ஒ	
ஒருபுணர்க்கிர	65
ஒருபொருட்பன்	193
ஒருபொருள்கு	124
ஒருமையிற்பன்	186
ஒருமொழிதொ	115
ஒருமொழிமூவ	64
ஒருமொழிஒரு	116
ஒருமொழிஒழி	174
ஒருவரென்பது	131
ஒருவனொருத்தி	130
ஒழியிசைவினைச்	202
ஒன்றேபலவெ	118
ஒன்றொழிபொ	121
க	
கயவொடு	162
கா	
காலங்கரந்த	176
கு	
குடுதுறுஎன்னு	159
குறியதன்கீழா	79
குறியதன்முன்ன	13
குறிலணைவில்லா	96
குறில்செறியா	101
குறில்வழிலள	101
கே	
கேட்குநபோ	196
கொ	
கொல்லே ஐய	205
ஞ	
ஞஞணநமன	16

சூத்திரம்.	பக்கம்.
சா	
சாலஉறுதவ	206
சு	
சுட்டியாவெகா	23
சுட்டுமறைநே	190
சுட்டுவகரமூ	102
செ	
செந்தமிழாகி	124
செந்தமிழ்நிலஞ்	125
செயப்படுபொரு	194
செய்த செய்கின்	164
செய்து செய்பு	166
செய்பவன்கருவி	153
செய்யியவென்	76
செய்யென்வினை	39
சொ	
சொற்றிரியினும்	167
ண	
ணனமுன்னும்	19
ணனவல்லினம்	95
த	
தடறவொற்றின்	47
தத்தம், பகாப்ப	34
தம்பாலில்ல	195
தற்சுட்டளபொ	19
தனிக்குறில்	94
தன்மை மு-பட	118
தன்மை மு-விய	159
தன்மையான் நா	129
தன்னென்னென்	96
தன்னொழி	95
தா	
தான் தாம் நாம்	110
தான்யான்நான்நீ	130

சூத்திரம்.	பக்கம்.
தி	
திசையொடுதி	85
திணைபால்பொ	184
திணையேபாலி	181
து	
துறுடுக்குற்றிய	158
தொ	
தொழிலுங்கால	165
தோ	
தோன்றல்திரிதல்	62
ந	
நடவாமடிசீ	37
நா	
நான்காவதற்குரு	140
நீ	
நீயிர் நீவிர் நா	135
நு	
நும்தம், எம்நம	98
நுவ்வொடுவினை	146
நெ	
நெடிலோடாய்	17
நெடிலோடுயிர்த்	83
ப	
பகுதிவிகுதி	33
பகுப்பாற்	31
பண்பைவிளக்கு	176
பதமுன்விகுதி	107
பலசிலவெனு	77
பல்லோர்படர்க்	168
பல்வகைத்தாது	121
பல்வகைப்பண்	206
பவ்வமூவிட	48
பழையனகழி	207

சூத்திரம்.	பக்கம்.
பனைமுன்கொடி	89
பன்னீருயிருங்	22
பா	
பால்பகாவஃறி	128
பி	
பிரிநிலைவினை	201
பு	
புள்ளிவிட்டவ்	12
பூ	
பூப்பெயர்முன்	88
பூமலியசோகி	5
பெ	
பெயரே ஐ ஆல்	135
பெயர்வினையிட	173
பொ	
பொதுப்பெயர்	67
பொதுவியல்பா	156
பொதுவெழுத்	126
பொருள்மு-றி	154
பொருள்மு-றே	131
பொருளிடங்கா	31
போ	
போலப்புரைய	177
ம	
மகரவிறுதி	25
மக்கள்தேவர்	117
மரப்பெயர்முன்	75
மவ்வீறொற்றழிந்	97
மற்றையதென்	204
மு	
முக்காலத்தினு	188
முச்சகநிழற்றும்	115
முதலை ஐயுறிற்	146
முற்றீரெச்சம்	180
முன்னிலைகூடி	161
மூ	
மூன்றாவதனுரு	138
மூன்றாறுபெண்	80
மூன்றுயிரள	20
மெ	
மெய்யுயிர்மு	59
மெல்லினம்	11
மென்றொடர்	83
மொ	
மொழிமுதற்கார	6
ய	
யகரம்வரக்குற	17
யரழமுன்னர்க்கச	99
யா	
யாதனுருபிற்	147
யாரென்வினைவி	168
ர	
ரவ்விற்கம்முத	55
ல	
ளவீற்றியைபி	20
ளவேற்றுமை	100
வ	
வலித்தல் மெலி	63
வல்லினங் க ச	11
வவ்விறுசுட்டிற்	111
வன்றொடரல்ல	81
வி	
விகாரமனைத்து	62
விரைவினுமிக	188
விளம்பியபகுதி	40
வினைசார்பின	191
வினைமாற்றசை	204
வினைமுற்றே	169
வினையின்பெய	129
வே	
வேறில்லையுண்	163
வேற்றுமையாயி	89
வேற்றுமையைம்	60
வேற்றுமைவி-சா	199
வேற்றுமைவி-ப	174
ற	
றவ்வொடுகர	49
றனழளஓவ்வு	56
ன	
னலமுன்றனவும்	103

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	12	றனிவரிற்	தனிவரிற்
28	28	எழுத்துக	எழுத்துக்க
32	(தலைப்பு)	எழுத்தியல்	பதவியல்
99	13	யியல்பு	இயல்பு
101	26	புணர்ச்சியிவ்	புணர்ச்சியில்
136	24	உததி	உத்தி
153	3	வேறறு	வேற்று
159	(தலைப்பு)	னினையியல்	வினையியல்
170	34	விகுதிகளுயும்	விகுதிகளும்

குறிப்பு:—இங்குக் காட்டிய சில பிழைகள் சில பிரதிகளில் மாத்திரமே காணப்படும்; மற்றுஞ் சில காணப்படினுந் திருத்திக் கொள்க. பிழைகளைத் திருத்திக்கொண்டு வாசித்தலே நலம்.